பூர்வபாராசர்யம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 164

பூர்வபாராசர்யம்

(தமிழாக்கம்)

(ஆறாம் பதிப்பு)

பதிப்பாசிரியர்:

சிரோமணி திரு. ***எஸ். சுவாமிநாத சாஸ்திரி,***

வடமொழிப் பேராசிரியர் (ஓய்வு)

அரசர் கல்லூரி, திருவையாறு.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்

தஞ்சாவூர்.

2009] [விலை : ரூ. 100-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	பூர்வபாராசர்யம்
பதிப்பாசிரியர் கள்	:	ஸ்ரீ எஸ். சுவாமிநாத சாஸ்திரி,
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்.	:	164
மொழி	:	தமிழாக்கம்
பதிப்பு	:	ஆறாம் பதிப்பு
வெளியீடு	:	2009
தாள்	:	TNPL 17.8kg.
நூல் அளவு	:	21 செ. மீ X 14 செ.மீ.
பக்கங்கள்	:	328
படிகள்	:	1000
எழுத்து	:	12 புள்ளிகள்
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் நூலக அச்சகம்
புத்தகக்கட்டு	:	ஆப் காலிகோ
பொருள்	:	சோதிடம்
விலை	:	ரூ. 100-00

வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில் அமைந்து தரணி முழுமைக்கும் அறிவுச் செல்வமாகப் பயன்பட்டுக் கொண்டிருக்கும் அரும்பெரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். சுவடிக் கருவூலகமாகவும், பன்மொழி நூற்களஞ்சியமாகவும் பன்மொழி ஆய்வு மையமாகவும் திகழும் சரசுவதி மகால் நூலகம் ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது. இந்நூலகம் தமிழகத்தினர் மட்டுமின்றி பிற மாநிலத்தவரும், பிற நாட்டினரும் பயன்படுத்தி வருகின்ற ஓர் அரிய ஞான ஆலயமாகும்.

அறிவுக் கருவூலமாக பயன்பட்டுவரும் சரசுவதி மகால் நூலகத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று அறிஞர்களைக் கொண்டு, அரிய சுவடிகளைப் பதிப்பித்து அச்சு நூலாக்கி மக்கட்கு பயன்படச் செய்தலாகும். தமிழ், சம்ஸ்கிருதம், மராட்டி, தெலுங்கு ஆகிய மொழிகளைச் சார்ந்த நூல்களை வெளியிட்டு இந்திய இலக்கிய வளர்ச்சிக்கும், மொழி பரிமாற்றத்திற்கும் பெருந்தொண்டினைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றது. அவ்வரிசையில் **பூர்வபாராசர்யம்** எனும் இந்த சோதிட நூல் இந்நூலகத்தில் வடமொழிப் பிரிவில் உள்ள டி. 4204 என்ற எண்ணில் உள்ள ஏட்டுச்சுவடியின் பதிப்பாகும். வராஹமிகிரரது ஹோரா சாத்திரம், கல்யாணவர்மனது சாராவளி, ஸ்ரீபதி கேசவனின் ஜாதக பத்ததி ஆகிய தொன்மையான நூல்களின் கருத்துக்களையும், பராசரது சோதிட நூலின் சாராம்சத்தையும் கொண்டு இதனைப் படைத்ததாக நூலாசிரியர் சுவடியில் குறிப்பிட்டுள்ளார். இந்த நூலுக்கு வ்ருத்த பாராசர்யம் என்ற மற்றொரு பெயரும் வழக்கில் இருந்திருக்கிறது. 1979இல் வடமொழி, தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பதிப்பிக்கப்பெற்ற இந்நூல் தற்போது ஆறாம் பதிப்பாக தமிழ்பகுதியுடன் மட்டும் வெளியிடப் படுகிறது.

வானசாத்திரத்தின் அடிப்படையில் அமைந்த சோதிட இயலின் பல்வேறு கூறுகளை இந்நூல் விளக்குகின்றது. முதலில் திரு. இலட்சுமிநாராயண உபாத்யாயா எனும் சோதிட அறிஞராலும், பின்னர் திரு. எஸ். சுவாமிநாதசாஸ்திரி என்பவராலும் பதிப்பிக்கப்பெற்று தமிழாக்கம் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. இந்நூல் சோதிட ஆர்வலர்களிடமும் மக்களிடமும் நல்ல வரவேற்பைப் பெற்றமையால் மீண்டும் மலர்ந்துள்ளது.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூல் வெளிவர துணைநின்ற சரசுவதி மகால் நூலக நிருவாக அதிகாரி மற்றும் நூலக வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூல் கணினி அச்சில் வெளிவர கணினி பிரிவில் பணிபுரியும் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்
7-9-2009

எம். எஸ். சண்முகம், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

முகவுரை

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

நம் முன்னோர்களாகிய முனிவர்கள் தங்களது தவ வலிமையாலும், அறிவாற்றலாலும் வானின்கண் தோன்றி யுள்ள ஞாயிறு முதலான கோள்களையும், அச்விினி முதலான நக்ஷத்திரங்களையும் ஆராய்ந்து ஞாயிறின் கதியைக்கொண்டு உத்தராயணம், தக்ஷிணாயணம் என்ற பாகுபாட்டையும், வசந்தம் முதலான ருதுக்களையும், சித்திரை முதலான மாதங்களையும், வளர்பிறை, தேய்பிறை எனஅற இரு பக்ஷங்களையும் மற்றும் வாரம், திதி, யோகம், கரணம் போன்றவற்றையும் அவைகளின் கால அளவையும், நிர்ணயித்து மேலும் வானாராய்ச்சிக்குரிய நுட்பமான பல விஷயங்களையும் தங்களது கணித மேதையினால் ஆராய்ச்சி செய்து வானசாத்திரத்தை எழுதினார்கள். முன்காலத்தில் வேள்விகளைச் செய்வதற்கு நல்லதொரு நாட்கள் நேரம் இவைகளை வானசாத்திரமாகிற சோதிட நூலை ஆதாரமாகக் கொண்டு நிர்ணயித்தார்கள். ஆதலின், சோதிட சாத்திரத்தை வேதங்களின் வியாகரணம் முதான ஆறு அங்கங்களுள் ஒன்றாக அமைத்தார்கள்.

சோதிட நூல் வேள்விகளைச் செய்வதற்குப் பயனுள்ளதாக வேதத்திற்கு அங்கமாக இருப்பினும் உலகிலுள்ள மாந்தர் அனைவருக்கும் பயன்படத்தக்க வகையில், கோள்களின் உருவம், குணம் முதலானவை களையும், அவைகள் மேஷம் முதலான பன்னிரண்டு ராசிகளிலும்; அச்வினி முதலான நக்ஷத்திரங்களிலும் நிற்கின்ற காலங்களையும், அவைகளின் பலம், நட்பு, பகை, பார்வைகளையும், தசைகள், புக்திகள் முதலானவைகளையும் விரிவாகக் கூறப்பட்டிருப்பதுடன், மனிதனுக்கு அவற்றால்

நன்மை-தீமைகளையும் அந்நூலில் விளக்கியுள்ளார்கள். முன்பிறப்பில் செய்யப்பட்ட ஊழ்வினைப் பயன் காரணமாக மனிதன் இவ்வுலகில் பிறந்து அதற்கேற்றவாறு பயனையும் அடைகிறான். இதனை அறிந்துகொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தது, மனிதன் பிறந்தகாலத்தை ஆதாரமாகக் கொண்டு குறிக்கப்படுகிற ஜாதகம் என்னும் குறிப்பு. இச்சாதக் குறிப்பில் கண்டுள்ள கோள்கள் நிலையைக்கொண்டு அவற்றால் விளையும் நன்மை தீமைகளை அறிந்து, அதற்கேற்றவாறு தங்களைச் சீர்செய்து கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தது சோதிட நூல். ஆதலின் உலகிலுள்ள மாந்தர் அனைவருக்கும் பயன்படக்கூடிய சிறந்த நூல் சோதிடம் என்று கூறவும் வேண்டுமோ ?

சோதிட சாத்திரத்தை இயற்றிய பெரியோர்கள் சூரியன், பிரம்மதேவன், வியாசர், வசிஷ்ட்டர், அத்திரி, பராசரர், காச்யபர், நாரதர், கார்க்கியர், மரீசி, மனு, அங்கிரசர், ரோமசர், புருகுத்ஸர், சியவனர், யவனர், ப்ருகு, சௌனகர் எனப் பதினெண்மர் ஆவர்.

கி. மு. 1391-ம் ஆண்டிற்கு முன்பிருந்த அவந்தி தேசத்து ஆதித்யதாஸர் என்பவரது புத்திரரான வராஹமிஹிரர் என்பார். சூரியன் முதலான பதினெண்மர்களின் வானசாத்திரத்தினை ஆராய்ந்து *பிருஹஜ்ஜாதகம்* என்னும் சிறந்த சோதிட நூலை இயற்றினர். பிற்காலத்தில் கல்யாணவர்மன் என்ற அரசன் ஸாராவளி என்னும் நூலை இயற்றினார். ஸ்ரீபதி கேசவன் என்பவர் ஜாதகபத்ததி என்னும் நூலை இயற்றினார். இதுபோன்று பல பெரியோர்கள் சோதிட நூல்களையும், ப்ரச்ன சாஸ்திரங்களையும் இயற்றியுள்ளார்கள்.

பூர்வபாராசர்யம் என்னும் இந்நூல் ஸாராவளி போன்ற நூல்களைப்போல் ஒருவரால் புதிதாக இயற்றப்பட்டதன்று. பிருஹஜ்ஜாதகம், ஸாராவளி, ஸ்ரீபதிபத்ததி, ப்ரச்னா சாஸ்திரம் மற்றும் இதுபோன்ற பல சோதிட நூல்களை ஆய்ந்து அவைகளிலுள்ள ஸாரமானவைகளைத் தேர்ந்தெடுத்துத் தொகுக்கப்பட்ட ஒரு நூல் என்று தெரிகிறது.

இதற்கு ஆதாரமாக, இந்நூலாசிரியர் இந்நூலின் பிற்பகுதியின் தொடக்கத்தில் வராஹமிஹிரரது ஹோரா சாஸ்திரத்தினையும், கல்யாணவர்மனது சாராவளியையும், ஸ்ரீபதிகேசவனது ஜாதகபத்ததியையும் ஆராய்ந்து பராசரரது கருத்தையும் மனதிற்கொண்டு மற்ற ப்ரச்ன சாஸ்திரங்களையும் ஆய்ந்து, அவைகளில் ஸாரமானவை களைத் தேர்ந்தெடுத்த ஸந்தான லக்ஷணத்தைக் கூறப்போகிறேன் என்று உறுதிமொழி கூறியுள்ளார். மேலும், முன்கூறப்பட்ட நூல்களிலுள்ள பாக்களை அப்படியே இந்நூலில் சிற்சில இடங்களில் சேர்த்துள்ளார். ஆங்காங்கே பிற நூலாசிரியரின் பெயரையும் குறிப்பிட்டுள்ளார் ஆதலின் இந்நூல் பல சோதிட நூல்களின் ஸங்கிரஹம் என்று கூறுவது மிகையாகாது. சோதிட நூல்களை இயற்றிய பதினெண்மருள் ஒருவரான பராசரரின் பாற்கொண்ட பெருமதிப்பு காரணமாக இந்நூலுக்கு "**பூர்வபாராசர்யம்**" என்னும் பெயரை வழங்கினார் போலும். இந்நூலுக்கு "**வ்ருத்த பாராசர்யம்**" என்னும் பெயரும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நூலாசிரியர் எக்காலத்தவர், எந்நாட்டினர் போன்றவற்றை இந்நூலிலிருந்து அறிந்துகொள்வதற்கு இயலவில்லை. இவர் தனது குருவின் பெயரை "**நாராயணர்**" என்று குறிப்பிடுகிறார். அவரைப்பற்றிய குறிப்பு எதுவும் இல்லாததால் அதை ஆதாரமாகக்கொண்டு சொல்வதற்கும் வாய்ப்பில்லை. ஆயினும் இந்நூல் முன்கூறப்பட்ட சோதிட நூல்களின் ஸங்கிரஹமானபடியால் அந்நூலாசிரியர்களுக்குப் பிற்காலத்தவர் என்று கூறுவது பிழையாகாது.

இவ்வுலகில் மிகப்பிரசித்திபெற்ற சிறந்த நூல் நிலையங்களுள் தஞ்சை மாநகரில் விளங்கும் சரசுவதி மகால் நூல்நிலையமும் ஒன்றாகும். இந்நூல் நிலையத்தைத் தோற்றுவித்த பெருமை விஜயநகர மன்னர்களான நாயக்க பூபாலர்களைச் சாரும். பிற்காலத்தில் வந்த மராட்டிய

மன்னர்கள் இந்நூல் நிலையத்தை விரிவுபடுத்திக் காப்பாற்றி வந்தார்கள். அதிலும் சிறப்பாக இந்நாட்டின் பல பகுதிகளில் இருந்தும், பன்மொழிகளிலுமுள்ள சிறந்த சுவடிகளையும், நூல்களையும் தருவித்து காப்பாற்றி ஒரு சிறந்த கலைக்கோயிலாக ஆக்கியவர் சரபோஜி மன்னராவார்.

இந்நூல் நிலையத்தில் வடமொழிப் பிரிவிலுள்ள மிகச் சிறந்த சுவடிகளுள் இந்நூலுக்கு ஆதாரமாகவுள்ள சுவடியும் ஒன்று. இக்காகிதச்சுவடி D. 4204 என்னும் இலக்கமிடப்பட்டு உள்ளது.

இந்நூல் முற்பகுதி, பிற்பகுதி என இரு பகுதிகளைக் கொண்டது. முற்பகுதியில் 15 அத்தியாயங்களும், பிற்பகுதியில் 7 அத்தியாயங்களும் உள்ளன.

முற்பகுதியில் முதல் இரண்டு அத்தியாயங்களில், ராசிகளின் ஸ்வரூபமும், சீலமும், கிரஹங்களின் சீலமும், மூன்றாவது அத்தியாயத்தில் அரிஷ்ட யோகங்களும், நான்காவது அத்தியாயத்தில் ராஜயோகம் முதலான யோகங்களும், கிரஹங்களின் பலமும், ஐந்தாவது அத்தியாயத்தில் ஆயுள் நிர்ணயப்ரகாரமும், ஆறாவது அத்தியாயத்தில் தனப்ராப்தி, தனநாசம் முதலான யோகங்களும், ஏழாவது அத்தியாயத்தில் சம்பூர்ண தசை முதலான 18 விதமான தசைகளும், அஷ்டக வர்க்கமும், எட்டாவது அத்தியாயத்தில் லக்னம் முதலான 12 பாவங்களின் பலன்களும், ஒன்பதாவது அத்தியாயத்தில் சரீரம் முதலானவைகளின் தன்மையை அறிதலும், பாவங்களின் பொது அறிவும், பத்தாவது அத்தியாயத்தில் பாலாரிஷ்ட யோகங்களும், பதினொன்றாவது அத்தியாயத்தில் இரண்டாவது பாவத்தில் நிற்கின்ற கிரஹங்களின் பலன்களும், கண் குருடாவதற்கான கிரஹ நிலைகளும்,

பன்னிரண்டாவது அத்தியாயத்தில் மூன்றாவது பாவத்தில் நிற்கின்ற கிரஹங்களின் பலன்களும், பதிமூன்றாவது அத்தியாயத்தில் நான்காவது பாவத்தில் நிற்கின்ற கிரஹங்களின் பலன்களும், பதிநான்காவது அத்தியாயத்தில் மரணத்திற்குக் காரணமான ரோகங்களும், மரணத்திற்கான காரணமும், பதினைந்தாவது அத்தியாயத்தில் ஐந்தாம் பாவத்தில் நிற்கின்ற கிரஹங்களின் பலன்களும் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. பிற்பகுதியில் ஸந்தான தீபிகை என்கிற முதல் அத்தியாயத்தில் மக்கட்பேறு பற்றியனவும், ப்ரச்னத்தைக்கொண்டு மக்கட்பேறு அறிதலும், இரண்டாவது அத்தியாயத்தில் 6-ம் பாவத்தை அடைந்த கிரஹங்களின் பலன்களும், மூன்றாவது அத்தியாயத்தில் 6-ம் பாவத்தை அடைந்த கிரஹங்களின் பலன்களும், மூன்றாவது அத்தியாயத்தில் 7-ம் பாவத்தையடைந்த கிரஹங்களின் பலன்களும், நான்காவது அத்தியாயத்தில் 8-ம் பாவத்தை அடைந்த கிரஹங்களின் பலன்களும், ஐந்தாவது அத்தியாயத்தில் ஞாயிறு முதலான கிரஹங்களின் தசைகளின் பலன்களும், ஆறாவது அத்தியாயத்தில் ப்ரச்னத்தைக் கொண்டு மழை அறிவதும், கணவன்-மனைவி இவர்களின் உறவு முதலானவைகளை அறிதலும், ஏழாவது அத்தியாயத்தில் திதி கண்டங்கள் முதலான கண்டங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. பிற்பகுதியில் முறையே எட்டாம் பாவம் முடிய விளக்கியபின், 9 முதல் 12-ம் பாவம் முடிய உள்ள பாவங்களில் நிற்கின்ற கிரஹங்களின் பலன்களும் மற்ற அத்தியாயங்களில் விளக்கியிருத்தல் கூடும். அவ்வத்தியாயங்கள் இச்சுவடியில் காணப்பட வில்லை. ஏனைய பகுதிகள் விடப்பட்டோ அல்லது காணாமல் போயிருக்கக்கூடுமாதலால் இச்சுவடி முற்றுப்பெறாத நிலையில் உள்ளதாகவே கருதவேண்டி இருக்கிறது.

இந்நூலாசிரியர் மிக்க பிரயாசையுடன் பல நூல்களில் இருந்து நுட்பமானவைகளைத் தேர்ந்தெடுத்து இந்நூலை இயற்றியுள்ளாராதலின் ஒரே விஷயம் பல இடங்களில் கூறப்பட்டிருப்பினும் அவைகளைத் திரும்பத் திரும்ப கூறப்பட்டதாகக் கருதக்கூடாது.

பல சோதிட நூல்களிலுள்ள விஷயங்களைக் கற்க விரும்புவோரும், சோதிடத்தை முறையாகக் கற்க விரும்புவோரும் பயன்படத்தக்க வகையில் இந்நூல் இயற்றப்பட்டிருப்பதால் இந்நூலை அனைவரும் படித்துப் பயன்பெறுவார்களாக.

இந்நூலினைப் பதிப்பிக்குமாறு எனக்கு ஊக்கமளித்து உத்திரவிட்ட சரசுவதி மகால் நூல் நிலைய கௌரவ காரியதரிசி திரு. அ. வடிவேலன் அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்,
இ. சுவாமிநாத சாஸ்திரி,
சிரோமணி,
ஓய்வுபெற்ற வடமொழிப் பேராசிரியர்,
(அரசர் கல்லூரி, திருவையாறு.)
பதிப்பாசிரியர்

தஞ்சாவூர்.
31-7-78

பூர்வபாராசர்யத்தினுள் எடுத்தாளப்பட்ட ஏனைய நூல்கள்.

		பக்க எண்.
1.	பலதீபிகை	3
2.	ஸர்வார்த்த சிந்தாமணி	3
3.	ப்ருஹஜ்ஜாதகம்	4, 14, 63, 99, 103, 181, 276, 277
4.	கிருஷ்ணீயம்	7
5.	ஜைமினிசூத்திரம்	24
6.	ஸ்ரீபதிபத்ததி	32, 34
7.	வாக்பதி	50
8.	கர்க்கி	54
9.	ப்ருகு	59
10.	சாராவளி	59, 92, 97, 96, 97, 123, 181, 254, 255, 256, 257, 258, 259, 260 (எட்டாவது அத்தியாயம் முழுமையும் சாராவளியின் கருத்ததையும் செய்யுளையும் கொண்டது.)
11.	மணித்தன்	59
12.	மயன்	59
13.	பாதராயணன்	59
14.	மஹேந்திரன்	59
15.	சில ஞானிகள்	71
16.	ஞானப்ரதீபிகை	82

		பக்க எண்.
17.	வாயுதேவனால் எழுதப்பட்ட ஹோரா க்ரந்தம்	83
18.	தேவகீர்த்தி	99
19.	ஹோரா விவரணம்	7
20.	ந்ருசிம்மன்	153
21.	ப்ரச்னமார்க்கம்	159, 187, 229
22.	யவனர்கள் (கிரேக்கர்களின் நூல்)	245
23.	இரத்தினமாலை	293
24.	மற்ற நூல்கள்	296

பூர்வபாராசர்யம்

(முற்பகுதி)

பொருளடக்கம்

ராசி ஸ்வரூப அத்தியாயம்

கடவுள் வாழ்த்து	- 1
பன்னிரண்டு இராசிகளின் பெயர்கள்	- 1
பன்னிரண்டு இராசிகளுக்குரியவர்களின் பெயர்கள்	- 1
கிரகங்களின் உச்ச-நீச வீடுகளும், பாகைகளும்	- 2
கிரகங்களின்மூலத்திரிகோண இராசிகளும், பாகைகளும்	- 2
இராசிகளின் சரம் முதலான பிரிவுகள்	- 3
கிரகங்களின் ஆறுவர்க்கங்கள்	- 4
ஹோரைக்கு அதிபர்கள்	- 4
திரேக்காணாதிபதிகள்	- 5
திரேக்காணாதிபதிகள் மற்றொரு கருத்து	- 5
திரேக்காணாதிபதிகள் பிறிதொரு கருத்து	- 6
திரேக்காணாதிபதிகள் நான்காவது மதம்	- 6
நவாம்சாதிபதிகள்	- 7
துவாதசாம்சாதிபதிகள்	- 8
திரிம்சாம்சாதிபதிகள்	- 9
12 ராசிகளின் இயற்கைக் குணங்கள்	- 9
லக்ன ஸ்வரூப நிரூபணமும் பாவமும்	- 12
கேந்திராதி ராசிகள்	- 13
உபய ராசிகள்	- 13
இராசிகளின் கேந்திரபலம்	- 14
இராசிகளின் உச்சகாலபலம்	- 14
இராசிகளின் இயற்கை வலிமை	- 15
இராசிகளின் நட்பு - பகை ராசிகள்	- 15
பாவங்கட்கு பார்வை பலம்	- 15
இராசிகட்கு திருஷ்டி பலம்	- 15
இராசிகளின் அளவு	- 16
கேந்திரபலம்	- 17

இரண்டாவது அத்தியாயம்

க்ரூர கிரஹங்களும், அவைகளின் பாகுபாடும் - 17
சுபகிரஹங்கள் - 18
மதியின் சுபாசுபத்தன்மை - 18
மதியின் சுபாசுபத்தன்மை (வேறு) - 19
ஞாயிறின் சுபத்தன்மை - 19
செவ்வாயின் சுபத்தன்மை - 19
புதனின் சுபத்தன்மையும்-அசுபத்தன்மையும் - 19
சனியின் சுபத்தன்மை - 19
ராகுவின் சுபத்தன்மை - 19
ராகுவின் சுபத்தன்மை (வேறு) - 19
கேதுவின் சுபத்தன்மை - 20
சுபக்கிரஹங்களின் அசுபத்தன்மை - 20
கிரஹங்களுக்குத் தற்காலிகமான நட்பு, பகை கிரஹங்கள் - 20
கிரஹங்களின் தற்கால நட்பு - 22
கிரஹங்களின் அதிமித்ரத் தன்மையில் பாகுபாடு - 22
கிரஹங்களின் பார்வை - 23
கிரஹங்களின் பார்வையில் வேறுபாடுகள் - 24
கிரஹங்களின் ஸ்தான பலமும்-திக்பலமும் - 24
கிரஹங்களின் காலபலம் - 25
வர்ஷாதிபதி முதலியவர்களின் பலம் - 25
கிரஹங்களுக்கு ஏற்பட்ட அயனபலம் - 26
கிரஹங்களுக்கு ஏற்பட்ட யுத்தபலம் - 28
கிரஹங்களின் ஒன்பதுவித வலிமை - 28
பல கணிதம் - 30
கிரஹங்களுக்கு இயற்கை பலமும்-பார்வை பலமும் - 30
ஆறுவித பலங்களும் அவைகளின் பாகுபாடும் - 30
இஷ்ட பலத்தின் பாகுபாடு - 31
கஷ்ட பலத்தின் பாகுபாடு - 31
ஞாயிறு முதலிய கிரங்களின்
இயற்கை அமைப்பும், காரகத்வமும் - 32

மூன்றாவது அத்தியாயம்

கிரஹங்களின் ஸ்தான விசேஷத்தால் ஏற்படும் தீங்குகள் - 36
கண் பார்வையை இழக்கக் காரணமான கெட்ட யோகங்கள் - 36
ராஜ கோபத்தினால் கண் நாசமாக்கப்படுவது - 36

எப்போதும் மெலிந்தமேனி முதலியவைகளுக்குக் காரணமான கெட்ட யோகங்கள் - 37
புதன் முதலான கிரஹங்கள் நின்ற இடங்களைக் கொண்டு ரோகங்கள் முதலியவற்றை அறிதல் - 37
சில துஷ்ட யோகங்கள் - 38
பைத்திய ரோக யோகம் - 38
கர்ம ப்ரம்சயோகம் - 38
சண்டாளத்வ யோகம் - 38
பதிதனாகும் யோகம் - 38
சந்நியாஸ ப்ரம்ச யோகம் - 38

நான்காவது அத்தியாயம்

லக்ன ராசியைக் கொண்டு கிரஹங்களின் பலனறிதல் - 39
தனலாப யோகம் - 39
ராஜமுத்ராதிகார யோகம் - 40
ராஜயோகம் - 40
சேனாதிபதி யோகம் - 40
மந்திரஸித்தி முதலிய யோகங்கள் - 40

ஐந்தாவது அத்தியாயம்

ஆயுள் குறைவிற்குக் காரணங்கள் - 41
அற்ப, மத்தியம, உத்தம ஆயுள் அளவு - 41
அற்பாயுள் யோகமும், பூர்ணாயுள் யோகமும் - 42
பூர்ணாயுள் யோகத்தில் தசாக்கிரமம் - 42
திரேக்காண ஆயுர்தாயம் - 43
மரண தசையை அறிதல் - 43
திரேக்காண தசைக்கு மரண காரணத்துவமும் அஂஶதின்மையும் - 44
ராசி ஆயுர்தாயம் - 45
மரணத்தைக் கொடுக்கும் கிரஹத்தை அறிதல் - 46
மரணத்தை அளிப்பவர்களன் பாகுபாடு - 46
மரணம் நேரும் மாதம், தினம் இவைகளை அறிதல் - 47
வாக்பதி ஆயுர்தாயம் - 47
தசாக்ரமம் - 50
அந்தர் தசாக்ரமம் - 51
மரண திரேக்காணமும் அதிபதியும் - 54
மரணத்திற்குக் காரணமான தசை - 55

ப்ருகுவால் சொல்லப்பட்ட ஆயுர்தாயம் - 56
அம்சாயுர்த்தாயம் - 58
ஆயுர்தாயத்திற்கு விருத்தியும் நாசமும் - 61
குரூரோதயஹரணம் - 61
பாவாயுர்தாயம் - 62
மாரகதசை - 62

ஆறாவது அத்தியாயம்

அதிஐச்வர்ய யோகம் - 64
தனநாசயோகம் - 64
ஆத்மசம நாசயோகங்கள் - 64
புண்ணிய தீரத்த யாத்திரை முதலான யோகங்கள் - 65

ஏழாவது அத்தியாயம்

பதினெட்டு விதமான தசைகள் - 67
சம்பூர்ண தசை - 68
பூர்ணதசை - 68
ரிக்ததசை - 68
அவரோஹணீ தசை - 69
மத்யதசை - 69
ஆரோஹிணீ தசையும், அதம தசையும் - 69
பாக்யாரம்ப காலம் - 70
பாக்யதசை சக்தியற்றோருக்கும் சக்தி தானம் - 70
கிரஹங்களின் தசையில் பலதான காலம் - 71
அந்தர்தசா பலன் - 71
புக்தி விபாகமும், அதன் பலனும் - 71
அனர்த்தமான தசை - 72
அஷ்டவர்க்கமும் சுபாசுப ஞானமும் - 72

கிரஹங்களின் அஷ்டவர்க்க பிந்துக்கள் முதலியன

ஞாயிறின் அஷ்டவர்க்கம் - 74
மதியின் அஷ்டவர்க்கம் - 74
செவ்வாயின் அஷ்டவர்க்கம் - 75
புதனின் அஷ்டவர்க்கம் - 75
வியாழனின் அஷ்டவர்க்கம் - 75
வெள்ளியின் அஷ்டவர்க்கம் - 75
சனியின் அஷ்டவர்க்கம் - 76
அந்தந்த பாவங்களுக்குச் சம்பந்தப்பட்ட பொருட்களின் சுபாசுபத்தன்மை - 77

பலபேதத்தை அறிவதற்குரிய உபாயம் - 78
அந்தர்தசையின் விபாகம் - 79
அந்தராந்தர் தசையின் விபாகம் - 79
மேற்கூறிய தசையின் பிரமாணம் - 79
பாவபலன் - 80
வெள்ளியும் நான்காவது பாவாதிபதியும் - 81

எட்டாவது அத்தியாயம்

லக்னம் முதலான 12 பாவங்களின் பலன்கள் - 82
லக்னத்தில் தங்கின ஞாயிறின் பலன் - 82
லக்னத்தில் தங்கின மதியின் பலன் - 82
லக்னத்தில் தங்கின செவ்வாயின் பலன் - 83
லக்னத்தில் தங்கின புதனின் பலன் - 84
லக்னத்தில் தங்கின வியாழனின் பலன் - 84
லக்னத்தில் தங்கின வெள்ளியின் பலன் - 84
லக்னத்தில் தங்கின சனியின் பலன் - 84
லக்னத்தில் தங்கின ராகுவின் பலன் - 84
லக்னத்தில் தங்கின கேதுவின் பலன் - 85
மதியும், புதனும் லக்னத்தில் தங்கின பலன் - 85
லக்னம் சுபாசுபக் கிரஹங்களால் பார்க்கப்படுவதன் பலன் - 85
லக்னம், லக்னாதிபதியால் பார்க்கப்படுவதின் பலன் - 85
எந்த கிரஹங்களாலும் லக்னம் பார்க்கப்படாததின் பலன் - 85
மேஷம் முதலிய ராசிகள் லக்னமாக இருத்தலின் பலன் - 86
மேஷம் முதலிய லக்னங்களுக்கு செவ்வாய் முதலிய
கிரஹங்களின் பார்வை அல்லது சேர்க்கையின் பலன் - 88

ஒன்பதாவது அத்தியாயம்

உடல் முதலிய பாவங்களை அறிதல் - 90
பாவங்களிலுள்ள கிரஹங்களின் சுபாசுபமறிதல் - 90
பூர்ண தனபிராப்தி யோகம் - 92
ஆயுள் முதலியவற்றின் கால அளவு - 93
அரிஷ்ட யோகங்கள் - 93
பாவங்களின் பொது அறிவு - 94

பத்தாவது அத்தியாயம்

பாலாரிஷ்ட யோகங்கள் - 94
மேனியிலுள்ள வடுக்களை அறிதல் - 99

பதினோறாவது அத்தியாயம்

கண் குருடாகும் யோகம் - 108
இரண்டாவது பாவத்தில் நின்ற கிரஹங்களின் பலன் - 110
தன்னினத்தவர்களை விட்டுவிடும் யோகம் - 113
தன்னினத்தவர்களை விட்டுவிடும் பலன் - 114
தனலாப யோகங்களும், தனநாச யோகங்களும் - 114

பன்னிரண்டாவது அத்தியாயம்

மூன்றாம் பாவத்திலுள்ள கிரஹங்களின் பலன் - 117
சகோதரர்களின் எண்ணிக்கையின் அளவு - 119
சகோதரர்களின் குணங்கள் - 119
கிரஹங்களின் காரகத்வம் - 126
சகோதரன் சத்ருவாகும் யோகம் - 128
பலவிதமான சகோதர யோகங்கள் - 128

பதிமூன்றாவது அத்தியாயம்

நான்காவது பாவத்தில் நின்ற ஞாயிறு முதாலன கிரஹங்களின் பலன் - 131
நான்காவது பாவத்தின் பெயர்களும் கிரக ஸ்தானங்களும் - 133
மாத்ரு கிரஹங்களும் தாய்க்கு பூர்ணாயுள் யோகமும் - 134
சிறு வயதில் தாய் மரணம் - 134
சிறந்த தனலாப யோகம் - 135
தாய்க்கு அற்பாயுள் யோகம் - 135
குழந்தை பிறந்த உடன் தாய் மரிக்கும் யோகம் - 135
மரண காலமறிதல் - 135
வித்தை, வாகனம், பந்துக்கள் இவர்களைப் பற்றியறிதல் - 136
தாய் விதவையாதல் - 136
பித்ரு ஸம்ஸ்கார பாவ யோகம் - 136
பித்ரு ஸம்ஸ்கார யோகம் - 137
அனுமரண யோகம் - 137
மாதா - பிதா இவர்கள் நட்புடன் இருத்தல் - 137
தாய், தனயன் இவர்கள் நட்புடன் இருத்தல் - 137
தாய், தகப்பன், மனைவி இவர்கள் நட்புடன் இருத்தல் - 138
அடக்கி ஆளும் தன்மை - 138
ஹீன ஜாதிக்காரனுக்குப் பிறத்தல் - 139
12 பாவங்களிலும் புதன் தங்குவதின் பலன் - 139
கருவுற்ற தாயின் மரணம் - 140

குழந்தையை விட்டுவிடுதல் - 143
செவிலித்தாய் யோகம் - 143
மாதாவுக்கு அரிஷ்டம் - 143
வீடு, நிலம் முதலியன பெருகும் யோகம் - 146
மனைவி நாசமாகுதல் - 146
பலதார யோகம் - 147

பதிநான்காவது அத்தியாயம்

மரணத்திற்குக் காரணங்கள் - 148
பித்ரு மரண யோகம் - 149
நானாவித ரோகங்கள் - 149
உபாதையே உண்டுபண்ணும் கிரஹங்கள் - 150
பாதக ஸ்தானங்களில் நின்ற கிரஹங்களின் பலன் - 151
ஏவல் செய்வதற்கான கிரஹநிலை - 152
த்ருஷ்டி தோஷத்தால் ஏற்படும் ரோகங்கள் - 153
தனம் அழிவதற்கான கிரஹ அமைப்புக்கள் - 153

பதினைந்தாவது அத்தியாயம்

ஐந்தாம் பாவத்தில் நின்ற கோள்களின் பலன் - 154
மகப்பேறும் அஃது இல்லாமையும் - 156
தனது வாரிசாக அமையும் மகப்பேறு - 156
மிகுதியாகப் பெண்கள் பிறக்கும் யோகம் - 156
பிள்ளைகள் எவ்வளவு என்றறிதல் - 157
பிள்ளைப்பேறு அற்றுப்போகும் யோகம் - 157
மிகுதியாகக் குழந்தைகளைப்பெறும் யோகம் - 157
வம்சத்தை நாசம் செய்யும் குழந்தைகள் பிறக்கும் யோகம் - 158
காலந்தாழ்ந்து மகப்பேறு உண்டாகும் யோகம் - 159
மனைவியும், குழந்தையும் மரிக்கும் யோகம் - 159
தந்தையைக் காட்டிலும் சிறந்த குணமுடைய மகன் பிறக்கும் யோகம் - 159
பிறர் மனைவியிடம் மகப்பேற்றை அடையும் யோகம் - 159
மக்களழிவும் மக்கட்பேறும் உண்டாகும் யோகம் - 160
விவாஹ கால லக்னத்தைக்கொண்டு மகப்பேறறியும் யோகங்கள் - 160
புத்திரசோகம் ஏற்படக்கூடிய யோகங்கள் - 161
பிறர் மகனைத் தத்து எடுத்துக்கொள்ளும் யோகம் - 162
மனைவி, மக்கட்பேறு, சகோதரர்கள் அற்றவனாக இருக்கும் யோகம் - 164

தந்தை, மகன், மகள் இவர்கள் நீண்ட ஆயுளுடன்
இருக்கும் யோகம் - 165
தந்தை நடுத்தர வயதுடனிருக்கும் யோகம் - 165
பால்யத்தில் தந்தையின் மரண யோகம் - 166
தந்தை நீண்ட ஆயுளுடனிருப்பதற்கான யோகம் - 166
தந்தையின் மரண காலம் அறிதல் - 166
பெற்றோர்களுக்குள் முதலில் தந்தைக்கு மரணம்
ஏற்படும் யோகம் - 166
தந்தைக்கு இறுதிச் சடங்கை
செய்யமுடியாமல் போகும் யோகம் - 167
பெற்றோர்கள் ஒருவர் பின்னொருவராக
இறந்துவிடும் யோகம் - 167
தெய்வத்தின் சாபத்தால் புத்திரனை இழக்கும் யோகம் - 167
பித்ரு சாபத்தினால் புத்திரனை இழக்கும் யோகம் - 167
புத்திரனை இழப்பதற்குரிய மற்ற யோகங்கள் - 168
சந்ததியற்றுப்போகும் யோகம் - 169

பூர்வபாராசர்யம் பிற்பகுதி

சந்தான தீபிகை என்கிற முதல் அத்தியாயம்

கடவுள் வணக்கம் - 171
உறுதிமொழி - 171
மக்கட்பேற்றுக்குத் தகுதியற்றோர் - 172
மக்கட்பேறற்றுப்போதல், தத்து எடுப்பது
முதலானவற்றின் யோகம் - 172
பிறர் குழந்தையை தத்து எடுத்துக்கொள்ளும் யோகம் - 173
மக்களை இழத்தல் - 174
மிதமான மக்களைப் பெறுதல் - 174
மக்கட்பேறடைதல் - 174
பீஜக்ஷேத்திர விளக்கம் - 176
கருத்தரிக்கும் காலம் - 176
ப்ரச்னத்தைக்கொண்டு பிறக்கப்போவது
ஆண் அல்லது பெண் என்பதை அறிதல் - 177
மிகவும் அதிகமான அளவு மக்களைப் பெறுதல் - 177
புத்திரனை இழக்கும் யோகம் - 177
மிகவும் அதிகமான அளவு மக்களைப்
பெறுவதற்குரிய யோகம் (வேறு) - 177

சாபத்தின் காரணமாக மக்களை இழத்தல் - 178
பிறர் குழந்தையை தத்து எடுத்துக்கொள்ளுதல் - 179
தத்து எடுத்துக்கொண்டபின் குழந்தை பிறக்கும் யோகம் - 180
காலந்தாழ்ந்து குழந்தை பிறக்கும் யோகம் - 180
பிள்ளை பிறக்கும் காலம் - 180

இரண்டாவது அத்தியாயம்

6-ம் பாவத்திலிருக்கிற கிரஹங்களின் பலன் - 183
6-ம் பாவம் முதல் 12-ம் பாவம் முடிய உள்ள ராசிகளின் அதிபர்களும் - பயனும் - 186
உறவினர், நோய் முதலியவற்றால் தொல்லையற்றிருத்தல் - 187
தந்தை முதலானோரின் பகையால் செல்வம் அழிதல் - 187
விரோதியினால் தொந்திரவு உண்டாகாதிருத்தல் - 188
ஆதாயம், ஊதியம், செல்வப்பெருக்குண்டாதல் - 188
பகைவனற்றிருத்தல் - 188
தந்தை, தமையன் இவர்களிடம் பகைத்துக்கொள்ளுதல் - 188
மனைவியைப் பற்றியறிதல் - 189

மூன்றாவது அத்தியாயம் (ஏழாவது பாவம்)

7-ம் பாவத்தை அடைந்த கோள்களின் பலன் - 191
7-ம் பாவத்தை அடைந்த கோள்களின் பலன் (வேறு) - 193
கணவன் மனைவி இவர்களுக்கு நிறைந்த செல்வம் உண்டாகும் யோகம் - 199
7-ம் பாவத்தைப் பற்றியவை (வேறு நூல்களில் கூறப்பட்டுள்ளவை) - 205
பெண்கள் ஜாதகம் - 209
புத்திரனை இழக்கும் யோகம் - 211
கணவன் - மனைவி இவர்களின் ஜாதி அறிதல் - 211
திருமணத்தைப் பற்றிய விபரங்கள் - 215
இருதாரம் மணந்துகொள்ளும் யோகம் - 216
பெண் மகவு பிறக்கும் யோகம் - 216
ப்ரச்னத்தைக் கொண்டு திருமணம் நடக்கும்விதம் அறிதல் - 217
ஜாதகத்தைக் கொண்டு திருமணம் நடக்கும் காலமறிதல் - 217
கணவன் - மனைவி உறவு - 219

ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை அடைதல் - 220
பிரச்னத்தைக்கொண்டு தாம்பத்ய உறவுகளை அறிதல் - 221
ஜனன காலத்திய கோள்களின் நிலையைக் கொண்டு ஜாதகனின் நிறம், குணம், மனைவி இவைகளை அறிதல் - 223

நான்காவது அத்தியாயம் (எட்டாம் பாவம்)

8-ம் பாவத்தைக்கொண்டு ஜாதகனது குணம், செயல்கள் இவைகளை அறிதல் - 226
8-ம் பாவத்தைக்கொண்டு மரணமும், காரணமும் அறிதல் - 228
மக்கட்பேறின் குறைவுக்குக் காரணம் கூறுதல் - 235
ஒன்றுக்கு மேற்பட்ட கோள்கள் கூடுவதால் மரணம் கூறுதல் - 235
யவனர்கள் கூற்று - 236

ஐந்தாவது அத்தியாயம் (தசாபலம்)

ஞாயிறு தெசைப் பலன் - 240
சந்திர தெசைப் பலன் - 241
செவ்வாய் தெசைப் பலன் - 242
ராகு தெசைப் பலன் - 242
வியாழன் தெசைப் பலன் - 243
சனி தெசைப் பலன் - 244
புதன் தெசைப் பலன் - 244
கேது தெசைப் பலன் - 245
சுக்கிர தெசைப் பலன் - 245
ஞாயிறு தெசை - ஞாயிறு புத்தியின் பலன் - 246
ஞாயிறு தெசை - மதியின் புத்தியின் பலன் - 246
ஞாயிறு தெசை - செவ்வாய் புத்தியின் பலன் - 247
ஞாயிறு தெசை - ராகு புத்தியின் பலன் - 247
ஞாயிறு தெசை - வியாழன் புத்தியின் பலன் - 247
ஞாயிறு தெசை - சனி புத்தியின் பலன் - 247
ஞாயிறு தெசை - புதன் புத்தியின் பலன் - 247
ஞாயிறு தெசை - கேது புத்தியின் பலன் - 248
ஞாயிறு தெசை - வெள்ளி புத்தியின் பலன் - 248
ஞாயிறின் சூக்ஷ்ம தெசையின் பலன் - 248

மதியின் சூக்ஷ்ம தெசையின் பலன் - 248
செவ்வாயின் சூக்ஷ்ம தெசையின் பலன் - 249
ராகுவின் சூக்ஷ்ம தெசையின் பலன் - 249
வியாழனின் சூக்ஷ்ம தெசையின் பலன் - 249
சனியின் சூக்ஷ்ம தெசையின் பலன் - 249
புதனின் சூக்ஷ்ம தெசையின் பலன் - 250
கேதுவின் சூக்ஷ்ம தெசையின் பலன் - 250
சுக்ரனின் சூக்ஷ்ம தெசையின் பலன் - 250
ஞாயிறின் பிராண தெசையின் பலன் -250
மதியின் பிராண தெசையின் பலன் -250
செவ்வாயின் பிராண தெசையின் பலன் - 251
ராகுவின் பிராண தெசையின் பலன் -251
வியாழனின் பிராண தெசையின் பலன் - 251
சனியின் பிராண தெசையின் பலன் - 251
புதனின் பிராண தெசையின் பலன் - 251
கேதுவின் பிராண தெசையின் பலன் - 252
வெள்ளியின் பிராண தெசையின் பலன் - 252
மதியின் தெசைப் பலன் - 253
ஞாயிறு முதலான 9 கோள்களின் ஐந்து வகை மார்க்கங்களும் பலனும் கூறுவதற்குரிய முறை கூறப்படுதல் - 254
ஜாதகனுக்குப் பலன் கூறப்புகுமுன் கவனிக்கப்பட வேண்டியவை கூறப்படுதல் - 254
தசைகளின் பாகுபாடுகள் - 261
மரண காலம் அறியும்விதம் - 262

ஆறாவது அத்தியாயம் (ஸங்கீர்ணாத்தியாயம்)

மழை அறியும் விதம் கூறுதல் - 270
சிற்றின்பத்தைப் பற்றியறிதல் - 271
ஒன்பது, பத்து, பதினொன்று, பன்னிரண்டாம் இடங்களைக்கொண்டு அறியப்படவேண்டியவைகள் - 275

ஏழாவது அத்தியாயம்

திதிகளின் பெயர்களும், கண்டாந்தமும் அதனால் ஏற்படும் பயன்களும் - 276
தேய்பிறைச் சதுர்த்தசியில் குழந்தை பிறப்பதால் உண்டாகும் பலன் - 276

அமாவாஸையில் குழந்தை பிறப்பதால் உண்டாகும் பலன் - 277

இரத்தினமாலா என்னும் நூலில் கூறப்பட்டுள்ள "கண்டாந்தங்கள்"

நக்ஷத்திர கண்டாந்தங்கள் - 277
ராசி கண்டாந்தங்கள் - 277
அனுபவிப்பதற்கு ஒவ்வாத கண்டாந்தங்கள் - 278
முன்கூறப்பட்ட கண்டாந்தங்களில் மற்றொருவிதம் - 279
வேறு நூல்களில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ள கண்டாந்தங்கள் - 280
நக்ஷத்திர சாந்தியும், அதன் பயனும் - 280
பந்தற்கால் நடுவதற்கேற்ற நாட்கள் - 281
மூலா நக்ஷத்திர சக்ரம் - 282
ஆயில்ய நக்ஷத்திர சக்ரம் - 282
மூலாநக்ஷத்திரத்தில் குழந்தை பிறப்பதால் ஏற்படும் பலன் - 283
கேட்டை நக்ஷத்திரத்தில் குழந்தை பிறப்பதால் ஏற்படும் பலன் - 283
கேட்டை நக்ஷத்திரத்தில் குழந்தை பிறப்பதால் ஏற்படும் பலன் (வேறு விதம்) - 284
கேட்டை நக்ஷத்திரத்தில் நான்காம் பாதத்தில் குழந்தை பிறப்பதால் ஏற்படும் பலன் - 284
ஷை மற்றொரு விதம் - 284
தகப்பன் முதலானோரின் நக்ஷத்திரத்தில் குழந்தை பிறப்பதால் ஏற்படும் பலன் - 285
மற்ற நக்ஷத்திர கண்டங்கள் - 286
மற்ற நக்ஷத்திர கண்டங்கள் (வேறு விதம்) - 286
அரிஷ்டயோகங்கள் முதலான கண்டங்கள் - 288
ஜன்ம நக்ஷத்திர சக்ரம் - 290
ஜன்ம நக்ஷத்திர நர சக்ரத்தில் காணவேண்டிய பலன்கள் - 290
பல்லுடன் பிறந்த குழந்தையால் ஏற்படும் கண்டம் - 291
கிரஹ கண்டங்கள் - 291
அரிஷ்டங்கள் (கெடுதல்கள்) அற்றுப்போதல் - 295
சிசுக்களுக்கு ஏற்படும் கண்டங்கள் - 296
கண்கள் கெடுதற்குரிய யோகம் - 302

முற்றும்

பூர்வபாராசர்யம்

(முன்பகுதி)

இராசிஸ்வரூபம்

முதலாவது அத்தியாயம்

கடவுள் வாழ்த்து

அழகியதும், கருணை நிறைந்த பார்வையுடனும், மந்தஹாஸத்துடனும் விளங்குகின்ற முகத்தையுடைய சர்வமங்களையின் (பார்வதியின்) மணாளனான பரமேச்வரன் உங்களுக்கு மங்களத்தை அளிப்பவராக இருக்கட்டும்.

பன்னிரண்டு இராசிகளின் பெயர்கள்

மேடம், இடபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுஸ், மகரம், கும்பம், மீனம் என பன்னிரண்டு இராசிகள்.

பன்னிரண்டு இராசிகளுக்குரியவர்களின் பெயர்கள்

(1) செவ்வாய், *(2)* வெள்ளி, *(3)* புதன், *(4)* மதி, *(5)* ஞாயிறு, *(6)* புதன், *(7)* வெள்ளி, *(8)* செவ்வாய்-கேது, *(9)* வியாழன், *(10)* சனி-ராகு, *(11)* சனி, *(12)* வியாழன். இவர்கள் மேடம் தொடங்கி வரிசையாக மேற்கூறிய இராசிக்குரியவர்கள். மேற்கூறிய இராசியில் வருகின்ற "ஹோரை, திரேக்காணம், நவாம்சம், துவாதசாம்சம்" இவைகளுக்கும் இவர்களே அதிபர்கள்.

கிரஹங்களின் உச்ச-நீச வீடுகளும், பாகைகளும்

ஞாயிற்றிற்கு மேடத்தில் பத்து பாகைகளும், மதிக்கு இடபத்தில் மூன்று பாகைகளும், செவ்வாய்க்கு மகரத்தில் இருபத்தெட்டு பாகைகளும், புதனுக்கு கன்னியில் பதினைந்து பாகைகளும், வியாழனுக்கு கடகத்தில் ஐந்து பாகைகளும், வெள்ளிக்கு மீனத்தில் இருபத்தி ஏழு பாகைகளும், சனிக்கு துலாத்தில் இருபது பாகைகளும் உச்ச பாகைகளாகும். இராகுவிற்கு இடபத்தில் முப்பது பாகைகளும், கேதுவிற்கு விருச்சிகத்தில் முப்பது பாகைகளும் உச்ச பாகைகளாகும். (உச்ச இராசியிலிருந்து 7-வது இராசியில் மேற்கூறிய பாகைகள் நீச பாகைகளாகும்.)

குறிப்பு:- வானத்தில் தோன்றுகின்ற நக்ஷத்திர மண்டலத்தில் 1/12 பாகம் ஒரு இராசி எனப்படும். ஒரு இராசியில் 1/30 பாகம் ஒரு பாகை எனப்படும். மேற்கூறிய மேடம் முதலிய இராசிகளில் அந்தந்த இராசி தொடக்கத்தில் இருந்து குறிப்பிட்ட பாகைவரை மேற்கூறிய கிரகங்களுக்கு உச்ச பாகைகள் என்று அறியவும். உச்ச இராசியிலிருந்து ஏழாவது இராசியில் மேற்கூறிய பாகைகள் நீச பாகைகளாகும்.

உதாரணம் :- ஞாயிறுக்கு மேடத்தில் 10 பாகைகள் உச்ச பாகைகள், மேடத்திற்கு ஏழாவது இராசியாகிய துலாத்தில் பத்து பாகைகள் நீச பாகைகள். இவ்வாறு எல்லா உச்ச கிரகங்களின் ஏழாவது இராசி நீச பாகைகள் என அறியவும். இராகு, கேதுக்களுக்கும் அவைகளின் உச்ச இராசிக்கு ஏழாம் இராசி நீச பாகைகளாகும்.

கிரகங்களின் மூலத்திரிகோண இராசிகளும் பாகைகளும்

ஞாயிறுக்கு சிம்மத்தில் இருபது பாகைகளும், மதிக்கு இடபத்தில் இருபத்தி ஏழு பாகைகளும், செவ்வாய்க்கு மேடத்தில் பன்னிரண்டு பாகைகளும், புதனுக்குக் கன்னியில் ஐந்து பாகைகளும், வியாழனுக்குத் தனுஸில் பத்து

பாகைகளும், வெள்ளிக்கு துலாத்தில் பதினைந்து பாகைகளும், சனிக்கு கும்பத்தில் இருபது பாகைகளும், இராகுவிற்கு அதே கும்பத்தில் முப்பது பாகைகளும், கேதுவிற்கு கன்னியில் முப்பது பாகைகளும், மூலத்திரிகோண பாகைகள், இராகு-கேது இவர்களுக்கு மேடம் மித்ர இராசியும், மீனம் ஸம இராசியும், மீதியான இராசிகள் சத்ரு ராசிகளும் ஆகின்றன.

குறிப்பு :- மதிக்கு இடபத்தில் மூன்று உச்ச பாகைகளுக்குப் பிறகு இருபத்தி ஏழு மூலத்திரிகோண பாகைகளாகும். புதனுக்குக் கன்னியில் பதினைந்து உச்ச பாகைகளுக்குப் பிறகு இருபத்தி ஏழு மூலத்திரிகோண பாகைகளாகும். புதனுக்கு கன்னியில் பதினைந்து உச்ச பாகைகளுக்குப் பிறகு மூலத்திரிகோண பாகைகள் ஐந்து அதற்குப் பிறகு ஆட்சிப் பாகைகள் பத்தாகும்.

"பலதீபிகை" என்னும் நூலில் ராகு, கேது இவர்கட்கு புதன், சனி, வெள்ளி இவர்களின் இராசிகள் மித்ர இராசிகள் என்றும், குஜனுடைய இராசிகள் சம இராசிகள் என்றும், மற்றுமுள்ள இராசிகள் சத்ரு இராசிகள் என்றும் சொல்லப்படுகிறது. "ஸர்வார்த்த சிந்தாமணி" என்கிற நூலில் கேதுவிற்கு சிம்மம் மூலத்திரிகோணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இராசிகளின் சரம் முதலிய பிரிவுகள்

மேடம், கடகம், துலாம், மகரம் இவை சர இராசிகள் என்றும், இடபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் இவை ஸ்திர இராசிகள் என்றும், மற்ற மிதுனம், கன்னி, தனுஸு, மீனம் ஆகிய இராசிகள் மேற்கூறிய இருதன்மையையும் உடையவை எனப்படும்.

மேடம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் இவைகள் க்ரூரத் தன்மை உடையவைகளும், ஓஜ இராசிகளும் ஆகும். மற்ற இடபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம்,

மீனம் ஆகிய ஆறு இராசிகள் சாந்தமான தன்மை உடையவைகளும் (யுக்ம) இரட்டை இராசிகளுமாகும். மேஷம், சிம்மம், தனுசு இவை கிழக்கு திசைக்கும்; இடபம், கன்னி, மகரம் தெற்கு திசைக்கும்; மிதுனம், துலாம், கும்பம் மேற்கு திசைக்கும், கடகம், விருச்சிகம், மீனம் வடதிசைக்கும் உடையவை.

கிரகங்களின் ஆறு வர்க்கங்களாவன

(1) க்ஷேத்திரம், (2) ஹோரை, (3) திரேக்காணம், (4) நவாம்சம், (5) துவாதசாம்சம், (6) திரிம்சாம்சம் (இவை ஆறும் ஷட்வர்கம் என்று சொல்லப்படும்.) இது பலன் சொல்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

ஹோரைக்கு அதிபர்கள்

ஒவ்வொரு இராசியையும் இருபாகமாகப் பிரித்தால் முதல் பாகையிலிருந்து பதினைந்தாவது பாகைவரை முதல் ஹோரையும், பதினாறாவது பாகையிலிருந்து கடைசி பாகை வரை இரண்டாவது ஹோரையுமாகும். முதல் ஹோரைக்கு அந்த இராசிக்குடையவனும், இரண்டாவது ஹோரைக்கு அந்த இராசியிலிருந்து பதினோராவது ராசிக்குடையவனும் ஹோராதிபர்கள் ஆவார்கள்.

குறிப்பு :- மேஷ இராசியில் முதல் ஹோரைக்குரியவன், மேஷ இராசிக்குடையவனான செவ்வாயும், இரண்டாவது ஹோரைக்குரியவன் மேடத்திலிருந்து பதினோராவது இராசிக்குடையவனான சனியும் ஹோரைக்குடையவராவர்.

குறிப்பு :- பிருஹத் ஜாதகம் முதலிய நூல்களில் ஓஜ இராசிகளில் முதல் ஹோரைக்குடையவன் ஞாயிறு என்றும், இரண்டாவது ஹோரைக்குடையவன் மதி என்றும், ஸம இராசிகளில் இதற்கு மாறாக முதல் ஹோரைக்குடையவன் மதி, இரண்டாவது ஹோரைக்குடையவன் ஞாயிறு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு முறைகளில் முதலில்

கூறிய நூலில் சொன்ன முறை பிரச்னத்திலும் சூரிய - சந்திரர்களுக்கு பலமில்லாத சமயத்திலும் ஏனைய கிரந்தங்களில் சொன்னமுறை ஜாதகத்திலும் சந்திர சூரியர்களுக்கு பலமுள்ள சமயத்திலும் ஆதரிக்கவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது.

திரேக்காணாதிபதிகள்

ஒவ்வொரு ராசியும் மூன்று பாகமாகப் பிரித்தால், முதல் பாகை துடங்கி பத்தாவது பாகைவரை முதல்பாகம் முதல் திரேக்காணம். அதற்கு அந்தந்த இராசிக்குரியவரே அதிபர்கள். பதினொன்று முதல் இருபதாவது பாகைவரை இரண்டாவது பாகம், இரண்டாவது திரேக்காணம். இதற்கு அந்தந்த இராசிக்கு பன்னிரண்டாவது இராசிக்கு உடையவரே அதிபர்கள். இருபத்தொன்று முதல் முப்பதுவரை மூன்றாவது பாகம். மூன்றாவது திரேக்காணம். இதற்கு அந்தந்த இராசியின் பதினோராவது இராசிக்கு உடையவர் திரேக்காணாதிபர் என்று அறியவும்.

உதாரணம் 1 :- மேடத்தில் முதல் திரேக்காணத்திற்கு மேடத்தின் அதிபதி செவ்வாயும், இரண்டாவது திரேக்காணத்திற்கு மேடத்திலிருந்து பன்னிரண்டாவது ராசியான மீனத்திற்கு உடைய வியாழனும், மூன்றாவது திரேக்காணத்திற்கு மேடத்திலிருந்து பதினோராவது இராசியான கும்பத்திற்கு உடைய சனியும் திரேக்காணாதிபர் என்று அறியவும்.

மற்றொரு கருத்து : ஒவ்வொரு இராசியிலும் அந்தந்த இராசிக்கு உடையவர் முதல் திரேக்காணத்திற்கும். அந்தந்த இராசியிலிருந்து ஐந்தாவது இராசியின் அதிபர் இரண்டாவது திரேக்காணத்திற்கும், ஒன்பதாவது இராசியின் அதிபர் மூன்றாவது திரேக்காணத்திற்கும் அதிபர் என்று அறியவும்.

உதாரணம் 2 :- மேட இராசியில் மேடத்தின் அதிபர் செவ்வாயும், அதற்கு ஐந்தாவது இராசியாகிய சிம்மத்தின்

அதிபர் சூரியனும், ஒன்பதாவது இராசியாகிய தனுஸின் அதிபர் வியாழனும் வரிசையாக மூன்று திரேக்காணாதிபர் என்று அறியவும்.

பிறிதொரு கருத்து : ஓஜ இராசிகளில் திரேக்காணாதிபர் முதல் முறையில் கூறியவாறே இருக்கும். ஸம இராசிகளிலோ முதல் திரேக்காணத்திற்கு அந்த இராசியிலிருந்து பதினோராவது இராசிக்குடையவரும், இரண்டாவது திரேக்காணத்திற்கு பன்னிரண்டாவது இராசிக்குடையவரும், மூன்றாவது திரேக்காணத்திற்கு அந்த இராசிக்கு உடையவரே அதிபர் என அறியவும்.

உதாரணம் 3 :- இடப இராசியில் முதல் திரேக்காணத்திற்கு இடபத்திலிருந்து பதினோராவது இராசியாகிய மீனத்திற்கு உடைய வியாழனும், இரண்டாவது திரேக்காணத்திற்கு பன்னிரண்டாவது இராசியாகிய மேட இராசியின் அதிபர் செவ்வாயும், மூன்றாவது திரேக்காணத்திற்கு இடப இராசியின் அதிபர் வெள்ளியும் அதிபர்கள் என்றறியவும்.

நான்காவது மதம் :- ஓஜ இராசிகளில் மேற்கூறியவை இரண்டாவது முறை மாதிரியே இருக்கும். ஒவ்வொரு சம இராசியிலும் முதலாவது திரேக்காணத்திற்கு அந்தந்த இராசிக்கு ஒன்பதாவது இராசிக்குடையவரும், இரண்டாவது திரேக்காணத்திற்கு ஐந்தாவது இராசிக்கு உடையவரும், மூன்றாவது திரேக்காணத்திற்கு அந்தந்த இராசிக்கு உடையவரே அதிபர் என்று வைத்துக்கொள்ளவும்.

உதாரணம் 4 :- இடப இராசியில் அதற்கு ஒன்பதாவது இராசிக்கு உடையவராகிய சனியும், ஐந்தாவது இராசிக்கு உடையவராகிய புதனும், அந்த இடப இராசிக்கு உடையவராகிய வெள்ளியும் முறையே ஒன்று, இரண்டு, மூன்று திரேக்காணங்களுக்கு அதிபர்கள் என்று அறியவும்.

இந்த நான்கு பிரிவுகளில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி பலனும் விஷயமும் உண்டு.

குறிப்பு :- கிருஷ்ணீயம் என்னும் நூலில் குறிப்பிட்ட ஐந்தாவது பிரிவு. ஒவ்வொரு இராசியிலும் அந்தந்த இராசியில் இருந்து ஒன்று, ஐந்து, ஒன்பது இராசிகளில் ஒன்று சர ராசியாகவும், மற்றொன்று ஸ்திர ராசியாகவும், மூன்றாவது இருதன்மை உடைய இராசியாகவும் இருக்கும். அவைகளில் சர இராசியின் அதிபதி முதல் திரேக்காணத்திற்கும், ஸ்திர இராசியின் அதிபதி இரண்டாவது திரேக்காணத்திற்கும், இருதன்மையுடைய இராசிக்குரியவர் மூன்றாவது திரேக்காணத்திற்கும் அதிபரெனக்கொள்ளவும்.

உதாரணம் :- மேடத்திலிருந்து ஒன்று, ஐந்து, ஒன்பது இராசிகளிலும் மேடம் சரம், சிம்மம் ஸ்திரம், தனுஸ ு இருதன்மை உடைய இராசி. இவைகளில் சர இராசியை முன்வைத்து அதற்குடைய செவ்வாய் முதல் திரேக்காணத்திற்கும், ஸ்திர இராசியாகிய சிம்மத்திற்குடைய ஞாயிறு இரண்டாவது திரேக்காணத்திற்கும், இருதன்மை இராசியாகிய தனுஸின் அதிபர் வியாழன் மூன்றாவது திரேக்காணத்திற்கும் அதிபரெனக்கொள்ளவும்.

மேற்கூறிய ஐந்து பிரிவுகளில் இரண்டு, ஐந்து பிரிவுகள் ஜாதக பாவத்திற்கும், முதல் பிரிவு பிரச்னத்திற்கும் ஆதரிக்கப்பட வேண்டும் என்று "ஹோரா விவரண"த்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. மூன்று, நான்கு பிரிவுகளைக் குறித்து எங்கும் இதர நூல்களில் சொல்லப்படவில்லை.

நவாம்சாதிபதிகள்

ஒவ்வொரு இராசியையும் ஒன்பது பாகமாகப் பிரித்தால் ஒவ்வொரு பாகத்திலும் **3 1/3** பாகைகள் நவாம்ச பாகைகளாக

ஏற்படும். மேடம், சிம்மம், தனுஸ் இராசிகளில் மேஷத்திலிருந்தும்; இடபம், கன்னி, மகர இராசிகளில் மகர இராசியிலிந்தும்; மிதுனம், துலாம், கும்ப இராசிகளில் துலாத்திலிருந்தும்; கடகம், விருச்சிகம், மீன இராசிகளில் கடகத்திலிருந்தும் ஆரம்பித்து வரிசையாக ஒன்பது நவாம்ச ராசிகளை அறியவும். நவாம்ச இராசியின் அதிபதிகள் நவாம்சாதிபதிகள் ஆவார்கள்.

உதாரணம் :- ரிஷபத்தில் பதினைந்தாவது பாகையில் ஞாயிறு இருப்பதாக எண்ணவும். ரிஷபத்தில் 13 1/3 பாகைகளில் இருந்து 16 2/3 பாகைவரை ஐந்தாவது நவாம்சம். அதனால் ஞாயிறு ஐந்தாவது நவாம்சத்தில் இருக்கிறான். ரிஷப இராசியில் மகரத்திலிருந்து எண்ணினால் ஐந்தாவது இராசி ரிஷபமாகும். அதனால் ஞாயிறு ரிஷப நவாம்சத்தில் இருப்பதாகவும், ரிஷபத்தின் அதிபதி வெள்ளி நவாம்சாதிபதி என்றும் அறியவும்.

துவாதசாம்சாதிபதிகள்

ஒவ்வொரு இராசியையும் பன்னிரண்டு பாகமாகப் பிரித்தால் ஒவ்வொரு பாகத்திற்கும் 2½ பாகைகள் துவாதசாம்ச பாகைகளாக ஏற்படும். அந்தந்த இராசியிலிருந்து வரிசையாக பன்னிரண்டு துவாதாம்ச இராசிகளை அறியவும். துவாதசாம்ச இராசியின் அதிபதிகள் துவாதசாம்சாதிபதிகள் ஆவார்கள்.

உதாரணம் 1 : மேடத்தில் பதினான்காவது பாகையில் ஞாயிறு இருப்பதாக எண்ணவும். மேடத்தில் 12½ பாகையில் இருந்து 15 பாகைவரை ஆறாவது துவாதசாம்சம். அதனால் ஞாயிறு மேடத்தில் ஆறாவது துவாதசாம்சத்தில் இருக்கிறான். ஆகையினால் ஞாயிறு மேடத்திலிருந்து ஆறாவது இராசியான கன்னியா இராசி துவாதசாம்சத்தில் இருப்பதாகவும், கன்னியின் அதிபதி புதன் துவாதசாம்சத்தில் இருப்பதாகவும், கன்னியின் அதிபதி புதன் துவாதசாம்சாதிபதி என்று அறியவும்.

ஓஜ இராசியில் மேற்கண்ட மாதிரியாகவே இருக்கும் ஸம இராசியில் ஒவ்வொரு இராசியிலும் அந்தந்த இராசியிலிருந்து விபரீதகிரமமாக (தலைகீழ்) பன்னிரண்டு இராசிகள் துவாதசாம்ச இராசிகள் ஆகின்றன.

உதாரணம் 2 : ஸம இராசியான ரிஷப இராசியில் ஆறாவது துவாதசாம்சத்தில் ஞாயிறு இருந்தால் ரிஷபம், மேஷம் என்று தலைகீழாக எண்ணுகையில் ஆறாவது இராசியான தனுஸ் இராசியே துவாதசாம்ச இராசியாகும். இந்த இரண்டாவது முறை இந்நூலில் பத்தாவது ச்லோகத்தில் சொல்லப்பட்டது.

திரிம்சாம்சாதிபதிகள்

ஒவ்வொரு இராசியையும் முப்பது பாகமாகப் பிரித்தால் ஒவ்வொரு பாகத்திற்கும் ஒவ்வொரு பாகத்திற்கும் ஒவ்வொரு திரிம்சாம்ச பாகை ஏற்படும். ஓஜ இராசியில் ஒன்று முதல் ஐந்து திரிம்சாம்சங்களுக்குச் செவ்வாயும், ஆறு முதல் பத்து திரிம்சாம்சங்களுக்குச் சனியும், பதினொன்று முதல் பதினெட்டு திரிம்சாம்சங்களுக்கு வியாழனும், பத்தொன்பது முதல் இருபத்தைந்து திரிம்சாம்சங்களுக்குப் புதனும், இருபத்தி ஆறு முதல் முப்பது திரிம்சாம்சங்களுக்கு வெள்ளியும், சம இராசியில் 1 முதல் 5 திரிம்சாம்சங்களுக்கு வெள்ளியும், 6 முதல் 12 திரிம்சாம்சங்களுக்குப் புதனும், 13 முதல் 20 திரிம்சாம்சங்களுக்கு வியாழனும், 21 முதல் 25 திரிம்சாம்சங்களுக்குச் சனியும், 26 முதல் 30 திரிம்சாம்சங்களுக்குச் செவ்வாயும் அதிபதிகள் என்று அறியவும்.

12 இராசிகளின் இயற்கை குணங்கள்

மேஷம் : வடிவம் ஆடு, சிவப்பு நிறம், இரவு காலம், ப்ருஷ்டோதயம், உறுப்பு-தலை, குறுகிய மேனி, இருப்பிடம் பகலில் காடு, இரவில் ஊரும், அதிக பயமும், பசியும்

(விரைவில் உண்ணுவதும்) மேஷ இராசியின் இயற்கைக் குணமாகும்.

இடபம் : காளை மாட்டின் வடிவம், வெண்மை நிறம், (இரவுக்காலத்தில் பலமுள்ளது) ப்ருஷ்டோதயம், உறுப்பு-முகம், குறுகிய உருவம், பகலில் வயலிலும், இரவில் கொட்டிலிலும் இருப்பிடம், (மெதுவாக உண்ணுவது) இடபத்தில் இயற்கைக் குணமாகும்.

மிதுனம் : உருவத்தில் கதையோடு ஆணும், வீணையோடு பெண்ணும், நிறத்தில் கிளிப்பச்சை, இரவுக்காலம் தலை முதலாகப் பிறப்பு, உறுப்பு-மார்பு, நடுத்தர உருவம், இருப்பிடம் வீடும் மிதுனத்தின் குணங்கள்.

கடகம் : நண்டின் வடிவம், வெண்சிவப்பு நிறம், இரவுக் காலத்தில் பலமுடையது, ப்ருஷ்டோதயம், இதயம் அங்கம், நீண்ட உருவம், இருப்பிடம் வளை, குறைவான ஆகாரம், பல கால்கள், பயமும், சஞ்சல ஸ்வாபவமும், மிருதுத் தன்மையும் கடகத்தின் இயற்கை.

சிம்மம் : சிங்க வடிவம், புகையின் நிறம், பகல் காலம், தலை முதலாகப் பிறப்பு, அங்கம் வயிறு, நீண்ட உருவம், இருப்பிடம் மலை, சீக்கிர போஜனமும், கம்பீரப் பார்வையும் சிங்க இராசியின் குணமாகும்.

கன்னி : பெண் வடிவம், புல்லையும் நெருப்பையும் வைத்துக்கொண்டு படகில் இருக்கின்ற தோற்றம், நிறத்தில் பல நிறங்களின் கலப்பு, பகற்காலம், தலை முதலாகப் பிறப்பு, உறுப்பு-இடை, உயர்ந்த தன்மை, இருப்பிடம் கடற்கரை, குறைவான பசியும் கன்னியின் இயற்கைக் குணம்.

துலாம் : தராசு தரித்துக்கொண்டுள்ள மனித உருவம், கருப்பு நிறம், பகற்காலம், (சீர்ஷோதயம்) தலைமுதலாகப் பிறப்பு, உறுப்பு-அடிவயிறு, உயரமான உருவம், இருப்பிடம் - விந்திய மலை, குறைவான ஊணும், சஞ்சல சுபாவமும் துலாத்தின் குணம்.

விருச்சிகம் : தேளின் வடிவம், தங்க நிறம், பகற்காலம், தலை முதலாகப் பிறப்பு, உறுப்பு-லிங்கம், ஸாதாரண உயரம், வசிக்குமிடம் பள்ளம், பல கால்கள், அல்பமும் சஞ்சலமுமான சுபாவமும், சீக்கிர போஜனமும் விருச்சிகத்தின் இயற்கைக் குணம்.

தனுஸ் : வடிவத்தில் முன்புறம் வில்லையும் அம்பையும் தரித்த மனிதன், பின்புறம் குதிரை, சிவப்பு நிறம், பகற்காலம், சீர்ஷோதயம் (தலை முதலாகப் பிறப்பு) உறுப்பு-தொடை, உயரமான வடிவம், இருப்பிடம் யாகம் செய்யுமிடமும் தனுஸ்ஸின் இயற்கைக் குணம்.

மகரம் : உருவத்தில் முன்புறம் மான், பின்புறம் முதலை, கீரியின் நிறம், இரவுக்காலம், ப்ருஷ்டோதயம், உறுப்பு - முழங்கால், நடுத்தர உயரம், வெள்ளை ஜலம் இருப்பிடம், அதிக பசியும் மகரத்தின் குணம்

கும்பம் : பானையைப் பிடித்த மனித உருவம், நிறம் கீரியை யொத்தது, பகற்காலம், தலைமுதலாகப் பிறப்பு, கணுக்கால் உறுப்பு, குட்டையான தேகம், இருப்பிடம் ஜலம், பயிர் உள்ள பூமி, பெண்கள், சூதாட்டம், சோம்பேரித்தனம், சஞ்சல சுபாவமும் கும்பத்தின் குணமாகும்.

மீனம் : மீனின் உருவம், ஒரு மீன் மற்றொரு மீனின் வாலைப் பார்த்தபடி இருக்கும். வெண்மை நிறம், பகற்காலம், சீர்ஷோதயம் ப்ருஷ்டோதயம் இரண்டும், உறுப்பு-கால், குறுகிய மேனி, இருப்பிடம் புண்ய தீர்த்தமும் புண்ய ஸ்தலமும் மீனத்தின் குணங்களாம்.

குறிப்பு:- மேற்கண்ட அட்டவணையில் முதல் வரிசையில் இராசிகளும் 2, 3, 4 வரிசைகளில் இராசிகளின் ஆகாரம், நிறம் இவைகளுக்கு பலமுள்ள காலம் கொடுக்கப் பட்டிருக்கிறது. 5-வது வரிசையில் இராசிகளின் ஜன்ம கிரமம்

சொல்லப்பட்டிருக்கிறது. கர்ப்பத்திலிருந்து பிறக்கின்ற ஸமயத்தில் தலை முன்னதாக வந்தால் சீர்ஷோதயம், கால் முன்னதாக வந்தால் பிருஷ்டோதயம். தலையும், காலும் வராமல் குறுக்காகப் பிறந்தால் உபயோதயம் என்று அறியவும். 6, 7, 8, 9 வரிசைகளில் இராசிகளின் அங்கங்களும், அளவும், இருப்பிடமும், பிற குணங்களும் சொல்லப்பட்டு இருக்கின்றன. ஜன்ம கால லக்னம் பலமுள்ளதாய் இருந்தால் லக்ன ராசிக்கு உரியவைகளையும் இல்லாவிட்டால் லக்கின ராசிக்கு உரியவைகளையும் இல்லாவிட்டால் லக்கின ராசியின் அதிபதி இருக்கிற ராசிக்கு உரியவைகளையும் சொல்லவும்.

லக்ன பாவமும் ஸ்வரூப நிரூபணமும்

நக்ஷத்திரங்கள் 27. ஒவ்வொரு நக்ஷத்திரத்தையும் 4 பாகமாகப் பிரித்தால் 27 நக்ஷத்திரங்களுக்கு 108 பாகமாகும். இந்த பாகங்களை நக்ஷத்திர பாதம் என்று சொல்வார்கள். 9 நக்ஷத்திர பாதங்களுக்கு ஒரு ராசியாக 108 நக்ஷத்திர பாதங்களுக்கு 12 இராசிகள் ஆகின்றன. அச்வினி நக்ஷத்திரத்தின் முதலாவது பாதம் தொடர்ந்து அதன் 4 பாதங்கள், பரணியின் நான்கு பாதங்கள் கிருத்திகையின் முதல் பாதம் முடிய மேஷ இராசி. இப்படியே எல்லா இராசிகளையும் அறியவும்.

எல்லா நக்ஷத்திரங்களும், அவைகளின் பாகமான இராசிகளும், இராசிகளிலுள்ள கிரகங்களும், கீழ் திசையில் இருந்து மேல்நோக்கி பூமியைச் சுற்றிக்கொண்டு இருக்கின்றன.

வானமும் தரையும் ஒட்டின மாதிரியாகத் தெரிகிற இடம் க்ஷிதிஜம். இஷ்ட காலத்தில் க்ஷிதிஜத்தில் தொட்ட மாதிரி தெரிகின்ற இராசி லக்ன ராசி. ஒரு இராசி 30 பாகைகள் ஒரு பாகை - அறுபது கலைகள்; ஒரு கலை - அறுபது விகலைகள் என அறியவும்.

க்ஷிதிஜத்தில் ஒட்டின மாதிரி தெரிகின்ற இராசியின் பாகைகள், கலைகள், விகலைகள் இவைகளைக் கவனமாகத் தெரிந்துகொள்ளவும். இதுவே ஸ்புட லக்னம் (லக்னம் முதலிய எல்லா முக்கியமான விஷயங்களின் விவரம். கடைசியில் பரிசிஷ்டம் சொல்லப்பட்டிருக்கிறது.)

ஜாதகனுக்குத் தனித்தனியான பலனை அறிகின்ற ராசிகளின் குறிப்பிட்ட இடம், பாவம், பாவங்களில் லக்னம் முதல் பாவமாகும். 2 - 12 பாவங்கள் வரிசையாக 2. தனம், 3. சகோதரன், 4. சுகம், 5. புத்திரன், 6. சத்ரு, 7. மனைவி அல்லது மணாளன், 8. ஆயுள், 9. தருமம், 10. கர்மம், 11. லாபம், 12. செலவு என்று அறியவும்.

கேந்திராதி இராசிகள்

லக்னமும் அதிலிருந்து 4, 7, 10 பாவங்களில் கேந்திரம். 2, 5, 7, 8, 11 பாவங்கள் பணபரம். 3, 6, 9, 12 பாவங்கள் ஆபோக்லிமம் எனக் கூறப்படுகிறது. லக்னத்திலிருந்து 4, 8 பாவங்கள் சதுரஸ்ரம் என்றும், 5, 9-வது பாவங்கள் திரிகோணம் எனவும் கூறப்படும்.

உபசய இராசிகள்

ஒவ்வொரு இராசிலிருந்தும் 3, 6, 10, 11-வது இராசிகள் உபசய இராசிகள். இவைகளில் இருக்கின்ற கிரகங்களின் பலன் இயற்கை பலனுக்கு அதிகமாகவே இருக்கும். 6-வது பாவம் சுபக்கிரகங்களுக்கு ஸ்வக்ஷேத்திரமாக இருந்தால் மட்டும் உபசயம், இல்லாவிட்டால் இல்லை. ஒவ்வொரு இராசியிலிருந்தும் உபசய இராசிகளில் இருக்கின்ற கிரகங்களின் பலத்தைக் கொண்டு அந்தந்த இராசிகளின் பலத்தை அறியவும்.

உதாரணம் 1 : மேஷம் முதல் வரிசையாக மிதுனம், கன்னி, மகரம், கும்பம் 3,6, 10, 11-வது இராசிகள் இவைகளில் அதிக கிரகங்கள் இருந்தால் மேஷத்திற்கு அதிக பலமுண்டு என அறியவும்.

உதாரணம் 2 : லக்னத்திலிருந்து 3, 6, 10, 11-வது பாவங்கள் உபசய பாவங்கள் என்று அறியவும். மீதியான எல்லா விஷயங்களும் முதல் முறையில் கூறப்பட்டதுபோல் இருக்கும். இது பிரிஹஜ்ஜாதகம் முதலிய கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இராசிகளுக்குக் கேந்திரபலம்

மிதுனம், கன்னி, துலாம், தனுஸின் முற்பகுதி, கும்பம் இவைகள் மனுஷ்ய இராசிகள். மேஷம், ரிஷபம், ஸிம்மம், தனுஸின் பிற்பகுதி, மகரத்தின் முற்பகுதி இவைகள் மிருக இராசிகள். விருச்சிகம், கடகம், மகரத்தின் பிற்பகுதி, மீனம் இவை ஜல இராசிகள்.

மனுஷ்ய இராசிகள் லக்னத்திலும், மிருக இராசிகள் 10-வது பாவத்திலும், விருச்சிக இராசியானது 7-வது பாவத்திலும், ஜல இராசிகள் 4-வது பாவத்திலும் பலமுள்ளவை.

இராசிகளுக்குக் காலபலன்

மனுஷ்ய இராசிகளுக்கு உச்சி காலத்தில் முழுபலம் உண்டு. அர்த்தராத்திரியில் பலம் இல்லை. நடுநிசி முதல் உச்சி காலம் வரை பலம் அதிகமாகிக்கொண்டே வந்து உச்சி காலத்தில் பூர்ணமாகும். உச்சிகாலம் முதல் நடுநிசி வரை குறைந்துகொண்டே வந்து நடுநிசியில் சூன்யமாகும். உச்சி நடுநிசி காலங்களின் மத்தியில் திரை ராசிக் கணிதம் செய்து பலத்தை அறியவும். மிருக இராசிகளுக்கு நடுநிசியில் பூர்ண பலம். உச்சிக் காலத்தில் பலம் சூன்யம். மீதியான இராசிகளுக்குச் சூரியோதய காலத்திலும், சூரிய அஸ்தமன காலத்திலும் பூர்ணபலம். சூரியோதய காலம் முதல் குறைந்து கொண்டே வந்து உச்சிக்காலத்தில் சூன்யமாகும். சூரிய அஸ்தமன காலம் முதல் குறைந்துகொண்டே வந்து, நடுநிசியில் சூன்யமாகும். உச்சிக்காலத்திலிருந்தும், நடுநிசியிலிருந்தும் வளர்ந்துகொண்டே வந்து சூரிய

அஸ்தமன காலத்திலும், சூரியோதய காலத்தில் பூர்ணமாகும். நடுவில் திரைராசிக் கணிதம் செய்து பலம் அறியவும்.

இராசிகளுக்கு இயற்கை வலிமை

சர இராசியிலிருந்து ஸ்திர இராசியும், ஸ்திர இராசியிலிருந்து இரு தன்மை ராசியும், இயற்கையாக அதிக பலம் பொருந்தியவை.

இராசிகளுக்கு நட்பு, பகை ராசிகள்

சர இராசிகளுக்கு ஸ்திர இராசிகளும், ஸ்திர இராசிகளுக்கு சர இராசிகளும் மித்ர இராசிகள். சர - ஸ்திர இராசிகளுக்கு இருதன்மை ராசிகள் சத்ரு இராசிகள். இந்த மூன்று இராசிகளுக்கும் அந்தந்த இராசிகளே அதிமித்ர இராசிகள். ஒவ்வொரு இரர்சிக்கும் அதிமித்ர ராசிகள் மிக அனுகூலமாகவும், மித்திர இராசிகள் கொஞ்சம் அனுகூலமாகவும், சத்ரு இராசிகள் விரோதமாகவும் இருக்கும்.

பாவங்களுக்குப் பார்வை பலன்

ஒவ்வொரு பாவத்தையும் அதன் அதிபதி, வியாழன், புதன், சுபகிரகங்கள் இவர்களில் யாராவது பார்த்தால் அல்லது அந்த கிரகங்கள் அந்த பாவத்தில் இருந்தால் பாவத்திற்குப் பலமுண்டு. ஆனால் மீதியான கிரகங்களின் பார்வை அல்லது சேர்க்கை இருக்கக்கூடாது. மேலே குறிப்பிட்ட கிரகங்களில் எவ்வளவு அதிக கிரகத் தொடர்பு உண்டாகிறதோ அவ்வளவு பாவத்திற்கு பலம் அதிகம் என அறியவும்.

இராசிகளுக்குத் திருஷ்டி பலம்

சர இராசி தன்னிடமிருந்து 2, 5, 8, 11-வது இராசிகளைப் பார்க்கும். 2-வது ¼ திருஷ்டியும், 5-வது இராசியில் ½ திருஷ்டியும், 8 வது இராசியில் ¾ திருஷ்டியும், 11-வது இராசியில் பூர்ண திருஷ்டியும் இருக்கும். ஸ்திர இராசி

தன்னிடமிருந்து 12-வது ராசியை ¼ திருஷ்டியாலும், 3-வது இராசியை ½ திருஷ்டியாலும், 6-வது இராசியை ¾ திருஷ்டியாலும், 9-வது இராசியைப் பூர்ண திருஷ்டியாலும் பார்க்கும். இருதன்மை இராசி தன்னிடமிருந்து 10-வது இராசியை ¼ திருஷ்டியாலும், தன்னை ½ திருஷ்டியாலும், 4-வது இராசியை ¾ திருஷ்டியாலும், 7-வது இராசியைப் பூர்ண திருஷ்டியாலும் பார்க்கும்.

குறிப்பு (2வது முறை) :- சர ராசி தன் அருகேயுள்ள ஸ்திர இராசியை விட்டுவிட்டு மீதியான மூன்று ஸ்திர இராசிகளைப் பார்க்கும். ஸ்திர இராசித் தனக்கு அருகேயுள்ள சர ராசியை விட்டுவிட்டு மீதமுள்ள மூன்று சர இராசிகளைப் பார்க்கும். இருதன்மை இராசி தன்னைவிட்டு மீதியான மூன்று இருதன்மை இராசிகளைப் பார்க்கும் எனக் கொள்ளவும்.

உதாரணம் :- மேஷம் தன் பக்கத்திலுள்ள ஸ்திர இராசியான இடபத்தை விட்டுவிட்டு மீதியான மூன்று ஸ்திர ராசிகளான ஸிம்மம், விருச்சிகம், கும்பம் இவற்றைப் பார்க்கும். இது ஜைமினியின் உபதேச சூத்திரத்தில் சொன்னதாகும்.

இராசிகளின் அளவு

12 இராசிகளைக் கொண்ட இராசிச் சக்கரத்தில் மேஷம் முதல் ஆறு இராசிகள் சக்ரபூர்வாத்தம் துலாம் முதல் ஆறு இராசிகள் சக்ராபரார்த்தமாகும். சக்ர பூர்வார்த்தத்தில் (முன்பகுதி) கிரமமாகவும், சக்ராபரார்த்த்தில் (பின்பகுதி) தலைகீழாகவும் 2-2 இராசிகள் குட்டையாகவும், அடுத்த 2-2 இராசிகள் சமமாகவும், அடுத்த 2-2 இராசிகள் உயரமாகவும் இருக்கும்.

உதாரணம் :- சக்ர பூர்வார்த்தத்தில் வரிசையாக மேஷம், ரிஷபம் சக்ராபரார்த்தத்தில் தலைகீழாக மீனம், கும்பம் குட்டை இராசிகள். மிதுனம், கடகம், மகரம், தனுஸ் நடுத்தர இராசிகள். மீதியானவை உயர இராசிகள் எனப்படும்.

கேந்திர பலம்

ஒவ்வொரு கேந்திரத்திலும் ஷட்வர்க்கங்களில் அந்தந்த கேந்திர இராசிக்கு உரிய வர்க்கம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக வருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிக பலன் அந்த கேந்திரத்திலிருந்து வரும்.

பூர்வ பாராசர்யம் என்னும் நூலில் இராசி ஸ்வரூப அத்யாயம் என்கிற முதல் அத்யாயம் முற்றும்.

இரண்டாவது அத்யாயம்

க்ரூர கிரகங்களும் அவைகளின் பாகுபாடும்

ஞாயிறு, செவ்வாய், சனி, இராகு, மாந்தி, ஆகிய ஐந்து கிரகங்கள் க்ரூரத் தன்மையுடையவை. அவைகளுள் ஞாயிறைவிட செவ்வாயும், செவ்வாயைக் காட்டிலும் சனியும், சனியைக் காட்டிலும் இராகுவும், இராகுவைக் காட்டிலும் மாந்தியும் மிகவும் கொடூரமானவர்கள் ஆகிறார்.

குறிப்பு :- "சநிவத்ராகு: குஜவத்கேது: பலதாதா ஸ்யாதிஹ ஸம்ப்ரோக்த:" என்ற இந்தப் பிரமாணத்தில் சனியும், இராகுவும் கொடுமையில் சமமென்று சொல்லியிருந்தபோதிலும், சனியைக் காட்டிலும் இராகு கொடுமையானவன் என்று இந்நூலில் எழுதியதை நாம் பின்பற்றவேண்டும். சனியைக் காட்டிலும் இராகுவின் பலன் மிகக்கொடுமையானதே இதற்குக் காரணம். செவ்வாயும், கேதுவும் சமம் என்கிறது இந்நூலில் மறுக்கப்படாததால் அதையே நாம் மேற்கொள்ள வேண்டும்.

சுபக்கிரகங்களாவன

பாபக் கிரகங்களோடு தொடர்பில்லாத புதன், வளர்பிறை மதி, வெள்ளி, வியாழன் ஆகிய இந்நான்கும் சுபக்கிரகங்களாகும்.

மதியின் சுபாசுபத்தன்மை

பூர்ணமதி வியாழனுக்கும், முக்கால் மதி வெள்ளிக்கும், பாதிமதி புதனுக்கும் ஒப்பாவான். பாதிக்குக் குறைந்த அளவுள்ள மதி க்ஷீண தசையில் இருந்தாலும், தனுஸ் அல்லது மீனத்தில் இருந்தால் நற்பலனளிப்பான்.

பெரிய அளவுள்ள (அதிகக் கலையுடைய) தேய்பிறை மதியைக் காட்டிலும் சிறிய அளவுள்ள (குறைந்த கலையுடைய) வளர்பிறை மதி சிறந்தவனாவான்.

சுக்லபக்ஷ பஞ்சமி தொடங்கி, கிருஷ்ணபக்ஷ பஞ்சமி வரையில்சந்திரன் சுபன் என்று அறியவும்.

குறிப்பு :- சுக்லபக்ஷ சதுர்தசி, பூர்ணிமை, கிருஷ்ணபக்ஷ ப்ரதமை, த்வதீயை திதிகளில் மதி பூர்ணனாவான் என்றும், சுக்லபக்ஷ தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி திதிகளிலும். கிருஷ்ணபக்ஷ திருதீயை, சதுர்த்தி, பஞ்சமி திதிகளிலும் மதி முக்கால் பாகமுடையவனாவான் என்றும்; சுக்லபக்ஷ ஷஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி திதிகளிலும், கிருஷ்ணபக்ஷ ஷஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி திதிகளிலும் பாதி பாகமுடையவன் ஆவான் என்றும் மற்ற திதிகளில் சந்திரன் க்ஷீண சந்திரன் ஆவான் என்றும் கூறப்படுகிறது.

மதியின் சுபத்தன்மையில் வேறுமதம்

சுக்லபக்ஷ அஷ்டமியின் பின்பாதி முதல் கிருஷ்ணபக்ஷ அஷ்டமி முன்பாதி வரை மதி சுபன் என்றும், குருவின் பார்வை அல்லது குருவின் சேர்க்கை இருந்தாலும் மதி க்ஷீணனாகிலும் சுபபலனைத் தருவான் என்றும் சிலர்

சொல்கிறார்கள். மேற்கூறிய விதிக்கு மாறாக இருந்தால் அசுபம் என்று அறியவும்.

ஞாயிறின் சுபத்தன்மை

ஞாயிறு இயற்கையில் கொடூரனாயினும் தனுஸில் இருக்கும்பொழுது வியாழனால் பார்க்கப்பட்டால் சுபபலனை அளிப்பான் என்று அறியவும்.

செவ்வாயின் சுபத்தன்மை

செவ்வாய் இயற்கையில் கொடியவனானாலும், ரிஷபத்தில் பூர்ண மதியுடன் சேர்ந்து இருந்தால் சுபனாவான்.

புதனின் சுபத்தன்மையும், அசுபத்தன்மையும்

பாபக்கிரகங்களின் சேர்க்கை இல்லாத புதன் சுபக் கிரகங்களின் இராசியில் தங்கி இருந்தால் சுபன் (நற்பலனை அளிப்பான்) அவ்வாறு இல்லாவிடில் அசுபன். (நற்பலனை அளிக்கமாட்டான்.)

சனியின் சுபத்தன்மை

லக்ன இராசியானது துலாம், தனுஸ், மகரம், கும்பம், மீனம் ஆகிய ஐந்து இராசிகளில் ஒன்றாக இருந்து அந்த இராசியில் சனி தங்கினால் நற்பலன் அளிப்பான்.

இராகுவின் சுபத்தன்மை

இராகு லக்னத்திற்கு மூன்று, ஆறு, பதினொன்று ஆகிய இடங்களில் இருந்து சுபக் கிரகங்களால் பார்க்கப்பட்டால் சுபனாவான்.

இராகு சுபன் என்பதில் வேறு மதம்

இராகு மேஷம், ரிஷபம், கடகம், கும்பம் ஆகிய இந்நான்கு இராசிகளிலிருந்தால் சுபபலனை அளிப்பான் என்று சிலர் கூறுகின்றனர்.

கேதுவின் சுபத்தன்மை

கேது கன்னி, விருச்சிகம், மீனத்தின் பிற்பாதி ஆகிய இம்மூன்று இராசிகளில் தங்கி இருந்து, லக்னத்திற்கு மூன்று, ஆறு, பத்து, பதினொன்று ஆகிய இடங்களில் இருந்து சுபக்கிரகங்களின் சேர்க்கை அல்லது பார்வை பெற்றிருந்தால் சுபன் என்று கூறப்படுகிறது.

சுபக்கிரகங்களின் அசுபத்தன்மை

பூர்ணமதி, கொடிய கிரகத்தின் தொடர்பில்லாத சுபக்கிரகத்தின் தொடர்புள்ள புதன், வியாழன், வெள்ளி ஆகிய நான்கு சுபக்கிரகங்கள். *(1)* கொடிய கிரகங்களின் வீட்டில் தங்குதல், *(2)* கொடிய கிரகத்தின் தொடர்பு அல்லது பார்வை, *(3)* சுபக்கிரகத் தொடர்பு அல்லது பார்வை இல்லாமை, *(4)* எட்டு, பன்னிரண்டு, ஆறு ஆகிய கெட்ட பாவங்களில் தங்குதல், *(5)* தன் நீச இராசி, சத்ரு கிரகத்தின் ஷட் வர்க்கத்தில் இருத்தல், *(6)* தன் இராசி, உச்ச ராசி, மூலத்திரிகோண இராசி, மித்ர இராசி மற்றும் தன்னுடைய ஷட் வர்க்கங்களில் இல்லாமை முதலிய தோஷங்களினால் சுபக் கிரகங்களும் அசுப பலனைத் தருவார்கள்.

கிரகங்களுக்குத் தாற்காலிகமான நட்பு, விரோதமுள்ள கிரகங்கள்

எல்லா கிரகங்களுக்கும், மூலத்திரிகோண ஸ்தானம் முன்பு சொல்லப்பட்டது. ஒவ்வொரு கிரகத்தின் மூலத் திரிகோணஸ்தானத்திலிருந்து வரிசையாக எண்ணுகையில் இரண்டு, நான்கு, ஐந்து, எட்டு, ஒன்பது, பன்னிரண்டு ஸ்தானங்களின் அதிபதிகளும் தங்கள் உச்ச ஸ்தானத்தின் அதிபதியும் தங்களுக்கு வேண்டியவர்களாக இருப்பார்கள். ஒரே கிரகத்திற்கு மேற்கூறிய ஸ்தானங்களில் இரண்டு அல்லது அதிகமான ஸ்தானங்களின் ஆதிபத்யம் வந்தால் மித்திரன் என்று அறியவும். ஒரே கிரகத்திற்கு ஒரு ஸ்தானத்தின்

ஆதிபத்யம் வந்தால் மித்ரனும் இல்லை. சத்ருவும் இல்லை, சமன் என்று அறியவும். எவருக்கு மேற்கண்ட இடங்களில் ஒரு ஸ்தானத்தின் ஆதிபத்தியமும் இல்லையோ அவன் சத்ரு என்று அறியவும்.

உதாரணம் : ஞாயிறுக்கு ஸிம்மம் மூலத்திரிகோண இராசி. அந்த இராசியிலிருந்து வரிசையாக எண்ணுகையில் இரண்டாவது கன்னி இராசியின் அதிபதி புதன். நான்காவது இராசி விருச்சிகத்திற்கும், ஒன்பதாவது இராசி மேஷத்திற்கும் (ஞாயிறின் உச்சஸ்தானம் மேஷம்) அதிபதி குஜன், ஐந்தாவது இராசி தனுஸிற்கும், எட்டாவது இராசி மீனத்திற்கும் அதிபதி வியாழன், பன்னிரண்டாவது இராசி கடகத்திற்கும் அதிபதி மதி. இவர்களில் செவ்வாய் கிரகத்திற்கு மேற்கூறிய மூன்று ஸ்தானங்களின் ஆதிபத்யமும் வியாழனுக்கு இரண்டு ஸ்தானங்களின் ஆதிபத்தியமும் வந்திருக்கிறது. அதனால் ஞாயிறுக்கு இவ்விருவரும் நண்பர்கள். சனிக்கும், வெள்ளிக்கும் மேற்கண்ட ஸ்தானங்களில் ஒரு ஸ்தானத்தின் ஆதிபத்யமும் இல்லை. அதனால் அவ்விருவரும் ஞாயிறுக்கு விரோதிகள். புதனுக்கு ஒரே ஸ்தானத்தின் ஆதிபத்தியம் வந்திருக்கிறது. அதனால் ஞாயிறுக்கு புதன் மித்ரன் இல்லை. சத்ருவும் இல்லை, ஸமன் என்று அறியவும்.

மதிக்கு மேற்கண்ட ஸ்தானங்களில் ஒரே ஸ்தானத்தின் ஆதிபத்தியம் வந்திருக்கிறது. ஆனாலும் மதிக்கும் ஞாயிறுக்கும் மேற்கண்ட ஸ்தானங்களில் ஒரே ஸ்தானத்தின் ஆதிபத்யம் இருந்தாலும், மித்ரத்துவம் இருப்பதனால் ஞாயிறுக்கு மதி மித்ரன் என்று அறியவும்.

குறிப்பு :- ஞாயிறுக்கு எல்லா கிரகங்களின் மூலத்திரிகோண ஸ்தானங்களிலிருந்தும் மேற்கூறிய ஸ்தானங்களின் ஆதிபத்யங்களில் இரண்டு அல்லது மூன்று ஸ்தானங்களின் ஆதிபத்யம் வரவே வராது. அதனால் ஒரே ஸ்தானத்தின் ஆதிபத்யம் இருந்தாலும் ஸமன் என்று சொல்லக்கூடாது. மித்ரன் என்றே அறியவேண்டும் என்று

சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏழு கிரகங்களில் செவ்வாய் முதலிய ஐந்து கிரகங்களுக்கு மேஷம் முதலிய பன்னிரண்டு இராசிகளில் இரண்டு இரண்டு இராசிகளின் ஆதிபத்யம் உண்டு. ஞாயிறுக்கு ஸிம்மம் என்ற ஒரே இராசியின் ஆதிபத்யமும், மதிக்கு கடகம் என்ற ஒரே இராசியின் ஆதிபத்யமும் உண்டு. அதனால் ஞாயிறுக்கு ஏற்பட்ட நியாயமே மதிக்கும் ஏற்படுவதால் ஞாயிறைப் போல் மதிக்கும் எல்லா கிரகங்களின் மூலத்திரிகோண ஸ்தானத்தில் ஒரு ஸ்தானத்தின் ஆதிபத்யம் இருந்தாலும் மித்திரன் என்றே சொல்லவேண்டும். ஸமன் என்று சொல்லக்கூடாது. இதுவே மதி ஞாயிறுவின் மித்ரன் ஆவான். ஸமன் ஆகமாட்டான் என்ற கருத்திற்குக் காரணமாகும்.

கிரகங்களின் தற்கால நட்பு

ஒவ்வொரு கிரகத்திற்கும் தாங்கள் இருக்கின்ற இராசியிலிருந்து 2, 3, 4, 10, 11, 12 ஆகிய இராசிகளில் இருக்கின்ற எல்லா கிரகங்களுடன் தற்கால நட்பு உண்டு. அந்த கிரகங்களுக்கும் இவைகளுடன்தான் தற்கால நட்பு உண்டு. இது தாற்காலிக அந்நியோன்ய நட்பு என்று சொல்லப்படுகிறது.

உதாரணம் : மேஷத்தில் செவ்வாயும், ரிஷபத்தில் புதனும் இருந்தால் அவ்விருவரும் தாற்காலிக அந்நியோன்ய நட்புடையவராவார்.

கிரகங்களின் அதிமித்ரத்தன்மையில் பாகுபாடு

கிரகங்களுக்குத் தமக்குள் நட்பும், ஸமத்தன்மையும், பகைமையும், இயற்கையாகவும், தற்காலிமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இயற்கை நண்பனே தற்காலிக நண்பனாகிவிட்டால் அதிமித்ரன் என்றும், இயற்கை சமத் தன்மை உடைய கிரகம் தற்காலிக நண்பனென்றும், இயற்கை பகைமையுடைய கிரகம் தாற்காலிக நண்பன் ஆனாலும்

இயற்கை நட்புடைய கிரகம் தாற்காலிக பகைவனானாலும் ஸமன் என்றும் கூறப்படுகிறது. இயற்கை ஸமத் தன்மை உடைய கிரகம் தற்கால சத்ருவாகிவிட்டால் சத்ரு என்றும், இயற்கை பகை கிரகம் தற்கால பகைவனானால் அதிசத்ரு (முழு பகைவன்) என்றும் சொல்வார்கள்.

உதாரணம் : ஞாயிறுக்குப் புதன் இயற்கை சமன். இவன் தாற்காலிக சத்ருவாகிவிட்டால் பகைவன் என்றும் தாற்காலிக மித்ரனாகிவிட்டால் நண்பன் என்றும் கருதப்படுவான். செவ்வாயும், மதியும், வியாழனும் ஞாயிறுக்கு நண்பர்கள். இவர்கள் தாற்காலிக பகைவர் ஆகிவிட்டால் ஸமன் என்றும் சொல்வார்கள்.

கிரகங்களின் பார்வை

முதல் அத்யாயத்தில் **31-33** சுலோகங்களின் இராசிகளின் பார்வை சொல்லப்பட்டன. அவ்வாறே இராசியில் இருக்கின்ற கிரகங்களும் பார்க்கின்றன என்றறியவும். மேஷம், கும்பத்தை முழுப்பார்வையாகவும்; விருச்சிகத்தை ¾ பார்வையாகவும், சிம்மத்தை ½ பார்வையாகவும், ரிஷபத்தை ¼ பார்வையாகவும் பார்க்கின்றது. மேஷத்தில் இருக்கின்ற எல்லா கிரகங்களும் அவ்வாறே பார்க்கின்றன என்று அறியவும்.

குறிப்பு : - அபிபச்யந்த்யர்க்ஷாணி பார்ச்வே ச தந்நிஷ்டாஸ்தத்தத் என்கிற ஜைமினி சூத்திரத்தில் மேற்கூறிய இராசியின் பார்வையும், இராசியிலுள்ள கிரகங்களின் பார்வையும் சொல்லப்பட்டிருக்கிறது. சர இராசி தன்னிடமிருந்து இரண்டாவது இராசியையும், ஸ்திர இராசி தன்னிடமிருந்து **12**-வது இராசியையும், இருதன்மை இராசி தன்னையும் பார்க்கிறதில்லை என்றும், பார்க்கிற இராசிகளையும் முற்கூறிய ¼, ½, ¾ என்கிற வித்தியாசம் இல்லாமல் பார்க்கின்றன என்றும் மேற்கூறிய சூத்திரங்களுக்கு வ்யாக்யானத்திலும், ஜைமினி சூத்திர காரிகையிலும் அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த நூலில் மேற்கூறிய

இராசிகளிலும் ¼ பார்வை இருக்கிறது என்றும், பார்க்கிற இராசிகளையும் இவ்வாறு ¼, ½, ¾, 1 வேறுபாட்டோடு பார்க்கின்றன என்றும் சூத்திரத்தின் அர்த்தம் என்று தெரிகிறது.

கிரகங்களின் பார்வையில் வேறுபாடுகள்

சனி தான் இருக்கும் இராசியிலிருந்து 3, 10 இராசிகளையும், செவ்வாய் தான் இருக்கும் இராசியிலிருந்து 4, 8 இராசிகளையும், வியாழன் தான் இருக்கும் இராசியிலிருந்து 5, 9 இராசிகளையும், எல்லா கிரகங்களும் தாங்கள் இருக்கின்ற இராசிக்கு ஏழாவது இராசியையும் முழுப் பார்வையால் பார்க்கிறார்கள். சனி நீங்கலாக மீதியான கிரஹங்கள் தங்களிடமிருந்து 3, 10-வது ஸ்தானங்களை ¼ பார்வையாகவும், செவ்வாய் நீங்கலாக மீதியான கிரகங்கள் 4, 8வது ஸ்தானங்களை ¾ பார்வையாகவும், வியாழன் நீங்கலாக மீதியான கிரகங்கள் 5, 9வது ஸ்தானங்களை ½ பார்வையாகவும் பார்க்கிறார்கள். மேற்கூறியபடி 3, 10வது ஸ்தானங்களிலும், 5, 9வது ஸ்தானங்களிலும், 4, 8வது ஸ்தானங்களிலும் பார்வை சமமாக இருந்தாலும் சமீபத்திலுள்ள 3வது ஸ்தானத்திலிருந்து 10வது ஸ்தானத்திலும் 5வது ஸ்தானத்திலிருந்து 9வது ஸ்தானத்திலும், 4வது ஸ்தானத்திலிருந்து 8வது ஸ்தானத்திலும் உள்ள பார்வை உத்தமமானது என்று அறியவும்.

கிரகங்களின் ஸ்தான பலமும் திக்பலமும்

கிரகங்கள், தங்களுடைய உச்ச இராசி, மூலத்திரிகோண இராசி, ஆட்சி இராசி, அதிமித்ர ராசி, மித்ரராசி, ஸமராசி, சத்ருராசி, அதிசத்ருராசி இவைகளிலும் தங்களுடைய ஷட்வர்க்கத்திலிருந்து 1, 3, 4, 5, 7, 9, 10, 11 இராசிகளிலும் இருந்தாலும் ஸ்தான பலம் உண்டு.

லக்னத்தில் புதனும், வியாழனும், லக்னம் தொடங்கி 4வது பாவத்தில் மதியும், வெள்ளியும், 7வது பாவத்தில் சனியும், 10வது பாவத்தில் ஞாயிறும், செவ்வாயும் இருந்தால் திக்பலம் உண்டு.

குறிப்பு: "ஸ்வோச்சே பூர்ணம் ஸ்வத்ரிகோணே த்ரிபாதம் ஸ்வக்ஷேத்ரேSர்தம் மித்ரபே பாதமேவ. த்விஷட்க்ஷேத்ரேSல்பம் நீசகேSஸ்தம் கதேSபி க்ஷேத்ரே வீர்யம் நிஷ்பலம் ஸ்யாத் க்ரஹாணாம்" என்கிற பிரமாண வசனத்தில் கூறிய மாதிரியாகவே, உச்ச இராசியில் தங்கினால் ஸ்தானபலம் பூர்ணமாகும். மூலத் திரிகோணத்தில் தங்கினால் ¾ பாகம் பலமாகும். தன் இராசியில் தங்கினால் ½ பாகம் பலமாகும். அதிமித்ர இராசியில் தங்கினால் ¾ பாகம் பலமாகும். மித்ர இராசியில் தங்கினால் ¼ பாகம் பலமாகும். ஸம இராசியில் தங்கினால் 1/3 பாகம் பலமாகும். சத்ரு இராசியில் தங்கினால் 1/16 பாகம் பலமாகும். அதிசத்ரு இராசியில் தங்கினால் 1/32 பாகம் ஸ்தான பலம் உண்டு என்று அறியவும்.

கிரகங்களுக்கு கால பலம்

ஞாயிறும், வியாழனும், வெள்ளியும் நடுப்பகலிலும், மதியும், செவ்வாயும், சனியும் நடுநிசியிலும், புதன் எல்லாக் காலங்களிலும் கால பலமுள்ளவர்கள் ஆவார்கள்.

பகலில் 1-10 நாழிகை வரை புதனும், 11-20 நாழிகை வரை ஞாயிறும், 21-30 நாழிகை வரை சனியும், இரவு வேளையில் 1-10 வரை மதியும், 11-20 நாழிகை வரை வெள்ளியும், 21-30 நாழிகை வரை செவ்வாயும் தினராத்திரி திரிபாகபலம் உள்ளவர்கள் ஆவார்கள்.

வருஷாதிபதி முதலியவர்கள் பலம்

வருஷாதிபனுக்கு ¼ பாகமும், மாஸாதிபதிக்கு ½ பாகமும், தினாதிபதிக்கு ¾ பாகமும், ஹோராதிபதிக்கு பூர்ண பலமும் உண்டு.

வருஷப் பிறப்பு தினத்தில் எது வாரமோ அந்த வாரத்தின் அதிபதி வருஷாதிபதி ஆவான். மாதப்பிறப்பு வாரத்தின் அதிபதி மாசாதிபதியும், தினத்தின் அதிபதி தினாதிபதியும் ஆவார்கள்.

குறிப்பு : வானத்தில் சனி, வியாழன், செவ்வாய், ஞாயிறு, வெள்ளி, புதன், மதி என்று 7 கிரகங்கள் மேலிருந்து

கீழே வரிசையாக இருக்கின்றன. பஞ்சாங்கத்தில் பகலின் முழுநேரம் (அகஸ்) என்று நாழிகை வினாடியாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. பகல் முழு நேரத்தை 60-இல் இருந்து கழித்தால் இரவு முழுநேரம் நாழிகை, வினாடியாக வரும். பகல் முழு நேரத்தையும் இரவு முழு நேரத்தையும் 12 பாகமாகப் பிரித்தால் பகலில் 12 கால ஹோரைகளும், இரவில் 12 காலஹோரைகளும் ஏற்படும். பகலில் வாராதிபதியின் ஹோரையும், இரவில் வாராதிபதியின் ஹோரையிலிருந்து 5-வது கிரகத்தின் ஹோரையும் முதல் கால ஹோரையாகும். அடுத்து மேற்குறிப்பிட்ட கிரக வரிசைக் கிரமமாக 2, 3, 4 முதலிய கால ஹோரைகளின் அதிபர்கள் ஆவார்கள்.

உதாரணம் : பஞ்சாங்கத்தில் பகல் முழு நேரம் 32-0 நாழிகை என்று இருக்கிறது. அதனால் இரவு முழு நேரம் 28-0 நாழிகைகள் ஆகின்றன. இவைகளை 12-ஆல் வகுத்தால் 2 நாழிகை 40 வினாடி பகல் கால ஹோரை முழுநேரமும், 2 நாழிகை 20 வினாடி இரவு கால் ஹோரையின் முழு நேரமும் ஆகும். இஷ்ட தினத்தின் வாரம் ஞாயிறாக இருந்தால் முதல் கால ஹோரை ஞாயிறு கால ஹோரையாகும். மேற்கூறிய வரிசைக் கிரமாமக 2-வது கால ஹோரை வெள்ளியின் கால ஹோரையும், அடுத்து புதன், மதி, சனி, வியாழன், செவ்வாய், ஞாயிறு, வெள்ளி, புதன், மதி, சனி இப்படி பகலில் 12 கால ஹோரைகள் ஆகின்றன. இரவில் ஞாயிறிலிருந்து 5-வது கிரகம் வியாழனின் கால ஹோரை, முதல் கால ஹோரையும் அடுத்து செவ்வாய் ஞாயிறு, வெள்ளி, புதன், மதி, சனி, வியாழன், செவ்வாய், ஞாயிறு, வெள்ளி, புதன் இவர்களின் கால ஹோரைகள் வரிசையாக ஆகின்றன.

கிரகங்களுக்கு அயன பலம்

தக்ஷிணாயணத்தில் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி இவர்களுக்கும், உத்தராயணத்தில் ஞாயிறு, மதி இவ்விருவருக்கும் அயன பலம் உண்டு.

குறிப்பு : ஏழு கிரகங்களுக்கும் மூன்று விதமான கதி உண்டு. 1. பிரவஹறவாயுகதி - வானத்தில் இருக்கிற நக்ஷத்திர கோளமும் எல்லா கிரகங்களின் கோளங்களும் பிரவஹம் என்ற வாயுனால் மேற்கு திசைப் பக்கமாகத் தள்ளப்பட்டு 24 மணி நேரத்தில் பூமியை ஒருதரம் வலம் வருகின்றன. இதனால்தான் அவ்வட்டங்களில் உள்ள எல்லா கிரகங்களும் நக்ஷத்திரங்களும் மேற்கு திசை முகமாக ஊர்ந்து செல்கிறதாகவும் தெரிகிறது. இதனால்தான் ஒவ்வொரு தினமும் உதயமும் அஸ்தமனமும் உண்டாகும். இது கிரகங்களின் மேற்கு கதி.

2. ஒவ்வொரு கிரக வட்டங்களிலும் மேஷம் முதலிய 12 இராசிகள் மேற்கிலிருந்து கிழக்கு திசையை நோக்கி குறிக்கப்பட்டிருக்கின்றன. எல்லா கிரகங்களும் தங்கள் வட்டத்தில் மேற்கிலிருந்து கிழக்கு திசை முகமாக மேடம், இடபம் முதலிய இராசிகளில் சுய சக்தியினால் ஊர்ந்து நடக்கின்றன. இது கிரகங்களின் கிழக்குக் கதி. இது பஞ்சாங்கத்தில் கிரகஸ்புடம் என்றும் அல்லது longitude என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு கிரகங்களின் வட்டங்களில் கோளசந்தி என்னுமிடத்திலிருந்து எல்லா கிரகங்களும் தெற்கு அல்லது வடக்கு திசையை நோக்கி ஊர்ந்து செல்கின்றன. எல்லா கிரகங்களின் வட்டங்களில் வடக்கு திசையை நோக்கி நடக்க ஆரம்பிக்கின்ற இடம் தக்ஷிணாயண சந்தி என்றும், தெற்கு திசையை நோக்கி நடக்கின்ற ஆரம்பிக்கின்ற இடம் உத்தராயண சந்தி என்றும் சொல்லப்படுகிறது. எல்லா கிரகங்களும் தக்ஷிணாயன சந்தியிலிருந்து உத்தராயண சந்தி வரை உத்தராயண கதியும், உத்தராயண சந்தியிலிருந்து தக்ஷிணாயண சந்தி வரை தக்ஷிணாயன கதியும் ஆகும். இதனால்தான் கிரகங்களின் தெற்கு கதியும், வடக்கு கதியும் ஆகும். இது பஞ்சாங்கங்களில் கிராந்தி அல்லது latitude என்று குறிக்கப்பட்டு இருக்கிறது. கிராந்தி எண்ணிக்கையின் முன்பு - குறி இருந்தால் தக்ஷிண கிராந்தி என்றும் + குறி இருந்தால்

உத்திர கிராந்தி என்றும் அறியவும். குறிப்பிட்ட தினத்திலிருந்து மறுதினம் உத்தர கிராந்தி அதிகமானாலும் தக்ஷிண கிராந்தி குறைந்தாலும் உத்தராயணம் என்றும், உத்திர கிராந்தி குறைந்தாலும் தக்ஷிண கிராந்தி அதிகமானாலும் தக்ஷிணாயணம் என்றும் அறியவும்.

கிரகங்களுக்கு யுத்தபலம்

இவ்வாறு ஸ்தானபலம், திக்பலம், காலபலம் தினராத்ரி த்ரிபாகபலம், வர்ஷாதிபதி பலம், அயனபலம் இவைகள் சொல்லப்பட்டன. ஸ்தானம் முதலான பலங்களைக் காரணமாகக் கொண்டு பரஸ்பரம் யுத்தம் செய்கிற இரண்டு கிரகங்களுக்குள் ஏதாவதொரு பலத்தின் ஆதிக்யத்தினால் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட கிரகத்திற்கு யுத்தபலம் கிடையாது. வென்றவனுக்கு யுத்தபலம் பூர்ணம் ஆகும்.

கிரகங்களுக்கு ஸமாகம பலமும் உதயாஸ்த பலமும்

ஸமாகமம் ஏற்பட்ட கிரகங்களுக்கு பூர்ணபலமும், அஸ்தமனம் உண்டான கிரகங்களுக்குப் பூர்ண தௌர்பல்யமும் உண்டாகும். குஜன், புதன், குரு, சுக்கிரன், சனி என்ற ஐந்து கிரகங்களுக்குத் தாரா கிரகம் என்று பெயர். தாரா கிரகங்களுக்குக் கிழக்கு கதியில் சூரியனுடன் ஸாம்யம் ஏற்பட்டால் அஸ்தமனம் என்றும், சந்திரனுடன் ஸாம்யம் ஏற்பட்டால் ஸமாகமம் என்றும் தங்களுக்குள்ளேயே ஸாம்யம் ஏற்பட்டால் யுத்தம் என்றும் பெயர்.

கிரகங்களின் ஒன்பதுவித அசைவு, சேஷ்டை, வக்ரம் இவைகளின் பலம் (வலிமை)

கிரகங்களுக்குச் சீக்கிரம், அதிசீக்கிரம், அவிகலம், ஸமம், மந்தம், அதிமந்தம், வக்கிரம், அதிவக்கிரம், ருஜ்வி என்ற ஒன்பதுவிதமான கதிகள் உண்டு. ஜன்ம காலம் அல்லது பிரச்ன காலம் முதலிய காலங்களில் வக்ர கதியுள்ள கிரகத்திற்கு சேஷ்டாபலம் உண்டு. இந்த சேஷ்டாபலமானது

அதிசீக்ரகதி முடிவடைந்து அவிகலகதி ஆரம்பமானதும் ஆரம்பித்து அதிவக்கிரகதி முடிவடையும் வரை கிரமமாக வளரும்.

குறிப்பு : கிரகங்களின் மேற்கூறிய கிழக்குக் கதி ஒவ்வொரு தினமும் ஒரே மாதிரியாக இருக்காது. கிரகஸ்புடம் இன்று இருந்ததைவிட நாளை அதிகமாக இருந்தால் நேர்கதி (ருஜுகதி) என்றும் குறைந்திருந்தால் வக்ரகதி என்றும் சொல்லப்படும்.

வக்ரகதியானது இன்று இருந்ததைவிட நாளை கொஞ்சம் குறைந்திருந்தால் வக்கிரம் என்றும், அதிகம் குறைந்திருந்தால் அதிவக்கிரம் என்றும் சொல்லப்படு கிறது. வக்ரகதியின் முடிவு ஏற்பட்டு நேர்கதி தொடங்கும் சமயத்தில் இருக்கிற கதி ருஜ்விகதி என்றும் சொல்லப்படு கிறது.

இந்த மூன்று கதிகளும் தாரா கிரகங்களுக்கு மட்டும் உண்டு. ஞாயிறிற்கும், மதிக்கும் கிடையாது. ராகு - கேதுக்களுக்கு நேர்கதி கிடையாது. வக்ரகதியும் எல்லா தினங்களிலும் ஒரே மாதிரி இருக்கிறதினால் அவர்களுக்கு வக்ரம், அதிவக்ரம் என்று இருவகை கதிகளும் கிடையாது.

எல்லா கிரகங்களுக்கும் சராசரியான கதி, மத்யகதி என்று சொல்லப்படுகிறது. சூர்யாதிக் கிரகங்களுக்கு மத்யமகதி, கலை, விகலைகள் முறையே கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஞாயிறு *59-8*, மதி *790-35*, செவ்வாய் *31-26*, புதன் *59-8*, வியாழன் *4-59* , வெள்ளி *59-8*, சனி *2-0*, இராகு *3-11*, கேது *2-11*.

எல்லா கிரகங்களுக்கும் இன்று இருந்த ஸ்புடத்தில் இருந்து நாளைய ஸ்புடம் மத்யம கதிக்கு ஸமமாக இருந்தால் அந்த கதி ஸமகதி என்று சொல்லப்படும்.

எல்லா கிரகங்களுக்கும் இன்று இருந்த ஸ்புடத்தில் இருந்து நளைய ஸ்புடம் ஸமகதியிலிருந்து குறைந்திருந்தால் மந்தகதி என்றும், அதிகமாயிருந்தால் துரிதகதி (சீக்கிரகதி) என்றும் சொல்லப்படும்.

மந்தகதியிலும் இன்று இருந்த ஸ்புடத்திலிருந்து நாளைய ஸ்புடம் கொஞ்சம் அதிகமாக இருந்தால் மந்ததரகதி என்றும் மிக அதிகமாக இருந்தால் மந்ததமகதி என்றும் சொல்லப்படுகிறது.

துரித கதியிலும் இன்று இருந்த ஸ்புடத்திலிருந்து நாளைய ஸ்புடம் கொஞ்சம் அதிகமாக இருந்தால் சீக்கிரகதி என்றும், மிகவும் அதிகமாக இருந்தால் அதிசீக்கிர கதி என்றும் சொல்லப்படுகிறது.

இரண்டு, மூன்று தினங்களில் ஒரே அளவு கதியின் வளர்ச்சி ஏற்பட்டால்அவிகலகதி என்று அறியவும்.

இந்த ஆறு கதிகளில் ஸமகதி, அவிகலகதி என்ற இரு கதிகள் எல்லா கிரகங்களுக்கும் உண்டு. மீதியான நான்கு கதிகள் இராகு - கேதுக்களுக்குக் கிடையாது.

பல கணிதம்

மேற்கூறிய எல்லா பலங்களையும் திரை ராசிக் கணிதத்தினால் சரியாகத் தெரிந்துகொள்ளவேண்டும்.

குறிப்பு : ஸ்ரீபதி பத்ததி முதலிய நூல்களில் இந்த முறை சொல்லப்பட்டிருக்கிறது.

கிரகங்களுக்கு இயற்கை பலமும் பார்வை பலமும்

ஞாயிறுக்கு இயற்கை பலம் பூர்ணமாக இருக்கும். மதிக்கு 6/7 பாகமும், வெள்ளிக்கு 5/7 பாகமும், வியாழனுக்கு 4/7 பாகமும், புதனுக்கு 3/7 பாகமும், செவ்வாய்க்கு 2/7 பாகமும், சனிக்கு 1/7 பாகமும் இயற்கை பலம் என்று அறியவும்.

எல்லா கிரகங்களுக்கும் சுபக்கிரகங்களின் பார்வை இருந்தால் பார்வை பலம் உண்டு என்றும், அசுபக்கிரகங்களின் பார்வை இருந்தால் பலம் குறையும் என்றும் அறியவும்.

ஆறு பலங்களும் அவைகளின் பாகுபாடும்

பலமானது ஸ்தானபலம், திக்பலம், காலபலம், பார்வைபலம், சேஷ்டாபலம், இயற்கை பலம் முதலிய பல வேறுபாடுகள் உள்ளன. மேற்கூறிய ஆறு பலங்கள் எல்லா சாஸ்திரங்களிலும் பிரசித்தமானவை. இவைகளுள் ஸ்தானபலம், பார்வைபலம், இயற்கைபலம் என்ற மூன்றும் சிறந்தவை. இவைகளுள் இயற்கை பலம் சாலச்சிறந்தது.

இஷ்ட பலத்தின் பாகுபாடு

எல்லா கிரகங்களுக்கும் லக்னம், ஹோரை, திரேக்காணம், நவாம்சம், துவாதசாம்சம், திரிம்சாம்சம் என்ற ஆறு வர்க்கங்களிலும் தங்களுடைய ஆதிபத்தியம் வந்திருந்தாலும் சரி, அதிமித்ரன், மித்ரன், ஸமன், சத்ரு, அதிசத்ரு இவர்களின் ராசியில் தங்கியிருந்தாலும் சரி இஷ்ட (நல்ல) பலம் ஒரே மாதிரியாக இருக்காமல் வித்தியாசமாக இருக்கும்.

லக்னம் முதலிய ஆறு வர்க்கங்களிலும் தங்களுடைய உச்சம், மூலத்திரிகோணம், சுயராசிகளில் ஏதாவது ஒன்றாக இருந்தால் இஷ்டபலம் பூர்ணமாக இருக்கும். கிரகங்கள் தங்குகிற இராசி, கிரகங்களுக்கு அதிமித்ர இராசியாக இருந்தால் இஷ்டபலம் ¾ பாகமாகவும், மித்ர இராசியாக இருந்தால் ½ பாகமாகவும், ஸம இராசியாக இருந்தால் ¼ பாகமாகவும், சத்ரு இராசியாக இருந்தால் 1 பாகமும் அதிசத்ரு இராசியாக இருந்தால் இஷ்டபலம் இல்லை என்றும் அறியவும்.

குறிப்பு : இவ்விஷயத்தில் கிரந்தாந்தரத்தில் சொல்லப்பட்ட விஷயம் முன்பு குறிப்பில் சொல்லப்பட்டு இருக்கிறது.

கஷ்டபலத்தின் பாகுபாடு

எல்லா கிரகங்களுக்கும் தங்களுடைய நீச இராசியில் கஷ்ட (கெட்ட) பலம் பூர்ணமாக இருக்கும். ஞாயிறின்

சந்நிதானத்தில் அஸ்தமனம் ஏற்பட்ட காலத்திலும் கஷ்ட பலம் பூர்ணமாக இருக்கும். லக்னத்திலிருந்து 6, 7, 12 முதலிய துஷ்ட ஸ்தானங்களிலும் கஷ்டபலம் பூர்ணமாக இருக்கும்.

மேற்கூறியபடி கிடைத்த இஷ்டபலத்தை ஒன்றிலிருந்து கழித்தால் கஷ்டபலமும், கஷ்டபலத்தை ஒன்றிலிருந்து கழித்தால் இஷ்டபலமும் உண்டாகும்.

மேற்கூறிய நீசஸ்தானம் முதலிய ஸ்தானங்களிலிருந்து வேறு ஸ்தானங்களில் இருந்தால் கிருகஸ்புடத்தைவைத்துக் கொண்டு இஷ்ட கஷ்ட பலன்களின் ஸ்புடீகரணம் செய்ய வேண்டும்.

குறிப்பு : இந்த ஸ்புடீகரண பத்ததியானது ஸ்ரீபதி பத்ததி முதலிய கிரந்தங்களில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஞாயிறு முதலிய கிரகங்களின் இயற்கை அமைப்பும், காரகத்வமும்

ஞாயிறு : ஆண், நீண்ட உருவம், வெளுப்பும் சிவப்பும் கலந்தமேனி, குறுகிய இடை, (நான்கு) சதுர வடிவமாய் அமைக்கப்பட்ட உறுப்புகள், பித்த தாது, பொன்வண்ணக் கண்கள், மொட்டைத்தலை, சிவப்பு ஆடை, கடுமை, சிவப்பு நிறமான மேகவரிசைக்குக் காரணமானவன். க்ஷயரோகம், ஜ்வரம், உடல், தலை, அரசன், தகப்பன், அக்னி இவைகட்குக் காரகன் ஆவான்.

மதி : பெண் கிரகம் குளிர்ச்சி உடையது. கருமை நிறம், சிறிய வட்டமேனி, நல்ல அறிவாளி, சளி, வாதம் இவைகளை அதிகமாக உடையமேனி, சாந்தத் தன்மையும் அழகிய பேச்சுமுடையவன், சுபமான பார்வையுடையவன், தானும் சுபன், இராணி, தாய், முகம் இவைகட்குக் காரகன் வைச்ய ஜாதி, வெண்மையான ஆடை கட்டியவன், வெள்ளை ஆடைக்குக் காரகன், ஜலவஸ்து, மணம், புஷ்பம், பாக்கு, பழம் முதலியவைகட்கும், உப்புக்கும், ருசிகரமான

திண்பண்டங்களையும் விசித்திர ஆகாரங்களையும் புசிப்பவனுக்கும் காரகன் ஆவான். மணிமுத்து, ஈயம், துத்தநாகம், செம்மறி ஆடு இவற்றிற்குக் காரகன். தண்ணீரையும் பாலையும் குடிப்பவன், ஜலரோகம், காமாலை, பாண்டுரோகம், சாமரம், மழைகால இடி இவைகட்குக் காரகன்.

குறிப்பு : "பெண் கிரகம்" பெண்ணின் தன்மையை உடைய கிரகம் எனக்கொள்ளவேண்டும்.

செவ்வாய் : ஆண் கிரகம். கடுமையான பார்வை உதாரகுணம், பித்தஸ்வாபம், இளைப்பு, மிகச்சிவப்பு, ஆயுதத்தினால் ஜீவனம், க்ஷத்திரியன், குருடன், கவி, கழுத்திற்குக் காரகன், சேனாதிபதி, உடன் பிறந்தோருக்கும், இருட்டு, கோட்டை, மனத்திடமின்மை, ஸ்திரமின்மை, வாந்தி, உஷ்ணமான ஆகாரத்தைப் புசிப்பவன், சொரி, சிரங்கு, காயம், தீயினால் தோன்றும் வியாதி இவைகட்கும் காரகன், அருகில் இருப்பவன், விரும்பத்தக்க எண்ணமுடையவன், அரிசி, கோதுமை முதலிய தான்யங்கள், பொன், பவழம் முதலியவற்றிற்குக் காரகன், பல்லி, கழுதை, பூனை, புலி முதலிய கொடிய மிருகங்களுக்குக் காரகன், ஏழ்மை, நாய், துவேஷம், துன்புறுத்துபவன், கோள் சொல்லுதல் இவைகட்குக் காரகன்.

புதன் : அறிவாளி, இளைத்தவன், வைசிய ஜாதி, வாதம், பித்தம், சிலேஷ்மம் இம்மூன்று தாதுக்களோடு கூடிய மேனி, வெண்சிகப்பு நிறம் உடையவன், வியாபாரி, இளமைப் பருவமுடையவன், கணக்கன், ஹாஸ்யம் கலந்து பல அர்த்தங்களோடு பேசுபவன், சித்திரம் வரைதல், சில்பம் இவைகட்குக் காரகன். தாய்வழிப் பாட்டனார், நண்பன், உறவினர், இதயம், முத்துச்சிப்பி, ராஜஸகுணம், ஸன்னிபாத ரோகம், மறதி, பலவித ரோகங்கள், பலவித ஆகாரம் இவைகட்குக் காரகன்.

வியாழன் : ஆண் கிரகம், பொன் வர்ணம் உடையவன். சிலேஷ்ம தாதுவும், புடைத்த வயிறும் உடையவன்,

கூர்மையான புத்தியுள்ளவன், மந்திர, புதல்வன், வயிறு, அறிவு, வேதம், சுபகர்மா இவைகட்குக் காரகன். தேன், நெய், இனிப்பு இவற்றை ஆகாரமாக உடையவன், தர்மம், புண்ணியம், புராணம் இவைகளைச் செய்பவன், சுகவாழ்வு, யாகம், முதலிய வைதிக கர்மா, ஸத்குணம், அந்தணர், ஸந்யாஸிகள், ரிஷிகள், கோயில், வீடு, தோட்டம் இவைகட்கு ஸ்தாபகனும், புரோகிதனும், பேரி, மிருதங்கம் முதலிய வாத்யங்களும், அரசர்களுக்குரிய லக்ஷணங்களுக்கும் உடையவன்.

வெள்ளி : பச்சை வர்ணமுடையவன், வாத, கப தேகம் உடையவன், அழகிய மேனியோடு சுகமாக இருப்பவன், மந்திரி, அந்தணனுமாவான். விருப்பம், மனைவி, பலவித நகை, கண், பாட்டு, யானை, உயர்வு, உடல், மாலை, சந்தனம், மழை, புணர்ச்சி இவைகட்குக் காரகன். பசுவினது பால், தயிர் புளிப்புடைய பண்டங்கள் இவைகளைத் தின்பவன்.

சனி : கடுமைத்தன்மை உடையவன், நீண்ட உருவம், துக்கம், அடிமைத் தன்மையையும், தமோ குணத்தையும் உடையவன், ஆயுளுக்கும், ஜீவனத்திற்கும், மரணத்திற்கும், கலகத்திற்கும், வாயுவிற்கும், சோம்பேறித்தனத்திற்கும் காரகன். பேய், நீசஜாதி, சண்டாளன், அல்பத்தன்மை, பாபம், மூர்க்கத்தன்மை, கால் இவைகட்கு உரியவன். நொண்டி, அலி, அறிவில்லாதவன், கஷாயம், இரும்பு, கல் இவைகட்கு உரியவன்.

ராகு : திருடன், தாழ்ந்த ஜாதியில் பிறந்தவன், கறுப்பு நிறமுடையவன், கால், அபஸ்மார ரோகம், ஸர்ப்ப பயம் இவைகட்குக் காரகன். அற்பனுமாவான், குஷ்ட ரோகம், சிரை, பேதி, வைசூரி, பண்டங்களில் உருசியின்மை, புழு, பூச்சிகளால் நோய் இவைகளைக் கொடுப்பவன். யானை இராகுவின் தசையிலோ, புத்தியிலோ அல்லது கோசார காலங்களிலோ, பிற்பகுதியில் (பலனை) ஐச்வர்யத்தைக் கொடுப்பவன்.

கேது : வாலில் விஷமுடைய பிராணி, மிருகங்கள், குரங்கு, எலி முதலிய பிராணிகளுக்கும், ஏழ்மைக்கும் காரகன், பயங்கரமான வக்கிரமான உறுப்புகளை உடையவன், பாம்பு, பேய், புழு, காயம், அபஸ்மார ரோகம், பேய் பிடித்தல், பாபச்செயல் இவைகட்குக் காரகன். ருசி இழிவான ஆகாரத்தைப் புசிப்பவன், அறிவின்மை, பிரமம், பைத்தியம், கடன், அற்பமான பாம்புகள் இவைகட்கு உரியவன்.

அனுகூல ராகுவின் பலன்

ஒருவனுடைய ஜாதகத்தில் ராகு பலமுடையவனாகி இருந்தால் சக்ரவர்த்தியாய் இருத்தல் முதலிய மேன்மையை அளிப்பவனாவான்.

பூர்வபாராசர்யம் என்னும் நூலில்
கிரகங்களின் தன்மை வேறுபாட்டைக் கூறும்
இரண்டாவது அத்யாயம் முற்றும்.

மூன்றாவது அத்தியாயம்

கிரகங்களின் ஸ்தான விசேஷத்தால் ஏற்படும் தீங்குகள்

எல்லா கிரகங்களும் இலக்னத்திலிருந்து 12-வது ஸ்தானத்தில் இருந்தால் கெட்டபலன் தருவார்கள். அவர்களிலும் ஞாயிறு, வெள்ளி, மதி, இராகு இவர்கள் விசேஷமாக நற்பலனை நாசம் செய்வார்கள்.

ஞாயிறும், வெள்ளியும், மதியும், இராகுவும் இலக்னத்திலிருந்து 12-வது ஸ்தானத்தைப் பார்த்தாலும் எக்காரியங்களுக்கும் இடையூறு செய்வார்கள்.

இராஜயோகத்தை அழிக்கும் கெட்ட யோகங்கள்

1. மதியும், சனியும் லக்னத்திலிருந்து 5 அல்லது 9-வது ஸ்தானத்தில் இருந்தாலும், 2. வெள்ளியும், இராகுவும் 12-வது ஸ்தானத்தில் இருந்தாலும், 3. இராகு மிதுனத்தில் இருந்தாலும் ஆயிரம் இராஜயோகங்களையும் கெடுத்து விடுகிறார்கள்.

கண் பார்வையை இழக்கக் காரணமான கெட்ட யோகங்கள்

இலக்கனத்திலிருந்து 4-வது ஸ்தானத்தின் அதிபதியுடன் 2-வது ஸ்தானத்தில் வெள்ளி இருந்தால் கண் பார்வை போய்விடும். வெள்ளி இலக்னதிலிருந்து 2-வது ஸ்தானத்தில் ஞாயிறுடன் தங்கினால் பிறவிக்குருடன் ஆவான். வெள்ளி இலக்கினத்திலிருந்து 2-வது ஸ்தானத்தில் மதியுடன் தங்கினால் இரவில் கண் தெரியாது. (மாலைக்கண் உடையவன்).

இராஜ கோபத்தினால் கண்கள் நாசயோகம்

இலக்னத்திலிருந்து 5, 6-வது ஸ்தானங்களின் இரு அதிபதிகளும் லக்னத்திலிருக்க, வெள்ளி 2-வது ஸ்தானத்தின் அதிபதியுடன் கூடியிருந்தால் ராஜகோபத்தினால் கண்கள் எடுக்கப்படுகின்ற நிலையை ஏற்படுத்துவான்.

எப்பொழுதும் மெலிந்த மேனி முதலியவைகட்குக் காரணமான கெட்ட யோகங்கள்

1. ஞாயிறின் இராசி அல்லது நவாம்சத்தில் மதியும், மதியின் இராசி அல்லது நவாம்சத்தில் ஞாயிறும் இருந்தால் உடம்பு எப்பொழுதும் ஒல்லியாக இருக்கும்.

2. மதியும், ஞாயிறும் செவ்வாயுடன் கூடியிருந்தால் க்ஷயரோகம், புண் அல்லது ஆயுதத்தினால் காயம் உண்டாகும். 3. இராகுவும், செவ்வாயும் கூடியிருந்தால் கிருமி ரோகம் உண்டாகும். 4. ஞாயிறும், சனியும், செவ்வாயும் கூடியிருந்தால் வாயுரோகம் உண்டாகும். 5. இராகுவும், புதனும் கூடியிருந்தால் பிசாசு உபாதை உண்டாகும். 6. ஞாயிறு, மதி இவ்விருவரின் கேந்திர ஸ்தானத்தில் இராகுவும் கேதுவும் இருந்தால் குஷ்டரோகம் உண்டாகும்.

புதன் முதலான கிரகங்கள் தங்கும் இடங்களிலிருந்து உண்டாகும் ரோகங்கள்

1. இலக்னத்திலிருந்து 3, 6, 8, 12-வது ஸ்தானங்களில் புதன் தங்கினால் காமாலையும், பாண்டு ரோகமும், பித்த ரோகமும் உண்டாகும். 2. வியாழன் தங்கினால் சகோதர துரோகத்தினாலும், குரு துரோகத்தினாலும் பல அனர்த்தங்களையும் விபரீத ஞானத்தையும் விளைவிக்கும். பிராமண திரவியத்திலும், கடவுள் பணத்திலும் ஆசை உண்டாகும். பூமியிலிருந்து புதையல் பணத்தை எடுக்க ஆசை உண்டாகும்.

மேற்கண்ட இடங்களில் வெள்ளி தங்கினால் பெண் கொலையில் ஆசையும், தலைவலியும், மூத்திர விஸர்ஜன துவாரத்திலும், மல விஸர்ஜன துவாரத்திலும் வலியை உண்டாக்கும்.

மேற்கண்ட இடங்களில் மதி தங்கினால் பாண்டுரோகம் உண்டாகும். அதே மதியுடன் பாபக் கிரகம் தங்கினால் கொலை முதலிய கொடூரமான காரியங்களைச் செய்வர்.

சில துஷ்ட யோகங்கள்

இலக்னாதிபதி 7-வது ஸ்தானத்திலும், 8-வது ஸ்தானத்தில் மதியும், ராகுவும், ஞாயிறும் தங்கினால் பெரிய பிசாசுகள் அல்லது பூதங்களின் பாதை உண்டாகும். மேற்கண்ட யோகத்தில் மதிக்கு பதிலாக சனி தங்கினால் உன்மாதரோகம் உண்டாகும்.

பைத்திய ரோக யோகம்

இலக்னத்தில் வியாழனும்; 5, 9- வது ஸ்தானங்களில் செவ்வாயும் இருந்தால் பைத்தியம் உண்டாகும்.

கர்ம பிரம்ச யோகம்

லக்னத்தில் சனியும், 5, 9-வது ஸ்தானங்களில் செவ்வாயும், வியாழனும் தங்கினால் கர்மபிரம்சம் உண்டாகும்.

சண்டாளத்வ யோகம்

இராகு தங்கின இடத்திலிருந்து 5, 9-வது இடங்களில் சனியும், வியாழனும் தங்கினால் சண்டாளனாவான்.

பதிதனாகும் யோகம்

இராகு தங்கின இடத்திலிருந்து 5, 9 இடங்களில் 10-வது ஸ்தானத்தின் அதிபதி தங்கினால் பாதித்யம் உண்டாகும். இந்த யோகத்திலேயே 10-வது ஸ்தானத்தில் அதிபதி நீச ராசியில் இருந்தால் அவனுடைய பாபம் பிரஸித்தமாகும்.

ஸந்யாச பிரம்சயோகம்

இராகு தங்கின இடத்திலிருந்து 5, 9 ஸ்தானங்களில் இலக்னாதிபதியும், 9வது ஸ்தானத்தின் அதிபதியும் தங்கினால் ஸந்நியாஸ பிரம்சம் உண்டாகும்.

பூர்வபாராசர்யத்தில் அரிஷ்ட நிருபணம் என்னும் மூன்றாவது அத்யாயம் முற்றும்.

ஐந்தாவது* (நான்காவது) அத்தியாயம்

இலக்ன இராசியின் தன்மையிலிருந்து கிரகங்களின் பலன்

இலக்னம் சரராசியாக இருந்தால் ஸ்திரராசி அல்லது இருதன்மை இராசியில் தங்கின கிரகமும், ஸ்திர ராசியாக இருந்தால் சரராசி அல்லது இருதன்மை இராசியில் தங்கின கிரகமும், இருதன்மை இராசியாக இருந்தால் இருதன்மை இராசியில் தங்கின கிரகமும் நல்ல பலன் தருவார்கள்.

தனலாப யோகம்

பூர்ண பலமுள்ள மதிக்கு 2, 12-வது ஸ்தானத்தில் எல்லா சுபக்கிரகங்களும், இலக்னத்திலிருந்து 5, 9-வது ஸ்தானத்தில் வியாழனும் இருந்தால் கிரகஸ்த தர்மத்தைக் காப்பாற்றிக் கொண்டு வருகிற பணக்காரனாக ஆவான்.

இலக்னத்திலிருந்து 1, 2, 4-வது ஸ்தானத்தில் வெள்ளியும், அவனுக்கு 2, 12-வது ஸ்தானத்தில் எல்லா சுபக்கிரகங்களும் இலக்னத்திலிருந்து 5, 9-வது ஸ்தானத்தில் மதியும் தங்கினால் பல வாகனங்களோடு கூடியவனும் அரசனுக்குச் சமானனும் ஆவான்.

இலக்கனத்திலிருந்து 1, 2, 4-வது ஸ்தானத்தில் வெள்ளியும்; 5, 9-வது ஸ்தானத்தில் மதியும் இருந்து அவ்விருவரையும் எல்லா சுபக்கிரகங்களும் பார்த்தாலும் மேற்கண்ட பலன் உண்டாகும்.

---

*மூலச்சுவடியில் இந்த அத்தியாயம் 5-வது அத்தியாயமாகவும், அடுத்த அத்தியாயங்கள் 6, 7 என்று தொடர்ச்சியாகவும் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் விஷயங்கள் தொடர்ச்சியாக உள்ளன. நடுவில் ஓர் அத்தியாயம் குறைந்திருந்தால் குறைபாடு இருந்திருக்கும். அதுவும் இல்லை. அதனால் அப்படி எழுதினது எழுத்தாளர் பிழை என்று தீர்மானம் செய்கிறோம். ஆகையால் இந்த அத்தியாயத்தை 4-ஆவது அத்தியாயமாகவும், அடுத்த அத்தியாயங்களை 5, 6 என்று தொடர்ச்சியாகவும் எழுதுகிறோம்.

இலக்னாதிபதி 4-வது ஸ்தானத்திலும், 4-வது ஸ்தானத்தின் அதிபதி இலக்னத்திலும் தங்கினால் பூமி, வயல் முதலிய எல்லா விஷயங்களிலும் அரசனுக்குச் சமானன் ஆவான்.

இராஜமுத்ராதிகார யோகம்

இலக்னாதிபதி தங்கின ஸ்தானத்திலிருந்து 2-வது ஸ்தானத்தில் சுபக்கிரகமும், உச்சஸ்தானத்தில் பாபக்கிரகமும், இலக்னத்திலிருந்து 4-வது ஸ்தானத்தில் சுபக்கிரகமும் தங்கினால் ராஜனுக்குச் சமமான அந்தஸ்துள்ள அரசனுடைய கட்டளையை அரசனுக்குப் பிரதிநிதியாகப் பிறப்பிக்கின்ற ஆணையாளன் ஆவான்.

இராஜயோகம்

இலக்னத்திலிருந்து 1, 2, 10, 11-வது ஸ்தானத்தின் அதிபதிகள் ஸமபலம் பொருந்தி பரஸ்பர இராசியில் தங்கினால் கீர்த்தி பொருந்திய ராஜனாவன்.

சேனாதிபதி யோகம்

எல்லா சுபக்கிரகங்களும் இலக்னத்திலிருந்து 1, 2, 4, 10, 11-வது ஸ்தானங்களிலேயே தங்கவேண்டும். இலக்னத்தில் ஏதாவது ஒரு கிரகம் உச்சமாக இருக்கவேண்டும். இலக்ன நவாம்சாதிபதியும் இலக்னத்திலிருந்து 10-வது ஸ்தானத்தின் அதிபதியும் ஒரே கிரகமாக இருக்கவேண்டும். இப்படி இருந்தால் ஸேனாதிபதி அல்லது மந்திரி ஆவான்.

மந்திரஸித்தி முதலிய யோகங்கள்

இலக்னத்திலிருந்து 9-வது ஸ்தானத்தின் அதிபதி சுபக்கிரகமாக இருந்து அவனுடன் இலக்னத்தின் அதிபதி ஒரே இராசியில் தங்கினால் வியாழனுக்கு சமன் என்று அறியவும். பூணூல் கல்யாணமான த்விஜர்களுக்கு வியாழனால் ஏற்படும் பலன் அவனால் ஏற்படும்.

வியாழன் இலக்னத்திலிருந்து 9-வது ஸ்தானத்தில் தங்கினால் தபஸ்வியும், சிவபக்திமானும் ஆவான். இலக்னத்திலிருந்து 5-வது ஸ்தானத்தில் வியாழன் தங்கினால் மந்திரஸித்தி உண்டாகும்.

இப்படியே மிச்சமான எல்லா காரியங்களிலும் அந்தந்த காரியங்களுக்குக் காரகனாகிய கிரகத்தின் பலம் சேர்க்கை, பார்வை முதலிய குணங்களைக் கொண்டு பலன் அறியவும்.

பூர்வபாராசர்யத்தில் பலநிருபணம் என்னும் நாலாவது அத்தியாயம் முற்றும்.

ஐந்தாவது அத்தியாயம்

ஆயுள் குறைவிற்குக் காரணங்கள்

மனிதர்களுக்கு பிரம்மாவினால் குறிக்கப்பட்ட ஆயுள் 108 வருஷங்கள் ஆகும். திருடர்களுக்கும், பாபச் செயலல்களில் ஈடுபட்டுள்ளோர்களுக்கும், தேவதைகள - அந்தணர்கள் நிந்திப்பவர்களுக்கும், அளவுகடந்த சாப்பிடுகிறவர்களுக்கும் 108 வருடத்திற்கு முன்பே ஆயுள் முடிவடையும்.

சிலர் புண்ணிய பலத்தினால் பூர்ணமான ஆயுளை அடைவார்கள். பாபமும்-புண்ணியமும் கலந்து செய்பவர்கள் நடுத்தர ஆயுளை அடைவார்கள். பாபச் செயல் செய்வோர் அற்பமான ஆயுளை அடைவார்கள். இப்படி ஆயுள் அளவு அவரவர்களது செய்கையினால் வித்தியாசப் படுகிறது.

அற்ப, மத்யம, உத்தம ஆயுள் அளவு

108 வருடம் பூரண ஆயுள் என்று சொல்லப்பட்டது. அதை மூன்று பாகமாகப் பிரிக்கவும். முதல் பிரிவு 1-36 வருடம் வரை. இது அற்ப ஆயுள் ஆகும். இரண்டாவது பிரிவு

37-72 இது நடுத்தர ஆயுள். மூன்றாவது பிரிவு 73-108 வருடம் வரை. இது உத்தம ஆயுள் என்று அறியவும். இப்படி ஆயுளது பிரிவுகளை அறிந்து இவைகளுக்குக் காரணங்களைப் பின்வரும் குறிப்புகளின் மூலம் அறியவேண்டும்.

அற்ப ஆயுள் யோகமும், பூர்ண ஆயுள் யோகமும்

இலக்னத்தின் அதிபதியும், லக்னத்திலிருந்து 8-வது ஸ்தானத்தின் அதிபதியும் தங்கின இடத்திலிருந்து 8-வது ஸ்தானத்தின் அதிபதி அந்த 8-வது ஸ்தானத்திலேயே தங்கி இருந்து பூர்ண பலத்தோடு கூடியவனாக இருந்தால் அற்ப ஆயுளாகும்.

இதற்கு நேர்மாறாக (இலக்னத்தின் அதிபதியும், இலக்னத்திலிருந்து 8-வது ஸ்தானத்தின் அதிபதியும் தங்கின இடத்திலிருந்து 8-வது ஸ்தானத்தின் அதிபதி அந்த 8-வது ஸ்தானத்தில் தங்காமல்) பலவீனமாக இருந்தால் பூர்ணமான ஆயுள்.

பூர்ணாயுள் யோகாதியோகங்களில் தசாகிரமம்

பூர்ணாயுள் யோகத்தில் அதிக பலமுள்ள கிரகம் அல்லது இலக்னாதிபதியின் தசை முதல் தசை ஆகும். மத்திய ஆயுள் யோகத்தில் இலக்னத்தின் அதிபதி தங்கியுள்ள ராசியின் தசை முதல்தசை ஆகும். அற்பாயுள் யோகத்தில் இலக்னத்தின் அதிபதி தங்கியுள்ள இராசியின் அதிபதி தங்கியுள்ள இராசியின் தசை முதல் தசையாகும்.

குறிப்பு : இந்தச் செய்யுளில் முதல் தசை மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்த தசைகளின் வரிசைக் கிரமம் சொல்லப்படவில்லை. ஆனால் **வீர்யயுக்தஸ்ய** என்ற பதத்தினால் முதல் தசைக்கு அதிகபலம் காரணம் என்று சொன்னதை ஆதாரமாக மேற்கொண்டு முதல்தசைக்குப் பிறகு அதிக பலமுள்ளவன் இரண்டாவது தசாதிபதி என்றும், இப்படியே பல கிரமத்தை அனுசரித்து தசாகிரமம்

உண்டாகும் என்று அறியவும். இந்த விஷயம் **கல்ப்யா தசா ஸா ப்ரபலஸ்ய பூர்வா** என்று பிருகத் ஜாதகத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

திரேக்காணாயுர்தாயம்

அற்பாயுள்யோக பிரமாணம் 36 வருடங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை மூன்றாகப் பிரிக்கவும். ஒவ்வொரு பிரிவுக்கும் 12 வருடங்கள் ஆகின்றன. எல்லா கிரகங்களும் இலக்னமும் தங்கியுள்ள ஒவ்வொரு திரேக்காணத்திற்கும் 12 வருடம் திரேக்காணத்தசை என்று அறியவும்.

குறிப்பு : முந்தின செய்யுளின் குறிப்பில் குறிப்பிட்ட மாதிரியாக அதிகபலமுள்ள திரேக்காணத்தின் தசை முதல் தசை ஆகும். திரேக்காணத்தின் பலம் குறையக் குறைய 2, 3, 4 முதலிய திரேக்காண தசைகள் ஏற்படுகின்றன. இந்தச் செய்யுளின்படி 9 கிரகங்களின் 9 திரேக்காணங்ளுக்கு ஒவ்வொன்றுக்கு 12 வருடம் வீதமாக 108 வருடங்களும் இலக்னத்திற்கு 12 வருடங்களும் மொத்தமாக 120 வருடங்கள் ஆயுள் ஆகிறது. பூர்ணாயுள் யோகத்தில் மட்டும் எல்லா கிரகங்களின் தசையும், இலக்னத்தின் தசையும் அனுபவத்திற்கு வரும். அற்பாயுள் யோகத்திலும், மத்தியமாயுள் யோகத்திலும் வராது.

மரண தசையை அறிதல்

ஜனன காலத்தில் எல்லா கிரகங்களும் தங்கியுள்ள திரேக்காணங்களில் எந்த திரேக்காணத்தில் குரூர கிரகத்தின் இருக்கை, பார்வை முதலிய கெட்ட ஸம்பந்தம் உண்டோ அந்த திரேக்காணம் மரண திரேக்காணம் என்றும், அந்த திரேக்காணத்தின் தசாகாலத்தில் ஜாதகனுக்கு மரணம் உண்டாகும் என்று அறியவும்.

ஒரே திரேக்காணத்தில் மேற்கண்டவாறு கெட்ட சம்பந்தம் இருந்தால் கட்டாயம் அந்த திரேக்காணத்தின் தசையிலேயே மரணம் சம்பவிக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட திரேக்காணங்களில் கெட்ட சம்பந்தம் ஏற்பட்டால் எந்த திரேக்காணத்தில் கெட்ட சம்பந்தம் அதிகமாக உள்ளதோ அந்த திரேக்காணத்தின் தசையில் மரணம் சம்பவிக்கும் என அறியவும்.

திரேக்காண தசைக்கு மரண காரணத்துவமும் அ:.தின்மையும்

மேற்கண்டபடி மரண திரேக்காணத்தை தீர்மானம் செய்கிற சமயத்தில் பல சம்சயங்கள் ஏற்படுகின்றன. திரேக்காண ராசியின் அதிபதி (1) அஸ்தமனமடைதல், (2) நீச க்ஷேத்திரத்தில் இருத்தல், (3) குரூர கிரகத்துடன் கூடுதல், (4) குரூர கிரகத்தின் பார்வை, (5) திரேக்காண ராசியானது பாப கிரகத்தின் இராசியாக இருத்தல். இவைகள் எல்லாம் மரண திரேக்காணம் என்று சொல்கிறதற்குக் காரணமாக இருக்கின்றன. திரேக்காண இராசிக்கும் அதனுடைய அதிபனுக்கும் (1) வியாழனின் பார்வை, (2) வியாழனுடன் கூடுதல், (3) திரேக்காண இராசியானது தனுஸ் அல்லது மீனமாக இருத்தல், (4) திரேக்காணாதிபதிக்கும் திரேக்காண இராசிக்கும் வியாழனின் ஷட்வர்க்கம் ஏற்படுதல் முதலிய குணங்கள் இருந்தால் அந்த திரேக்காணம் மரண திரேக்காணம் ஆகாது.

சில ஜாதகங்களில் எல்லா கிரகங்களின் திரேக்காணங் களிலும் இலக்னத்தின் திரேக்காணத்திலும் மரண திரேக்காணம் என்று சொல்வதற்குத் தகுந்த மேற்கூறிய காரணங்கள் இல்லாமலே இருக்கிறதும் உண்டு. அப்படி இருந்தாலும் அதனுடன் மேற்கூறிய “மரண திரேக்காணம் ஆகாது” என்று சொல்வதற்குத் தகுந்த காரணங்கள் இருப்பதும் உண்டு. இந்த சந்தர்ப்பத்தில் மரண திரேக்காணமே இல்லாமல்

போய்விடும். இதனால் திரேக்காண தசையினால் மரண நிச்சயம் பண்ணுவதற்கு மேற்கூறிய சந்தர்ப்பத்தில் இடமே இருக்காது.

இராசி ஆயுர்தாயம்

இதனால் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் திரேக்காண தசாகிரமத்தைப் புறக்கணித்து ராசி தசாகிரமத்தை மேற்கொள்ளவேண்டும்.

எல்லா கிரகங்களும் இலக்னமும் எந்த திரேக்காணத்தில் உள்ளனவோ அந்த திரேணக்காண ராசியையும், அதன் அதிபதியையும் வைத்துக்கொண்டு திரேக்காண தசை சொல்லப்பட்டது. இப்பொழுது எல்லா கிரகங்களும் இலக்னமும் எந்த இராசியில் தங்கி இருக்கின்றனவோ அந்த இராசிகளையும், அவைகளின் அதிபதிகளையும் கொண்டு இராசி தசை சொல்லப்படுகிறது. மரண தசை அல்லது மரண தசை இல்லை என்று தீர்மானம் செய்கிறதற்கு என்னென்ன காரணங்கள் திரேக்காண தசையில் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவைகளையே இராசி தசையிலும் கவனிக்கவும். இப்படி மரண தசையை அறிந்துகொண்டு ஒவ்வொரு கிரகமும், லக்னமும் தங்கியுள்ள இராசியிலிருந்து தொடர்ந்து ஒவ்வொரு இராசிக்கு ஒவ்வொரு வருஷமாக 12 இராசிகளுக்கு 12 வருடம் அந்தந்த கிரகம் அல்லது லக்னத்தின் தசை என்று அறியவும். மேற்கூறியபடி எந்த இராசிக்கும் அதன் அதிபதிக்கும் மரண தசையின் காரணம் ஏற்பட்டிருக்கிறதோ அந்த இராசியின் தசா காலத்தில் மரணம் என்று அறியவும்.

குறிப்பு :- "கல்ப்யா தசா ஸா ப்ரபலஸ்ய பூர்வா" என்ற நியாயத்தை இந்த ராசி தசையிலும் கவனிக்கவும்.

மரணகாரக கிரகத்தை அறியும் விதம்

எந்த கிரகத்திற்கு அல்லது லக்னத்திற்கு குரூர கிரகத்தின் பார்வை அல்லது சேர்க்கை அதிகமாக இருக்கிறதோ அந்த கிரகம் மாரக கிரகம் அல்லது அந்த கிரகத்தின் தசையில் மரணம் என்று அறியவும்.

மேஷத்திற்கு விருச்சிகமும், ரிஷபத்திற்கு துலாமும், கடகத்திற்கு கும்பமும், ஸிம்மத்திற்கு மகரமும், துலாத்திற்கு ரிஷபமும், விருச்சிகத்திற்கு மேஷமும், மகரத்திற்கு ஸிம்மமும், கும்பத்திற்கு கடகமும் மீதியான நான்கு இராசிகளுக்கு தங்களிடமிருந்து 7-வது இராசியும் அபிமுக ராசிகள் என்று சொல்லப்படுகின்றன.

எந்த கிரகத்திற்கு அபிமுக ராசியிலும், 5, 7, 9-வது இராசிகளிலும் குரூர கிரகம் தங்கி இருக்கிறதோ அந்த கிரகம் மாரகம் என்று அறியவும். மேற்கண்ட ஸ்தானங்களில் சுபக் கிரகங்களும் தங்கி இருந்தால் சுபக் கிரகங்களை விட பாபக் கிரகங்களுக்கு அதிக பலமிருந்தால் அந்த கிரகம் மாரகம் ஆகும். இல்லாவிட்டால் ஆகாது என்று அறியவும்.

மேற்கூறிய காரணங்களைக்கொண்டு அநேக கிரகங்களுக்கு மாரகத்துவம் ஏற்பட்டால் அவர்களில் அதிக பலமுள்ள கிரகம் மாரகன் என்றும் அவனுடைய தசா காலத்தில் மரணம் கட்டாயம் ஏற்படும் என்று அறியவும்.

மரணத்தை அளிப்பவர்களின் பாகுபாடு

ஞாயிறைவிட செவ்வாயும், செவ்வாயைவிட சனியும், சனியைவிட இராகுவும், இராகுவைவிட மாந்தியும் மரணம் கொடுக்கிற விஷயத்தில் இயற்கையாக அதிக பலமுள்ளவர்கள். இந்த இயற்கை பலத்தையும் தாற்காலிகமான ஸ்தானபலம் முதலிய ஆறு பலத்தையும் கவனித்து மேற்கண்ட ஞாயிறு முதலியவர்களில் யாருக்கு அதிக பலம் உண்டோ அவன் மாரகன் என்று அறியவும்.

மரணத்தின் மாதம், தினம் முதலியவைகளை அறிதல்

ஒவ்வொரு கிரகத்திற்கும், லக்னத்திற்கும் அந்தந்த கிரகமும், லக்னமும் தங்கின இராசியிலிருந்து தொடர்ந்து 12 இராசிகள் வரை ஒவ்வொரு இராசிக்கு ஒரு வருடம் வீதமாக 12 வருடங்கள் தசாகாலம் என்று முன்பு சொல்லப்பட்டது. எல்லா கிரகங்களின் மத்தியில் மாரக கிரகத்தின் தசையான 12 வருட காலத்தில் மரணமுண்டாகும். அந்த 12 வருட காலங்களிலும் 12 இராசிகளில் தங்கியுள்ள கிரகங்களின் மத்தியில் அதிக பலமுள்ள மாரக கிரகத்தின் ஒரு வருட காலத்தில் மரணமுண்டாகும். அந்த ஒரு வருட காலத்திலும் அந்த கிரகம் தங்கியுள்ள இராசியிலிருந்து தொடர்ந்து 12 இராசிகளுக்கு ஒவ்வொரு இராசிக்கு ஒவ்வொரு மாதமாக 12 மாதங்கள் ஆயுட்காலம் என்று அறியவும். மாரக கிரகத்திலிருந்து தொடர்ந்து 12 இராசிகளிலும் தங்கியுள்ள கிரகங்களின் மத்தியில் அதிக பலமுள்ள மாரக கிரகத்தின் தசா காலமான மாதத்தில் மரணம் உண்டாகும் என்று அறியவும். மரண மாதம் எந்த இராசியில் ஏற்பட்டதோ, அந்த இராசியில் இருந்து தொடர்ந்து 12 இராசிகள்வரை 12, 12 பாகைகளுக்கு ஒவ்வொரு திதியாக எண்ணவும். எந்த திதியில் அதிக பலமுள்ளதாக கிரகம் தங்கியிருக்கிறதோ அந்த திதி மரண திதி என்று அறியவும். மரண திதி எந்த இராசியில் தங்கி இருக்கிறதோ, அந்த இராசியிலிருந்து 12 இராசிகள் முடிய 6, 6 பாகைகளுக்கு ஒவ்வொரு நாழிகையாக கணிக்கவேண்டும். இப்படி கணிக்க எந்த நாழிகையின் இராசியில் அதிக பலமுள்ள மரண காரக கிரகம் உள்ளதோ அந்த நாழிகை மரண நாழிகை என்று அறியவும்.

வாக்பதி ஆயுர்தாயம்

வாக்பதி என்ற ஞானியால் சொல்லப்பட்ட சிறந்த ஆயுர்தாயத்தைச் சொல்கிறோம்.

108 வருடம் பூர்ணாயுர்தாயம். அதை 9-ஆல் வகுத்தால் ஒவ்வொரு கிரகத்திற்கும் 12 வருடம் வீதம் 9 கிரகங்களுக்கு 108

வருடங்கள் ஆகின்றன. வாக்பத்யாயுர்தாயத்தில் இலக்னத்திற்கு தசை கிடையாது. இதற்குமுன் சொன்ன திரேக்காண தசையிலும், இராசி தசையிலும் ஆயுர்தாய ஞானத்திற்காக திரைராசி கணிதம் கிடையாது. ஆனால் வாக்பதி ஆயுர்தாயத்தில் திரை ராசிகள் கணிதம் உண்டு.

எல்லா கிரகங்களுக்கும் தாங்கள் தங்கியுள்ள இராசியின் தொடக்கத்தில் 12 வருடமும் ஆயுர்தாயம் ஆகும். அதே இராசியின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை நடுவில் கிரமமாக குறைந்துகொண்டே வரும்.

கிரகங்கள் தங்கியுள்ள இராசியில் உள்ள கிரகங்களின் ஸ்புட பாகை, கலை, விகலைகளுக்கு ஏற்பட்ட வருடம், மாதம், தினம் முதலியவைகள் ஜாதகனின் பிறப்பிற்கு முன்பு தீர்ந்துபோனவை என்றும், கிரகஸ்புடத்திற்குப் பிறகு இராசி இறுதிவரை செல்லவேண்டிய பாகை, கலை, விகலைகளுக்கு ஏற்படுகிற வருடம், மாதம், தினம் முதலியவைகள் ஜாதகனின் பிறப்பிற்குப் பிறகு தசையில் செல்லவேண்டிய இருப்பு வருடங்கள் என்று அறியவும்.

இப்படிச் செல்லவேண்டிய இருப்பு வருடங்களைத் திரை ராசிக் கணிதத்தினால் அறியலாம்.

கிரக ஸ்புடத்திலுள்ள பாகைகளை 60-ஆல் பெருக்கி, கலைகளைக் கூட்டவும். கலைகளையும் 60-ஆல் பெருக்கி, விகலைகளைக் கூட்டவும். இது கிரக ஸ்புடத்திலுள்ள பாகைகளை, விகலைகளுக்கு விகலையாகும். இந்த விகலைகளை 9000-ஆல் வகுத்துவந்த பலன் வருடமாகும். மிகுதியானதை 750-ஆல் வகுத்தால் வருவது மாதமாகும். மிச்சத்தை 25-ஆல் வகுத்தால் வருவது தினமாகும். மிச்சத்தை 12-ஆல் பெருக்கி, 5-ஆல் வகுத்து வருவது நாழிகைகள் ஆகும். இப்படி வரும் வருடம், மாதம், தினம் நாழிகைகள் ஜாதகனின் பிறப்பிற்கு முன்பு (கதமான) சென்ற தசா காலம் என அறியவும். இந்த கத தசா காலத்தை 12 வருடத்திலிருந்து

கழித்தால் மீதியான வருடம், மாதம், தினம், நாழிகைகள் ஜாதகனுக்குப் பிறப்பிற்குப்பின் செல்லவேண்டிய தசா காலம் என அறியவும். இப்படி 9 கிரகங்களுக்கும் தனியாக ஏற்பட்ட எல்லா வருடங்களையும் கூட்டினால் ஜாதகனுக்கு மொத்தமான ஆயுள்காலம் ஆகும்.

உதாரணம் :- ஞாயிறு ஸ்புடம். 6 இராசி, 10 பாகை, 10 கலை, 10 விகலைகள். இந்த உதாரணத்தில் ஞாயிறுக்கு துலா இராசியில் பிறப்பிற்கு முன்பு சென்ற பாகை 10, கலை 10, விகலை 10.

10 x 60
600 இவை 10 பாகைகளுக்குக் கலை
10
610 x 60
3660 இவை 610 கலைகளுக்கு விகலைகள்
10
36610 இவை துலா ராசியில் சென்ற விகலைகள்

9000 ÷ 36610 = 4 வருடங்கள்
36000

750 ÷ 610 = 0 மாதம்
000

25 ÷ 610 = 24 தினங்கள்
50
110
100
10 x 12

5 ÷ 120 - 24 நாழிகைகள்
120
0

வ.	மா.	தின.	நாழிகை	
4	0	24	24	பிறப்பு காலத்திற்கு முன்பு சென்றவை.
12	0	0	0	
4	0	24	24	
7	11	5	36	பிறப்பிற்குப் பிறகு செல்ல வேண்டிய ஞாயிறு தசாகாலம்.

தசாகிரமம்

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்ற 5 தாரா கிரகங்களுக்கு ஞாயிறுடன் சேர்க்கை ஏற்படின் அஸ்தனம். இராகுவிற்கும், கேதுவிற்கும் பிம்பமே இல்லை. அதனால் அவ்விருவருக்கும் உதயமும் இல்லை. அஸ்தமனமும் இல்லை. மதியின் பிம்பம் அமாவாசையன்று ஞாயிறுடன் சேர்க்கை ஏற்பட்டதினால் தெரியாது. சுக்கில பிரதமையன்று அல்லது துவிதீயையன்று தெரிய ஆரம்பிக்கும். ஆகவே, மதியின் உதயம் அறியலாம்.

வான மண்டலத்தில் எந்த கிரகத்திற்கு ஞாயிறுடன் சேர்க்கை ஏற்பட்டு முதல் உதயம் ஏற்பட்டதோ அந்த கிரகத்தின் தசை முதல் தசை என்று அறியவும். அடுத்ததாக உதயம் ஏற்பட்ட கிரகத்தின் தசை அடுத்த தசை என்றும் இப்படி உதய கிரமமாக எல்லா கிரகங்களின் தசாகிரமம் ஏற்படும் என்றும் அறியவும்.

எந்த கிரகம் ஞாயிறிடமிருந்து வெகுதூரத்தில் இருக்கிறதோ அந்த கிரகத்திற்கு முதல் உதயம் ஏற்பட்டது என்றும், சமீபமுள்ள கிரகத்திற்கு உதயம் சமீப காலத்தில் ஏற்பட்டது என்றும் அறியவும். இது தசாகிரமத்தில் கவனிக்க வேண்டிய உதயம் என்று முக்கியமாக கவனிக்கவும். ஞாயிறுடன் சேர்க்கை ஏற்பட்ட பிறகு ஏற்படுகிற உதயம் முக்கியமான உதயம் அல்ல.

உதாரணம் :-

	ராசி	பாகை	கலை	விகலை
ஞாயிறு	1	2	4	8
மதி	10	2	4	8
செவ்வாய்	9	4	8	6
புதன்	8	6	2	4
வியாழன்	7	5	4	3
வெள்ளி	6	6	3	4
சனி	5	4	2	1
ராகு	4	3	2	1
கேது	10	3	2	1

இந்த உதாரணத்தில் ஞாயிறின் தசை முதல் தசை என்றும், ஞாயிறிடமிருந்து வெகுதொலைவிலுள்ள கேதுவின் தசை 2-வது தசை என்றும், அடுத்த தசைகள் தொலைவுக்கிரமமாக மதி, செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகுகளின் தசைகள் கிரமமாக ஏற்படுகின்றன என்றும் அறியவும்.

குறிப்பு :- இந்த தசா கிரமத்தில் ஞாயிறுக்கு மேற்குறிப்பிட்ட உதயம் இல்லாததினால் அவனுடை தசை எப்பொழுது என்ற கேள்வி வருகிறது. எல்லா கிரகங்களில் இருந்தும் கிரக ராஜனாகிய ஞாயிறுக்கு இயற்கை பலம் இருப்பதினால் "*பலீலக்னேந்து ஸூர்யாணாம் தசாமாத்யாம் ப்ரயச்சதி*" என்ற கார்க்கி வசனப் பிரமாணத்தைக் கொண்டு ஞாயிறின் தசை முதல் தசை என்று அறியலாம் என்று தோன்றுகிறது.

அந்தர் தசாகிரமம்

மேற்கண்டவாறு தசாகிரமம் தெரிந்தபின் ஒவ்வொரு கிரகத்தின் தசையிலும் எல்லா கிரகங்களுக்கும் பங்கு உண்டு. அதுவே அந்தர்தசாகாலம் என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு கிரகத்தின் தசா காலத்திலும் தன்னுடைய அந்தர்

தசை, முதல் அந்தர் தசையாகும். தனக்கு வெகு சமீபத்திலுள்ள கிரகத்தின் அந்தர்தசை இரண்டாவது அந்தர்தசையாகும். அதற்கு அடுத்த தனக்கு சமீபமுள்ள கிரகத்தின் அந்தர்தசை மூன்றாவது அந்தர்தசை ஆகும். அதற்கு அடுத்தடுத்து சமீபத்திலுள்ள கிரகங்களின் அந்தர்தசைகள் அடுத்தடுத்த அந்தர்தசைகள் ஆகின்றன. கடைசியில் வெகு தொலைவில் உள்ள கிரகத்தின் அந்தர்தசை 9-வது அந்தர்தசை ஆகும்.

குறிப்பு :- இங்கு ஒவ்வொரு கிரகத்தின் அந்தர்தசைக் கிரமம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு கிரகத்தின் அந்தர்தசாகாலம் எவ்வளவு என்று அந்தர்தசா காலத்தின் அளவு சொல்லப்படவில்லை.

15-17 செய்யுளில் கூறியுபடி எல்லா கிரகங்களின் தசா காலத்தினைக் கணிக்கவும். ஒவ்வெ ாரு கிரகத்தின் தசா காலத்தையும் தனியாக ஒன்பது இடங்களில் எழுதவும். அந்த 9 இடங்களில் 9 கிரகங்களின் தசா காலத்தினால் வரிசையாகப் பெருக்கவும். 9 கிரகங்களின் தசா காலத்தைக் கூட்டி கூட்டுத் தொகையினால் ஒவ்வொரு இடத்திலும் வகுக்கவும். ஈவானது எந்த கிரகத்தின் தசா காலத்தினால் பெருக்கி உள்ளோமோ அந்த கிரகத்தின் அந்தர்தசா காலமாகும்.

உதாரணம் :-

ஞாயிறு தசை	4 வருடங்கள்
மதியின் தசை	8 வருடங்கள்
செவ்வாய் தசை	5 வருடங்கள்
புத தசை	6 வருடங்கள்
வியாழ தசை	6 வருடங்கள்
வெள்ளி தசை	7 வருடங்கள்
சனி தசை	10 வருடங்கள்
ராகு தசை	11 வருடங்கள்
கேது தசை	11 வருடங்கள்

இந்த உதாரணத்தில் ஞாயிறு தசையில் அந்தர் தசைகளைக் கண்டுபிடி. ஞாயிறின் தசாகாலம் 4 வருடம் எல்லா கிரகங்களின் தசாகாலத்தின் கூட்டுத்தொகை 72 வருடங்கள்*.

வ	மா	தி	ஞாயிறு தசையில்
0	2	20	ஞாயிறு அந்தர்தசா
0	5	10	மதியின் அந்தர்தசா
0	6	00	செவ்வாயின் அந்தர்தசா
0	4	00	புதனின் அந்தர்தசா
0	4	00	வியாழனின் அந்தர்தசா
9	4	20	வெள்ளியின் அந்தர்தசா
0	6	20	சனியின் அந்தர்தசா
0	7	10	இராகுவின் அந்தர்தசா
0	7	10	கேதுவின் அந்தர்தசா
4	0	0	ஆக ஞாயிறு தசையின் மொத்த வருடங்கள்.

இப்படியே எல்லா கிரகங்களின் அந்தர்தசைகளையும் காண்க.

மேற்கூறிய ஒவ்வொரு கிரகத்தின் அந்தர்தசா காலத்திலும் 9 கிரகங்களுக்கும் பங்கு உண்டு. இதுவே அந்தராந்தர் தசை என்று வழங்கப்படுகிறது. எந்த கிரகத்தின் அந்தர்தசையோ அந்த கிரகத்தின் அந்தராந்தர் தசை, முதல் அந்தராந்தர் தசை ஆகும். எந்த கிரகத்தின் அந்தர் தசையோ அந்த கிரகத்திலிருந்து வெகுதொலைவில் உள்ள கிரகத்தின் அந்தராந்தர் தசை இரண்டாவது அந்தராந்தர் தசை ஆகும். வெகு சமீபத்திலுள்ள கிரகத்தின் அந்தராந்தர் தசை 9-வது அந்தராந்தர் தசை ஆகும். மேற்கூறியபடி வெகுதூரத்திலுள்ள கிரகத்தின் அந்தராந்தர் தசையிலிருந்து மிகவும் சமீபத்திலுள்ள கிரகங்களின் அந்தராந்தர் தசைகள் அடுத்தடுத்த அந்தராந்தர் தசைகள் ஆகின்றன என அறியவும்.

★ இதன் விளக்கத்தை அனுபந்தத்தில் காண்க.

குறிப்பு :- இங்கேயும் அந்தர்தசா காலத்தின் அளவைப்போல் அந்தராந்தர் தசா காலத்தின் அளவையும் கவனிக்கவும். அந்தராந்தர் தசா கிரமத்தைப்போல் அந்தராந்தர தசாகிரமம் முதலியவைகளையும் அறியவும்.

மரண திரேக்காணமும் அதன் அதிபதியும்

ஒவ்வொரு இராசியிலும் மூன்று மூன்று திரேக்காணங்கள் உண்டு என முதல் அத்யாயத்தில் சொல்லப்பட்டது. இலக்ன ராசியிலுள்ள மூன்று திரேக்காணங்களில் ஜன்ம காலத்தில் எந்த திரேக்காணம் உதயமாக இருக்கிறதோ அந்த திரேக்காணத்திலிருந்து தொடர்ந்து அடுத்த இராசியிலுள்ள மூன்று மூன்று திரேக்காணங்களை எண்ணிக்கொண்டே வரவும். இப்படி எண்ணுகையில் 22-வது திரேக்காணம் மரண திரேக்காணம் ஆகும். இது லக்னத்திலிருந்து 8-வது இராசியில் வரும். லக்ன திரேக்காணம் முதல் திரேக்காணமாக இருந்தால் எட்டாவது இராசியில் முதல் திரேக்காணமாகவும், இரண்டாவதாக இருந்தால் இரண்டாவதாகவும், மூன்றாவதாக இருந்தால் மூன்றாவதாகவும் வரும்.

உதாரணம் :- இலக்ன ஸ்புடம் ரா. 4, பா. 12, க. 4, வி. 2 இந்த உதாரணத்தில் ஸிம்ம இராசியில் இரண்டாவது திரேக்காணம் லக்னத்திற்கு வந்திருக்கிறது. அதைத் தொடர்ந்து எண்ணினால் லக்னத்தில் 2 திரேக்காணங்களும், அடுத்து கன்னி ராசியிலிருந்து கும்ப ராசி வரை 6 இராசிகளுக்கு மூன்று மூன்று திரேக்காணங்கள் வீதம் 18 திரேக்காணங்களும், மீனத்தில் 2 திரேக்காணங்களும் கூட்டப்பட்டால் 22 திரேக்காணங்கள் ஆகின்றன. ஆகையால் மேற்கூறிய உதாரணத்தில் லக்னத்தில் உதயமான 2-வது திரேக்காணத்தில் இருந்து 22-வது திரேக்காணம் லக்ன ராசியாகிய சிம்மத்தில் இருந்து எட்டாவது இராசியாகிய மீனத்தில் இரண்டாவது திரேக்காணமும் அதற்கு அதிபதி மீனத்திலிருந்து 12 ராசியாகிய கும்ப இராசியின் அதிபதி சனியும் ஆகிறார்கள்.

மேற்கூறிய மரண திரேக்காணமும் அதிலுள்ள கிரகமும் அதைப் பார்க்கிறவனும் மரணத்திற்குக் காரணம் என்று அறியவும்.

குறிப்பு :- இந்த இடத்தில் லக்ன திரேக்காணத்திலிருந்து 22-வது திரேக்காணம் என்று சொன்னது அவ்வளவு பொருத்தமாக இல்லை. லக்னத்திலிருந்து 8-வது பாவத்தின் திரேக்காணம் என்று சொல்வது நியாயம். எட்டாவது பாவம் மரண பாவமாக இருப்பதால் அதனுடைய திரேக்காணமும் மரண திரேக்காணம் என்று சொல்வது பொருந்தும். லக்னத்திலிருந்து 8-வது பாவத்தின் திரேக்காணம் லக்ன திரேக்காணத்திலிருந்து 22-வது திரேக்காணமாகவே இருக்கும் என்ற நியமம் (நியதி) கிடையாது. சிற்சில சந்தர்ப்பங்களில் 21-வது திரேக்காணமாகவும், 23-வது திரேக்காணமாகவும் இருக்கும்.

மரணத்திற்குக் காரணமான தசை

1. மரண திரேக்காணாதிபதியுடன் சேர்க்கை, 2. அவனால் பார்க்கப்படுதல், 3. அவனுடைய சொந்த வீட்டில் தங்குதல், 4. மரண திரேக்காணத்தில் இருத்தல், 5. மரண திரேக்காணாதிபதி எந்த திரேக்காணத்தில் தங்கி இருக்கிறானோ அந்த திரேக்காணத்தில் இருத்தல் இப்படி 5 தோஷங்களுள்ளவர்கள் எப்பவும் அதிகொடூர கிரகங்கள்.

1. லக்னாதிபதியிடமிருந்து 6, 8, 12-வது ஸ்தானங்களில் தங்குதல், 2. லக்னாதிபதியின் சத்ருவாக இருத்தல், 3. பலவீனமாக இருத்தல், 4. கிரஹணத்தினால் அல்லது சத்ரு க்ரஹத்தினால் பீடிக்கப்படுதல், 5. நீச ராசி அல்லது நீசராசியில் வந்திருக்கின்ற நவாம்சத்தில் தங்குதல், 6. அஸ்தமனம் ஏற்படுதல், 7. பாப கிரகங்களின் மத்தியில் இருத்தல், 8. கொடூர கிரகத்தின் சேர்க்கை அல்லது பார்வை இப்படி எட்டு தோஷங்களில் ஏதாவது ஒரு தோஷம் அல்லது அதிக தோஷங்கள் மேற்கூறிய

அதிகொடூர கிரகங்களுக்கு ஏற்படின் அந்தக் கொடிய கிரகத்தின் தசை அல்லது அந்தர் தசையில் ஜாதகனுக்கு நிச்சயமாக மரணம் உண்டாகும்.

மேற்கூறிய அதிகொடூர கிரகங்களைத் தவிர மீதியான கிரகங்களுக்கும் மேற்கூறிய எட்டு தோஷங்கள் ஏற்பட்டால் அவர்களும் அதிகொடிய கிரகங்களுக்குச் சமம் என்றும், அவர்களின் தசா காலமும், அந்தர்தசா காலமும் ஜாதகனுக்கு மரணத்தை அல்லது அதற்குச் சமமான ஆபத்தை அளிக்கும் என்று அறியவும்.

ப்ருகுவால் சொல்லப்பட்ட ஆயுர்தாயம்

ஜன்ம காலத்தில் லக்ன இராசியிலிருந்து தொடர்ந்து ஒவ்வொரு கிரகமும் தங்கியுள்ள இராசி வரை நடுவிலுள்ள ஒவ்வொரு இராசிக்கும் ஒவ்வொரு வருடமாக ஆயுள் என்று அறியவும். ஒவ்வொரு கிரகத்தின் ஸ்புடத்திலிருந்து லக்ன ஸ்புடத்தைக் கழிக்கவும். மிகுதியில் ஒவ்வொரு இராசிக்கும் ஒரு வருடமாகவும், 2 ½ பாகைகளுக்கு ஒரு மாதமாகவும், 5 கலைகளுக்கு ஒரு தினமாகவும், 5 விகலைகளுக்கு ஒரு நாழிகையாகவும் கணிக்கவும். இப்படி 9 கிரகங்களின் ஆயுள் வருடங்களைத் தனித்தனியாக அறிந்துகொண்டு, அவைகளை அந்தந்த கிரகங்களின் கிரணங்களின் எண்ணிக்கையால் பெருக்கவும். இப்படி வந்த 9 கிரகங்களின் ஆயுட்காலங்களை தனித்தனியாக 108-ஆல் வகுத்து வந்த ஈவை விட்டுவிட்டு மிகுதிக்குத் தனித்தனியான கிரகத்தினால் ஏற்பட்ட தசை அல்லது ஆயுட்காலம் இவைகளை அறியவும். இது பிருகுவினால் சொல்லப்பட்ட ஆயுர்தாயம்.

குறிப்பு :- **ஸாராவளி** கிரந்தத்தில் கிரகங்களின் கிரணங்களை எப்படி அறிவது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. எல்லா கிரகங்களும் பரம நீச பாகத்தில் கிரணம் கிடையாது. பரம உச்ச பாகத்தில் 7 கிரணங்கள் உள்ளன என்று **மணித்தன், யமன், பாதராயணன்** முதலிய பல சோதிட

சாஸ்திரக்காரர்களின் எண்ணம். பரம உச்ச பாகத்தில் ஞாயிறுக்கு 10, மதிக்கு 9, வெள்ளிக்கு 8, வியாழனுக்கு 7, செவ்வாய், புதன், சனிக்கு 9, 5 கிரணங்கள் என்று **மஹேந்திர** சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கிரகத்தின் ஸ்புடத்திலிருந்து அந்தந்த கிரகத்தின் பரம நீச பாகைகளைக் கழிக்கவும். மிச்சமான இராசி, பாகை, கலை, விகலைகளை அந்தந்த கிரகத்தின் கிரணங்களால் பெருக்கி, 6-ஆல் வகுக்கவும். ஈவு அந்தந்த கிரகங்களின் கிரணமாகும். நீசத்தை அடுத்து கிரகமாயிருதால் அந்த கிரணம் அபிமுக கிரணம் எனப்படும். இது சிறந்தது. உச்சத்தை அடுத்து கிரகமிருந்தால் பராமுக கிரணம் எனப்படும். இது சாதாரணம். மேற்கூறியபடி சாதித்த கிரணங்களை கிரகமானது உச்ச இராசியிலோ, சுய இராசியிலோ, சுய துவாதசாம்சத்திலோ இருந்தாலும் வக்ரமாக இருந்தாலும் 3-ஆல் பெருக்கவும். மித்ர துவாதசாம்சத்திலோ, வக்ர கதியைவிட்டு ருஜுகதி ஆரம்பிக்கப்போகிற நேரத்திலோ 2-ஆல் பெருக்கவும். வக்ர கதியைவிட்டு ருஜுகதி ஆரம்பித்த நேரத்தில் 1/8 பாகத்தைக் கழிக்கவும். சத்ரு துவாதச பாகத்திலோ, நீச இராசியிலோ கிரகம் தங்கியிருந்தால் 1/16 பாகத்தைக் கழிக்கவும். இப்படி கிரகங்களின் தாற்காலிகமான கிரணங்களைத் தெரிந்து கொள்ளவும். கிரகங்களுக்கு அஸ்தமனம் ஏற்பட்டால் மேற்கூறியபடி ஸித்தமான எல்லா கிரணங்களும் நாசம் அடைகின்றன. ஆனால் வெள்ளிக்கும், சனிக்கும் அஸ்தமனம் ஏற்பட்டாலும் கிரண நாசம் ஏற்படாது.

உச்ச இராசியிலும், சுய இராசியிலும் தங்கியுள்ள கிரகத்தின் ஆயுள் வருடங்களை 2-ஆல் பெருக்கவும். நீச இராசியிலுள்ள கிரகத்தின் ஆயுள் வருடங்களும் அஸ்தமனம் அடைந்த கிரகத்தின் ஆயுள் வருடங்களும் பூர்ணமாக நாசம் அடைகின்றன். இலக்னத்திலிருந்து 1, 4, 5, 7, 8, 9, 10, 12 ஸ்தானங்களில் குரூர கிரகம் இருந்தால் அவனுடைய ஆயுள் வருடங்களும் நாசம் அடைகின்றன. இந்த ஆயுர்தாயத்தில் நிறைய வருடங்கள் ஆயுட்காலமாக வருகின்றன. ஆனால் மேற்கூறியபடி ஆயுட்காலத்தின் அளவு குறைகிறது.

அம்சாயுர்தாயம்

பிராணிகளுக்கு இது ஒரு சுத்தமான ஆயுர்தாய கிரமமாக உள்ளது.

லக்னம் சர இராசியாக இருந்தால், லக்ன ஸ்புடத்தை இலக்னாதிபதி ஸ்புடத்திலிருந்து கழிக்கவும். மிச்சத்தில் இராசிகளை ஒன்பதால் பெருக்கினால் அந்தந்த இராசிகளுக்கு நவாம்ச இராசிகள் ஆகின்றன. மிச்சமான பாகைகளை 60-ஆல் பெருக்கி கலைகளைக்கூட்டி, 200-ஆல் வகுத்தால் அதை பாகைகளுக்கும், கலைகளுக்கும் நவாம்ச இராசிகள் ஆகின்றன. மிகுதியானதை வைத்துக்கொள்ளவும். இவைகளை மேற்கூறிய நவாம்ச ராசிகளில் கூட்டினால், கூட்டி வருகிற ஈவு லக்னத்தின் ஸ்புடத்திலிருந்து லக்னாதிபதியின் ஸ்புடம்வரை நவாம்ச இராசிகளும் அதனுடைய மிகுதியும் ஆகின்றன.

லக்ன ஸ்புடத்திலும் இராசிகளை விட்டுவிடவும். மிகுதியான பாகைகளை 60-ஆல் பெருக்கி, கலைகளைக் கூட்டி, 200-ஆல் வகுக்கவும். வருவது லக்ன நவாம்ச இராசிகளும் அதன் மீதியும்.

இதனால் மேற்கூறியுள்ள லக்ன ஸ்புடத்திற்கும், லக்னாதிபதி ஸ்புடத்திற்கும் நடுவிலுள்ள நவாம்சங்களையும் அதன் மிகுதியையும் பெருக்கவும். வருகிற நவாம்சங்கள் வருடங்களாகவும், மிகுதியை 12-ஆல் பெருக்கினால் மாதங்களும், அதன் மிகுதியை 30-ஆல் பெருக்கினால் தினங்களும், அதன் மிகுதியை 60-ஆல் பெருக்கினால் நாழிகைகளும் ஆகின்றன. இது லக்னாதிபதியின் தசையாகும்.

உதாரணம் :-

லக்ன ஸ்புடம் ரா.3, பா. 2, கலை 20 லக்னாதிபதி ஸ்புடம்

ரா.	பா.	க.	
8	8	50	
8	8	50	லக்னாதிபதி ஸ்புடம்
4	2	60	லக்ன ஸ்புடம்
4	4	10	லக்னத்திலிருந்து லக்னாதிபதி வரை நடுவிலுள்ள இராசி பாகைகள்

$4 \times 9 = 36$ இராசிகளுக்கு நவாம்ச இராசிகள்

$4 \times 60 = 240 + 10 = 250$ மீதியான கலைகள்.

$250 \div 200 = 1\frac{1}{4}$ மீதியான கலைகளுக்கு நவாம்ச இராசிகள்.

$36 +$

$1\frac{1}{4}$ லக்ன ஸ்புடத்திலிருந்து

$37\frac{1}{4}$ லக்னத்தின் அதிபதியின் ஸ்புடம்வரை நடுவிலுள்ள மொத்தமான நவாம்ச ராசிகள்

4	2	40	லக்ன ஸ்புடம்
4	0	00	கதராசிகள்
0	2	40	லக்னத்தில் கத பாகைகள்

$2 \times 60 = 120 + 40 = 160$ லக்னத்தில் கத கலைகள்.

$\frac{160}{200}$ $\frac{4}{5}$ இலக்னத்தில் கத நவாம்சங்கள்

$37\frac{1}{4} \times \frac{4}{5} = \frac{149}{4} \times \frac{4}{5} = \frac{149}{4} = 29$ வருடங்கள். மீதி $\frac{4}{5}$

$\frac{4}{5} \times 12 = \frac{48}{5} = 9$ மாதங்கள். மீதி $\frac{3}{5}$

$3 \times \frac{6}{1} = 18$ தினங்கள். மீதி = 0

29 வருடங்கள் 9 மாதங்கள் 18 தினங்கள் லக்னாதிபதியின் தசாகாலம் என்று அறியவும்.

இப்படி ஒவ்வொரு பாவத்தின் ஸ்புடத்திற்கும் அந்த பாவத்தின் அதிபதியின் ஸ்புடத்திற்கும் நடுவிலுள்ள நவாம்ச இராசிகளையும் அந்தந்த பாவத்தின் நவாம்ச இராசிகளையும் வைத்துக்கொண்டு 12 பாவங்களின் அதிபதிகளின் தசைகளையும் சாதிக்கவும்.

இப்படி சாதித்த தசா வருடங்களை 108-ஆல் வகுக்கவும். வந்த ஈவை விட்டுவிட்டு மீதியானதை வருடங்களும், மாதங்களும், தினங்களும், நாழிகைகளும் ஜாதகனுக்கு பரமாயுள் என்று அறியவும்.

மேற்கூறிய சாதித்த ஒவ்வொரு பாவாதிபதிகளின் தசா வருடங்கள் ஸ்தூலமானவை. இவைகளை 12-ஆல் வகுத்து ஈவை விட்டுவிட்டு மீதமானதே, ஸ்புட தசா காலமாகும். 12 பாவாதிபதிகளின் ஸ்புடதசா காலங்களைக் கூட்டினால் மேற்கூறியுள்ள பரமாயுள் காலம் வரும்.

லக்னம் ஸ்திர ராசியாக இருந்தால் என்னென்ன கணிதம் செய்யப்பட்டதோ அதெல்லாம் அப்படியே இதற்கும் செய்யவும். ஆனால் லக்னத்தின் கதநவாம்ச ராசிகளுக்கும், அதன் சொச்சத்திற்கும் பதிலாக ஞாயிறின் கதநவாம்ச இராசிகளையும் அதன் மீதியையும் எடுத்துக்கொண்டு அதனால் லக்னத்திற்கும், லக்னாதிபதிக்கும் நடுவிலுள்ள நவாம்ச இராசிகளையும் அவைகளின் மீதியையும் பெருக்கவும். மீதியான எல்லா காரியங்களும் சமம்.

லக்னம் இருதன்மை ராசியாக இருந்தால் : ஞாயிறின் ஸ்புடத்தில் கதநவாம்ச இராசிகளையும் அவைகளின் மீதியையும் 9-ஆல் கழித்து மீதியான நவாம்ச இராசிகளையும் அவைகளின் மீதியையும் அறியவும். அதனால் லக்ன ஸ்புடத்திற்கும் லக்னாதிபதியின் ஸ்புடத்திற்கும் நடுவிலுள்ள நவாம்ச ராசிகளையும் அவைகளின் மீதியையும் பெருக்கவும். மீதியான எல்லா காரியங்களும் முன் மாதிரியே செய்யவும்.

ஆயுர்தாயத்திற்கு விருத்தியும், நாசமும்

மேற்கூறியபடி செய்த 12 பாவதசா காலத்தை பாவதசாதிபதி கிரகம் உச்ச இராசியிலிருந்தாலும், வக்ரியாக இருந்தாலும், யுத்தத்தில் ஜெயித்தாலும் 3-ஆல் பெருக்கவும். சர இராசியாயிருந்தாலும் வர்கோத்தம (சர இராசியில் முதல் நவாம்சம், ஸ்திர இராசியில் 5-வது நவாம்சம், இருதன்மை இராசியில் 9-வது நவாம்சம்) நவாம்ச ராசியில் இருந்தாலும், சுய ஷட்வர்கத்தில் இருந்தாலும் 2-ஆல் பெருக்கவும். மித்ர இராசியிலும், ஸம இராசியிலும் இருந்தால் அப்படியே எடுத்துக்கொள்ளவும். எதனாலும் பெருக்கவேண்டியது இல்லை. நீச இராசியிலிருந்தாலு சத்ரு இராசியில் இருந்தாலும் அஸ்தமனமாக இருந்தாலும் தசாகாலத்தைப் பூர்ணமாக நாசம் செய்யும்.

குரூரோதய ஹரணம்

லக்னத்தில் அல்லது லக்னத்திலிருந்து 8-வது ஸ்தானத்தில் செவ்வாய் இருந்தால் ஆயுள் குறையும், அதற்குட்பட்ட கணிதம் அடுத்தபடியாக சொல்லப்படுகிறது. செவ்வாய் கிரகத்தின் ஸ்புடத்திற்கு மேற்கூறியபடி அம்சங்களையும், அவைகளின் மீதியையும் சாதிக்கவும். அவைகளினால் எல்லா பாவாதிபதிகளின் தசா காலத்தையும் தனித்தனியாகப் பெருக்கி, 108-ஆல் வகுக்கவும். வருடம், மாதம், தினம், நாழிகைகளாக வந்த பலனை அந்தந்த கிரகத்தின் தசாகாலத்திலிருந்து கழிக்கவும். மீதியானது சுத்தமான தசா காலமாகும்.

லக்னம் அதனுடைய நவாம்சம் இவ்விரண்டிற்கும் அதிக பலமிருப்பின் லக்னராசி தசை, லக்ன நவாம்ச தசை என்று இரண்டு தசா காலம் உண்டு. லக்ன ஸ்புடத்திலுள்ள ஒவ்வொரு இராசிக்கும் ஒவ்வொரு வருடமும் 2 ½ பாகைகளுக்கு ஒவ்வொரு மாதமும் ஐந்து ஐந்து கலைகளுக்கு ஒவ்வொரு தினமும், ஐந்து ஐந்து விகலைகளுக்கு ஒவ்வொரு

நாழிகையாகவும் லக்ன தசா காலம் என்று அறியவும். லக்ன இராசியில் உள்ள ஒவ்வொரு நவாம்சத்திற்கு ஒவ்வொரு வருடமும் 16 2/3 கலைகளுக்குஒவ்வொரு மாதமும் 5/9 கலைக்கு ஒரு தினமும், 5/9 விகலைக்கு ஒரு நாழிகையாகவும் அம்ச தசாகாலம் என்று அறியவும். லக்னத்திற்கு பலமில்லாவிட்டால் அம்ச தசை மட்டும் இருக்கும்.

பாவாயுர் தாயம்

ஒவ்வொரு பாவாதிபதி ஸ்புடத்திலிருந்து அந்தந்த பாவாஸ்புடத்தைக் கழிக்கவும். மிச்சம் பாவ இராசியிலிருந்து பாவாதிபதி தங்கின இராசிவரை நடுவிலுள்ள இராசி, பாகை, கலை, விகலைகள் வருகின்றன. இப்படி ஓஜ இராசியில் செய்யவும். யுக்ம இராசியில் ஒவ்வொரு பாவத்தின் அதிபதிகளின் ஸ்புடத்தை அந்தந்த பாவத்தின் ஸ்புடத்தில் இருந்து கழிக்கவும். மீதி பாவாதிபதி தங்கின இராசியிலிருந்து அந்தந்த பாவம் வரை நடுவிலுள்ள இராசி, பாகை, கலை, விகலைகள் வருகின்றன. மேற்கூறியபடி வந்த ஒவ்வொரு இராசிக்கும் ஒவ்வொரு வருடமாகவும், 2 பாகைகளுக்கு ஒரு மாதமாகவும் ஐந்து ஐந்து கலைகளுக்கு ஒரு தினமாகவும், ஐந்து ஐந்து விகலைகளுக்கு ஒரு நாழிகையாகவும் கணிக்கவும். இது பாவாயுர்தாயமாகும். இப்படி 12 பாவங்களுக்கும் 12 தசைகள் ஆகின்றன. 12 தசைகளையும் கூட்டினால் பூர்ணாயுர்தாயமாகும்.

மாரக தசை

எந்த பாவத்திலிருந்து அபிமுக இராசியிலும், 7-வது இராசியிலும் கொடூரமான கிரகம் தங்கி இருக்கிறதோ அந்த பாவத்தின் தசை மாரகமாகும்.

குறிப்பு :- அபிமுக இராசி அத்தியாயத்தில் 12-வது செய்யுளின் வியாக்யானத்தில் சொல்லப்பட்டது.

ஒவ்வொரு பாவத்தின் தசா காலத்திலும் மேற்கூறியபடி மாரகதசா காலத்தை அறிந்து பலத்தைச் சொல்லவும். இது ஜனங்களின் ஆயுர்தாய விஷயத்தில் பாவதசை என்று சொல்லப்பட்டது.

லக்னம் முதலிய எல்லா பாவாதிபதிகளுக்கும் இரண்டுக்கு மேற்பட்ட கிரகங்களின் சேர்க்கை ஏற்பட்டால் அந்தந்த பாவங்களின் தசைகளுக்கு அபிவிருத்தி உண்டாகும். மூன்று கிரகங்களின் சேர்க்கை ஏற்படின் மூன்றாலும், நான்கு கிரகங்களின் சேர்க்கை ஏற்பட்டால் நான்காலும் அந்தந்த தசைகளைப் பெருக்கவும். இப்படி சேர்க்கையுடன் கூடிய கிரகங்களின் எண்ணிக்கையினால் பெருக்கவும்.

பாக்ய பாவத்தின் தசையிலிருந்து பாக்யத்தை அறியவும். இப்படியே பிதுர் பாவம் முதலிய பாவங்களில் இருந்து பிதுர் முதலியவர்களின் விஷயத்தை அறியவும்.

குறிப்பு :- மேற்கூறிய எல்லா தசைகளிலும் தசா கிரமம் சொல்லாத இடங்களில் ச்ரேஷ்டா தஶா ஸா ப்ரபலஸ்ய பூர்வா என்று பிருஹஜ்ஜாதகத்தில் சொல்லியவாறு பிரபல கிரகம் அல்லது பிரபல பாவத்தின் தசை முதல் தசை என்றும், பலம் குறையக் குறைய வரிசைக் கிரமமாக அடுத்தடுத்த தசைகள் என்று அறியவும்.

பூர்வபாராசார்யத்தில் ஆயுள் நிரூபணம் என்னும்
ஐந்தாவது அத்தியாயம் முற்றும்.

ஆறாவது அத்தியாயம்

அதிஜசுவரிய யோகம்

எந்த பாவ இராசியில் சுபக்கிரகம் அல்லது பாவாதிபதியின் சம்பந்தம் இருக்கிறதோ அந்த பாவத்தின் தசையில் குறையாத மிகுந்த செல்வம் உண்டாகும்.

ஒவ்வொரு பாவத்திலிருந்து 2-வது இராசியில் அந்தந்த பாவத்தின் அதிபதியான கிரகத்தின் சேர்க்கை அல்லது பார்வை ஏற்பட்டால் அபாரமான தனம் கிடைக்கும்.

தனநாச யோகம்

எந்த பாவத்திலிருந்து 12-வது ஸ்தானத்தில் பாவாதிபதி அல்லது கிரகம் இருக்கிறதோ அந்த பாவத்தின் அல்லது கிரகத்தின் தசையில் செல்வம் நசிக்கும்.

ஆத்ம ஸமநாசம் போன்ற யோகங்கள்

எந்த பாவத்திலிருந்து 5 அல்லது 9-வது இராசியில் அதிகமான பாபக் கிரகங்கள் உள்ளனவோ* அந்த பாவத்தின் அல்லது பாவாதிபதியின் தசையில் தனக்குச் சமமான மனிதனின் நாசமும், பிள்ளைகளுக்குக் கெடுதலும், தகப்பனுக்குப் பீடையும், அதிகமான மனத்தாங்கலும் உண்டாகும்.

(1) ஒவ்வொரு பாவத்திலிருந்து 5, 9-வது ஸ்தானங்களில் ஞாயிறும், மதியும், சனியும் அந்தந்த பாவத்திலிருந்து 8, 12-வது ஸ்தானங்களின் அதிபதியும் தங்கி இருக்கிறார்களோ

---

* த்ரிகோண இராசியில் இருக்கிற பாபர்களின் தசையில் என்று பொருள் கொள்ளவேண்டும்.

ந்தந்த பாவங்களின் தசையில் தகப்பனுக்குப் பீடையும், பண நாசமும் உண்டாகும். (2) மேற்கூறிய இடங்களில் கேது அல்லது இராகு தங்கினால் வெளியூர்களில் அடிக்கடி சுற்றுதலினால் அதிக கஷ்டமும், அடிக்கடி அதிக பயமும் உண்டாகும்.

எந்த பாவத்தில் ஏதாவது நீச கிரகமிருந்து அதிலிருந்து 6 அல்லது 8-வது ஸ்தானத்தில் கொடூரமான கிரகம் இருக்கிறதோ அந்த பாவத்தின் அல்லது அந்த பாவாதிபதியின் தசையில் ரோகம், சத்ரு அல்லது அரசன் இவைகளின் மூலம் பொறுக்கமுடியாத அளவு பீடை அடிக்கடி வரும்.

1. எந்த பாவத்திலிருந்து 4-வது பாவத்தில் கொடூரமான கிரகம் இருக்கிறதோ அந்த பாவத்தில் இருக்கிற கிரகத்தின் தசையில் மனை, வீடு, வயல், பசுக்கள் இவைகளின் நாசம் உண்டாகும்.

2. செவ்வாய் இருந்தால் வீடு எரியும், பிரமேஹ ரோகம் உண்டாகும்.

மேற்கூறிய 4-வது இடத்தில் சனி தங்கினால் மார்பு வலியும், ஞாயிறு இருந்தால் அரசனுக்குக் கோபத்தை உண்டுபண்ணி எல்லாப் பணத்தையும் இழந்து விடுவான். இராகு தங்கி இருப்பின் நஞ்சு பயமும், திருடன் முதலியவர்களின் பயமும் உண்டாகும்.

புண்ணிய தீர்த்த யாத்திரை முதலிய சுபயோகங்கள்

1. எந்த பாவத்திலிருந்து 10-வது ஸ்தானத்தில் இராகு தங்கியிருக்கிறானோ, அந்த பாவத்தின் தசையில் புண்ணிய தீர்த்தயாத்திரை உண்டாகும்.

எந்த பாவத்திலிருந்து 9, 10, 11-வது ஸ்தானத்தில் சுப கிரகங்கள் தங்கி இருக்கின்றனவோ, அந்த பாவத்தின் அல்லது அந்த பாவாதிபதியின் தசையில் வித்யை, பணம், தர்மச்செயல், நற்பணி, பிரசித்தி, பிரயாணத்திற்குத் தகுந்த பலசித்தி இவைகள் உண்டாகின்றன.

எந்த பாவத்திலிருநது 5, 6, 7-வது ஸ்தானத்தில் சுப ராசி அல்லது தனது உச்ச ராசியில் தங்கின கிரகங்கள் அல்லது சுபகிரகங்கள் இருக்கின்றனவோ அந்த பாவத்தின் அல்லது பாவாதிபதியின் தசையில் புத்திரன், பத்னி முதலியவர்களின் லாபமும் விசேஷ ராஜ பூஜையும் உண்டாகும்.

எந்த பாவத்தின் 1, 4, 5, 9, 10, 11 பாவங்களின் அதிபதிகள் தங்கி இருக்கிறார்களோ அந்த பாவத்தின் தசையில் அந்த பாவத்தில் தங்கியிருக்கின்ற பாவாதிபதிகளின் அந்தந்த பாவங்களுக்குச் சம்பந்தப்பட்ட பொருட்கள் விருத்தியாகும். இந்த அபிவிருத்தியானது பாவத்தின் பலத்தையோ, பாவாதிபதிகளின் பலத்தையோ பொறுத்தது. பலம் அதிகம் இருப்பின் அதிக விருத்தி, குறைந்திருந்தால் அற்பவிருத்தி என அறியவும்.

எந்த பாவத்தில் வியாழன், வெள்ளி அல்லது 9-வது ஸ்தானத்தின் அதிபதிகளில் யாராவது ஒருவர் தங்கியிருந்தால் அந்த பாவத்தின் தசையில் மங்கள காரியங்களும், உற்சவங்களும், ஸம்பத்தும், தேவதைகளுக்குத் திருப்திகரமான காரியங்களும், பிராமணர்களுக்குத் திருப்திகரமான காரியங்களும் உண்டாகும்.

எந்த பாவத்திலிருந்து 4-வது ஸ்தானத்தில் ஏதாவது ஒரு சுபக்கிரகம் அல்லது 4-வது பாவத்தின் அதிபதி இவர்களில் யாராவது உச்ச இராசியில் தங்கி இருப்பின் அந்த பாவத்தின் தசையில் வாகன லாபமும், கிராமங்களின் லாபமும் ஏராளமான பசுக்களின் விருத்தியும் ஏற்படும்.

மேற்கூறியபடி மதி இருப்பின் குதிரைகள், ஏராளமான தானியங்கள், பால் முதலிய இரஸப் பொருட்கள் இவைகளின் லாபம் உண்டாகும். பூர்ணமதி மேற்கூறியபடி இருந்தால் நிதி அல்லது மணிகளின் குவியல் கிடைக்கும்.

மேற்கூறியபடி வெள்ளி இருந்தால் மிருதங்கம் முதலிய வாத்தியங்கள், சங்கீத கோஷ்டி இவற்றோடு கூடிய பல்லக்கு கிடைக்கும். வியாழன் மேற்கூறியவாறு இருப்பின் தங்கப்பல்லக்கு கட்டாயம் கிடைக்கும்.

1, 9, 10 பாவங்களின் அதிபதிகளுள் ஏதாவது ஒரு கிரகம் உச்ச ஸ்தானத்தில் தங்கியிருந்து, அதற்கு சுபக்கிரகமானது சேர்க்கை ஏற்படின் எல்லாவிதமான பெருமையும், ஏராளமான ஐச்வர்யமும், சக்ரவர்த்தி பதவி முதலிய உத்தம பலன் உண்டாகும். இப்படி அந்தந்த தசாகாலத்தில் எது எது உண்டாகிறதோ அவைகளை எல்லாம் சிந்தித்து அறியவும்.

பூர்வபாராசர்யத்தில் பாவநிரூபணம் என்னும்
ஆறாவது அத்தியாயம் முற்றும்.

ஏழாவது அத்தியாயம்

பதினெட்டு விதமான தசைகள்

சில ஞானிகளால் 18 விதமான குணங்களால் நக்ஷத்திரங்களின் தசைகள் 18 விதமாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. பிரிவுகளுக்குத் தக்கவாறு விசித்திரமான பலன்களை அளிக்கின்றன.

(1) உச்ச இராசியில் பரம உச்ச பாகம், (2) உச்ச இராசியில் பரம உச்ச பாகத்தினை விட்டுவிட்டு மீதியான பாகம், (3) உச்ச இராசியிலிருந்து பின்ராசியும், அடுத்த இராசியும், (4) மூலத்திரிகோண இராசி, (5) சுய இராசி, (6) தன்னுடைய அதிமித்ர இராசி, (7) தன்னுடைய தற்கால மித்திரன் அல்லது இயற்கை மித்திரன் இராசி, (8) ஸம

கிரகத்தின் இராசி, (9) தற்கால சத்ரு அல்லது இயற்கை சத்ரு இராசி, (10) அதிசத்ரு இராசி, (11) நீச இராசியிலிருந்து பின் இராசியும் அடுத்த இராசியும், (12) நீச இராசியில் பரம நீச பாகத்தை விட்டுவிட்டு மீதியான பாகம், (13) பரம நீச பாகம் இவற்றில் தங்குதல், (14) நீச இராசி அல்லது சத்ரு இராசியில் ஷட்வர்க்கம் வருதல், (15) பலமுள்ள கிரகம் சுப ஷட்வர்க்கத்தில் தங்குதல், (16) 1, 4, 5, 7, 10 பாவங்களில் தங்குதல், (17) யுத்தத்தில் தோல்வி அடைதல், (18) ஸம்பூர்ணா ஸ்தானம் இப்படி 18 விதமான நற்குண துர்குணங்களுள் ஒவ்வொரு கிரகமும் தன்னுடைய தசா காலத்தில் குணத்திற்குத் தகுந்தபடி தசா காலத்தில் குணத்திற்குத் தகுந்தபடி பலன் தருவார்கள்.

ஸம்பூர்ண தசை

பரம உச்ச பாகத்தில் இருக்கிற கிரகம் அல்லது வேறு இடத்தில் இருக்கிற பூர்ண பலமுள்ள கிரகம் இவ்விருவரின் தசை ஸம்பூர்ண தசை எனப்படும். இந்த தசை இராஜயோகத்திற்கும், ஸுகத்திற்கும் காரணமானது. இலக்குமிகடாக்ஷத்தின் அறிகுறிகளான எல்லா வாகனாதி பொருட்களும் நிரந்தரமாக வசிப்பதற்கேற்ற வீட்டை அளிக்கும்.

பூர்ண தசை

உச்ச இராசியில் (பரமோச்ச பாகத்தைவிட்டு மீதியான பாகத்தில்) இருக்கிற கிரகம் அவ்வாறே பலமுள்ள கிரகம் இவ்விருவரின் தசை பூர்ணதசை எனப்படும். இது அதிக ஸம்பத்தைக் கொடுக்கும். ஆனால் மனோரோகங்களையும், தேகரோகங்களையும் கொடுக்கும்.

ரிக்த தசை

நீச இராசியில் அதிநீச பாகத்திலுள்ள கிரகம் அல்லது வேறு இடத்தில் மிகவும் துர்பலமாக உள்ள கிரகம்

இவ்விருவரின் தசை ரிக்த தசை எனப்படும். இது அரிஷ்ட பலத்தை அளிக்கும். பல ரோகங்கள் பலவிதமான அனர்த்தங்கள் அல்லது மரணம் இவைகளை அளிக்கும்.

அவரோகிணீ தசை

உச்ச இராசியிலுள்ள பரமோச்ச பாகத்திலிருந்து புறப்பட்டு அதிநீச இராசி அதிநீச பாகத்தை அடையாது. ஆனால் நடுவிலிருக்கிற கிரகத்தின் தசை அவரோஹிணீ தசை எனப்படும்.

மத்திய தசை

மேற்கூறிய அவரோஹிணீ தசையிலுள்ள கிரகத்திற்கு மித்ர இராசி, மித்ர நவாம்சம், அல்லது, ஏதாவது ஒரு இராசியில் உச்ச நவாம்சம் இவைகளில் உச்ச நவாம்சம் இவைகளில் ஏதாவது ஒன்றில் இருக்கை ஏற்பட்டால் மத்திய தசை எனப்படும். இது மத்யமமான பலனை அளிக்கும்.

ஆரோஹிணீ தசையும், அதம தசையும்

நீச இராசியிலுள்ள பரமநீச பாகத்திலிருந்து புறப்பட்டு உச்ச இராசியிலுள்ள பரம உச்ச பாகத்தை அடையாமல் நடுவில் இருக்கிற கிரகத்தின் தசை ஆரோஹிணீ தசை எனப்படும். இந்த ஆரோஹிணீ தசையிலுள்ள கிரகத்திற்கு ஏதாவது ஒரு இராசியில் நீச நவாம்சம் சத்ரு இராசி அல்லது சத்ரு நவாம்சம் இவைகளில் ஏதாவது ஒன்றில் இருக்கை ஏற்படின் இது அதம தசை எனப்படும். இது பயம் (கிலேசம்), வியாதி, துக்கம் இவைகளை வளர்க்கும்.

மேற்கூறிய (1) ஸம்பூர்ண தசை, (2) பூர்ண தசை, (3) ரிக்த தசை, (4) அவரோஹிணீ தசை, (5) மத்திய தசை, (6) ஆரோஹிணீ தசை, (7) அதம தசை என்ற ஏழு தசைகள் தங்களுடைய பெயருக்கேற்ற பலனை அளிக்கின்றன.

பாக்யாரம்ப காலம்

(1) பாக்யாதிபதி, வியாழன் இவ்விருவரின் சேர்க்கை, (2) பாவ இராசிகளுக்குப் பாக்யாதிபதி அல்லது வியாழனுடன் சேர்க்கை, (3) பாக்யாதிபதி அல்லது வியாழன் இவ்விருவரின் பார்வை, (4) 1, 4, 5, 7, 9, 10, 11-வது ஸ்தானங்களில் பாக்யாதிபதி அல்லது வியாழன் இருத்தல் முதலிய குணங்கள் எந்த கிரகத்திற்கு இருக்கிறதோ அந்த கிரகம் பாக்ய காரகனாகாவிட்டாலும் அவனுடைய தசையில் பாக்யம் வர ஆரம்பிக்கும்.

பாக்ய தசை சக்தியில்லாதோருக்கும் சக்தி தானம்

ஜாதகத்தில் 9-வது ஸ்தானத்தின் அதிபதி அல்லது பாக்யயோக காரக கிரகம் இவ்விருவரும் பலன்தர ஆரம்பித்ததும், தன்னுடைய ஸம்பந்தமுள்ள பாக்கிய யோக காரகனல்லாத கிரகத்தையும் பலவீன கிரகத்தையும், பலன்தர இயலாத கிரகத்தையும் தூண்டி அந்த கிரகங்களின் மூலமாகவும் தங்களது ஸம்பந்தத்திற்குத் தகுந்தபடி பாகுபாடாக பாக்யத்தை அளிக்க வைக்கிறார்கள். தங்களிடமிருந்து 1, 4, 7, 10-வது ஸ்தானங்களிலுள்ள கிரகங்கள் மூலமாக முழு பலனையும் 2, 5, 11-வது ஸ்தானங்களிலுள்ள கிரகங்கள் மூலமாக பாதி பலனையும்; 3, 9-வது ஸ்தானங்களிலுள்ள கிரகங்கள் மூலமாக கால் பலனையும் அளிக்க வைக்கிறார்கள். இப்படி பாக்கியத்தை அளிக்கத் தகுதி இல்லாத கிரகங்கள் மூலமாக பலாத்காரமாக பாக்யம் அளிக்கும்படியாகச் செய்கிற தன்மை "பிரஸஹ்யகாரம்" எனப்படும்.

குறிப்பு : இந்த பிரஸஹ்யகாரமானது பாக்யாதிபதி அல்லது பாக்கியகாரக கிரகத்தின் தசையில் மீதியான கிரகங்களின் அந்தர்தசையில் உண்டாகும்.

கிரகங்களின் தசை முதலியவற்றில் பலதான காலம்

ஒவ்வொரு கிரகமும் ஜன்ம காலத்தில் சீர்ஷோதய ராசியில் தங்கி இருந்தால் தங்களுடைய தசையின் தொடக்கத்திலும், உபயோதய இராசியில் தங்கியிருந்தால் மத்தியிலும், பிருஷ்டோதய இராசியில் தங்கியிருந்தால் தங்களுடைய தசையின் முடிவிலும் தங்களது முழு பலனையும் தருவார்கள். அந்தர்தசா பலன், கோசார பலன் முதலியவைகளிலும் இப்படியே அறியவும்.

அந்தர் தசா பலன்

ஜன்ம காலத்தில் தசாதிபதி கிரகம் தன்னுடைய உச்சம், மூலத்திரிகோணம், சுயஇராசி, இயற்கை மித்ர இராசி, தற்கால மித்ர இராசி முதலிய இஷ்ட ஸ்தானத்தில் தங்கி இருந்தவன் மூலமாகவும், ஸ்வபாவ மித்ரன், தற்கால மித்ரன் இவ்விருவரின் மூலமாகவும் அவரவர்களின் அந்தர்தசா காலத்தில் சுபபலன் அளிப்பான். இதற்கு நேர்மாறாக இருந்தால் கஷ்டத்தை அளிப்பான்.

புக்தி விபாகமும் அதன் பலனும்

தசாதிபதி கிரகம் எந்த பாவத்தில் தங்கி இருக்கிறானோ அந்த இராசியிலிருந்து தொடர்ந்து 12 இராசிகள் வரை 13 அந்தர் தசைகள் ஏற்படுகின்றன. தசா காலத்தை 12-ல் வகுத்து வந்த வருடம், மாதம், தினம், நாழிகைகள் ஒவ்வொரு அந்தர்தசை (தசாபுத்தி)யின் காலம் என்று அறியவும். தசாதிபதி கிரகத்தின் சுய இராசி, உச்ச இராசி, மூலத்திரிகோண இராசி, அதிமித்திர இராசி, மித்திர இராசிகளில் வருகிற அந்தர்தசை சுபம் என்றும் மீதியான அந்தர்தசை அசுபம் என்றும் அறியவும். சுபமான அந்தர்தசையில் ராஜ்யம் முதலிய ஸம்பத்தின் லாபமும், அசுப தசையில் நாசமும் உண்டாகும்.

அனர்த்தமான தசை

(1) லக்னத்திலிருந்து 6, 8, 12-வது பாவங்களின் தசை, (2) அந்த பாவங்களில் தங்கியுள்ள கிரகங்களின் தசை, (3) சத்ரு இராசியில் தங்கியுள்ள கிரகத்தின் தசை. (4) சத்ரு இராசியில் தங்கியுள்ள கிரகம் எந்த பாவத்தின் தசை, (5) பரமநீச பாகத்தில் அல்லது நீச இராசியில் தங்கியுள்ள கிரகத்தின் தசை, (6) பரம நீச பாகத்தில் அல்லது நீச இராசியில் தங்கியுள்ள கிரகம் எந்த பாவத்திற்கு அதிபதியாக இருக்கிறானோ அந்த பாவத்தின் தசை, (7) கொடூரமான கிரகத்தின் தசை, (8) கொடூரமான கிரகம் எந்த பாவத்திற்கு அதிபதியாக இருக்கிறானோ அந்த பாவத்தின் தசை இப்படி எட்டுவிதமான தசைகளில் அனர்த்தமும், கலகமும், ரோகமும், மரண பயமும் உண்டாகும்.

குறிப்பு : இச்செய்யுளில் "நீசஸ்த", "நீசயுதஸ்ய" என்று ஒரே அர்த்தமுள்ள இரு பதங்கள் உள்ளன. அவைகளில் ஒன்றுக்கு பரம நீசஸ்தன் என்றும், மற்றொன்றுக்கு நீச இராசியில் தங்கினவன் என்றும் அர்த்தம் சொல்லப்பட்டது. மேற்கூறிய கொடூர தசையில் லக்னத்திலிருந்து 6, 8, 12 பாவங்களைக் காட்டிலும் சத்ரு இராசி கொடூரமானது. அதைக்காட்டிலும் கொடூர கிரகம் கொடியது. அதைக்காட்டிலும் நீச இராசி கொடியது. அதைக்காட்டிலும் பரம நீச பாகை கொடியது என்று அறியவும்.

அஷ்டவர்க்கத்தினால் சுபாசுப தசைகளின் ஞானம்

(1) ஸர்வாஷ்டக வர்க்கத்தில் எந்த இராசியில் பிந்துக்கள் 28-க்கு அதிகமாக உள்ளனவோ அந்த பாவத்தின் தசை அல்லது அந்த பாவத்தில் தங்கியுள்ள கிரகத்தின் தசை சுபதசை ஆகும். (2) இதற்கு நேர்மாறாக இருப்பின் அசுப தசை என்று அறியவும். பாவத்தின் சுப தசையில் பாவப் பொருட்களின் வளர்ச்சி உண்டாகும். அப்படியே கிரகத்தின் சுப தசையில் கிரகம் தங்கியுள்ள பாவத்திற்குட்பட்ட பொருட்களின்

வளர்ச்சியும் ஏற்படும். இதற்கு நேர்மாறாக இருந்தால் பாவத்திற்குரிய பொருட்களின் நாசம் உண்டாகும். இது "ஸர்வாஷ்டவர்க்ககே" என்று திருத்தின பாடத்தை ஆதாரமாகக் கொண்டு செய்த வியாக்யானமாகும். இவ்வியாக்யானம் எல்லா ஜாதக கிரந்தங்களுக்கும் சம்மதமானது.

ஸ்வீயாஷ்டவர்க்ககே என்ற அரிச்சுவடியிலுள்ள பாடத்தை வைத்துக்கொண்டும் வியாக்யானம் செய்யப்படுகிறது.

குறிப்பு : ஒவ்வொரு கிரகத்திற்கும் தனித்தனியாக அஷ்டவர்க்க பிந்துக்களை ஒவ்வொரு இராசியிலும் குறிக்கவும். *(1)* தன்னுடைய அஷ்டவர்க்கத்தில் தான் தங்கியுள்ள இராசியில் பிந்துக்கள் 5 அல்லது அதிலிருந்து அதிகமாக வருகின்றனவோ அந்த கிரகத்தின் தசை அல்லது அந்த கிரகம் எந்த பாவத்தின் அதிபதியாக இருக்கிறானோ அந்த பாவத்தின் தசை சுப தசையாகும். *(2)* இதற்கு நேர்மாறாக இருந்தால் அசுப தசையாகும். மீதியான வியாக்யானம் முன்னதைப்போல் கவனிக்கவும்.

ஒரு இராசிக்கு ஒரு கட்டமாக 12 கட்டங்களைக் கொண்ட ஏழு இராசிக் கட்டங்களை எழுதவும். முதல் இராசி கட்டத்தின் மத்தியில் அல்லது தலையில் சூர்யாஷ்டகவர்க்கம் என்று எழுதவும். மீதியான ஆறு இராசி கட்டங்களிலும் வரிசையாக சந்திராஷ்டகவர்க்கம் முதலிய ஆறு வார்த்தைகளை எழுதவும். ஏழு இராசிக் கட்டங்களிலும் ஜன்ம கால லக்னத்தையும், ஜன்ம கால கிரகங்களையும் குறிக்கவும். ஏழு கிரகங்களுக்குரிய அஷ்டவர்க்க பிந்துக்கள் கீழே குறிப்பிட்டுள்ளன. ஒவ்வொரு இராசிக் கட்டத்திலும் ஏழு கிரகங்கள் தங்கியுள்ள இராசிகளிலிருந்தும் லக்ன இராசியிலிருந்தும் கீழே குறிப்பிட்டுள்ளபடி பிந்துக்களைக் குறிக்கவும். பிறகு ஏழு இராசி கட்டங்களில் ஒவ்வொரு இராசியிலும் குறிப்பிட்ட பிந்துக்களைத் தனித்தனியே கூட்டவும். இது கிரகங்களின் தனித்தனியே உள்ள

அஷ்டவர்க்கமாகும். ஏழு இராசிக் கட்டங்களிலும் ஒவ்வொரு இராசியில் வந்திருக்கின்ற பிந்துக்களின் மொத்தத்தொகை ஸர்வாஷ்டகவர்க்கமாகும். ஸர்வாஷ்டகவர்க்கத்தில் ஒரு இராசியில் முழு பிந்துக்களின் தொகை 56-ம் பாதித்தொகை 28-ம் ஆகும். பிந்துக்கள் பாதித் தொகைக்கு அதிகமாக இருந்தால் சுபம். குறைந்திருந்தால் அசுபம். சூன்யமாக இருந்தால் பூர்ண அசுபம். 56 இருந்தால் பூர்ணமான சுபம் என அறியவும். 28 முதல் 56 வரை கிரமமாக சுபம் வளரும் என்றும், பூஜ்யத்திலிருந்து 28 வரை அசுபம் குறையும் என்றும் அறியவும். 28 இருந்தால் சுபமும் இல்லை; அசுபமும் இல்லை. சமம் என்று அறியவும்.

தனித்தனியான கிரகங்களின் அஷ்டவர்க்கத்தில் ஒரு இராசியில் பிந்துக்களின் முழுத்தொகை 8 எனவும், பாதித்தொகை 4 என்றும், பாதித்தொகையாயிருப்பின் சமம் எனவும், 5 முதல் 8 வரை சுபம் வளர்ந்துகொண்டே எட்டில் பூர்ணமாகும் என்றும், பூஜ்யம் முதல் நான்கு வரை அசுபம் குறைந்துகொண்டே வரும் என்றும், சூன்யமாக இருந்தால் அசுபம் பூர்ணமாக இருக்கும் என்றும் அறியவும்.

1. ஞாயிறின் அஷ்டவர்க்கம்

ஞாயிறு, செவ்வாய், சனி இம்மூன்று கிரகங்கள் தங்கின இராசியிலிருந்து 1, 2, 4, 7, 8, 9, 10, 11; மதியினிடமிருந்து 3, 6, 10, 11; புதனிடமிருந்து 3, 5, 6, 9, 10, 11, 12; வியாழனிடமிருந்து 5, 6, 9, 11; வெள்ளியினிடமிருந்து 6, 7, 12; லக்னத்திலிருந்து 3, 4, 6, 10, 11, 12 இராசிகளில் பிந்துக்களைக் குறிக்கவும்.

2. மதியின் அஷ்டவர்க்கம்

ஞாயிறினிடமிருந்து 3, 6, 7, 8, 10, 11; மதியினிடமிருந்து 1, 3, 6, 7, 10, 11; செவ்வாயினிடமிருந்து 2, 3, 5, 6, 9, 10, 11; புதனிடமிருந்து 1, 3, 4, 5, 7, 8, 10, 11; வியாழனிடமிருந்து 1, 2,

4, 7, 8, 10, 11; வெள்ளியினிடமிருந்து 3, 4, 5, 7, 9, 10, 11; சனியினிடமிருந்து 3, 6, 9, 11; லக்னத்திலிருந்து 3, 6, 10, 11 இராசிகளில் பிந்துக்களைக் குறிக்கவும்.

3. செவ்வாயின் அஷ்டவர்க்கம்

ஞாயிறினிடமிருந்து 3, 5, 6, 10, 11; மதியினியிடமிருந்து 3, 4, 6; செவ்வாயினிடமிருந்து 1, 2, 4, 7, 8, 10, 11; புதனிடமிருந்து 3, 5, 6, 11; வியாழனிடமிருந்து 6, 10, 11, 12; வெள்ளியினிட மிருந்து 6, 8, 11, 12; சனியினிடமிருந்து 1, 4, 7, 8, 9, 10, 11; லக்னத்திலிருந்து 1, 3, 6, 10, 11 இராசிகளில் பிந்துக்களைக் குறிக்கவும்.

4. புதனின் அஷ்டவர்க்கம்

ஞாயிறினிடமிருந்து 5, 6, 9, 11, 12; மதியினிடமிருந்து 2, 4, 6, 8, 10, 11; செவ்வாயினிடமிருந்தும், சனியினிடமிருந்தும் 1, 2, 4, 7, 8, 9, 10, 11; புதனிடமிருந்து 1, 3, 5, 6, 9, 10, 11, 12; வியாழனிடமிருந்து 6, 8, 11, 12; வெள்ளியினிடமிருந்து 1, 2, 3, 4, 5, 8, 9, 11; லக்னத்திலிருந்து 1, 2, 4, 6, 8, 10, 11 இராசிகளில் பிந்துக்களைக் குறிக்கவும்.

5. வியாழனின் அஷ்டவர்க்கம்

ஞாயிறினிடமிருந்து 1, 2, 3, 4, 7, 8, 9, 10, 11; மதியினிட மிருந்து 2, 5, 7, 9; செவ்வாயினிடமிருந்து 1, 2, 4, 7, 8, 10,11; புதனிடமிருந்து 1, 2, 4, 5, 6, 9, 10, 11; வியாழனிடமிருந்து 1, 2, 3, 4, 7, 8, 10, 11; வெள்ளியினிடமிருந்து 2, 5, 6, 9, 10, 11; சனியினிடமிருந்து 3, 5, 6, 12; லக்னத்திலிருந்து 1, 2, 4, 5, 6, 7, 9, 10, 11 இராசிகளில் பிந்துக்களைக் குறிக்கவும்.

6. வெள்ளியின் அஷ்டவர்க்கம்

ஞாயிறினிடமிருந்து 8, 11, 12; மதியிடமிருந்து 1, 2, 3, 4, 5, 8, 9, 11, 12; செவ்வாயினிடமிருந்து 3, 4, 6, 9, 11, 12;

புதனிடமிருந்து 3, 5, 6, 9, 11; வியாழனிடமிருந்து 5, 8, 9, 10, 11; வெள்ளியினிடமிருந்து 1, 2, 3, 4, 5, 8, 9, 10, 11; சனியினிடமிருந்து 3, 4, 5, 8, 9, 10, 11; லக்னத்திலிருந்து 1, 2, 3, 4, 5, 8, 9, 11, 12 இராசிகளில் பிந்துக்களைக் குறிக்கவும்.

7. சனியின் அஷ்டவர்க்கம்

ஞாயிறினிடமிருந்து 1, 2, 4, 7, 8, 10, 11; மதியிடமிருந்து 3, 6, 11; செவ்வாயினிடமிருந்து 3, 5, 6, 10, 11, 12; புதனிடமிருந்து6, 8, 9, 10, 11, 12; வியாழனிடமிருந்து 5, 6, 11, 12; வெள்ளியினிடமிருந்து 6, 11, 12; சனியினிடமிருந்து 3, 5, 6, 11; லக்னத்திலிருந்து 1, 3, 4, 6, 10, 11 இராசிகளில் பிந்துக்களைக் குறிக்கவும்.

சுக்கிரன்	சூரியன் சனி	புதன்	செவ்வாய்
	சூர்யாஷ்டகவர்க்கம்		
மதி			
			ல/ வியாழன்

இந்த ஜாதகத்தில் சூர்யாஷ்டகவர்க்க பிந்துக்களை மேற்கூறியபடி ஏழு கிரகங்களிலிருந்தும் லக்னத்திலிருந்தும் தொடர்ந்து 12 இராசிகளில் குறிப்பிட்டால் கீழ்க்கண்டவாறு ஏற்படும்.

3	4	3	3
7	சூர்யாஷ்டகவர்க்கம்		6
5			2
4	4	4	3

இப்படி ஏற்பட்ட சூரியாஷ்டகவர்க்கத்தில் சூரியன் தங்கியிருக்கிற மேஷத்தில் 4 பிந்துக்கள் வந்திருப்பதினால் சூரிய தசை அல்லது சூரியனது ஆதிபத்தியமுள்ள 12-வது பாவத்தின் தசை சுபம் இல்லை; அசுபமும் இல்லை. சமமாக இருக்கும் என அறியவும்.

இப்படி எல்லா கிரகங்களின் அஷ்டகவர்க்கத்தினையும் தனித்தனியாகக் குறித்து ஒவ்வொரு இராசியில் வந்த பிந்துக்களைக் கூட்டி சர்வாஷ்டகவர்க்க பிந்துக்களை எண்ணி அதன் பலனை மேற்கூறியவாறு அறியவும்.

அந்தந்த பாவங்களுக்கு ஸம்பந்தமான பொருட்களின் சுபாசுபத்தன்மை

ஒவ்வொரு பாவம் அல்லது அந்தந்த பாவத்தின் அதிபதி கிரகம் தங்கின இராசியை லக்னமாக நினைக்கவேண்டும். செயற்கையான அந்த லக்னத்திலிருந்து தொடர்ந்து 12 இராசிகளை வரிசையாக 12 பாவங்களாகக் கற்பிக்கவும்.

கற்பிக்கப்பட்ட அந்த 12 பாவங்களிலிருந்து கற்பிக்கப்பட்ட லக்ன பாவத்தின் சரீரம், பணம், சகோதரன் முதலிய 2 பாவப் பொருட்களை கவனிக்கவும். செயற்கை பாவங்களின் தசை அல்லது அந்த பாவாதிபதிகளின் தசை சுபமாக இருந்தால் செயற்கை பாவப் பொருட்களின் வளர்ச்சி என்றும், அசுபமாக இருந்தால் நாசம் என்றும் அறியவும்.

உதாரணம் :- மேற்கூறிய ஜாதகத்தில் லக்னம் கன்னியாக இருந்து, அதற்கு ஐந்தாவது புத்திரபாவம் மகர இராசியாக உள்ளது. அதையே லக்னமாக வைத்துக்கொண்டு, மகரத்திலிருந்து தொடர்ந்து 12 இராசிகளைப் புத்திரனுக்குப் பன்னிரண்டு பாவமாக நினைக்கவும். புத்திரனின் சரீரத்தை மகரத்தைக் கொண்டும் பணத்தைக் கும்பத்தைக் கொண்டும், சுகத்தை மேஷத்தைக் கொண்டும் இப்படியே புத்திரனுக்கு ஸம்பந்தப்பட்ட எல்லா பொருட்களையும் கவனிக்கவும்.

பலபேத ஞானத்திற்கு உபாயம்

தங்கம் முதல் மண் வரையிலான எல்லா ஜடப் பொருள்களும் தாது என்றும், கொடி-செடி முதல் மரம் வரையிலுள்ள எல்லா தாவர அசேதனங்களும் மூலம் என்றும் மீதியானமனிதன் முதலிய எல்லா வகைகளும் ஜீவன் என்றும் அழைக்கப்படுகின்றன. தாது, மூலம், ஜீவன் இவைகட்குரிய இராசிகளும் கிரகங்களும் **ஞானப்பிரதீபிகை** முதலிய எல்லா கிரந்தங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

தசா பாவத்திற்கு அல்லது தசாதிபதி கிரகத்திற்கு தாது மூல ஜீவராசிகளில் அல்லது தாது மூல ஜீவகிரகங்களில் எதனுடன் சேர்க்கை அதிகமாக இருக்குமோ ஜாதகனுக்கு அந்த தாது முதலியவைகளின் விருத்தி சுபமான தசையாக இருந்தால் ஏற்படும். (1) சுபகிரகத்தின் இராசி அல்லது சுபகிரகத்தின் சேர்க்கை அல்லது தசாபாவாதிபதிக்கும், தசாதிபதி கிரகத்திற்கும் சுபஸ்தானத்தில் இருத்தல் இவைகளால் பாவ தசைக்கும கிரக தசைக்கும் சுபத்தன்மை உண்டாகும். (2) அசுப கிரகத்தின் இராசி அல்லது அசுப

கிரகத்தின் சேர்க்கை அல்லது தசாபாவாதிபதிக்கும், தசாதிபதி கிரகத்திற்கும் நீச ஸ்தானம் முதலிய அசுப ஸ்தானத்தில் இருத்தல் முதலியவற்றால் பாவ தசைக்கும், கிரக தசைக்கும் அசுபத்தன்மை ஏற்படும். மேற்கூறியவாறு பல பேதங்களை அறியவேண்டும்.

அந்தர் தசையின் விபாகம்

மேற்கூறிய தசா விபாகத்தைப் போல் அந்தர்தசா விபாகத்தையும் செய்யவும். பாவத்தின் அந்தர்தசை அல்லது கிரகம் தங்கின இராசியின் அந்தராந்தர் தசை, முதல் அந்தராந்தர் தசையாகும். அடுத்த ஒரு இராசிக்கு ஒரு அந்தராந்தர் தசையாக மீதியான 11 இராசிகளுக்கு வரிசையாக 11 அந்தராந்தர் தசைகள் என்று அறியவும். இப்படி அந்தராந்தர் தசைகளை அறிந்து அவைகளுக்கு மேற்கூறியபடி பலன்களை அறிந்துகொள்ளவும்.

அந்தராந்தர் தசையின் விபாகம்

மேற்கூறியவாறு பிரிக்கப்பட்ட அந்தராந்தர் தசையையும் 12 ஸமபாகமாகப் பிரிக்கவும். முதற்பாகம் அந்தராந்தர் தசாபாவத்தின் சூக்ஷ்ம தசையாகும். அடுத்து ஒரு இராசிக்கு ஒரு சூக்ஷ்ம தசையாக 11 இராசிகளுக்கு 11 சூக்ஷ்ம தசைகள் வரிசையாக ஏற்படுகின்றன. இப்படி தசாகாலத்தை குறுக்கிக்கொண்டே வந்து தினபலன், நாழிகை பலன்களை அறியவும்.

மேற்கூறிய தசையின் பிரமாணம்

வாயு தேவதையினால் எழுதப்பட்ட ஹோரா கிரந்தத்தில் மேற்கூறியபடி தசாபாவராசியின் அந்தர் தசையில் இருந்து தொடர்ந்தும், தசாதிபதி கிரகம் தங்கின இராசியில் இருந்து தொடர்ந்தும் 12 இராசிகளின் அந்தர் தசைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதனால் இந்த தசாமுறை பிரசித்த கிரந்தங்களில் காணாவிட்டாலும் அவசியமாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டியது.

பாவ பலன்

2-வது அத்தியாயத்தில் கிரகங்களுக்கு காரகத்துவம் சொல்லப்பட்டிருக்கிறது. காரகக்கிரகமும், பாவாதிபதியும் லக்னத்திலிருந்து 1, 4, 5, 7, 9, 10 ஸ்தானங்களில் ஏதாவது ஒரு ஸ்தானத்தில் தங்கினால் பாவப் பொருட்களின் லாபம் என்றும்; 6, 8, 12-வது ஸ்தானத்தில் தங்கியிருந்தால் நாசம் என்றும் அறியவும். 2, 3, 11-வது ஸ்தானத்தில் தங்கியிருந்தால் எல்லா பாவங்களும் தாய், தந்தை, குழந்தைகளை அக்கறையோடு கவனிப்பதுபோல் எல்லா பாவப் பொருட்களையும் அள்ளி அளிப்பார்கள்.

பாவத்தின் அதிபதியாகிய கிரகம் (1) பாவத்தைப் பார்த்தாலும், (2) பாவத்தில் தங்கினாலும், (3) லக்னத்தில் தங்கினாலும், (4) பலத்தோடு கூடியிருந்தாலும், (5) தன்னுடைய உச்சஇராசியில்இருந்தாலும் பாவப் பொருட்களுக்கு அதிக புஷ்டி உண்டாகும்.

எந்த பாவத்தின் அதிபதியாகிய கிரகம் தன்னுடைய (1) சத்ரு இராசியில் அல்லது (2) நீச இராசியில் தங்கி இருக்கிறானோ, (3) அஸ்தமனம் அடைந்திருக்கிறானோ, (4) தன்னுடைய பாவத்தைப் பார்க்கவில்லையோ அந்த பாவப் பொருட்களின்பிராப்தியே ஏற்படாது. அல்லது அந்த பாவப் பொருட்களைச் சம்பாதிக்கவேண்டும் என்ற ஆர்வமே உண்டாகாது. அப்படி சம்பாதித்தாலும் அந்தப் பொருட்களில் ஜாதகனுக்கும், ஜாதகனிடம் அந்த (புத்திரன் முதலிய) பாவப் பொருட்களுக்கும் துவேஷம் ஏற்படும்.

பாவாதிபதி கிரகம் தங்கின இராசியின் அதிபதி கிரகம் லக்னத்திலிருந்து 6, 8, 12-வது ஸ்தானத்தில் தங்கியிருந்தால் பாவப் பொருட்களின் லாபம் ஏற்பட்டு நாசம் உண்டாகும். பாவாதிபதி லக்னத்திலிருந்து 6, 8, 12-வது ஸ்தானத்தில் தங்கினால் பாவப் பொருட்களின் லாபமே ஏற்படாது.

லக்னாதிபதி கிரகம் பரம உச்ச பாகத்தில் தங்கியிருந்து லக்னாதிபதி கிரகத்திற்கு சுபக்கிரகத்தின் பார்வையும், லக்னாதிபதிக்கு சுபக்கிரகத்தின் சேர்க்கையும், பார்வையும் இருப்பின் ஜாதகனுக்கு நூறு வருடம் ஆயுள் என்று ஞானிகள் சொல்வார்கள்.

லக்னத்திலிருந்து 2, 9, 10, 11 ஆகிய நான்கு பாவங்களுக்கு முழு பலமிருந்தால் குபேரனைப்போல் எப்பொழுதும் பணம் நிரம்பியவனாக இருப்பான்.

லக்னத்தில், லக்னத்தின் அதிபதியும், 4-வது பாவத்தின் அதிபதியும் தங்கியிருப்பின் குதிரை வாகனம் உண்டாகும். மேற்காட்டிய யோகத்தில் லக்னத்தில் வெள்ளி சேர்ந்தால் பல்லக்கு வாகனமும், குரு சேர்ந்தால் யானை வாகனமும் ஏற்படும்.

வெள்ளியும், 4-வது பாவத்தின் அதிபதியும்

(1) வெள்ளி 1, 2, 3, 4, 5, 7, 9, 10, 11-வது பாவங்களில் தங்கினாலும், (2) வியாழன், மதி லக்னாதிபதியுடன் சேர்ந்தாலும், (3) வெள்ளியின் இராசியில் 4-வது பாவத்தின் அதிபதியும்; 4-வது பாவத்தில் வெள்ளியும் மாறி இருந்தாலும், (4) வெள்ளிக்கு 4-வது பாவத்தின் அதிபன் அல்லது லக்னத்திற்கு 4-வது பாவத்தின் அதிபன் இவ்விருவரும் அன்யோன்யமாக 1, 4, 5, 7, 9, 10 பாவங்களில் தங்கினாலும், (5) அல்லது 1, 2, 3, 4, 5, 7, 9, 10, 11 பாவங்களில் தங்கி தங்கள் இராசியை நோக்கினாலும் நீசவம்சத்தில் பிறந்த ஜாதகனும்கூட குதிரை, யானை, இரதம், பல்லக்கு முதலிய பல வாகனங்களை அடைவான்.

பூர்வபாராசர்யத்தில் உடுதசாபல நிரூபணம் என்னும்

ஏழாவது அத்தியாயம் முற்றும்.

எட்டாவது அத்தியாயம்

லக்னம் முதலான 12 பாவங்களின் பலன்கள்

கணேசரையும், ஸரஸ்வதி தேவியையும், பிரம்மாவையும், சிவனையும் வணங்கி 12 பாவங்களின் பலன்களைத் தெரிவிக்கின்ற அத்தியாயமானது எழுதப்படுகிறது.

குறிப்பு :- மேற்காட்டிய ஏழு அத்தியாயத்திற்குப் பிறகு இந்த கிரந்தத்தில் அத்யாய விபாகம் கிடையாது. இருப்பினும் விஷயங்களை ஆராய்ந்து தகுந்த முறையில் அத்யாய விபாகத்தை ஏற்படுத்தி இருக்கிறோம்.

லக்னத்தில் தங்கின ஞாயிறின் பலன்

ஜனன காலத்தில் லக்னத்தில் ஞாயிறு தங்கினால், ஜாதகன் சிறிது தலைமயிர், செயலில் சோம்பல், கோபம், பயங்கர உயரம் உள்ள மேனி, அகம்பாவம், ஈரமில்லாத கண், கர்கசமான மேனி, கொடூர சுபாவம், சகிப்புத்தன்மை இல்லாமை, தயை இல்லாமை இவற்றோடு கூடியவனாக இருப்பான். கடக லக்னத்தில் ஞாயிறு தங்கினால் பூத்த கண்ணும்; மேஷ லக்னத்தில் தங்கினால் திமிரரோகக் கண்ணும், அதிக பணமும்,சுதந்திர மனப்பான்மையும்; சிம்ம லக்னத்தில் தங்கினால் இரவில் பார்வையற்ற (மாலைக்கண்) கண்ணும், சுயவும்சத் தலைமையும்; துலா லக்னத்தில் தங்கினால் ஏழ்மையும், புத்ர நாசமும் ஏற்படும். மகர லக்னத்தில் தங்கினால் இதய பீடையும், மீன லக்னத்தில் தங்கினால் அதிகமான பெண் குழந்தைகளும், கன்யா லக்னத்தில் தங்கினால் மனைவியைக் கொலை செய்தலும், உபகாரத்திற்குப் பதிலாக அபகாரம் செய்தலும் ஏற்படும்.

லக்னத்தில் தங்கின மதியின் பலன்

ஜனன காலத்தில் மதி மேஷம், ரிஷபம், கடகம் இந்த மூன்று லக்னங்களில் தங்கினால் ஜாதகன் தாக்ஷிண்யம், ரூபம், பணம், சுகானுபவத்திற்கு வேண்டிய குணங்கள் இவைகளால் சிறந்தவனாவான். மீதியான 9 ராசிகளில் லக்னத்தில்

தங்கினால் பைத்தியம், நீசனும், செவிடனும், அங்கஹீனனும், ஊமையும் ஆவான். கிருஷ்ணபக்ஷத்தின் மதி இப்படியிருந்தால் மேற்கூறிய தோஷம் அதிகமாகும்.

குறிப்பு :- இந்த அத்யாயத்தில் அதிகமாக ஸாராவளி கிரந்தத்தில் இருக்கின்ற செய்யுட்களே இருக்கின்றன. லக்னத்திலுள்ள மதியின் பலனைச் சொல்லுகின்ற செய்யுட்களில் முன்பாதி மட்டுமே சுவடியில் இருக்கிறது. பின்பாதி இல்லை. லக்னத்திலுள்ள செவ்வாயின் பலன் சொல்கின்ற முழுச்செய்யுளும் சுவடியில் இல்லை. அவைகளை ஸாராவளி கிரந்தத்திலிருந்து எடுத்து இந்நூலில் கட்டத்தின் மத்தியில் கொடுத்திருக்கிறேன். இப்படியே ஆங்காங்கு கட்டத்தில் காணப்படுகின்ற பாடமானது சுவடியில் விட்டுப்போனதும், வேறு நூலில் இருந்து சேர்த்ததுமாகும் என்று அறியவும்.

லக்னத்தில் தங்கின செவ்வாயின் பலன்

ஜன்மகாலத்தில் செவ்வாய் லக்னத்தில் தங்கினால் ஜாதகன் கொடுமை, சாகஸ காரியங்களில் ஈடுபாடு, கர்வத்தினால் யாருக்கும் தலைகுனியாமல் இருத்தல், அற்ப ஆயுள், தன்மானம், சௌகரியம், அடிபட்ட மேனி, நல்ல திடமான மேனி, சபல ஸ்வபாவம் இவற்றோடு கூடியவன் ஆவான்.

லக்னத்தில் தங்கின புதனின் பலன்

ஜனன காலத்தில் புதன் லக்னத்தில் தங்கினால் ஜாதகன் ரோகாதி காரணங்களினால் க்ஷீணத்துவமடையாத மேனியும், புத்தி உள்ளவனும், எல்லா தேசங்களையும், 64 கலைகளையும், காவியங்களையும் கணக்குகளையும் அறிந்தவனும், நீதியோடு இனிமையாக சாதுர்யத்தோடு கூடிய வார்த்தைகளைப் பேசுபவனும், அதிக ஆயுள் உள்ளவனும் ஆவான்.

லக்னத்தில் தங்கின வியாழனின் பலன்

ஜன்ம காலத்தில் வியாழன் லக்னத்தில் தங்கினால் ஜாதகன் அழகான மேனி, பலம், பூர்ணமான ஆயுள், நல்ல

அறிவோடு விசாரம் செய்து காரியங்களைச் செய்யும் தன்மை, நல்ல அறிவு, தைரியம், நல்ல குணம் இவற்றோடு கூடியவனாவான்.

லக்னத்தில் தங்கின வெள்ளியின் பலன்

ஜன்ம காலத்தில் வெள்ளி லக்னத்தில் தங்கினால் ஜாதகன் அழகான கண், முகம், மேனி, சுகம், நீண்ட ஆயுள், பலம் இவைகளுள்ளவனும், பெண்களின் கண்களைக் கவர்ந்த அழகனும் ஆவான்.

லக்னத்தில் தங்கின சனியின் பலன்

ஜன்ம காலத்தில் சனி துலாம், மகரம், கும்பம் இம்மூன்றில் ஏதாவது ஒரு லக்னத்தில் தங்கினால் ஜாதகன் இராஜனுக்கு சமானமாகவும், ஏதாவது ஒரு தேசாதிபதி அல்லது ஊரின் அதிபதியும் ஆவான். மீதியான ஒன்பது இராசிகளில் ஏதாவது ஒரு லக்னத்தில் தங்கினால் சிறிய வயதிலேயே துக்கத்தினால் பீடையும், ஏழ்மையும், காம உபாதையும், இளைத்தவனாயும், சோம்பலை உடையவன் ஆவான்.

லக்னத்தில் தங்கின இராகுவின் பலன்

ஜன்ம காலத்தில் லக்னத்தில் ராகு தங்கினால் ஜாதகன் பலம், கவலையுடைமை, சூக்ஷ்ம புத்தி, எப்பொழுதும் நடக்கும் தன்மை, குறைந்த எண்ணிக்கையுள்ள குழந்தைகள், மிக நீண்ட மேனி, ரோக உபாதை, நீண்ட ஆயுள், இல்லாமை இவற்றோடு கூடியவன் ஆவான்.

லக்னத்தில் தங்கின கேதுவின் பலன்

ஜனன காலத்தில் கேது லக்னத்தில் தங்கியிருப்பின் ஜாதகன் பிரசித்தி இல்லாமை, அதிகமான கஷ்டம், பொருள்களில் ஆசை, சபல குணம், திக்கல் வார்த்தை, தீர்க்கமான விரோதம் இவற்றோடு கூடியவன் ஆவான் என்று சிலர் சொல்கிறார்கள்.

பைத்தியம், பெண்களின் நட்புடையவனாகவும், எல்லாவிதமான கஷ்டத்தை உடையவனும், பிறரால் எதிர்க்க

முடியாதவனாகவும், (பொறுக்கமுடியாதபடி கஷ்டத்தில் இருக்கை), நல்ல பேசும் சக்தி, அடிக்கடி ஆபத்துக்கள், சுகானுபவம் இவற்றோடு கூடியவனும் ஆவான் என்று ஞானிகள் சொல்கிறார்கள். என்னுடைய எண்ணமும் இதுவே.

பூர்ணமதியோடு புதன் லக்னத்தில் தங்கியதின் பலன்

ஜனன காலத்தில் முழுமதியுடன் புதன் லக்னத்தில் தங்கினால் ஜாதகன் ஞானியும், கடைசியில் பைத்தியமும் ஆவான்.

லக்னம் சுபாசுப கிரகங்களால் பார்க்கப்படுவதின் பலன்

லக்னம் பாப கிரகங்களினால் பார்க்கப்படின் கொடூரமான மேனியும், தந்தையின் சுற்றத்தாரிடம் விரோதமும், பணமும், பாவச்செயலும் உண்டாகும்.

லக்னம் சுபகிரகங்களினால் பார்க்கப்படின் ஜாதகன் தன் வம்சத்தில் முன்னோர்களைவிட சிறந்தவனும், மகானும், சுகத்தை அனுபவிப்பவனும், ஸ்திரத்தன்மை இல்லாத மனமும், இருப்பிடம் உள்ளவனும், எதிரிகளை முறியடிப்பவனும், ஊமையாயிருப்பவனும், பேச்சு விஷயத்தில் சபல ஸ்வபாவம் உள்ளவனும் ஆவான்.

லக்னம் அசுபகிரகத்தினாலும், சுபகிரகத்தினாலும் பார்க்கப்படின் ஜாதகன் குணம், அதிகப் பணம், மூர்க்கத்தன்மை, நிகரில்லாப் பராக்கிரமம், சிறுவயதினில் கிலேசம், நல்ல உற்சாகம் இவற்றோடு கூடியவனாவான்.

லக்னாதிபதியால் பார்க்கப்பட்ட லக்ன பலன்

ஒரு கிரகத்தினது ராசியே லக்னமாக இருந்து அதை அவன் பார்த்தால் சுகத்தையும், சந்தோஷத்தையும் அளிப்பான். சட்டதிட்டங்களில் சிறப்பு ஏற்பட்டு ராஜபிரீதி உண்டாகும். மேற்கூறிய கிரகம் பாப கிரகமாக இருந்தால் பாபத்தன்மையும், சுபகிரகமாக இருந்தால் சுபத்தன்மையும் அளிப்பான்.

ஒரு கிரகத்தினாலும் பார்க்கப்படாத லக்னத்தின் பலன்

லக்னம் அல்லது லக்னாதிபதிக்கு நிறைய பலம் முதலிய குணமில்லாமல் லக்னத்தை ஒரு கிரகமும்

பார்க்கவிடில் முதல் அத்யாயத்தில் குறிப்பிட்டபடி அந்தந்த இராசிக்கு யோக்யமான பலன் மட்டும் உண்டாகும்.

மேஷம் முதலிய இராசிகள் லக்னமாய் இருப்பின் பலன்

மேஷ லக்னத்தில் பிறந்தவன் கொடியவனும், அகம்பாவமுள்ளவனும், பொறுக்கவே முடியாத தன்மை உள்ளவனும், கோபமுள்ளவனும், தன்னினத்தவர்களை கொல்கிறவனும், பராக்கிரமமுள்ளவனும், கொடியவர்களின் அன்பனும் ஆவான்.

ரிஷப லக்னத்தில் பிறந்தவன் குரு பக்தனும், இனிய வார்த்தைகளைச் சொல்கிறவனும், நற்குணங்களுடன் சகிப்புத்தன்மை என்ற பணத்தைக் காப்பாற்றுபவனும், பேராசை உடையவனும், சூரனும், எல்லா ஜனங்களின் அன்புக்குரியவனும் ஆவான்.

மிதுன லக்னத்தில் பிறந்தவன் ஞானியும், தன்னுடைய மனிதர்களிடம் அன்புடையவனும், யோகாப்யாஸம் உள்ளவனும், சுகத்தை அனுபவிப்பவனும், தானம் செய்பவனும், எடுத்துக்கொண்ட காரியத்தைத் தீர விசாரித்து நிதானமாகச் செய்பவனும் ஆவான்.

கடக லக்னத்தில் பிறந்தவன் தர்மிஷ்டனும், குரு ஜனங்கள் நல்ல மனிதர்கள் இவர்களிடம் அன்பை வைத்தவனும், அவர்கள் அன்புக்குரியவனும், ருசியான அன்னதானத்தையும், போஜனத்தையும் அளிக்கவல்ல பா[illegible]வான் ஆவான்.

சிம்ம லக்னத்தில் பிறந்தவன் சுகத்தை அனுபவிப்பவனும், தத்துவ விசாரம் செய்பவனும், சிறிய வயிறு, குறைந்த அளவுள்ள குழந்தைகள், யுத்தத்தில் பராக்கிரமம் இவைகளைப் படைத்தவனும் ஆவான்.

கன்யா லக்னத்தில் பிறந்தவன் பல சாஸ்திரங்களில் நுண்ணறிவு உள்ளவனும், ஸௌபாக்ய குணமுள்ளவனும், அழகனும், சிற்றின்பத்தில் பேராசை கொண்டவனுமாக இருப்பான்.

துலா லக்னத்தில் பிறந்தவன் நுண்ணறிவு உடையவனும், நற்பணிகள் மூலம் ஜீவிப்பவனும், ஞானியும், எல்லா வித்தைகளையும் கற்றவனும், பணக்காரனும், பலமில்லாதவனும் ஆகிறான்.

விருச்சிக லக்னத்தில் பிறந்தவன் சூரனும், சந்தோஷத்தோடு கூடிய மனமுள்ளவனும், பிறரால் அறிந்ததையும் அறியாததையும் அறிந்தவனும், நற்ஜனங்களிடத்தில் துவேஷமுள்ளவனும், கலகக்காரனும், நுண்ணறிவு உள்ளவனும் ஆகிறான்.

தனுர் லக்னத்தில் பிறந்தவன் நீதி, பணம், நுண்ணறிவு இவைகளைப் படைத்தவனும், தன் குலத்தலைவனும், மந்திரியும், ஞானியும், சேவகர்களைக் காப்பாற்றுகிறவனும் ஆவான்.

மகர லக்னத்தில் பிறந்தவன் கொலை முதலிய நீசச் செயல்களுக்காகப் பணத்தைச் செலவழிப்பவனும், உலோபியும், சோம்பேறியும், சூரனாக இருப்பினும் எப்பொழுதும் கோழையாக இருப்பவனும், தன்னுடைய காரியத்திற்காகவே எப்பொழுதும் முயற்சி செய்பவனும் ஆகிறான்.

கும்ப லக்னத்தில் பிறந்தவன் பிரபலனும், பிறரின் மனதை வசீகரிக்கும் தன்மை உடையவனும், எல்லோரின் அன்பைப் பெற்றவனும், பிறர் மனைவியிடம் ஆசை உடையவனும், கபடச் செயல் உடையவனும், அதிகமான சுகமுள்ளவனும் ஆவான்.

மீன லக்னத்தில் பிறந்தவன் அதிகமான ரத்னம், தங்கம் இவற்றோடு கூடியவனும், மேனியை திடமாக்குவதற்காகக் காயகல்பங்களைப் புசிக்கவேண்டும் என்ற ஆசை உடையவனும், ஒவ்வொரு காரியத்திலும் நல்ல திறமை உடையவனும், வெகுகாலம் யோசனை செய்து திட்டம் வகுத்து செயல்படுபவனும் ஆவான்.

மேஷம் முதலிய லக்னங்களுக்குச் செவ்வாய் முதலிய கிரகங்களின் பார்வை அல்லது சேர்க்கையின் பலன்

மேஷ லக்னத்திற்குச் செவ்வாயின் சேர்க்கை அல்லது பார்வை உண்டானால் ஜாதகன் ஏழையாவான்.

மேஷ லக்னம் வியாழனால் பார்க்கப்பட்டால் பணம் உழவுத்தொழில், அற்ப ஆயுள் இவற்றோடு கூடியவன் ஆவான்.

ரிஷப லக்னத்தில் தங்கின செவ்வாயை மதி பார்த்தால் எப்பொழுதும் அழகனாக இருப்பான்.

ரிஷப லக்னத்தில் வெள்ளியின் சேர்க்கை அல்லது பார்வை இருந்தால் வெகுசுகத்தை அனுபவிப்பான். இதில் சந்தேகமில்லை.

மிதுனம் லக்னமாக இருந்து அதில் செவ்வாய் இருந்தால் அதிகமான பெண்களை மணப்பான். குடும்ப வித்தையைவிட்டு பிற வித்தையைக் கற்கவேண்டும் என்று ஆசையுள்ளவன் ஆவான். புதனின் பார்வை அல்லது சேர்க்கை இருப்பின் நான்கு மறைகளில் கரைகண்ட வித்வான் ஆவான்.

கடகம் லக்னமாக இருந்து செவ்வாயும் இருப்பின் ஆயுளின் பிற்பகுதியில் விரும்பிய பெண் சுகத்தை அடைவான்.

குறிப்பு :- இந்நூலில் நடுவில் செய்யுளில்லாத சில வார்த்தைகள் வருகின்றன. அவை ஏதாவது வேறு நூல்களில் உள்ள சூத்திரங்களின் அனுவாதமாக இருக்கலாம். அல்லது இந்த கிரந்தக்காரரின் வார்த்தையாக இருக்கலாம். அதனால் அவைகளை அப்படியே வரைந்து வியாக்யானம் செய்திருக்கிறோம். அவைகளில் இவ்வார்த்தைகளும் ஒன்று என கவனிக்கவும். இப்படியே மேலும் காண்க.

சிம்மம் லக்னமாயிருப்பின் ஜாதகன் பணக்காரனும், சுகத்தை அனுபவிப்பவனும், சூரனும், எல்லோரையும் வெற்றிகொண்டவனும் ஆவான்.

(1) கன்யா லக்னத்தில் பிறந்தவன் பல மனைவிகளோடு கூடியவனும், பெண் குழந்தைகளுக்குத் தகப்பனும், அற்ப ஆயுள் உள்ளவனும் ஆகிறான். (2) கன்யா லக்னத்திற்குச் சுபக்கிரகப் பார்வை அல்லது சேர்க்கை உண்டானால் ஜாதகனுக்கு அதிகமான பணமும் தான்யமும் கிடைக்கும்.

துலா லக்னமாய் இருப்பின் ஜாதகன் சுகத்தை அனுபவிப்பவனும், சிற்றின்பத்தில் ஆசை உள்ளவனும், விற்றல், வாங்கல் இவற்றில் நிபுணனும் ஆவான்.

விருச்சிக லக்னமாய் இருப்பின் பண நாசமும், பிரஷ்டத் தன்மையும், கொடூர சுபாவமும், அற்ப புத்தியும், தேஜஸின் நாசமும் ஏற்படும்.

(1) தனுர் லக்னத்தில் முன்பாதியாக இருப்பின் ஜாதகன் சேனாதிபதியாகவும், பாபச் செயல்களில் ஈடுபட்டவனும்; (2) பின்பாதியாக இருப்பின் பணக்காரனும் ஆவான். தனுர் லக்னம் வியாழனால் பார்க்கப்பட்டால் அரசன் ஆவான்.

(1) மகர லக்னமாயிருப்பின் சுகத்தை அனுபவிப் பவனும், அற்ப அறிவுள்ளவனும் ஆவான். (2) மகர லக்னம் பாப கிரகங்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனது பக்க பலமெல்லாம் நசிக்கும். சுகானுபவமும் உண்டு. (3) சுப கிரகங்களால் பார்க்கப்படின் அதிகமான சுகானுபவம் உண்டு.

(1) கும்ப லக்னமாய் இருப்பின் பேராசை உடையவனும், அற்ப பணமுள்ளவனும், மாத்ஸர்யம் உள்ளவனும் ஆவான். (2) கும்ப லக்னம் சுபகிரகங்களால் பார்க்கப்பட்டால் அதிக சுகத்தை அனுபவிப்பான்.

(1) மீன லக்னமாய் இருப்பின் அதிகமான சுகானுபவமும், அதிகமான ஆயுளும் உண்டாகும். (2) மீன லக்னம் வியாழனால் பார்க்கப்பட்டால் ஜாதகன் இராஜன் ஆவான். பூமண்டல பாலனத்தினால் ஏற்படுகின்ற எல்லா தோஷங்களின் நாசமும் உண்டாகும்.

பூர்வபாராசர்யத்தில் பாவ நிரூபணம் என்னும்
எட்டாவது அத்தியாயம் முற்றும்.

ஒன்பதாவது அத்தியாயம்

உடல் முதலிய பாவங்களை அறியும் உபாயம்

(1) எந்தெந்த விஷயங்களை அறியும் எந்த பாவத்தினால் அறியவேண்டும் என்று ஜாதக நூல்களில் சொல்லப்பட்டு இருக்கின்றதோ, அந்த பாவத்தில் தங்கியுள்ள கிரகங்களின் சுபாசுபத்தன்மை, பலம் முதலியவைகளைக் கொண்டு அந்த விஷயங்களின் நலனையும், கெடுதலையும் அறியவும். (2) 1-வது அத்தியாயத்தில் கூறியுள்ளபடி இராசிகளின் தன்மையை அறிந்து அதன்படி லக்னம் முதலிய 12 பாவங்களின் நலனையும், கெடுதலையும் அறியவும். (3) லக்னம் முதலிய பாவங்களுக்கு அதிபதியான கிரகத்தின் மித்ர கிரகம் அல்லது சத்ரு கிரகம் இவைகளைக் கொண்டும் அவ்விஷயங்களின் நலனையும், கெடுதலையும் அறிவாளி சொல்ல வேண்டும். (4) அக்கிரகங்களின் மூலம் பாவத்தின் தன்மையை அறிவதுபோல் அவைகளின் கிரகங்களின் மூலம் மேற்கூறிய தன்மையை அறியலாம்.

குறிப்பு :- லக்னம் முதலிய 12 பாவங்களிலிருந்து உடல் முதலிய எல்லா பாவங்களின் நலன் அல்லது கெடுதல்களை அறியவேண்டும் என்று எல்லா ஜாதக நூல்களிலும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் எந்த பாவத்தினால் எப்பொருட்களை அறியவேண்டும் என்று இந்நூலில் சொல்லவில்லை. ஆனாலும் நலனையும், கெடுதலையும் அறியும்வழி மட்டும் குறிக்கோளாக இச்செய்யுளில் சொல்லப்படிருக்கிறது. கிரகங்களின் கிரணங்களைப்பற்றி பத்தாவது அத்தியாயத்தின் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது.

பாவங்களிலுள்ள கிரகங்கள் மூலம் சுபாசுபத் தன்மையை அறியும் விதம்

ஞாயிறு முதலிய பாவாதிபதிகள் உச்சம் முதலிய விரும்பத்தக்க ஸ்தானங்களில் தங்கி பலம் மிகுதியாக இருப்பின் அசுபமே இராது. நீசம் முதலிய விரும்பத்தகாத ஸ்தானங்களில் தங்கி இருந்து, பலம் குறைந்திருப்பின்

அசுபம் பூர்ணமாகும். உச்சத்திற்கும், நீசத்திற்கும் நடுவில் தங்கியிருப்பது மத்யம பலமாக இருந்தால் சுபபலனும், அசுபபலனும் கலந்து இருக்கும். பாவாதிபதியின் கதி மந்தமாக இருந்தால் பலன் தாமதமாகக் கிடைக்கும். சீக்கிரமாக இருந்தால் அதிசீக்கிரமாகக் கிடைக்கும்.

ஜன்ம காலத்தில் தொடர்ந்து தசையின் அதிபதியான கிரகத்தின் மித்ரனுக்கு 15 கிரணங்கள் இருப்பின், அப்போது அவனது தசாகாலத்தில் எல்லா கிரகங்கள் தங்கியுள்ள லக்னம் முதலிய 12 பாவங்களில் தங்கியுள்ள கிரகங்களைக்கொண்டு, சுபத்தைச் சொல்லவேண்டும்.

(1) பாவாதிபதியின் சத்ரு கிரகத்தின் சேர்க்கை அல்லது பார்வை உள்ள பாவம் அரிஷ்ட பலனை அளிக்கும், (2) மித்ர கிரகத்தின் சேர்க்கை அல்லது பார்வையுள்ள பாவம் சுபபலனை அளிக்கும். (3) இப்படியே சுபகிரகம் தங்கின பாவம் சுபபலனையும், (4) அசுபகிரகம் தங்கிய பாவம் அசுப பலனையும் அளிக்கும்.

(1) லக்னாதிபதி கிரகம் தனது ராசி, மித்ர கிரக ராசி, தனது உச்ச ராசி, சுபகிரகத்தின் ராசி அல்லது லக்னத்தில் தங்கினாலும், (2) 1, 2, 4, 5, 7, 9, 10, 11-வது ஸ்தானத்தில் அல்லது அந்த ஸ்தானங்களின் அதிபதிகளுடன் தங்கினாலும், (3) அவர்களால் பார்க்கப்பட்டாலும் உடல் நலன் உண்டாகும்.

(1) 1, 2, 4, 5, 7, 9, 11-வது ஸ்தானங்களின் அதிபதி கிரகங்கள் எல்லோரும் லக்னம் அல்லது 11-வது ஸ்தானத்தில் தங்கினாலும், (2) லக்னத்தைப் பார்த்தாலும் ரோகமற்ற அழகான மேனி உண்டாகும்.

லக்னத்தில் லக்னாதிபதி கிரகம் 1, 2, 4, 5, 7, 9, 10, 11-வது பாவாதிபதி கிரகங்களுடன் தங்கினாலும் மேற்கூறிய பலன் ஏற்படும்.

லக்னத்தைப்போல் எந்த பாவம் இருக்குமோ அந்த பாவமும் காப்பாற்றப்பட்டதாக இருக்கும்.

குறிப்பு :- லக்னத்தில் சுபர்கள் இருப்பதால் எவ்வாறு நல்ல பலன் உண்டாகுமோ அவ்வாறு ஏனைய பாவங்களிலும் அந்தந்த பாவாதிபதிகளுடன் கூடினால் நற்பலன்கள் ஏற்படும்.

(1) பாவாதிபதி கிரகங்கள் உச்சம், மூலதிரிகோண ராசி, தனது ராசி, மித்ர ராசி, வர்க்கோத்தம ராசிகளில் தங்கினாலும் அல்லது பாவாதிபதி கிரகத்திற்கு 1, 2, 4, 5, 7, 9, 10, 11-வது பாவாதிபதிகளின் சேர்க்கை அல்லது பார்வை இருந்தாலும் பாவாதிபதிகளுக்கு 1, 2, 4, 5, 7, 9, 10, 11-வது ஸ்தானங்களில் தங்குதல் அல்லது அந்த ஸ்தானாதிபதிகளின் பார்வை உண்டானாலும் ஜாதகனுக்கு சகல சௌக்யமும், ஐசுவர்யமும், பூர்ணாயுளும் உண்டாவதுடன் ஸகல லக்ஷணம் பொருந்திய மனைவியும் கிடைப்பாள்.

ஜாதகனுக்குப் பூரணதனப் பிராப்தி பிரகாரம் சொல்லப்படுகிறது

லக்னத்தின் அதிபதியும், லக்னத்திலிருந்து 2, 11-வது பாவங்களின் அதிபதிகளும் லக்னத்தில் அல்லது லக்னத்திலிருந்து 2, 4, 5, 7, 9, 10, 11-வது ஸ்தானங்களில் தங்கினால் பூர்ண தனப்பிராப்தி உண்டாகும்.

(1) லக்னம் மற்றும் 11-வது பாவத்தின் அதிபதிகள் இருவரும் தனித்தனியாக 2-வது பாவத்தில் தங்கினாலும், (2) 2, 11-வது பாவங்களின் அதிபதிகள் ஒன்றுகூடி 1, 2, 4, 5, 7, 9, 10, 11-வது பாவங்களில் தங்கினாலும் ஜாதகனுக்கு நிறைய பணம் உண்டாகும். (2) 2-வது பாவாதிபதி கிரகம் 11-வது பாவாதிபதி கிரகம் தங்கின ஸ்தானத்திலிருந்து 9-வது ராசியில் தங்கினாலும், (2) லக்னத்தில் அல்லது லக்னத்திலிருந்து 2, 4, 5, 7, 9, 10, 11-வது பாவங்களில் தங்கினாலும் மேன்மேலும் பணம் பொருட்களின் அபிவிருத்தி ஏற்படும்.

ஆயுள் முதலியவற்றின் கால அளவும்

(1) லக்னத்திலிருந்து 11-வது பாவத்தின் அதிபதி கொடிய கிரகமாய் இருந்து பலமிழந்து சத்ரு

ஸ்தானத்திலிருந்தாலும், (2) சத்ரு கிரகங்களினால் பார்க்கப்பட்டலும்: 6, 8, 12 பாவங்களில் தங்கினாலும், (3) 6, 8, 12 பாவாதிபதிகள் பார்வை பெற்றாலும் மத்யம ஆயுளும், கால் பாகம் செளபாக்யமும், கால் பாகம் அல்லது பாதி பாகம் ஆயுளும் செளபாக்யமும் உண்டாகும்.

நான்கு கொடிய கிரகங்கள் அல்லது நீச ராசியில் தங்கின நான்கு கிரகங்கள் அல்லது அஸ்தமனமடைந்த நான்கு கிரகங்கள் லக்னத்தில் அல்லது லக்னத்திலிருந்து 2, 4, 5, 7, 9, 10, 11-வது பாவங்களில் தங்கினால் ஆயுள் முதலியவை கால் பாகமாகக் கிடைக்கின்றன.

பிற அரிஷ்ட யோகங்கள்

நான்கு கிரகங்கள் லக்னத்திலிருந்து 11-வது பாவத்தில் மித்ர ராசியில் அசுப ஷட்வர்க்கத்தில் தங்கி அஸ்தமனம் அடைந்திருந்தால் ¾ பாகமான ஆயுள் உண்டாகும்.

லக்னத்தில் கிரகமில்லாதிருந்தால் லக்னதிபதி அல்லது மதி தங்கின ராசியின் அதிபதி கிரகம் லக்னத்திலிருந்து 6, 8, 12-வது பாவங்களில் தங்கினாலும், (2) அஸ்தமனம் அடைந்தாலும், (3) சத்ரு ராசியில் தங்கினாலும், (4) நீச ராசியில் தங்கினாலும், (5) பலவீனனாக இருந்தாலும், (6) அசுப கிரகங்களின் சேர்க்கை அல்லது பார்வையோடு கூடியவனாக இருந்தாலும், (7) சனி, ராகு, கேது இம்மூன்று கிரகங்களில் ஏதாவது ஒரு கிரகத்தின் சேர்க்கை அல்லது பார்வையோடு கூடியவனாக இருந்தாலும், (8) சுபக்கிரகத்தின் சேர்க்கை அல்லது பார்வை இல்லாதிருந்தாலும் ஆயுள் குறையும். சரீர சுகமும் கிடையாது என்று சாஸ்திர ஞானிகள் கூறுகின்றனர்.

தசாநாதன் ஜன்ம காலத்தில் சனி, ராகு, கேது கிரகங்களுடன் கூடியிருந்து 6, 8, 12-வது பாவங்கள் கொடிய கிரகங்களின் ராசிகளாக இருந்து அவற்றில் தசாநாதன் கொடிய கிரகங்களுடன் கூடியிருந்தால் அந்த தசாதிபதி மரணத்தை அளிப்பான்.

எல்லா பாவங்களின் பொது அறிவு

ஒவ்வொரு பாவத்தின் அதிபதியும், சூரியனுடன் சேர்ந்து அஸ்தமனம் அடைந்தாலும், லக்னத்திலிருந்து 6, 8, 12-வது பாவத்தில் தங்கியிருந்தாலும், அந்தந்த பாவத்திற்கு ஏற்றவாறு பாவாதிபதி நாசத்தை அடைகிறான். நற்பலனைக் கெடுப்பதில்லை. இப்படியே எல்லா பாவங்களின் பலனையும் அறியவும்.

கொடிய கிரகங்களின் சேர்க்கை முதலிய மேற்கூறிய தோஷங்கள் பாவாதிபதிக்கு ஏற்படின் மேற்கூறிய பலன் உண்டாகும். (ஏனைய பாபக் கிரகங்களுக்கும் இதுபோன்றே பலனுண்டாகும்.)

பூர்வபாராசர்யத்தில் லக்ன பாவ நிரூபணம் என்னும்
ஒன்பதாவது அத்தியாயம் முற்றும்.

பத்தாவது அத்தியாயம்

லக்னத்திலிருந்து 8-வது பாவத்தில் மதி தனது ஹோரையில் 12க்குடையவனுடன் சேர்ந்திருந்து 1, 4, 7, 10 ஆகிய கேந்திரங்களில் ஏதாவது ஒன்றில் குருவும் இல்லாவிடில் குழந்தை பிறந்தவுடன் மரிக்கும்.

குறிப்பு :- லக்னத்திலிருந்து 1, 4, 7, 10-வது ஸ்தானத்தில் மதி தங்கியிருந்து வியாழன் தங்காமலும், 8-வது பாவத்தில் ஏதாவது ஒரு கிரகம் தங்கினால் மேற்கூறிய பலன் உண்டாகும் என்று ஸாராவளியில் (அ.-10, சு.-86) சொல்லப்பட்டு இருக்கிறது.

மதியிடமிருந்து 7-வது ஸ்தானத்தில் செவ்வாயுடன் ஞாயிறு தங்கியிருந்து லக்னத்தில் ராகு தங்கினால் ஜாதகனுக்குப் பிறந்த தினத்தினின்று 10-வது தினத்திற்குள் மரணம் ஏற்படும் என்று சொல்லவும்.

குறிப்பு :- ராகு லக்னத்தில் தங்காவிட்டாலும் மேற்கூறிய பலன் ஏற்படும் என்று ஸாராவளியில் சொல்லப்பட்டிருக்கிறது.

(1) எல்லா கொடிய கிரகங்களும் லக்னத்திலிருந்து 4, 8-வது ஸ்தானங்களில் தங்கியிருந்த சமயத்திலும், (2) லக்ன ஸ்புடத்திலிருந்து 7-வது பாவத்தின் ஸ்புடத்திற்கு நடுவில் அல்லது, 7-வது பாவ ஸ்புடத்திலிருந்து லக்னத்தின் ஸ்புடத்திற்கு நடுவில் தங்கியிருந்த சமயத்தில் எவனுக்கு வியாதி ஏற்படிகின்றதோ அவன் வியாதி ஏற்பட்ட தினத்தில் இருந்து 10 நாட்கள் வரை உயிரோடு இருப்பான். பின்பு இறப்பான்.

லக்னத்திலிருந்து 7-வது பாவத்தின் ஸ்புடத்திலுள்ள திரேக்காணத்தில் கொடிய கிரகம் தங்கியிருந்து லக்னத்தில் க்ஷீணமதி தங்கியிருந்தால் ஜாதகன் பிறந்த சில தினங்களிலேயே இறப்பான்.

எல்லா கிரகங்களும் பலமின்றி லக்னத்திலிருந்து 3, 6, 9, 12-வது ஸ்தானங்களில் தங்கினால் ஜாதகனுக்கு ஆறு மாதங்கள் அல்லது இரண்டு மாதங்கள்தான் ஆயுள் என்று சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

லக்னாதிபதி நீச ராசி அல்லது லக்னத்திலிருந்து 8-வது பாவத்தில் தங்குதல் அல்லது அஸ்தமனமடைதல் இவைகளில் ஏதாவது ஒன்று இருந்தால் ஜாதகன் உயிரோடு இருப்பது சந்தேகமே. உயிரோடு இருந்தாலும் பிணம் போல் வாழ்வு நடத்துவான்.

ஸம்ஹிதா கிரந்தங்களில் 101 விதமான தூமகேதுக்களும், உல்கைகளும் (வானத்திலிருந்து விழுகின்ற கொள்ளியைப் போலுள்ள வெளிச்சப்பொருள்) முகூர்த்த கிரந்தங்களில் பகலிலும், இரவிலும் 15, 15 முகூர்த்தங்களும் சொல்லப்பட்டு இருக்கின்றன.

வானத்தில் தூமகேதுவின் உதயம் ஏற்பட்டு அதற்கு பின்பும், முன்பும் உல்கையின் உதயம் ஏற்பட்ட சமயத்தில் தூமகேதுவின் உதயகாலத்தில் பிறந்தாலும் கொடூரமான முகூர்த்தத்தில் பிறந்தாலும் உடனே மரணமுண்டாகும்.

குறிப்பு :- தூமகேதுவின் உதயம் ஏற்பட்டு பிறகு உல்கை அல்லது சூறாவளி காற்று அல்லது பயங்கரமான ஓசை ஏற்பட்ட சமயத்தில் பிறந்தாலும், கொடூரமான முகூர்த்தத்தில் பிறந்தாலும் உடனே மரணம் ஏற்படும் என்று ஸாராவளியில் *(அ. 20; சு. 209)* சொல்லப்படுகிறது.

யவனர் முதலிய பிரஸித்த சோதிடர்களால் கடுமையான பலனுள்ள பல ராஜயோகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளில் பிறந்த மனிதர்களுக்கு நல்ல குலத்தில் ஜன்மமும் எல்லா அனிஷ்டங்களும் உண்டாகும். அவன் சில தினங்களிலேயே இறப்பான். பிழைத்தால் சக்ரவர்த்தி ஆவான். *(ஸாராவளி - அ. 20; சு. 22)*

மதியைச் சுற்றிலும் வட்டம்போல் சில சமயங்களில் தெரிவது பரிவேஷம் எனப்படும். ஜன்ம காலத்தில் ஞாயிறு அல்லது மதிக்கு கிரஹணம் அல்லது பரிவேஷம் ஏற்பட்டு ஒரு கொடிய கிரகம் லக்னத்தில் தங்கியிருந்து லக்னாதிபதிக்கு பலமில்லாதிருந்தால் ஜாதகன் ஆறு மாதம் அல்லது மூன்று மாதம் உயிரோடிருப்பான். பின்பு இறப்பான்.

ஜன்ம காலத்தில் மதி தங்கின ராசியின் அதிபதி ஜன்மபதி என்று சொல்லப்படுகிறது. ஜன்மபதி, லக்னாதிபதி தங்கின ராசியிலிருந்து 8-வது ராசிக்கு அதிபதியானால் ஜாதகன் பிறந்த சில தினங்களிலேயே இறப்பான்.

(1) ஒவ்வொரு நக்ஷத்திரத்தின் முடிவிலும், தொடக்கத்திலும் ஒவ்வொரு நாழிகைகள் நக்ஷத்திர சந்தி என்றும், ஒவ்வொரு ராசியின் முடிவிலும், தொடக்கத்திலும் 10, 10 வினாடிகள் ராசி சந்தி என்றும், *(3)* ஆயில்யம், கேட்டை, ரேவதி நக்ஷத்திரங்களின் முடிவிலும்; மகம், மூலம், அச்வினி

நக்ஷத்திரங்களின் தொடக்கத்திலும் பத்து பத்து வினாடிகள் கண்டாந்தஸந்தி என்றும், (4) ஒவ்வொரு திதியின் தொடக்கத்திலும் முடிவிலும் ஒவ்வொரு நாழிகைகள் திதி ஸந்தி என்றும் சொல்லப்படுகின்றன.

லக்னத்தில் கொடிய கிரகத்தின் சேர்க்கை அல்லது பார்வை ஏற்பட்டு, சுபகிரகத்தின் சேர்க்கை அல்லது பார்வை இல்லாதிருந்தால் மேற்கூறிய நான்கு ஸந்தி காலங்களில் பிறந்தவன் உடனே இறப்பான் என்று சோதிடன் சொல்ல வேண்டும்.

லக்னத்தில் அல்லது லக்னத்திலிருந்து 5, 7, 8, 9, 12 பாவங்களில் கொடிய கிரகத்துடன் மதி தங்கி, அவனுக்கு சுபகிரகங்களின் பார்வை இல்லாதிருந்தால் கட்டாயம் ஜாதகன் பிறந்த பின்பு வெகுசீக்கிரம் இறப்பான்.

லக்னாதிபதியும், மதி தங்கின ராசியின் அதிபதியும் அஸ்தமனமடைந்து லக்னத்திலிருந்து 6, 8,12-வது பாவத்தில் தங்கினால் ஜாதகனுக்குக் கட்டாயம் மரணம் உண்டாகும். (அவ்விருவரும் தங்கிய ராசி மேஷத்திலிருந்து அல்லது லக்னத்திலிருந்து எண்ணுகையில் எண்ணிக்கை எவ்வளவோ அவ்வளவு வருடங்களில் இறப்பான்.

கிருஷ்ணபக்ஷத்தில் மதி லக்னத்திலிருந்து 6, 8, 12-வது ஸ்தானத்திலும், ஞாயிறு 6, 8-வது ஸ்தானத்திலும் தங்கியிருந்து சுபகிரகங்களாலும், அசுப கிரகங்களாலும் பார்க்கப்படினும் ஜாதகனுக்கு ஆயுள் ரொம்பவும் அற்பமாக இருக்கும்.

லக்னாதிபதி தங்கின ராசியிலிருந்து 8-வது ஸ்தானத்தில் ரொம்பவும் கரியமதி (கிருஷ்ணபக்ஷ சதுர்த்தி, அமாவாசை, சுக்லபக்ஷ பிரதமை திதியில்) ராகுவினால் பார்க்கப்பட்டாலும் கூடினாலும் ஏழாவது வயதில் மரணமுண்டாகும்.

குறிப்பு :- மேற்கூறிய மதிக்கு எல்லா கொடிய கிரகங்களின் பார்வை அல்லது சேர்க்கை ஏற்பட்டு அந்த சுப

கிரகத்தின் பார்வை அல்லது சேர்க்கை ஏற்படாவிட்டால் மூன்றாவது வயதில் மரணம் ஏற்படும் என்று ஸாராவளி கிரந்தத்தில் (அ. 10; சு. 104) சொல்லப்பட்டுள்ளது.

க்ஷீண மதிக்கு எல்லா கொடிய கிரகங்களின் சேர்க்கையும் ஏற்பட்டு, ராகுவினால் பார்க்கப்பட்டால் மதி தங்கின ராசியின் அதிபதிக்கு அஸ்தமனம் ஏற்பட்டால் 8-வது வயதில் மரணம் ஏற்படும்.

குறிப்பு :- மேற்கூறிய யோகத்தில் மதி தங்கின ராசியின் அதிபதி அஸ்தமனம் அடையாமலிருந்தாலும், பிறந்த பிறகு சில தினங்களிலேயே மரணம் ஏற்படும் என்று ஸாராவளி பாடத்தில் (அ. 10; சு. 110) சொல்லப்பட்டுள்ளது.

ஜன்ம காலத்தில் மதி தங்கின ராசியின் அதிபதி லக்னம் முதல் 7-வது ஸ்தானத்தில் ராகுவுடன் சேர்ந்திருந்தால் மூன்றாவது தினம் அல்லது மூன்றாவது மாதம் அல்லது மூன்றாவது வருடத்தில் மரணம் ஏற்படும்.

ஜன்ம காலத்தில் ஞாயிறு ஸ்புடத்தையும், மதியின் ஸ்புடத்தையும் ராசியும், பாகை, கலை, விகலைகளையும் வரிசையாக வைத்துக் கூட்டவும். கூட்டிவந்த ராசி, பாகை, கலை, விகலைகளை பிரத்தியேகமாக எழுதிக்கொள்ளவும். இது மரண ஸ்புடமாகும். இந்த மரண ஸ்புடத்தில் அசுப கிரகத்தின் சேர்க்கை ஏற்பட்டு, லக்னத்திலிருந்து 1, 4, 5, 7, 9, 10-வது ஸ்தானத்தில் மரண ஸ்புடம் தங்கியிருந்தால் பிறந்த பிறகு சில தினங்களில் மரணம் கட்டாயம் ஏற்படும். இதை பிரபல யோகங்கள் மூலம் தவிர்த்தாலும் தவிர்க்கலாம். ஆனால் இந்த யோகத்தில் மதி; கடகம், விருச்சிகம், மகரத்தின் பின்பாதி, மீனம் என்ற நான்கு ராசிகளில் தங்கியிருந்தால் எக்காரணம் கொண்டும் மரணத்தைத் தவிர்க்கமுடியாது.

லக்னத்திலிருந்து 8-வது ஸ்தானத்தில் மதி கொடிய கிரகங்களுடன் கலந்தும், லக்னாதிபதி கிரகம் லக்னத்தில் அல்லது லக்னத்திலிருந்து 4, 7, 10-வது ஸ்தானங்களில் கொடிய கிரகங்களுடன் கலந்தும் இருக்கவேண்டும். மதிக்கும்

லக்னாதிபதிக்கும் சுபகிரகங்களின் சேர்க்கை அல்லது பார்வை இருக்கக்கூடாது. இந்த யோகத்தில் பிறந்தவன் 7-வது வருடத்தில் இறப்பான்.

புதனுக்கு ஞாயிறின் சேர்க்கை ஏற்பட்டு சுபகிரகங்களின் பார்வை இல்லாவிட்டால் குழந்தைக்கு மரணம் கட்டாயம் உண்டாகும். இந்த யோகத்தில் புதன் விருச்சிக ராசியில் தங்கியிருந்தால் பிறந்தபிறகு 11-வது வருடத்தில் மரணமுண்டாகும்.

குறிப்பு :- இந்த யோகத்தில் புதனுக்கு சுபகிரகத்தின் பார்வை இருக்கவேண்டும் என்றும், விருச்சிக ராசியில் தங்குதல் இல்லாதிருந்தாலும், 11-வது வருடத்தில் மரணம் கட்டாயம் ஏற்படும் என்றும் ஸாராவளி கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. (அத்.10, சுலோ. 101).

மதி கடகம், விருச்சிகம், மகரத்தில் பின்பாதி, மீனம், தனுசு என்ற ஐந்து ராசிகளில் அல்லது அந்த ராசிகளில் ஏற்பட்ட நவாம்சங்களில் தங்கியிருக்கவேண்டும். சுபகிரகங்களின் சேர்க்கை அல்லது பார்வை இல்லாதிருக்க வேண்டும். லக்னத்திலிருந்து 1, 4, 7, 8, 10-வது ஸ்தானங்களில் ஏதாவது ஒரு ஸ்தானத்தில் தங்கியிருக்கவேண்டும். இப்படி இருந்தால் தாயும், சேயும் சேர்ந்து மரிப்பர்.

மேனியிலுள்ள லக்ஷணக்குறி வடு முதலியவற்றின் ஞானம்

பாதிச் செய்யுளினால் மேனியிலுள்ள அறிகுறிகள், வடுக்கள் முதலியவற்றை அறியும் உபாயத்தைச் சொல்கிறார்.

ஒவ்வொரு ராசியில் மூன்று மூன்று திரேக்காணங்கள் வீதம் 12 ராசிகளில் 36 திரேக்காணங்கள் உள்ளன என்று முதலாவது அத்யாயத்தில் கூறியிருக்கிறது. லக்னத்தில் முதல் திரேக்காணம் ஏற்பட்டிருந்தால் லக்ன ஸ்புடத்தின் பாகை, கலை, விகலைகளை முதல் திரேக்காணத்தில் உதிதமான பாகம் என்று அறியவும். உதிதமான பாகை, கலை,

விகலைகளை 10 பாகைகளிலிருந்து கழித்தால் மீதியான பாகை, கலை, விகலைகள் முதல் திரேக்காணத்தில் அனுதிதமான பாகம் என்று அறியவும்.

லக்னத்தில் 2-வது திரேக்காணம் ஏற்பட்டிருந்தால், லக்னத்திலிருந்து 10 பாகைகளையும், 3-வது திரேக்காணம் ஏற்பட்டிருந்தால் 20 பாகைகளையும், கழித்து மீதியான கலை, விகலைகளை வைத்துக்கொண்டு முன்பு கூறியதைப்போல் லக்ன திரேக்காணத்தில் உதித பாகத்தையும், அனுதித பாகத்தையும் அறியவும்.

இப்படியே லக்னத்திலிருந்து 7-வது பாவத்திலும், லக்னத்தில் முதல் திரேக்காணம் ஏற்பட்டிருந்தால் முதல் திரேக்காணம் என்றும், 2-வது திரேக்காணம் ஏற்பட்டிருந்தால் 2-வது திரேக்காணம் என்றும், 3-வது திரேக்காணம் ஏற்பட்டிருந்தால் 3-வது திரேக்காணம் என்றும் அறியவும்.

7-வது பாவத்தில் முதல் திரேக்காணமாய் இருந்தால் 7-வது பாவ ஸ்புடத்திலுள்ள பாகை, கலை, விகலைகளை அனுதிதபாகமென்றும், அனுதித பாகை, கலை, விகலைகளை 10 பாகைகளிலிருந்து கழித்தால் மீதியான பாகை, கலை விகலைகள் உதிதபாகமென்றும் அறியவும்.

7-வது பாவத்தில் 2-வது திரேக்காணமாயிருந்தால், 7-வது பாவ ஸ்புடத்திலிருந்து 10 பாகைகளையும், மூன்றாவது திரேக்காணமாயிருந்தால் 20 பாகைகளையும் கழித்து மேற்கூறியபடி உதித பாகத்தையும், அனுதித பாகத்தையும் அறியவும்.

7-வது பாவத்தின் திரேக்காணத்தில் உதிதபாகமும், அடுத்த லக்ன திரேக்காணம் வரையில் நடுவிலுள்ள திரேக்காணங்களும், லக்ன திரேக்காணத்தில் உதித பாகமும், உதித திரேக்காணம் என்றும், மனிதனின்மேனியில் இடது பாகம் என்றும் அறியவும்.

லக்ன திரேக்காணத்தில் அனுதித பாகமும் அடுத்த 7-வது பாவத்தின் திரேக்காணம் வரை நடுவிலுள்ள திரேக்காணங் களும், 7-வது பாவத்தின் திரேக்காணத்தில் அனுதித பாகமும் அனுதித திரேக்காணமென்றும் மனிதனின் மேனியில் வலதுபுறம் என்றும் அறிவும்.

மேற்கூறியபடி அறியப்பட்ட மனித மேனியின் வலதுபுறம் அல்லது இடதுபுறத்தில் சுபக்கிரகம் தங்கி இருந்தால் மேனியில் லக்ஷணக்குறி உண்டாகும் என்றும், கொடிய கிரகம் தங்கியிருந்தால் வடு உண்டாகும் என்றும் அறியவும்.

மேற்கூறியபடி **தேவகீர்த்தி** என்ற சோதிடரும் கூறுகிறார். மேற்கூறிய உதிதபாகம் மேனியின் உறுப்புகளில் இடது பக்கத்திலிருப்பவை என்றும், அனுதிதபாகம் வலது பக்கத்திலிருப்பவை என்றும் அறியவும். எந்த உறுப்புக்குரிய திரேக்காணத்தில் கிரகம் தங்கியுள்ளதோ, அந்த உறுப்புக்களில் லக்ஷணக்குறி, வடு முதலியவைகள் ஏற்படும். கொடிய கிரகத்தின் சேர்க்கை அல்லது பார்வை ஏற்பட்டால் வடுவும், சுபகிரகத்தின் சேர்க்கை அல்லது பார்வை ஏற்பட்டால் குறியும் உண்டாகும்.

தேவகீர்த்தியின் நூலில் மேற்கூறியபடி ஸம்க்ஷேபமாக சொல்லப்பட்டிருக்கிறது. கபிஷ்டில கோத்திரத்தில் பிறந்த **வராஹமிஹிரர்** தன்னுடைய "பிருஹஜ்ஜாதகம்" என்னும் நூலில் விஸ்தாரமாக இவ்விஷயத்தை அறிவித்திருக்கிறார். அச்செய்யுளை எழுதி அதனுடைய பொருளையும் விளக்குகிறேன்.

லக்னத்தில் முதல் திரேக்காணம் ஏற்பட்டிருந்தால் 12 ராசிகளிலும், 12 முதல் திரேக்காணங்களையும், 2-வது திரேக்காணமாய் இருந்தால் 12 ராசிகளிலும், 12 இரண்டாவது திரேக்காணங்களையும், 3-வது திரேக்காணமாய் இருந்தால் 12 ராசிகளிலும் 12 மூன்றாவது திரேக்காணங்களையும் எடுத்துக் கொண்டு அந்தந்த திரேக்காணங்களைக்குரிய அவயவங்களை கீழே கூறியபடி அறியவும். லக்னத்தில் முதல் திரேக்காணம்

ஏற்பட்டிருந்தால், லக்ன ராசியில் அனுதித பாகம் லக்னத்தில் இருந்து 2, 3, 4, 5, 6 ராசிகளில் ஐந்து முதல் திரேக்காணங்கள் 7-வது ராசியில் முதல் திரேக்காணத்தில் அனுதிதபாகம் இவைகள் வரிசைக் கிரமமாக தலையின் வலது பாகம், வலக்கண், வலக்காது, வலது மூக்கு, வலது கபாலம், வலது ஹனு (தாடை), வாயில் வலது பாகம் என்று அறியவும். லக்ன ராசியில் முதல் திரேக்காணத்தில் உதிதபாகம், லக்னத்தில் இருந்து தலைகீழாக உள்ள 12, 11, 10, 9, 8 ராசிகளிலுள்ள ஐந்து முதல் திரேக்காணங்கள் 7-வது ராசியில் முதல் திரேக்காணத்தில் உதித பாகம் இவைகள் வரிசைக் கிரமமாக தலையின் இடதுபாகம், இடது கண், இடது காது, இடது மூக்கு, இடது கபாலம், இடது ஹனு (தாடை), வாயில் இடது பாகம் என்று அறியவும்.

இதையும் விளக்குகிறோம் :- லக்ன திரேக்காணம், லக்ன ராசியில் முதல் திரேக்காணமாய் இருந்தால், லக்ன திரேக்காணத்தில் அனுதித பாகத்திற்குத் தலையில் வலது புறமும், உதித பாகத்திற்கு இடதுபுறமும், 2-வது ராசியில் முதல் திரேக்காணத்திற்கு வலது கண்ணும், 12-வது ராசியில் முதல் திரேக்காணத்திற்கு இடது கண்ணும், 3-வது ராசியில் முதல் திரேக்காணத்திற்கு வலது காதும், 11-வது ராசியில் முதல் திரேக்காணத்திற்கு இடது காதும், 4-வது ராசியில் முதல் திரேக்காணத்திற்கு வலது மூக்கும், 10-வது ராசியில் முதல் திரேக்காணத்திற்கு இடது மூக்கும், 5-வது ராசியில் முதல் திரேக்காணத்திற்கு வலது கபாலமும், 9-வது ராசியில் முதல் திரேக்காணத்திற்கு இடது கபாலமும், 6-வது ராசியில் முதல் திரேக்காணத்திற்கு வலது ஹனு (தாடை)யும், 8-வது ராசியில் முதல் திரேக்காணத்திற்கு இடது ஹனு (தாடை)யும், 7-வது ராசியில் அனுதித பாகத்திற்கு வாயில் வலதுபுறமும், உதித பாகத்திற்கு இடதுபுறமும் அவயவம் என அறியவும்.

லக்ன ராசியில், லக்ன திரேக்காணம் 2-வதாக இருந்தால் லக்னத்தின் 2-வது திரேக்காணத்தில் அனுதித பாகத்திற்கும், அடுத்த 5 ராசிகளிலுள்ள ஐந்து 2-வது திரேக்காணங்களுக்கும், 7-வது பாவத்தின் 2-வது திரேக்காணத்தில் அனுதித

பாகத்திற்கும் வரிசைக் கிரமமாக கழுத்து, அம்ஸம் (தோள் பக்கம்), இதயம், வயிறு நாபி என்ற அவயவங்களில் வலது பாகம் என்று அறியவும்.

லக்னத்தின் 2-வது திரேக்காணத்தில் உதித பாகத்திற்கும், லக்னத்திலிருந்து விபரீதக் கிரமமாக உள்ள 12, 11, 10, 9, 8 ராசிகளில் உள்ள ஐந்து 2-வது திரேக்காணங்களிற்கும் 7-வது ராசிகளிலுள்ள நடு திரேக்காணத்தில் உதித பாகத்திலும் வரிசைக் கிரமமாக மேற்கூறிய அவயவங்களில் இடது பாகம் என்று அறியவும்.

இதையும் விளக்குகிறோம் :-

லக்ன ராசியில் 2-வது திரேக்காணம் ஏற்பட்டிருந்தால், லக்ன ராசியில் இரண்டாவது திரேக்காணத்தில் அனுதித பாகம் கழுத்தில் வலதுபுறமும், உதிதபாகம் இடதுபுறமும், லக்னத்திலிருந்து 2-வது ராசியில் 2-வது திரேக்காணத்திற்கு வலது அம்ஸமும், 12-வது ராசியில் 2-வது திரேக்காணத்திற்கு இடது அம்ஸமும், 3-வது ராசியில் 2-வது திரேக்காணத்திற்கு வலது தோளும், 11-வது ராசியில் 2-வது திரேக்காணத்திற்கு இடது தோளும், 4-வது ராசியில் 2-வது திரேக்காணத்திற்கு வலதுபுறமும், 10வது ராசியில் 2-வது திரேக்காணத்திற்கு இடதுபுறமும், 5-வது ராசியில் 2-வது திரேக்காணத்திற்கு இதயத்தின் வலது பாகமும், 9-வது ராசியில் 2-வது திரேக்காணத்திற்கு இதயத்தின் இடது பாகமும், 6-வது ராசியின் 2-வது திரேக்காணத்திற்கு வலது வயிறும், 8-வது ராசியின் 2-வது திரேக்காணத்திற்கு இடது வயிறும், 7-வது ராசியில் அனுதித பாகத்திற்கு வலது நாபியும், உதித பாகத்திலிருந்து இடது நாபியும் அவயவம் என்று அறியவும். லக்ன ராசியில் லக்ன திரேக்காணம் 3-வதாக ஏற்பட்டிருந்தால் லக்ன ராசியின் 3-வது திரேக்காணத்தில் அனுதித பாகமும் அடுத்த 5 ராசிகளிலுள்ள ஐந்து 3-வது திரேக்காணங்களும், 7வது ராசியிலுள்ள அனுதித பாகமும் வரிசைக் கிரமமாக பஸ்தி சிச்னம், குதம், விருஷணம், துடைகள், முழங்கால்கள், ஜானுக்கள், கால்கள் என்ற ஏழு வலது புறத்திலுள்ள அவயவங்கள் ஆகின்றன.

லக்னத்தில் 3-வது திரேக்காணத்தில் உதிதபாகத்திற்கும், லக்னத்திலிருந்து விபரீதக் கிரமமாக உள்ள 12, 11, 10, 9, 8 ராசிகளில் ஐந்து 3-வது திரேக்காணங்களுக்கும் 7-வது ராசியில் உள்ள 3-வது திரேக்காணத்தில் உதித பாகத்திற்கும் வரிசைக் கிரமமாக மேற்கூறிய அவயவங்களில் இடது பாகம் என்று அறியவும்.

இதையும் விளக்குகிறோம் :-

லக்ன ராசியில் 3-வது திரேக்காணம் ஏற்பட்டிருந்தால் லக்னத்தின் 3-வது திரேக்காணத்தின் அனுதித பாகத்திற்குக் கீழ் வயிற்றின் வலதுபுறமும் உதித பாகத்திற்கு இடதுபுறமும், லக்னத்திலிருந்து 2-வது ராசியில் 3-வது திரேக்காணத்திற்கு சிச்னம், குதங்களின் வலப்புறமும் 12-வது ராசியில் 3-வது திரேக்காணத்திற்குச் சிச்னம், குதங்களின் இடப்புறமும், 3-வது ராசியில் 3-வது திரேக்காணத்திற்கு விருஷணத்தின் வலப்புறமும், 11-வது ராசியில் 3-வது திரேக்காணத்திற்கு விருஷணத்தின் இடப்புறமும், 4-வது ராசியில் 3-வது திரேக்காணத்திற்கு வலது துடையும், 10-வது ராசியில் 3-வது திரேக்காணத்திற்கு இடது துடையும், 5-வது ராசியில் 3-வது திரேக்காணத்திற்கு வலது முழங்காலும், 9-வது ராசியில் 3-வது திரேக்காணத்திற்கு இடது முழங்காலும், 6-வது ராசியில் 3-வது திரேக்காணத்திற்கு வலது ஜங்கை (முழங்கால் முட்டிற்கும், கணுக்கால் மத்தியிலுள்ள உறுப்பு)யும், 8-வது ராசியில் 3-வது திரேக்காணத்திற்கு இடது ஜங்கையும், 7-வது ராசியின் 3-வது திரேக்காணத்தில் அனுதித பாகத்திற்கு வலது காலும், உதித பாகத்திற்கு இடது காலும் அவயவம் என்று அறியவும்.

குறிப்பு :- ***பிருஹஜ்ஜாதகத்தி***லுள்ள மேற்கண்ட செய்யுளுக்குப் பூர்வ பாராசர்ய கிரந்தக்காரரால் செய்யப்பட்ட வியாக்யானத்தை எழுதுகிறோம். இந்த வியாக்யான பிரகாரமாக வலப்புறமும், இடப்புறமும் 7, 7, அவயவங்களாக மொத்தம் 14 அவயவங்களை மட்டும் ஒவ்வொரு ஜாதகத்திலும் அறியலாம். அதற்கு மேற்பட்ட அவயவங்களை அறியமுடியாது.

ஹோரா விவரண வியாக்யானத்தில் சொன்ன இன்னொரு வியாக்யானத்தையும் எழுதுகிறோம். இந்த வியாக்யானப்படி ஒவ்வொரு ஜாதகத்திலும் இடது பக்கமும், வலது பக்கமும் தனித்தனியே இருபத்தோரு அவயவங்களாக 42 அவயவங்களை அறியலாம்.

லக்ன திரேக்காணம், முதல் திரேக்காணமாக இருப்பின் 12 ராசிகளிலுள்ள 12 முதல் திரேக்காணங்களினால் மேற்கூறியபடி தலையிலிருந்து வாய்வரை வலப்புறத்திலும், இடப்புறத்திலுமுள்ள 7, 7 அவயவங்களை அறியவும்.

அடுத்தபடியாக 12 ராசிகளிலுள்ள 12 இரண்டாவது திரேக்காணங்களினால் கழுத்திலிருந்து நாபிவரை வலப் புறமும், இடப்புறமும் உள்ள 7, 7 அவயவங்களை அறியவும்.

அடுத்தபடியாக 12 ராசிகளிலுள்ள 12 மூன்றாவது திரேக்காணங்களினால் பஸ்தி (மூத்ராசயம்)யிலிருந்து கால் வரையில் உள்ள வலது புறத்திலும், இடப்புறத்திலுமுள்ள ஏழு ஏழு அவயவங்களை அறியவும்.

லக்னத்திலும், ஏழாவது ராசியிலும் முதல் திரேக்காணத்தில் உதித பாகமும், அனுதித பாகமும் எவ்வளவோ, அவ்வளவே லக்னத்திலும், 7-வது ராசியிலும் உள்ள 2-வது திரேக்காணத்திலும், 3-வது திரேக்காணத்திலும் உதித பாகமும், அனுதித பாகமும் என்று அறிந்துகொண்டு மேற்கூறியபடி அவயவங்களை அறியவும்.

லக்னத்தில் 2-வது திரேக்காணமாய் இருந்தால் தலைமுதல் வாய்வரை ஏழு அவயவங்களை 2-வது திரேக்காணங்களினாலும், கழுத்திலிருந்து நாபிவரை ஏழு அவயவங்களை 12 மூன்றாவது திரேக்காணங்களினாலும், பஸ்தி முதல் கால்வரை ஏழு அவயவங்களை 12 முதல் திரேக்காணங்களினாலும் அறியவும்.

லக்னத்தில் மூன்றாவது திரேக்காணமாயிருந்தால் 12 மூன்றாவது திரேக்காணங்களினால் தலைமுதல் வாய்வரையிலுள்ள ஏழு அவயவங்களையும் 12 முதல் திரேக்காணங்களிலிருந்து கழுத்துமுதல் நாபிவரையிலுள்ள ஏழு அவயவங்களையும் 12 இரண்டாவது திரேக்காணங்களிலிருந்து பஸ்திமுதல் கால்வரையிலுள்ள ஏழு அவயவங்களையும் அறியவும்.

இப்படி இந்த வியாக்யான முறைப்படி எந்த திரேக்காணத்தில் பிறந்தாலும் 42 அவயவங்களை அறியலாம்.

ஜாதகனது 42 அவயவங்களுக்குரிய திரேக்காணங்கள் கூறப்பட்டன. அதற்குப் பலன் வராஹமிஹிரராலேயே சொல்லப்படுகிறது.

எந்த திரேக்காணத்தில் கொடிய கிரகத்தின் சேர்க்கை உண்டோ, அந்த திரேக்காணத்திற்குரிய அவயவத்தில் காயத்தின் வடு உண்டாகும்.

கொடிய கிரகம் தங்கிய அந்த திரேக்காணத்திற்குச் சுபகிரகத்தின் சேர்க்கை அல்லது பார்வை ஏற்பட்டால் அந்த திரேக்காணத்திற்குரிய அவயவத்தில் மச்சம் முதலிய லக்ஷணக்குறி உண்டாகும்.

லக்ஷணக்குறி அல்லது வடுவிற்குக் காரணமான கிரகம் சுய ராசி அல்லது சுய நவாம்சம் அல்லது ஸ்திர ராசியில் தங்கி இருந்தால் மேற்காட்டிய லக்ஷணக்குறியும், வடுவும் பிறக்கும் காலத்திலேயே இருந்தது என்றும், அப்படி இல்லாவிடில் நடுவில் வந்தது என்றும் அறியவும்.

சனியினால் உண்டாகும் வடு கல்லடி அல்லது காற்றினாலும், செவ்வாயினால் உண்டாகும் வடு, தீ, ஆயுதம், விஷம் இவற்றாலும், கொடிய கிரகத்துடன் கூடிய புதனால் உண்டாகும் வடு தரை ஸம்பந்தத்தினாலும் ஞாயிறால் உண்டாகும் வடு கட்டை அல்லது நான்கு கால்களுள்ள பசு,

எருமை முதலியவைகளினாலும் க்ஷீண மதியினால் உண்டாகும் வடு கொம்புள்ள உயிர்கள், நீரில் உள்ள மீன் முதலியவற்றாலும் ஏற்படும்.

எந்த திரேக்காணத்தில் பூர்ணமதி சுபகிரகங்களோடு கூடிய புதன், வியாழன், வெள்ளி இவர்கள் தங்கி இருக்கிறார்களோ அந்த திரேக்காணத்திற்கு உரிய அவயவத்தில் மச்சம் முதலிய லக்ஷணக்குறியும், வடுவும் உண்டாகாது. அழகும் ஆபரணங்களினால் அலங்காரமும் உண்டாகும்.

மேற்கூறியவாறு அந்தந்த அவயவத்திற்குரிய திரேக்காணத்தை அறியவும். அந்த திரேக்காணத்தில் யாராவது மூன்று கிரகங்களோடு புதன் தங்கியிருந்து, அந்த நான்கு கிரகங்களின் மத்தியில் சுபக்கிரகத்திற்கு அதிக வலிமை இருப்பின் அந்த திரேக்காணத்திற்குரிய அவயவத்திற்கு அழகும், அலங்காரமும் உண்டாகும். கொடிய கிரகத்திற்கு மிகுந்த வலிமை இருப்பின் புண்ணும், வடுவும் ஏற்படும். சுபக்கிரகத்திற்கும், அசுபக்கிரகத்திற்கும் சம வலிமை இருப்பின் மச்சம் முதலான குறி உண்டாகும். இவைகள் அந்தந்த கிரகத்தின் தசா காலத்தில் கட்டாயம் வருகின்றன.

முதல் அத்தியாயத்தில் மேஷம் முதலிய 12 ராசிகளுக்கு தலையிலிருந்து கால்வரை 12 அவயவங்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. லக்னத்திலிருந்து 6-வது பாவத்தில் கொடிய கிரகம் தங்கினால் அந்த பாவம் எந்த ராசியில் தங்கியுள்ளதோ அந்த ராசிக்குரிய அவயவத்தில் புண்ணும், வடுவும் ஏற்படும். அந்த கொடிய கிரகத்திற்கு சுபகிரகப் பார்வை ஏற்படின் உப்பின புள்ளிகளும், அதைச் சுற்றி உரோமங்களும் உண்டாகின்றன. சுபகிரகங்களின் சேர்க்கை ஏற்படின் கருநிற உப்பின புள்ளிகளும், அதனைச்சுற்றி உரோமங்களும், மச்சமும் ஏற்படும்.

பூர்வபாராசர்யத்தில் பாலாரிஷ்டயோகம் என்னும்
பத்தாவது அத்தியாயம் முற்றும்.

பதினோறாவது அத்தியாயம்

கண் குருடாகும் யோகம்

தொடக்கத்தில் கண்கள் குருடாகும் யோகத்தைச் சொல்லுகிறார்.

(1) லக்னத்திலிருந்து 12-வது பாவத்தில் செவ்வாய் அல்லது சனி தங்கினால் கண் கெட்டுவிடும். செவ்வாய் இடது கண்ணையும், சனி வலது கண்ணையும் பறிப்பான். (2) லக்னத்தில் ராகுவும், ஏழாவது பாவத்தில் ஞாயிறும் தங்கினாலும் கண் நசிக்கும்.

முதலாவது செய்யுளின் முன்பாதியில் சொன்னதை இச்செய்யுள் சொல்கிறது.

குறிப்பு :- பல நூல்களில் சொல்லப்பட்ட செய்யுள்கள் இந்நூலில் உதாஹரிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் ஒரே யோகம் அனேக செய்யுட்களில் சொல்லப்பட்டு இருந்தாலும் திரும்பத்திரும்ப ஒன்றையே கூறப்பட்டதாக நினைத்தல் கூடாது.

லக்னத்திற்கு ராகுவின் சேர்க்கை அல்லது பார்வை இருந்த 7-வது ஸ்தானத்தில் ஞாயிறு தங்கினால் கட்டாயம் ஜாதகன் குருடன் ஆவான்.

(1) 12-வது பாவத்தில் ஞாயிறு தங்கினால் வலது கண்ணையும், (2) மதி தங்கினால் இடது கண்ணையும். (3) இருவரும் தங்கினால் இரு கண்களையும், (4) மூன்று கொடிய கிரகங்கள் 6வது பாவத்தில் தங்கினால் இடது கண்ணையும், (5) 8-வது பாவத்தில் தங்கினால் வலது கண்ணையும்; 6, 8-வது பாவங்களில் இரண்டிலும் தங்கினால் இரு கண்களையும் பறிப்பர்.

(1) மதியும், ஞாயிறும் கலந்து 12-வது பாவத்தில் தங்கினாலும், (2) மூன்று பாப கிரகங்கள் 6-வது பாவத்திலும்,

(3) 12வது பாவத்திலும், (4) 6, 12-வது பாவங்களில் இரண்டிலும் தங்கினால் இரு கண்களையும் பறிப்பார்கள்.

லக்ன ஸ்புடத்திலிருந்து தொடர்ந்து 7-வது பாவ ஸ்புடம் முடியும் வரையிலுள்ள பாகம் மேனியில் வலது பாகம் என்றும், 7-வது பாவ ஸ்புடத்திலிருந்து தொடர்ந்து லக்ன ஸ்புடம் முடியும் வரையிலுள்ள பாகம் மேனியில் இடதுபாகம் என்றும் அறியவும்.

கண்களைப் பறிக்கிற கிரகம் இடது பாகத்திலிருந்தால் வலது கண்ணையும், வலது பாகத்திலிருந்தால் இடது கண்ணையும், இரு பாகங்களிலுமிருந்தால் இரு கண்களையும் பறிக்கும். 6-வது பாவம் வலது பாகமாக இருப்பதனால் அதிலுள்ள கிரகம் இடது கண்ணைப் பறிக்கும் என்று கூறியது யுக்தி யுக்தமாக இருக்கிறது.

செவ்வாய் 2-வது பாவத்தின் அதிபதியாக இருந்து, 8-வது பாவத்திலும்; ஞாயிறும், மதியும் 6-வது பாவத்திலும் சனி 12-வது பாவத்திலும் தங்கினால் குருடன் ஆவான்.

மதி 6-வது பாவத்திலும், ஞாயிறு 8-வது பாவத்திலும், சனி 12-வது பாவத்திலும் வக்ர கதியுள்ள ஏதாவது ஒரு கிரகம் அல்லது செவ்வாய் 2-வது பாவத்திலும் தங்கினால் குருடன் ஆவான்.

எல்லா கொடிய கிரகங்களும், மதியும் கலந்து 6, 8-வது பாவங்களில் தங்கி இருந்தால் கபம், வாதம், பித்தம் இவைகளின் விகாரத்தினால் கண் போய்விடும்.

செவ்வாயும், சனியுடன் கூடிய மதியும் 6, 8, 12-வது பாவங்களில் தங்கினால் வாதம், கபம் இவைகளின் விகாரத்தினால் நிச்சயம் கண் போய்விடும்.

1, 8-வது பாவங்களில் சனியுடன் கூடிய மதி தங்கினால் கப ப்ரகோபத்தினால் ஏற்படும் ரோகங்களினால் கண் போய்விடும்.

சனியுடன் கூடிய மதியும், மீதியான எல்லா கொடிய கிரகங்களுடன் கூடிய மதியும் 2 அல்லது 8வது பாவத்தில் தங்கினால் கப ப்ரகோபத்தினால் ஏற்படும் ரோகங்களினால் கண் போய்விடும்.

இரண்டாவது பாவத்தில் தங்கின கிரகத்தின் பலன்

ஞாயிறு 2-வது பாவத்தில் தங்கினால் பணக்காரனும், தானம் செய்பவனும், இராஜகோபத்தின் மூலமும், கள்வர்களாலும் பணத்தை இழந்தவனும், மனிதர்களையும், பசுக்களையும் ஆண்டு சுகத்தை அனுபவிப்பவனும், முகரோகியும் எல்லா வைபவத்தையும் சுகத்தையும் இழப்பவனும் ஆவான்.

மதி இரண்டாவது பாவத்தில் தங்கினால் நல்ல சுகமும், அன்பர்களும், பணமும் எப்பொழுதும் உண்டு. பூர்ணமதி தங்கினால் நல்ல பணக்காரனும், பராக்கிரமம் உள்ளவனும், அளந்து வார்த்தைகளைப் பேசுபவனும் ஆவான். மதி நீச ராசியில் தங்கினால் நல்ல நண்பர்கள் இருப்பர்.

செவ்வாய் 2-வது பாவத்தில் தங்கினால் கெட்ட சீலமுள்ள ஆணையாளனும், எல்லோருக்கும் கெடுதல் செய்யும் கெட்ட மனிதனும், விகாரமான முகமுள்ளவனும், அதிக பணச் செலவினால் கஷ்டப்படுபவனும், ஏழையும், கழுதைபோல் கத்துபவனும், வித்தை இல்லாதவனும், கெட்ட ஆகாரங்களைப் புசித்து ஸந்தோஷமடைபவனும், கெட்ட மனிதர்களுக்கு உதவி செய்பவனும், அவர்களின் உதவி நாடுபவனும் ஆவான்.

புதன் 2-வது பாவத்தில் தங்கினால் சுய சாமர்த்தியத்தினால் எல்லா வைபவங்களையும் அடைந்தவனும் அழகனும் ஆவான்.

அன்னம், குழந்தைகள், பான வகையறாக்கள், சுகானுபவம் இவைகளை அடைந்தவனும் ஆவான், சபலமான வார்த்தை இந்திரியங்கள் இவைகளுள்ளவனும், நீதியில் பிரீதி உள்ளவனும் ஆவான்.

வியாழன் 2-வது பாவத்தில் தங்கினால் நல்ல ஆகாரங்களைப் புசிப்பவனும், நல்ல பூமி மற்றும் ஜனங்கள் உள்ளவனும், பெரிய பேச்சாளனும், அழகனும், இனிய வார்த்தைகளைப் பேசுபவனும், வசீகரமான முகமுள்ளவனும், தானம் செய்பவனும், நல்ல கூர்மையான புத்தி உள்ளவனும் ஆவான்.

வெள்ளி 2-வது பாவத்தில் தங்கினால் அன்னம், பானம் வகையறாக்கள், வைபவம் இவைகள் அதிகமுள்ளவனும், சிறந்த விலாசமுள்ளவனும், இனிய வார்த்தைகளைப் பேசுபவனும், சுகமுள்ளவனும், எல்லோருக்கும் வேண்டியவனும், நல்ல பணக்காரனும் ஆவான்.

சனி 2-வது பாவத்தில் தங்கினால் விகாரமுள்ள முகம் உள்ளவனும், பணத்தை அனுபவிப்பவனும், தன்னின ஜங்களில்லாதவனும், நியாயமாக நடந்துகொள்கிறவனும், கடைசி வயதில் பிற நாடுகளுக்குச் சென்று ஜனசகாயம், பணம், வாகனங்கள், சுகானுபவம் இவைகளை அடைந்து பல தர்மங்களைச் செய்கிறவனும், பூர்வார்ஜித சொத்துக்களை நாசம் செய்பவனும் ஆவான்.

சனி 2-வது பாவத்தில் தங்கினால் முன்னோர்கள் ஈட்டிய தனத்தை நாசம் செய்பவனும், மிகுந்த தனமுடையவனும், பிற்பகுதியில் மிகுந்த தர்மவானாகவும், போகியாகவும் இருப்பான்.

ராகு 2-வது பாவத்தில் தங்கினால் கடனாளியும், தீன வார்த்தை பேசுபவனும், உலகத்தில் மரியாதை படைத்தவனும், அரசாங்கத்திலிருந்து கிடைக்கப்பெற்ற பணத்தினால் சுகப்படுபவனும், குழந்தைகளிடம் மிகுந்த கோபமுள்ளவனும், நடு வயதில் அதிகபணம் ஸம்பாதித்து அதிக பிரஸித்தியடைகிறவனும் ஆவான்.

ராகு 2-வது பாவத்தில் தங்கினால் ஏழையும், பேச்சுவன்மை இல்லாதவனும், நபும்ஸகனும், ரோகியும், பிறருக்கு அர்த்தம் புரியாதபடி பேசுபவனும், அப்ரசித்தமான பெயருள்ளவனும் ஆவான் என்று சிலர் சொல்கிறார்கள்.

கேது 2-வது பாவத்தில் தங்கினால் பலமுள்ளவனும், சூக்ஷ்ம புத்தியுள்ளவனும், விசேஷ ஞானியும், பிணத்தைப் போல் விகார மேனி உடையவனும், அதிசூரனும், மிகுந்த அயோக்கியனும் ஆவான்.

ஞாயிறும், சனியும், செவ்வாயும் ஒன்றுகூடி 2-வது பாவத்தில் தங்கினாலும், 2-வது பாவத்தைத் தனித்தனியாக அல்லது ஒன்றுகூடி பார்த்தாலும் பணநாசம் ஏற்படும். தேய்பிறைச் சந்திரன் 2-வது பாவத்தைப் பார்த்தால் விசேஷமாக பணநாசம் உண்டாகும்.

2-வது பாவத்தில் சுபகிரகங்கள் தங்கினால் பலவிதமாக பணத்தை அளிப்பார்கள். அசுபகிரகங்கள் பணநாசத்தைச் செய்வார்கள். சுபகிரகங்களும், அசுபகிரகங்களும் கலந்து இருந்தால் சுபகிரகத்தின் தசையில் பணப்பெருக்கத்தையும், அசுப கிரகத்தின் தசையில் பண நாசத்தையும் செய்வார்கள்.

(1) செவ்வாயும், புதனும் ஒன்றுகூடி 10-வது பாவத்தில் தங்கினால் ஞானம், ஐசுவர்யம், பராக்கிரமச் செயல்கள் உண்டாகின்றன. *(2)* ஞாயிறும், செவ்வாயும் ஒன்றாகத் தங்கினால் ஏழையும், அதிக சூரனும் ஆவான்.

(1) சனியுடன் கூடிய ஞாயிறு 2-வது பாவத்தில் தங்கினால் பணம் குறைந்துகொண்டேவரும். *(2)* தேய்பிறைச் சந்திரன் புதனால் பார்க்கப்பட்டு 2-வது பாவத்தில் தங்கினால் பூர்வீகமான பணத்தை நாசம் செய்து வேறு பணமும் வராதபடி தடுத்துவிடுவான்.

மதியினால் பார்க்கப்பட்ட வெள்ளி 2-வது பாவத்தில் தங்கினால் நிறைய பணம் கிடைக்கும். மதியினாலும் வேறு சுபகிரகங்களாலும் பார்க்கப்பட்ட வெள்ளி எப்பொழுதும் பணத்தை அளிப்பான்.

(1) வெள்ளியுடன் கூடிய வியாழன் 2-வது பாவத்தில் தங்கினால் பூர்வீக சொத்துள்ள அழகனான ஞானி ஆகிறான்.

(2) புதனால் பார்க்கப்பட்ட வியாழன் 2-வது பாவத்தில் தங்கினால் பணத்தைப் பறிப்பான். (3) மதியினால் பார்க்கப்பட்ட புதன் எல்லா பணத்தையும் பறிப்பான்.

க்ஷீணமதி 2-வது பாவத்தில் தங்கினால் சனியின் பலனைப்போல் அறியவும்.

ராகுவுடன் கூடிய மதி 2-வது பாவத்தில் தங்கினால் எல்லா விதத்திலும் ஏழையாவான்.

வெள்ளியினால் பார்க்கப்பட்ட மதி 2-வது பாவத்தில் தங்கினால் நிறைய பணமுள்ளவனும், பணத்தைத் தானம் செய்பவனும் ஆவான். புதனாலும், சுபகிரகங்களாலும் பார்க்கப்பட்ட மதி 2-வது பாவத்தில் தங்கினால் பணம் உண்டாகும்

முதல் அத்தியாயத்தில் ராசிகளுக்கு இருப்பிடம், தொழில் முதலியவைகள் சொல்லப்பட்டன. 2-வது பாவத்தின் அதிபதி எந்த ராசியில் தங்கியிருக்கிறானோ, அந்த ராசிக்குரிய தொழிலினால் பணலாபம் ஏற்படும். 2-வது பாவத்திலேயே தங்கியிருப்பின் எல்லா திசைகளிலும் பணலாபம் ஏற்படும்.

ஸ்வகரோத்ஸர்ஜன காலத்தின் ஞானம்

லக்னத்திற்கு ஆத்மா, சரீரம், ஹோரை, கல்யாணம், லக்னம், மூர்த்தி என்ற பெயருண்டு.

7-வது பாவத்திலிருந்து 12 ராசிகளில் கீழ்க்கண்ட கிரகங்கள் இருந்தால் பணத்தை அளிப்பார்கள்.

7-வது பாவத்திலிருந்து லக்னம் வரை வரிசையாக புதன், செவ்வாய், ஞாயிறு, சனி, வெள்ளி, சனி, வியாழன் என்ற 7 கிரகங்கள் லக்னத்திலிருந்து 2-வது பாவத்தில் ஞாயிறும், 3-வது பாவத்தில் மதியும் மீதியான பாவங்களில் அந்தந்த பாவாதிபதிகளும் தங்கியிருந்தால் ஸ்வகரோத்ஸர்ஜனம் எனப்படுகிறது.

ஸ்வகரோத்ஸர்ஜன பலன்

மேற்கூறிய ஸ்வகரோத்ஸர்ஜனமானது 1, 6, 8, 12-வது பாவாதிபதிகளின் தசையில் ஏற்பட்டால் தாய், உறவினர்கள், மனைவி இவர்களின் மரணம் உண்டாகும். 2, 11-வது பாவாதிபதிகளின் தசைகளிலும் ஏற்பட்டால் பண லாபமும், எல்லா காரியங்களிலும் வெற்றியும் உண்டாகும். 3, 9-வது பாவாதிபதிகளின் தசைகளில் உண்டானால் சகோதர நாசமும், வயல், பணம், தான்யம் முதலிவைகளின் பெருக்கமும் உண்டாகும். 4, 8-வது பாவாதிபதிகளின் தசையில் உண்டானால் எல்லா காரியங்களிலும் பிரவிருத்தியும், பணம், பந்துக்கள், சேவகர்கள் இவர்களின் பிராப்தியும் உண்டாகும். 5, 7-வது பாவாதிபதிகளின் தசைகளில் ஏற்பட்டால் சகோதரர்கள் மனைவி முதலிய உறவினர்களை அடைவான். இதில் சந்தேகமே இல்லை.

தனலாப யோகங்களும் - தனநாச யோகங்களும்

(1) 11-வது பாவத்தின் அதிபதி கிரகம் 6, 8, 12-வது பாவத்தில் தங்கினாலும், (2) வியாழன் 12-வது பாவத்தில் தங்கியிருந்து 2-வது பாவத்திற்குப் பலமில்லாதிருந்து, லக்னத்திற்குச் சுபகிரகப் பார்வை இல்லாவிடினும் பணநாசம் ஏற்படும்.

(1) 2-வது பாவத்தின் அதிபதி கிரகம் 11-வது பாவத்திலும், 11-வது பாவத்தின் அதிபதி கிரகம் 2-வது பாவத்திலும் இருந்தாலும், (2) அவ்விருவரும் 1, 4, 7, 10 பாவங்களில் தங்கினாலும் பண லாபம் ஏற்படும்.

(1) 2, 9-வது பாவங்களின் அதிபதி கிரகங்கள் 1, 4, 7, 10-வது பாவங்களில் அல்லது 9-வது பாவத்தில் தங்கியிருந்து, 2-வது பாவத்திற்கு சுபகிரகங்களின் பார்வை ஏற்பட்டால் பணத்தின் லாபம் உண்டாகும்.

2-வது பாவம், அதன் அதிபதி இவ்விருவரிடமிகுந்து 11-வது பாவத்திற்கு அதிக பலம் ஏற்பட்டு லக்னத்திற்குச் சுபகிரகத்தின் பார்வை உண்டானால் தனலாபம் உண்டாகும்.

2 அல்லது 11-வது பாவங்களின் அதிபதி கிரகங்கள் தனது உச்ச ராசியில் அல்லது தனது ராசியில் அல்லது மித்ர ராசியில் தங்கியிருந்து 1, 4, 5, 7, 9, 10-வது பாவங்களில் தங்கினாலும் தனத்தின் லாபம் உண்டாகும் என்று சொல்லவும்.

1, 3, 4, 5, 7, 9, 10-வது பாவங்களில் தனது ராசி அல்லது மித்ர ராசி அல்லது உச்ச ராசிகளில் 2-வது பாவத்தின் அதிபதி தங்கினால் தனலாபம் ஏற்படும்.

(1) 2-வது பாவத்தின் அதிபதி கிரகம் 2-வது பாவத்தில் தங்கினாலும், (2) தனது ராசி அல்லது தனது மித்ர ராசி அல்லது தனது உச்ச ராசி அல்லது ஒரு சுபகிரத்திலிருந்து 2-வது பாவம் இவைகளில் தங்கியிருந்து 1, 4, 5, 7, 9, 10-வது பாவங்களில் தங்கினாலும், (3) 1, 4, 5, 7, 9, 10-வது பாவங்களின் அதிபதி களால் பார்க்கப்பட்டாலும் நியாயமான மார்க்கத்தினால் தனம் ஏற்படும்.

(1) 2-வது பாவத்தின் அதிபதி கிரகம் 6, 8, 12-வது பாவங்களில் தங்கினாலும், (2) 6, 8, 12 பாவங்களின் அதிபதிகளால் பார்க்கப்பட்டாலும், (3) தனது நீச ராசி அல்லது சத்ரு ராசிகளில் தங்குதல் அல்லது அந்த ராசிகளின் பார்வை களோடு கூடியிருந்தாலும், (4) பலமில்லாதிருந்தாலும் ஏழையாகிறான். கண் ரோகம் உள்ளவனும் ஆகிறான்.

(1) 2-வது பாவத்தின் அதிபதி கிரகம் தனது உச்ச ராசி அல்லது மித்ர ராசியில் தங்கியிருந்து ஒரு சுபக்கிரகம் தனது ராசி அல்லது வர்கோத்ம நவாம்சத்தில் தங்கினால் 2-வது பாவத்தின் அதிபதியின் தசாபுத்தி காலத்திலும், (2) 2-வது பாவத்தின் அதிபதி கிரகம் தங்கின ராசியிலிருந்து 11-வது ராசியின் அதிபதியின் மித்ர கிரகம் தனது உச்ச ராசி அல்லது வர்கோத்தம நவாம்சம் அல்லது 2-வது பாவத்தில் தங்கினால் அவன் தசாபுத்தி காலத்தில் நிச்சயம் தனம் கிடைக்கும்.

2-வது பாவத்தின் அதிபதி கிரகம் 6, 8, 12-வது பாவத்திலும், 2-வது பாவத்தின் அதிபதி தங்கிய ராசியின்

அதிபதி கிரகம் 2-வது பாவத்தின் அதிபதி தங்கியுள்ள ராசியில் இருந்து 6, 8, 12-வது ஸ்தானத்தில் தங்கினாலும், 2-வது பாவத்தின் அதிபதி கிரகத்தின் தசையில் தனநாசம் ஏற்படும்.

2-வது பாவம் கண் நிலைமையைக் குறிக்கும். 8, 6, 2, 12-வது பாவங்களில் வரிசையாக ஞாயிறு, மதி, செவ்வாய், சனி கிரகங்கள் தங்கினால் இவர்களில் அதிக பலமுள்ள கிரகத்திற்கு முதல் அத்யாயத்தில் சொல்லப்பட்ட வாதம், கபம், பித்தம் என்ற தோஷங்களினால் ஏற்பட்ட ரோகங் களினால் கண் போய்விடும்.

குறிப்பு :- ஸாராவளி கிரந்தத்தில் 8, 6, 2, 12-வது பாவங்களில் வரிசையாக ஞாயிறு, மதி, செவ்வாய், சனி தங்கி இருந்தால் இந்த யோகம் சொல்லப்படுகிறது.

இந்த அத்யாயத்தின் தொடக்கத்திலும் இந்த செய்யுட்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதனால் இவைகளின் வியாக்யானத்தை அங்கே பார்க்கவும்.

(1) 2-வது பாவத்தின் அதிபதி கிரகம் 6, 12-வது பாவத்திலும், 12-வது பாவத்தின் அதிபதி கிரகம் 2-வது பாவத்திலும் தங்கினாலும், (2) 11-வது பாவத்தின் அதிபதி கிரகம் 6, 8, 12-வது பாவத்தில் தங்கினாலும் தனநாசம் ஏற்படும்.

வியாழன் 12-வது பாவத்தில் தங்கியிருந்து 2-வது பாவத்தின் அதிபதி கிரகத்திற்கு பலமில்லாதிருந்து லக்னத்திற்கு சுபக்கிரகத்தின் பார்வை இல்லாவிடில் கட்டாயம் தனநாசம் ஏற்படும்

பூர்வபாராசர்யத்தில் த்விதீயாபாவசிந்தா என்னும்
பதினோறாவது அத்தியாயம் முற்றும்.

பன்னிரண்டாவது அத்தியாயம்

3-வது பாவத்திலுள்ள கிரகங்களின் பலன்

3-வது பாவத்தில் ஞாயிறு தங்கியிருந்தால் பராக்கிரமம், நண்பர் மூலம் தனம், தானம் செய்யும் தன்மை இவைகளோடு கூடியவன் ஆவான் என்று சிலர் சொல்கிறார்கள்.

ஞாயிறு 3-வது பாவத்தில் தங்கினால் பராக்கிரமம் உள்ளவனும், வலிமை உள்ளவனும், உடன் பிறந்தவைர்களை இழந்தவனும், ஞானியும், அழகனும், எல்லோருக்கும் வேண்டியவனும், சத்ருவின் கூட்டத்தை வென்றவனாயும் பிறப்பான்.

3-வது பாவத்தில் பலமுள்ள மதி தங்கினால் ஜாதகனை எல்லா சகோதரர்களும் அண்டியிருப்பார்கள். சந்தோஷம், சௌகரியம், அகம்பாவம் இவைகள் உள்ளவனாவான். வித்தை, ஆடை, தான்யம் இவைகளை எப்பொழுதும் ஸம்பாதிக்க முயன்றுகொண்டே இருப்பான்.

3-வது பாவத்தில் செவ்வாய் தங்கியிருப்பின் சூரனும் யாராலும் அசைக்கமுடியாதவனும், சகோதரர்கள் இல்லாதவனும், சந்தோஷமுள்ளவனும், எல்லா குணங் களுக்கும் உரியவனும், புகழ்பெற்றவனும் ஆவான்.

3-வது பாவத்தில் புதன் தங்கினால் மறைகளில் அன்புடையவனும், அதன்படி நடப்பவனும், பிறரால் திரஸ்காரம் செய்யப்பட்டவனும், எல்லா காரியங்களிலும் சாமர்த்தியம் உள்ளவனும், ஸகோதரர்களுள்ளவனும், கபடம் மிகுந்தவனும், சபலத் தன்மை உடையவனும் ஆவான்.

வியாழன் 3-வது பாவத்தில் தங்கினால் எல்லோராலும் திரஸ்கரிக்கப்பட்டவனும், சகோதரர்களாலும், பெண்களாலும் தோற்றகடிக்கப்பட்டவனும், உலோபியும், பசி இல்லாதவனும், பாவச் செயலில் ஈடுபட்டவனும் ஆவான்.

3-வது பாவத்தில் தங்கின வெள்ளி சுகத்தையும், தனத்தையும், சௌபாக்யத்தையும் அனுபவிப்பதற்கு வேண்டிய சௌகரியமில்லாதவனுக்கும் தற்செயலாக அவைகளை அளித்து தனத்தை அள்ளி தானம் செய்யும் தன்மையையும் அளிக்கிறான். பெண்களிடமிருந்து பராஜயத்தையும், தைரியத்தையும் குறைந்த உற்சாகத்தையும் அளிக்கிறான்.

3-வது பாவத்தில் சனி தங்கியிருப்பின் இயற்கையாக மேனி மலினமாயிருந்தாலும், செயற்கை சாதனத்தினால் அலங்கரித்துக்கொண்டே இருப்பவனும், நீசனும், சோம்பேறியான பரிஜனங்கள் உள்ளவனும், சூரனும், பெண்டாட்டியின் ஆணைக்கு இணைங்கியவனும் அதிக தனமுள்ளவனும், அதிக புத்தி உள்ளவனும் ஆவான்.

3-வது பாவத்தில் கேது தங்கினால் அற்ப தனமுள்ளவனும், நல்ல குலத்தில் பிறந்தவனும், சகோதரர்களை இழந்தவனும், பெரிய மனிதர்களின் அடிமையும் ஆகிறான்.

3-வது பாவத்தில் ராகு தங்கினால் தீர்க்காயுஸ், தன்மானம், ஸாதுஸ்வபாவம், நல்ல அதிகாரம், சில சமயங்களில் அதிகக் கொடுமை, தனம், உலகப்புகழ், முகரோகம், கொடூர வார்த்தை, அதிகபுத்தி, சபலஸ்வபாவம், புகழ்ச்சி, விகாரஸ்வரம் விகாரமான அவயவங்கள், விகாரமான மேனி, தீர்க்காயுள் இவைகள் உள்ளவன் ஆவான்.

3-வது பாவத்தில் கேது தங்கினால் சாதுத்தன்மை எல்லா செயல்களிலும் சூரத்துவம், நல்ல சாமர்த்தியம், பிறரின் வார்த்தைகளைக் கேட்கிற ஸ்வபாவம், தன்னுடைய காரியத்தில் மட்டும் கவனம், சாமர்த்தியமான பேச்சு இவைகள் இதன் பலன் என்று அறியவும்.

3-வது பாவத்தில் 3-வது பாவாதிபதி கிரகத்தின் மித்ர கிரகங்கள் தங்கினால் ஏராளமான பலம் பராக்கிரமம் இவைகளுள்ளவன் ஆவான்.

3-வது பாவாதிபதி கொடிய கிரகமாயிருந்து அதற்கு எல்லா கொடிய கிரகங்களின் சேர்க்கை ஏற்பட்டிருந்தாலும் சகோதர நாசம் ஏற்படும். இதற்கு நேர்மாறாக 3-வது பாவாதிபதி சுபகிரகமாயிருந்து எல்லா சுபகிரகங்களின் சேர்க்கை ஏற்படின் சகோதர விருத்தி ஏற்படும்.

இனிமேல் சகோதரர்கள் எண்ணிக்கையினைச் சொல்லுகிறேன்.

ஸகோதரர்களின் எண்ணிக்கையின் அளவு

3-வது பாவத்தில் அந்த ராசியின் ஆரம்பத்திலிருந்து எவ்வளவு நவாம்சம் கடந்திருக்கின்றதோ அவ்வளவு சகோதரர்கள் என்று அறியவும். 3-வது பாவத்தினை பல கிரகங்கள் பார்க்கின் அதிக எண்ணிக்கையுள்ள சகோதரர்கள் உண்டு என்று அறியவும்.

3-வது பாவத்திலிருந்து மூன்றாவது ராசியும், மூன்றாவது பாவமாக நினைத்து மூன்றாவது பாவத்திற்குரிய பலன் சொல்லவும்.

3-வது பாவத்தில் தங்கியுள்ள கிரகங்களின் எண்ணிக்கையும், சகோதரர்களின் எண்ணிக்கையாகும்.

ஸகோதரரது குணங்கள்

3-வது பாவராசி ரிஷபம் முதலிய யுக்ம ராசியாக இருந்து, அதன் நவாம்ச ராசி மேஷம் முதலிய ஓஜ ராசியாக இருந்தால் பிறந்தவன் ஆணாக இருப்பான், ஆனால் சில காலத்திலேயே இறப்பான்.

வியாழன் 3-வது பாவத்தில் தங்கியிருந்து, வெள்ளி 4-வது பாவஸ்புடத்திலிருந்து தொடர்ந்து 10-வது பாவத்திற்குள் ஏதாவது ஒரு ராசியில் தங்கியிருந்து ரிஷபம் அல்லது துலா நவாம்சத்திலிருந்தால் மறை, சாஸ்திரம், புராணம், காப்பியம், பல அலங்கார நூல்கள், பல மொழிகள் இவைகளைக் கற்றிருப்பான்.

3-வது பாவராசியும், அதன் நவாம்ச ராசியும் மேஷம் முதலிய புருஷ ராசியாக இருப்பின் சகோதரன் புருஷனாகவும், ரிஷபம் முதலிய பெண் ராசியாக இருந்தால் பெண்ணாகவும் கட்டாயம் இருப்பார்கள் என்று அறியவும்.

3-வது பாவராசி அதன் நவாம்ச ராசி இவ்விரண்டில் ஒன்று ஆணாகவும், மற்றொன்று பெண்ணாகவும் இருந்து நவாம்ச ராசி பெண்ணாகவும் இருந்தால் கட்டாயம் பெண்ணாகவும், ஆணாக இருந்தால் கட்டாயம் ஆணாகவும் இருப்பார்கள் என்று அறியவும்.

மதியும், புதனும் தனது ராசியில் 3-வது பாவத்தில் தங்கினால் ஜாதகனின் சகோதரன் பெரிய பணக்காரனாக ஆவான். இவ்விருவரும்கூடி மூன்றாவது ராசியில் தங்கினால் அந்த ராசி ஆண் ராசியாயிருந்தால் பெண் என்றும், பெண் ராசியாயிருந்தால் ஆண் என்றும் கட்டாயம் சொல்ல வேண்டும்.

3-வது பாவத்தில் சனி தங்கியிருந்து அவனுக்கு செவ்வாயின் பார்வை ஏற்பட்டால் சகோதரர்கள் பிறந்து இறப்பார்கள்.

3-வது பாவத்தில் வெள்ளி தங்கியிருந்து வியாழனால் பார்க்கப்படின் உடன்பிறந்தோருக்கு நன்மை ஏற்படும்.

3-வது பாவத்தில் தங்கின சுபகிரகத்தை ஞாயிறு பார்த்தால் மித்ரர்கள் இறப்பார்கள்.

மேஷம் அல்லது கட்கம் அல்லது விருச்சிகம் 3-வது பாவமாக இருந்து அதில் சனி தங்கினால் கட்டாயம் உடன் பிறந்தவர்களில் ஆண்கள் இறந்து கடைசியில் பெண்களும், பணமும் மீதமாவார்கள்.

3-வது பாவராசி ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் என்ற ஸ்திர ராசியாக இருந்து அதில் வெள்ளி தங்கினால் உடன்பிறந்தோரால் ஜாதகனுக்கு எப்போதும் துக்கமும், பிறருக்கு நன்மையும் உண்டாகும். உடன்பிறந்தவர்களில் சின்னவன் ஆண் என்று அறியவும்.

3-வது பாவராசியில் மூன்று அல்லது அதற்கு அதிகமான கிரகங்கள் தங்கினால் மேற்கூறிய கிரகங்கள் தனித்தனியே தங்குகையில் ஏற்பட்ட பலனுக்கு நேர்மாறான பலன் அதிகமாகக் கிடைக்கும். 3-வது பாவராசி சிம்மமாயிருப்பின் அப்படியே நேர்மாறான பலன் கிடைக்கும்.

3-வது பாவராசி மேஷம் முதலிய ஓஜராசியாயிருந்தால் உடன்பிறந்தவர்கள் ஆணாகவும், ரிஷபம் முதலிய யுக்ம ராசியாக இருந்தால் பெண்ணாகவும் இருப்பார்கள். மூன்றாவது பாவத்தில் எந்த கிரகமும் இல்லாவிட்டால் மூன்றாவது ராசியிலுள்ள திரேக்காணங்களைக் கொண்டு உடன்பிறந்தவர்களின் சமாசாரத்தை அறியவும்.

3-வது பாவத்தில் கொடிய கிரகம் தங்கினால் நற்பலனையும், சுபகிரகம் தங்கினால் ஸ்வல்ப பலனையும் அளிப்பார்கள். பூர்ணமதி சுய உச்சம், சுய ராசி, மித்ர ராசி, மித்ர நவாம்சம் இவைகள் தங்கினால் எல்லா காலங்களிலும் நற்பலன் அளிப்பான்.

3-வது பாவத்திற்கு துச்சிக்யம், சகஜம், பராக்கிரமம், சகோதரன், ஸஹோத்துவம் என்று பெயருண்டு. 3-வது பாவத்திற்கு வெள்ளி, சனி, மதி, புதன், ஞாயிறு, செவ்வாய் என்ற ஆறு கிரகங்கள் வரிசைக் கிரமமாக அதிகமான

ஆதிபத்தியமுள்ளவர்கள் (காரகர்கள்) என்று அறியவும். வெள்ளியைவிட சனியும், சனியைவிட மதியும், மதியைவிட புதனும், புதனைவிட ஞாயிறும், அவனைவிட செவ்வாயும் அதிகமான காரகத்துவம் உடையவர்கள் என்று அபிப்ராயம்.

3-வது பாவத்தின் அதிபதியும், 3-வது பாவத்தின் காரகனும் 1, 2, 4, 5, 7, 9, 10, 11-வது பாவங்களில் தங்கினாலும் அந்த பாவங்களின் அதிபதிகளினால் பார்க்கப்பட்டாலும் உடன்பிறந்தவர்களின் லாபம் உண்டாகும்.

3-வது பாவத்தின் அதிபதியும், காரகனும் 6, 8, 12-வது பாவத்தில் அல்லது அவைகளின் நீச ராசி அல்லது சத்ரு ராசிகளில் தங்கினாலும் அந்த ராசிகளின் அதிபதிகளினால் பார்க்கப்பட்டாலும் சகோதர நாசம் ஏற்படும்.

(1) 3-வது பாவத்தின் அதிபதி தங்கின ராசியும், 3-வது பாவராசியும், பெண் ராசியாக இருந்தாலும், (2) அவ்விரு ராசிகளிலும் பெண் கிரகம் தங்கியிருந்து, அதற்கு பெண் கிரகத்தின் பார்வை அல்லது சேர்க்கை ஏற்பட்டிருந்தாலும், (3) 3-வது பாவத்தின் அதிபதி பெண்ணாக இருந்து பலமுள்ளதாக இருந்தாலும் பெண்கள் உடன்பிறந்தவர்களாக இருப்பார்கள்.

(1) 3-வது பாவத்தின் அதிபதி கிரகம் பிறரோடு கூடாமல் தனியாக அஸ்தமனமடைந்து 3-வது பாவத்தில் அல்லது 6, 8, 12வது பாவங்களில் அல்லது நீச ராசியில் தங்கினால், (2) 3-வது பாவத்தில் தங்கியுள்ள கிரகம் அஸ்தமனமடைந்திருந்தாலும், நீச ராசி அல்லது சத்ரு ராசியில் தங்கினாலும் கொடிய கிரகத்துடன் கூடியிருந்தாலும், (3) 6, 8, 12-வது பாவாதிபதிகள் அல்லது அஸ்தமனமடைந்த அல்லது நீச ராசி, சத்ரு ராசிகளில் தங்கியுள்ள கிரகங்கள் இவர்களால் பார்க்கப்பட்டாலும், உடன்பிறந்தோர்கள் கிடையாது.

(1) சகோதர காரக கிரகம் அஸ்தமனமடையாமல் 1, 2, 4, 5, 7, 9, 10, 11-வது பாவங்களில் தங்கினாலும், (2) 1, 2, 4, 5, 7, 9,

10, 11-வது பாவங்களின் அதிபதிகளின்சேர்க்கை அல்லது பார்வை உள்ளவனாயிருந்தாலும், (3) தனது ராசி, மித்ர ராசி, தனது உச்ச ராசி அல்லது சுபகிரகத்தின் ராசி இவைகளில் தங்கினாலும் உடன் பிறந்தவர்களுடன் கூடியிருப்பான்.

3-வது பாவத்தின் அதிபதி கிரகம் சுபகிரகத்தின் ராசி அல்லது தனது உச்ச ராசி அல்லது தனது மித்ர ராசியில் தங்கி இருந்து 1, 2, 4, 5, 7, 9, 10, 11-வது பாவங்களில் தங்கினாலும், சத்ரு கிரகத்துடன் கூடி இருந்தாலும்; அது தங்கியுள்ள ராசியின் அதிபதி கிரகத்தின் பார்வை அல்லது சேர்க்கையோடு கூடி 1, 2, 4, 5, 7, 9, 10, 11-வது பாவங்களில் தங்கினாலும், எவ்வளவு கிரகங்களுடன் சேர்க்கை 3-வது பாவத்தின் அதிபதிக்கு உண்டோ அவ்வளவு உடன்பிறந்தவர்கள் என்று அறியவும்.

3-வது பாவத்தின் அதிபதியும், சகோதர காரக கிரகமும், 3-வது பாவ ராசி இம்மூன்றும் புருஷ ராசியாக இருந்தாலும், இம்மூன்றின் அதிபதிகளும் ஆண் கிரகங்களாக இருந்தாலும், இம்மூன்றில் தங்கின கிரகங்கள் சுபகிரகங்களின் ராசிகளில் அல்லது மித்ர கிரகங்களின் ராசிகளில் அல்லது தனது உச்ச ராசியில் அல்லது 1, 2, 4, 5, 7, 9, 10, 11-வது பாவங்களில் தங்கினாலும் அல்லது பாவாதிபதிகளால் பார்க்கப்பட்டாலும் உடன்பிறந்தோர் ஆண்களாக இருப்பார்கள்.

மேற்கூறிய மூன்று ராசிகளில் தங்கின பிற கிரகங்களும், தனது ராசி அல்லது தனது உச்ச ராசி அல்லது மித்ர ராசி 1, 2, 4, 5, 7, 9, 10, 11-வது பாவங்கள் இவைகளில் புருஷ ராசிகளில் தங்கினாலும் உடன்பிறந்தோர்கள் ஆண்களாக இருப்பர்.

3-வது பாவத்தின் அதிபதி, சகோதர காரகன், மூன்றாவது பாவத்தில் தங்கின கிரகம் இம்மூன்றில் சில பெண் கிரகங்களாகவும், சில ஆண் கிரகங்களாகவும் இருந்தாலும் 3-வது பாவ ராசியின் அதிபதி தங்கின ராசி 3-வது பாவராசி இவைகளில் ஒன்று பெண் ராசியாக இருந்து, மற்றொன்று ஆண் ராசியாக இருந்தாலும், உடன்பிறந்தவர்களில் ஆணும், பெண்ணும் சமமாக இருப்பார்கள்.

3-வது பாவத்தின் அதிபதி ஆணாக இருந்து, ஆண் ராசியில் தங்கிய அந்த ஆண் ராசியின் அதிபதி கிரகம் ஆண் ராசியின் அதிபதியாகவும், ஆண் ராசியிலும், ஆண் கிரகத்தின் ராசியிலும் தங்கியிருந்தால் உடன் பிறந்த பெண் இறப்பாள்.

3-வது பாவத்தில் தங்கின சகோதரகாரக கிரகம், 3-வது பாவத்தின் அதிபதி, கிரகம் இம்மூவரும் 6, 8, 12-வது பாவங்களில் அல்லது தனது நீச ராசியில் தங்கினாலும் அல்லது அஸ்தமனமடைந்தாலும், கொடிய கிரகத்தின் சேர்க்கை ஏற்பட்டாலும் சகோதரர்கள் பிறக்கவே மாட்டார்கள். பிறந்தாலும் சில காலம் உயிரோடு இருந்து பிறகு இறப்பார்கள்.

3-வது பாவத்தை சகோதரனின் ஜன்ம லக்னமாகக் கற்பனை செய்யவேண்டும். அதிலிருந்து அடுத்துள்ள 12 பாவங்களைச் சகோதரனின் 2, 3 முதலிய 12 பாவங்களாக நினைக்கவேண்டும். அவைகளில் இருந்து அந்தந்த பாவப் பொருட்களின் விஷயத்தை அறியவும். இப்படியே எல்லா பாவங்களின் சம்பந்தமுள்ள எல்லா பொருட்களையும் அறியவும். அதை அடுத்த சில செய்யுட்களினால் விரிவுபடுத்துகிறார்.

3-வது பாவம் சகோதரனின் லக்னபாவம் என்று அறியவும். அதிலிருந்து உடன்பிறந்தவனின் நிறம், மேனியிலுள்ள வடு முதலியவை; ஜாதி, கஷ்டம், சுகம், ஆயுள், வயது, அளவு இவைகளை அறியவும்.

4-வது பாவம் சகோதரனின் 2-வது (தன)பாவம். அதிலிருந்து சகோதரனுக்குரிய தங்கம், வெள்ளி, எல்லா தாதுக்கள், ரத்தினங்கள் இவைகளை அறியவும்.

5-வது பாவம் சகோதர பாவத்திற்கு சகோதர பாவம் என்று அறியவும். அதிலிருந்து சகோதரனுக்குரிய சகோதரன் (தம்பி), தங்கை இவ்விருவருக்கும் சம்பந்தப்பட்ட செயல்கள் இடறுவது சந்தேகம் முதலியவைகளை அறியவும்.

6-வது பாவம், 3-வது பாவத்திற்கு சுகஸ்தானம் என்று அறியவும். அதிலிருந்து பூமி, வீடு, வயல், பணம், நீதி, தந்தை சம்பாதித்த சொத்து இவைகளை அறியவும்.

7-வது பாவம், 3-வது பாவத்திற்குப் புத்திரஸ்தானம் என்று அறியவும். அதிலிருந்து உடன்பிறந்தவனின் சக்தி, குழந்தைகள், இருப்பிடம், சிந்தை, மந்திர ஞானம், பணம் சம்பாதிக்கும் வழி, கர்பம், வித்தை, புத்தி முதலியவை, ஜீவ ஸ்வரூபம், நாற்காலி, பிராணிகள், தாய் மாமன் குலம், பந்துக்கள் இவைகளை அறியவும்.

8-வது பாவம், 3-வது பாவத்திற்குச் சத்துரு பாவம் என்று அறியவும். அதிலிருந்து சகோதரனின் உடம்பிலுள்ள புண், வடு முதலியவைகளை அறியவும்.

9-வது பாவம், 3-வது பாவத்திற்கு 7-வது பாவம் என்று அறியவும். அதிலிருந்து உடன்பிறந்தவனின் விற்றல், வாங்கல், தொழில், கைவிட்டுப்போன பொருளின் லாபம். ஹாஸ்யமாக பேசும் தன்மை, திவீபங்கள், பிற்காலத்தைப் பற்றிய ஞானம், மறதி, மனைவி வழி இவைகளை அறியவும்.

மேற்கூறிய 3-வது பாவத்திற்கு 7-வது பாவத்தில் கொடிய கிரகங்கள் தங்கினால் அந்த பாவத்திற்குரிய எல்லா பொருட்களுக்கும் நன்மை இல்லை என்றும், சுப கிரகங்கள் தங்கினால் நன்மை என்றும், சுபகிரகங்களும், கொடிய கிரகங்களும் கலந்திருப்பின் சுபகிரக தசையில் நன்மை என்றும், கொடிய கிரக தசையில் கெடுதல் என்றும் அறியவும்.

இந்த நியாயம் 3-வது பாவத்திலிருந்து தொடர்ந்து 12 பாவங்களுக்கும் பொருந்தும் என்றும் அறியவும்.

10-வது பாவம், 3-வது பாவத்திற்கு 8-வது பாவமாகும் என்று அறியவும். அதிலிருந்து உடன்பிறந்தவனின் மரணம், பழைய பொருள், நிம்மதியின்மை, தாபம் இவைகளை அறியவும்.

6, 8-வது பாவங்களிலிருந்து பொதுவாக சத்ரு விக்னம், சேவகர்கள், கைவிட்டுப்போன பணமும், பொருளும், பிரவேசம் செல்லமுடியாத காடு, கோட்டை முதலிய இடங்கள் இவற்றை அறியவும்.

11-வது பாவம், 3-வது பாவத்திற்கு 9-வது பாவம் என்று அறியவும். அதிலிருந்து உடன்பிறந்தவன் பலவழிகளில் தர்மோபாயங்களை செய்கிறான் என்று அறியவும்.

12-வது பாவம், 3-வது பாவத்திற்கு 10-வது பாவம் என்று அறியவும். அதிலிருந்து உடன்பிறந்தவனின் முத்திராதிகாரம், பட்டணம், புண்ணியம், மழை, தங்கம், வெள்ளி நீங்கலாக மற்ற உலோகங்களும், மற்றவைகளும், கன்னிகைக்கு நாயகன், நாற்சந்தியிலுள்ள வீடு முதலிய எல்லா பொருட்களின் குவிதல் இவைகளை அறியவும்.

லக்ன பாவம் 3-வது பாவத்திற்கு லாப பாவம் என்று அறியவும். அதிலிருந்து உடன்பிறந்தவனின் எல்லாவிதமான லாப வழிகள், ராஜதிரவியம், ராஜ வம்சத்துடன் நட்பு, ராஜ திரவியம் உள்ள கஜானா, ராஜனுடைய பரிவார ஜனங்கள் இவைகளை அறியவும்.

2-வது பாவம், 3-வது பாவத்திற்கு 12-வது பாவம் என்று அறியவும். அதிலிருந்து உடன்பிறந்தவனின் கண், விரோதம், துன்பம், செலவு, பாபம் (நாசம்) இவைகளை அறியவும்.

மேற்கூறிய39 - 46 செய்யுட்களில் சொன்ன வழியை ஒவ்வொரு பாவங்களிலிருந்தும் தொடர்ந்து 12 பாவங்களில் பின்பற்றவேண்டும் என்று அறியவும்.

கிரகங்களின் காரகத்துவம்

மேலே கிரகங்களின் காரகத்துவம் சொல்லப்படுகிறது. லக்னம் முதலிய பாவங்கள் தங்கின கிரகங்களின் ஸ்வபாவம் அந்த பாவத்திற்குரிய பொருட்களுக்கு ஏற்படும்.

மனிதன் கொடியவன், காட்டில் வசிப்பவன், உச்சிகாலம், பித்தம், திக்தரஸம் (துவர்ப்பு), செடியிலிருந்து மரம் வரையிலுள்ள மூலப்பொருட்கள், அரசன், நாற்சந்தி, நாற்கோணாகாரம், கடும் வெய்யில், வெளுப்பு நிறம், கிழமை இவைகளுக்குக் காரகன் ஞாயிறு என்று அறியவும்.

சுபகாரியங்கள், ஜல பிராணிகள், வெளுப்பு நிறம், நல்ல மனிதர்கள், கபம், தாதுப் பொருட்கள், உப்பு, ஜலபூமி, தபஸ்வி, ராஜஸ குணமுள்ளவன், ஸ்தூலமேனி, பாம்பு, வைசிய ஜாதி, கிழமை இவைகளுக்கு மதி காரகன் என்று அறியவும்.

தருண வயதுள்ள வாலிபன், கொடுமை, காட்டு மனிதன், பித்தம், முள், தாதுப்பொருள், ரத்தம், தங்கம், நாற்கால் பிராணிகள், ஒட்டகம், நாற்கோணாகாரம் இவைகளுக்கு செவ்வாய் காரகன்.

பெண், சுபப்பொருள், கிராமத்தில் வசிப்பவன், பிரதாபகுணம், சமமான வடிவம், தாதுப்பொருள், ஜீவப் பொருள், எல்லா ரஸங்கள், பறவை, நீல நிறம், சூத்திரன், தந்தையின் பணம், தங்கம், ஜலம், வட்டமேனி, முயல் இவைகளுக்குப் புதன் காரகன்.

மனிதன், சுபப்பொருள், கிராமத்தில் கீர்த்தியால் பிரகாசிப்பவன், தீவு, பார்ப்பனன், ஜீவப்பொருள், மதுர ரஸம், ஸமமேனி, தாதுப்பொருள், பலநிறம், இரத்தம், கோயில், வைசிய ஜாதி, வட்டவடிவம், மந்திரி இவைகளுக்கு வியாழன் காரகன் என்று அறியவும்.

பெண், சுபப்பொருள், ஜலம், சுகந்தப்பொருள், மூலப் பொருள், மாலை, கபம், வெளுப்பு நிறம், காப்பியங்கள், பளபளப்பான மேனி, தேன், தீவு, ரதிக்கிரீடையில் விசேஷ ஞானம், மத்திம வயது இவைகட்கு வெள்ளி காரகன் என்று அறியவும்.

பெண், கொடுமை, நடுக்காடு, சுரங்கத்தில் சுற்றுதல், துர்பாக்கியம், தாதுப்பொருட்கள், சூத்ரஜாதி, வெகு நீண்ட ஆயுள், கிழமை, வெளிப்புறத்திலுள்ள சுரங்கம் இவைகளுக்கு சனி காரகன் என்று அறியவும்.

சகோதரன் சத்ருவாகிற யோகம்

(1) செவ்வாய் பலவீனமாக இருப்பின் ஜாதகனின் சகோதரர்களுக்கு நீண்ட ஆயுள் உண்டு. (2) செவ்வாய் 3-வது பாவத்தில் தங்கினால் சகோதரனே ஜாதகனுக்குச் சத்ரு ஆவான். *(3)* 3-வது பாவத்தில் 6-வது பாவத்தின் அதிபதி தங்கினாலும், 6-வது பாவாதிபதியும், 5-வது பாவாதிபதியும் ஒன்றுகூடி இருந்தாலும் சகோதரனே அவனுக்குச் சத்ரு ஆகிறான்.

பலவிதமான சகோதர யோகங்கள்

3-வது பாவத்தின் அதிபதி கிரகம் *1, 6, 8, 12*-வது பாவத்தில் தங்கியிருந்து, அவனுக்கு அஸ்தமனமும் ஏற்பட்டு சுபகிரகத்தின் சேர்க்கை அல்லது பார்வை இல்லாவிடின் சகோதரர்களின் ஆயுள் அற்பமாக இருக்கும்.

(1) 3-வது பாவத்தின் அதிபதி கிரகம், பெண் கிரகங்களுக்குரிய நவாம்சத்தில் தங்கியிருந்து, பெண் கிரகத்தின் சேர்க்கை அல்லது பார்வை உள்ளவனாக இருந்தாலும், *(2)* ரிஷபம், கடகம் முதலிய சம ராசியுள்ள நவாம்சத்தில் தங்கியிருந்தாலும் ஜாதகனுக்குப் பெண் சகோதரிகள் ஆகிறார்கள். இதில் சந்தேகமே இல்லை.

(1) 3-வது பாவத்தில் மேஷம், மிதுனம் முதலிய ஓஜ நவாம்சம் ஏற்பட்டு, புருஷ கிரகங்களின் சேர்க்கை அல்லது பார்வை இருந்தாலும், *(2)* செவ்வாய்க்கு நாலுக்கு மேலான அஷ்டவர்க்க பிந்துக்கள், *(3)* அல்லது நவாம்ச ராசி மூன்றாவது பாவத்தில் வந்திருந்தாலும், *(4)* செவ்வாய்க்கு அதிகமான கிரணங்கள் ஏற்பட்டாலும் சகோதரர்கள் ஏற்படுகிறார்கள்.

3-வது பாவத்தில் செவ்வாய் அல்லது ராகு தங்கியிருந்து சுபகிரகங்களின் சேர்க்கை அல்லது பார்வை ஏற்பட்டால் சகோதரனின் லாபம் உண்டாகும்.

(1) 3-வது பாவத்தின் அதிபதி கிரகம் சனியினால் பார்க்கப்படின் ஜாதகனின் சகோதரன் ஸ்வீகார புத்திரன் ஆவான். (2) வியாழனின் சேர்க்கை அல்லது பார்வை ஏற்படின் ஜாதகன் தன் சகோதரர்களின் மத்தியில் சிறந்தவனாக விளங்குவான்.

(1) 3-வது பாவமானது கொடிய கிரகத்தின் ராசியாக இருந்து கொடிய கிரகத்தின் சேர்க்கை அல்லது பார்வையோடு கூடியிருந்தாலும், (2) 3-வது பாவத்தின் அதிபதி கிரகம் நீச ராசியில் தங்கியிருந்தாலும், (3) அஸ்தமனமடைந்திருந் தாலும் சகோதரனுக்கு மரணம் உண்டாகும்.

(1) 3-வது பாவத்தின் அதிபதி கிரகம் சுபகிரகங்களின் சேர்க்கை அல்லது பார்வை இல்லதவனாக இருந்து செவ்வாயின் சேர்க்கை அல்லது பார்வை உள்ளவனாய் இருந்தாலும் (2) பலவீனமாக இருந்தாலும் ஜாதகனின் சகோதரன் யுத்தத்தில் மரிப்பான் அல்லது அதிக பலம் பொருந்திய வீர்யசாலியாக இருப்பான். இதில் சந்தேகமே இல்லை.

3-வது பாவத்தின் அதிபதி கிரகம் ஆண் கிரகங்களால் பார்க்கப்பட்டு தனுசு அல்லது மீன ராசியிலும் தனுசு அல்லது மீன நவாம்சத்திலும் எல்லா கிரகங்களும் தங்கியிருதால் இரண்டு சகோதரர்கள் ஏற்படுகிறார்கள். இதில் சந்தேகமே இல்லை. இந்த யோகத்தில் 3-வது பாவத்தின் அதிபதி கிரகத்திற்கு கொடிய கிரகத்தின் பார்வை மட்டும் ஏற்பட்டால் இரு சகோதரர்களும் மரிப்பர். சுபகிரகத்தின் பார்வையும் கொடிய கிரகத்தின் பார்வையும் கலந்திருப்பின் ஒரு சகோதரன் உயிரோடு இருப்பான். மற்றவன் மரிப்பான். இதில் சந்தேகமே இல்லை.

தனுர் ராசியில் 3-வது பாவமும், மூன்றாவது பாவத்தின் நவாம்சமும் ஏற்பட்டால் இரு ஆண் சகோதரர்கள் ஆகிறார்கள். மீன ராசியில் 3-வது பாவமும் அதன் நவாம்சமும் ஏற்பட்டால் இரு பெண் சகோதரிகள் ஏற்படுகிறார்கள். இதில் சந்தேகமே இல்லை.

ரிஷபம் முதலிய யுக்ம ராசியும், யுக்ம நவாம்சமும் மூன்றாவது பாவத்திற்கு ஏற்படின் இரு சகோதரிகளும்; மேஷம் முதலிய ஓஜ ராசியும், ஓஜ நவாம்சமும் ஏற்படின் இரு சகோதரர்களும் பிறக்கிறார்கள்.

(1) மிதுன ராசியில், மிதுன நவாம்சத்தில் மூன்றாவது பாவம் தங்கியிருந்தால் ஒரு சகோதரனும், ஒரு பெண் சகோதரியும் பிறப்பார்கள். (2) கன்னி ராசியில், கன்னி நவாம்சத்தில் 3-வது பாவம் தங்கினால் இரு சகோதரிகளும் பிறப்பர். இந்த இரு யோகங்களில் பிறந்தவர்களில் ஒரு பெண் சகோதரி இறப்பாள்.

3-வது பாவத்தில் சுபகிரக அஷ்டவர்க்க பிந்துக்கள் எவ்வளவு வந்திருக்கிறதோ அவ்வளவு சகோதரர்கள் பிறப்பர் என்று அறியவும்.

பூர்வபாராசர்யத்தில் சகோதர பாவம் என்னும்
பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றும்.

பதிமூன்றாவது அத்தியாயம்

நான்காவது பாவத்தில் தங்கின ஞாயிறு முதலிய கிரகங்களின் பலன்

4-வது பாவத்தில் ஞாயிறு தங்கினால் ஜாதகனுக்குக் குதிரை முதலிய வாகனங்களும், பந்துக்களும், புத்தி கூர்மையும் இருக்காது. மார்வலி உண்டாகும். தந்தை சம்பாதித்த வீடு, பணம் இவைகளின் நாசம் ஏற்படும். துஷ்ட பிரபுவின் சேவை உண்டாகும்.

4-வது பாவத்தில் மதி தங்கினால் ஜாதகனுக்குப் பந்துக்களும், பரிவார ஜனங்களும், வீட்டுக்கு வேண்டிய அவசியப் பொருட்களும், வாகனங்களும், தானம் செய்கிற தன்மையும், சூரத்தன்மையும், தனது கௌரவமும் இருக்கும். வித்தை, வஸ்திரம், அன்னம் இவைகளை எப்பொழுதும் சம்பாதிக்கும் சீலமுண்டு. ஜலத்தில் படகு முதலிய ஸாதனங்களைக் கொண்டு சஞ்சரிப்பதில் ஈடுபாடுடையவன் ஆகிறான். சுகமோ, துக்கமோ அளவுக்குமீறி அதிகம் உண்டாகாது.

4-வது பாவத்தில் செவ்வாய் தங்கினால் ஜாதகனுக்கு பந்துக்களும், வீட்டுக்கு வேண்டிய அவசியப் பொருட்களும், குதிரை முதலிய வாகனங்களும் இருக்கமாட்டாது. கொடிய துன்பத்தினால் தத்தளிப்பும், பிறரின் வீட்டிலேயே எப்பொழுதும் வாசமும் உண்டாகும். சொந்த வீடு கிடைக்காது.

4-வது பாவத்தில் புதன் தங்கினால் ஜாதகன் நல்ல அறிவோடு பேசுகின்ற பேச்சாளனாகவும், நல்ல அழகனும், வாகனங்களும், வீட்டுக்கு வேண்டிய நற்பொருட்களும், நல்ல நண்பர்களும் உள்ளவனும் ஆவான்.

4-வது பாவத்தில் வியாழன் தங்கினால் ஏராளமான குழந்தைகளும், நண்பர்களும், வைபவமும், தனது

ஜனங்களும், வீட்டிற்கு வேண்டிய பொருட்களும், வாகனங்களும், புத்தி கூர்மையும், சுகானுபவமும், பணமும் உண்டாகும். சிறந்த ஞானியும், தைரியமுள்ளவனும், சத்ருக்களுக்குக் கஷ்டத்தை அளிப்பவனுமான சிறந்த மனிதன் பிறக்கிறான்.

4-வது பாவத்தில் வெள்ளி தங்கினால் ஜாதகன் ஏராளமான நண்பர்கள், ஆசையில்லாமல் உபகாரம் செய்கிறவர்கள், சுகம், அழகான மேனி, வாகனங்கள். வீட்டுக்கு வேண்டிய பொருட்கள், தைரியமின்மை, ஸௌபாக்யம் இவைகளோடு கூடியவன் ஆவான்.

4-வது பாவத்தில் சனி தங்கினால் நண்பர்களும், வாகனங்களும், பணமும், புத்தியும், சுகமும் இல்லாதவனாகவும், சிறு வயதி ப ரோகங்களினால் பீடிக்கப்பட்ட மேனியுள்ளவனும், இதயக்கோளாறு உள்ளவனும், நகமும் ரோமமும் மிகுதியாக உள்ளவனுமாக ஜாதகன் பிறப்பான். நீசனும், சோம்பேறியாகவும், ஸேவகனாகவும் ஆகிறான்.

ராகு 4-வது பாவத்தில் தங்கினால் எப்பொழுதும் மலினமான மேனியுள்ளவனும், சண்டையில் ஆசை உள்ளவனும், கெட்ட மனமுள்ளவனும், மூத்த பிள்ளை யாகவும், வக்ரமாகப் பார்ப்பவனும், அதிக உற்சாகம் உள்ளவனாகவும் ஜாதகன் பிறப்பான்.

கேது 4-வது பாவத்தில் தங்கினால் ஜாதகன் புத்தி ஸ்வாதீனம் இல்லாதவனாகவும், பெண்களின் நட்பு, முடிவில்லாத் துன்பம், சகிக்கமுடியாத கொடுமை, பேச்சு வன்மை இருப்பினும் பேச்சுக்கு மதிப்பின்மை, ஸுகானுபவம் இவற்றோடு கூடியவன் ஆகிறான்.

4-வது பாவத்தில் ராகு அல்லது சனி தங்கினால் ஜாதகனுக்குச் சுத்தமான ஆகாரமும், வாயு பிரகிருதியும்,

குழந்தை இன்மையும், நண்பர்கள் குழாத்திற்குத் துன்பமும் யாருமில்லாத வீட்டில் வாசமும், நீண்ட ஆயுளும் உண்டாகும்.

4-வது பாவத்தில் எல்லா கொடிய கிரகங்களும் தங்கியிருப்பின் ஜாதகனுக்கு சுகம் கிடையாது. எல்லா சுபகிரகங்களும் தங்கினால் சுகமும், ஞானமும், பணமும் உண்டாகும். இவ்விஷயத்தில் சந்தேகமே இல்லை.

சத்ரு க்ஷேத்ரமாக அமைந்த நான்காவது பாவத்தில் கொடிய கிரகங்கள் தங்கினால் பந்துக்களால் கைவிடப் பட்டவனும், நீண்ட ஆயுள் உள்ளவனும், தன் குலத்தில் சிறந்தவனும், ஜீவனத்தில் பயனுள்ளவனும் ஆகிறான்.

(1) 4-வது பாவத்தில் புதனும், செவ்வாயும் ஒன்றுகூடி தங்கினால் நண்பர்களுக்கு அபிவிருத்தியும், சத்ருக்களுக்கு நாசமும் உண்டாகும். (2) 4-வது பாவத்தில் செவ்வாயும், சனியும் ஒன்றுகூடினால் யக்ஞங்களில் விருப்பமுள்ள மகாசூரன் பிறப்பான்.

4-வது பாவத்தில் வியாழனுடன் வெள்ளி தங்கினால் மிகுந்த சாஸ்திர ஞானமும், குறைந்த குழந்தைகளும், ராஜனைப் போன்ற நடவடிக்கையும் உண்டாகும்.

(1) 4-வது பாவத்தில் எல்லா கொடிய கிரகங்களும் தங்கினால் துன்பமும், மனைவியின் நாசமும், தனது சமூகத்தில் மேன்மையும் உண்டாகும். (2) சுபகிரகங்கள் தங்கினால் நல்ல சுபாவமும். நல்ல மேனியும், கற்றவனாகவும், யுத்த களத்தைக் கண்டு பயப்படுபவனாகவும் பிறப்பான்.

நான்காவது பாவத்தின் பெயர்களும் கிரகஸ்தானங்களும்

பாதாளம், ஹிபுகம், கிருகம், மித்திரன், பந்து, ஜலம், சுகம் இவைகள் 4-வது பாவத்தின் பெயர்கள், 4-வது

பாவத்திலிருந்து வீடு, நண்பர்கள், பந்துக்கள், தண்ணீர், சுகம் இவற்றின் நலன் அல்லது கெடுதலை அறியலாம்.

லக்னத்திலிருந்து 4, 5, 10-வது பாவங்களில் ஞாயிறும்; லக்னத்திலும், லக்னத்திலிருந்து 6, 9-வது பாவங்களிலும் புதனும்; 3, 7, 8, 11 பாவங்களில் வியாழனும்; 2, 12-வது பாவங்களில் சனியும் அதிபதிகளாக இருப்பார்கள். தங்கள் ஆக்ஷியுள்ள பாவங்களில் கிரகங்கள் தங்கினால் 4-வது பாவத்திற்குரிய பொருட்களுக்கு நன்மை உண்டாகும்.

குறிப்பு : 4-வது பாவத்தை லக்னமாகவும், அதிலிருந்து தொடர்ந்து 12 ராசிகளை 4-வது பாவத்தின் 12 பாவங்களாகவும் கற்பித்து அந்தந்த பாவங்களில் மேற்கூறிய ஆக்ஷியாளரான கிரகங்கள் தங்கினால் 4-வது பாவத்தின் 12 பாவங்களுக்கு நன்மை உண்டாகும். கிரகங்களின் ஆக்ஷி ஸ்தானங்களை மட்டும் மேற்கூறியபடி ஜன்ம லக்னத்திலிருந்தே எண்ண வேண்டும்.

மாத்ரு கிரகங்களும் தாயாருக்கு பூர்ணாயுள் யோகமும்

(1) 4-வது பாவத்தின் அதிபதி, அவ்விடத்தில் தங்கின எல்லா கிரகங்கள், மதி இவர்கள் மாத்ருகாரகர்கள். இவர்களில் ஏதாவது இரு சுபகிரகங்கள் தனது ராசி, மித்ர ராசி, சுபகிரகங்களின் ராசிகள் அல்லது உச்ச ராசிகளிலும், (2) லக்னத்திலிருந்து 1, 2, 4, 5, 7, 9, 10, 11-வது பாவங்களில் தங்கினாலும், (3) ஏதாவது இரு சுபகிரகங்கள் 4-வது பாவத்தின் அதிபதி அல்லது 4-வது பாவத்தில் தங்கின கிரகங்களால் பார்க்கப்பட்டாலும், (4) 1, 2, 4, 5, 7, 9, 10, 11-வது பாவங்களில் மதி தங்கினாலும் ஜாதகனின் தாயார் நீண்டகாலம் உயிரோடு இருப்பாள்.

சிறுவயதில் தாயார் மரணயோகம்

3, 4, 6, 8, 12 பாவங்களில் அந்தந்த பாவத்தின் அதிபதி கிரகம் மதியுடன் தங்கினால் சிறுவயதிலேயே ஜாதகனுடைய தாயார் இறப்பாள்.

சிறந்த பணலாப யோகம்

மேற்கூறிய மாத்ருகாரக கிரகங்கள் அல்லது 4-வது பாவத்தின் அதிபதி கிரகம் தனது ராசி, மித்ர ராசி, உச்ச ராசிகளிலும்; 2, 9, 11-வது பாவங்களிலும் தங்கினாலும் சிறந்த பண லாபம் உண்டாகும்.

தாயாருக்கு அற்ப ஆயுள் யோகம்

4-வது பாவத்தின் அதிபதி கிரகம் மேற்கூறிய மாத்ருகாரக கிரகங்களும், (1) ஞாயிறை நெருங்கி அஸ்தமனம் அடைந்திருந்தாலும், (2) அந்யோன்ய சத்ருக்களாக இருந்தாலும், (3) கொடியவர்களாக இருந்தாலும், (4) பலமற்றவைகளாக இருந்தாலும், (5) 6, 8, 12-வது பாவங்களில் தங்கி இருந்தாலும் (6) 6, 8, 12-வது பாவங்களின் அதிபதி ராசிகளில் தங்கியிருப்பினும் அல்லது அவர்களின் பார்வை அல்லது சேர்க்கை அடைந்திருப்பினும், (7) 6, 8, 12-வது பாவங்களின் அதிபதிகள் 4-வது பாவத்தில் தங்கியிருந்து மேற்கூறிய 2, 3, 4, 1-வது விதத்தை அடைந்திருந்தாலும் தாயாருக்கு அற்ப ஆயுள் ஏற்படும்.

குழந்தை பிறந்தவுடன் தாய் மரிக்கும் யோகம்

மதி மூல நக்ஷத்திரம் முதல் பாதம் அல்லது பூரம் 2-வது பாதத்தில் தங்கியிருந்து வியாழன் அல்லது சனி 6, 8, 12-வது பாவங்களில் தங்கினாலும் ஜாதகன் பிறந்த சில தினங்களில் அல்லது அன்றோ தாயார் இறப்பாள்.

மரணகால ஞானம்

மதி, வியாழன், சனி இம்மூன்று கிரகங்களில் அதிக பலம் பொருந்திய கிரகங்கள் மதியானால் 10 தினங்களிலும், வியாழனானால் 18 தினங்களிலும், சனியானால் 19 தினங்களிலும் தாயார் இறப்பாள். மேற்கூறிய யோகத்தில் 4-வது பாவத்தின் அதிபதி 8-வது பாவத்தில் தங்கினால் ஜாதகன் பிறந்து சில நிமிடங்களிலேயே இறப்பான்.

வித்தை, வாகனம், பந்து இவர்களின் பூர்ணத்வ யோகம்

4-வது பாவத்தின் அதிபதி கிரகம் (1) தனது ராசி, உச்சம், மித்ர ராசி அல்லது சுபகிரகங்களின் ராசிகளில் தங்கியிருந்து 1, 2, 4, 5, 7, 10, 11 பாவங்களில் தங்கியிருந்தாலும், (2) 9-வது பாவத்திலுள்ள மூன்று சுபகிரகங்களுக்கு 4-வது பாவாதிபதியின் ராசியில் தங்குதல் அல்லது 4-வது பாவாதிபதி கிரகத்துடன் தங்குதல் ஏற்படின் வித்தை, வாகனம், பந்துக்கள் அதிகமாக உண்டாகும்.

தாயாருக்கு விதவை யோகம்

(1) 4-வது பாவத்தின் அதிபதியும், மாத்ரு காரக கிரகமும் 6, 8, 12-வது பாவத்தில் தங்கியிருந்து 4-வது பாவத்தில் 4-வது பாவாதிபதியின் சத்ருகிரகம் தங்கியிருந்தாலும், (2) 4-வது பாவாதிபதியின் இரு சத்ரு கிரகங்களுக்கு அஸ்தமனம் அல்லது நீச ராசியில் இருத்தல் அல்லது பிம்பம் க்ஷீணித்தல் அல்லது கொடிய கிரகங்களுடன் சேர்க்கை ஏற்படுதலும், (3) ஞாயிறு 5-வது பாவத்திலும், 9-வது பாவத்தில் யாராவது மூன்று கிரகங்கள் தங்கியிருந்தாலும், (4) 1, 2, 4, 5, 7, 9, 10, 11-வது பாவங்களிலும் தனது ராசி அல்லது உச்ச ராசி அல்லது மித்ர ராசி அல்லது சுபகிரகங்களின் இல்லங்களில் தங்கி அஸ்தமனம் முடிவடைந்து வாலிபப் பருவமுள்ள மூன்று கிரகங்கள் மூன்று கிரகங்கள் 4-வது பாவாதிபதியின் இல்லத்தில் தங்கியிருந்து, 4-வது பாவாதிபதியின் பார்வை அல்லது சேர்க்கை ஏற்பட்டு பலம் பொருந்தியவர்களாக இருந்தால் தாய்க்கு முன்பு தந்தை இறப்பார்.

பித்ரு சம்ஸ்காரபாவ யோகம்

மேற்கூறிய 4-வது யோகத்தில் சொல்லப்பட்ட மூன்று கிரகங்களுக்கு ஞாயிறின் சம்பந்தத்தால் அஸ்தமனம் உண்டானால் ஜாதகன் தகப்பனுக்கு இறுதி சடங்கினைச் செய்யமாட்டான்.

பித்ரு சம்ஸ்கார யோகம்

மேற்கூறிய யோகத்திலுள்ள கிரகங்கள் 2, 5, 9, 11-வது பாவத்தில் தங்கினால் தந்தைக்கு இறுதிச் சடங்கினைச் செய்வான்.

அனுமரண யோகம்

(1) 4-வது பாவத்தின் அதிபதி மதியுடன் 4-வது பாவத்திலும், 9-வது பாவத்தின் அதிபதி ஞாயிறுடன் 9-வது பாவத்தில் தங்கினாலும், (2) பித்ரு காரக கிரகங்களும், 9-வது பாவத்தின் அதிபதியும் 9-வது பாவத்தில் தங்கினாலும், (3) மாத்ருகாரக கிரகங்களும், பித்ருகாரக கிரகங்களும் 4, 9-வது பாவங்களின் அதிபதிகளும் ஞாயிறுடன் ஒரே ராசியில் தங்கினால் தாய், தந்தையர் ஒருவருக்குப்பின் ஒருவராக சில தினங்களிலேயே இறப்பர்.

மாதாவிற்கும், பிதாவிற்கும் அன்யோன்ய ஸ்நேக பாவம்

பித்ருகாரக கிரகமும், 9-வது பாவத்தின் அதிபதியும் 4-வது பாவத்தின் அதிபதியும் மற்றும் மாத்ருகாரக கிரகங்களும் ஆகிய இவர்களின் சேர்க்கையோ அல்லது பார்வையோ ஏற்படின் தாய், தந்தையர் மிகவும் அன்யோன்யமாக இருப்பார்கள்.

தாயாருக்கும், புத்திரனுக்கும் அன்யோன்ய ஸ்நேக பாவம்

புத்ரகாரக கிரகம் 5-வது பாவத்தின் அதிபதி 5-வது பாவத்தில் தங்கின கிரகம் 4-வது பாவத்தில் தங்கின கிரகம் இவர்களுக்கு 4-வது பாவத்தின் அதிபதி கிரகம் மாத்ரு காரக கிரகங்கள், 4-வது பாவத்தில் தங்கின கிரகம் இவர்களின் பார்வை அல்லது சேர்க்கை ஏற்பட்டால் அல்லது இவர்களின் மித்ர கிரகங்களின் ராசிகளில் தங்கினாலும் தாயாரும், பிள்ளைகளும் அன்யோன்யமாகவும், சந்தோஷமாகவும் இருப்பார்கள்.

மாதா, பிதா, மனைவி இவர்களுள் அன்யோன்ய ஸ்நேக பாவம்

மேற்கூறிய யோகத்தைப்போல் 7-வது பாவத்தின் அதிபதி கிரகம் 7-வது பாவத்தில் தங்கின கிரகம் களத்ரகாரக கிரகம் இவர்களுக்கு 4, 9-வது பாவத்தின் அதிபதி 4, 9-வது பாவத்தில் தங்கின கிரகம் மாத்ருகாரக கிரகம், பித்ருகாரக கிரகம் இவர்களின் பார்வை அல்லது சேர்க்கை ஏற்படுகிறதும் அல்லது இவர்களின் பார்வை அல்லது சேர்க்கை ஏற்படுகிறதும் அல்லது இவர்களின் மித்ர கிரகங்களின் ராசிகளில் தங்குதலும், (2) 4-வது பாவத்தின் அதிபதி 4-வது பாவத்தில் தங்கின கிரகங்கள் மாத்ருகாரக கிரகம் இவர்களுக்கு 7, 9-வது பாவத்தின் அதிபதிகள் 7, 9-வது பாவத்தில் தங்கின கிரகங்கள் களத்ரகாரக கிரகம் பித்ருகாரக கிரகம் இவர்களின் பார்வை ஏற்படுவதும் அல்லது சேர்க்கை அல்லது இவர்களின் மித்ரர்களின் ராசிகளில் தங்குதலும், (3) 9-வது பாவத்தின் அதிபதி 9-வது பாவத்தில் தங்கின கிரகம் பித்ருகாரகன் இவர்களுக்கு 4, 7-வது பாவாதிபதிகள் 4, 7-வது பாவத்தில் தங்கின கிரகங்கள் களத்ரகாரக கிரகம், மாத்ருகாரக கிரகம் இவர்களின் பார்வை அல்லது சேர்க்கை ஏற்படுவதும் அல்லது இவர்களின் மித்ர ராசிகளில் தங்குதல் ஆகிய இம்மூன்று யோகங்களில் பிறந்த ஜாதகனின் தந்தை, தாய், மனைவி இம்மூவரும் மிகவும் அன்யோன்யமாக இருப்பார்கள்.

அடக்கி ஆளும்தன்மை

12 பாவாதிபதிகளும், லக்னாதிபதிக்கும் மத்தியில் லக்னாதிபதி மிகுந்த பலம் பொருந்தியவனாக இருந்தால் எல்லோரும் அவனுக்கு அடங்கியவர்களா இருப்பார்கள். இப்படி 12 பாவங்களின் அதிபதிகளுள் எந்த பாவத்தின் அதிபதி கிரகத்திற்கு அதிக பலம் உண்டோ அந்த பாவத்தை உடைய மனிதனுக்கு மற்ற மனிதர்கள் அதீனர்களாக இருப்பார்கள். இப்படி பாவாதிபதிகளின் பலகிரமத்தை அனுசரித்து எல்லா பாவங்களுக்குரிய தராதரத்தை (சுபாசுபத்தை) அறியவும்.

ஹீன ஜாதிக்காரனிடமிருந்து ஜனன யோகம்

4-வது பாவத்தின் அதிபதி கிரகம் மாத்ருகாரகன் இவ்விருவரும் லக்னத்தில் ராகு அல்லது கேதுவுடன் தங்கினால் ஜாதகன் தாழ்ந்த ஜாதிக்காரனுக்குப் பிறந்தவனாக இருப்பான்.

12 பாவங்களில் தங்கின புதனுடைய பலன்

புதன் லக்னத்தில் தங்கினால் பணம், குழந்தைகள், சதுர்வித புருஷார்த்தங்கள், மரியாதை, வித்தை, அழகான மேனி, கீர்த்தி, பசுமாடு முதலிய நான்கு கால் பிராணிகள் இவைகள் உண்டாகும்.

புதன் 2-வது பாவத்தில் தங்கினால் பேச்சுவன்மை, கூரியபுத்தி, நல்ல தோழர்கள், இஷ்டமான பொருட்கள் நிறைய ஏற்படுகின்றன என சொல்லவேண்டும்.

3-வது பாவத்தில் புதன் தங்கினால் ஜாதகனுக்கு அவனுடைய பந்துக்களால் விரோதமும், மனைவியுடன் கலகமும் அல்லது மனைவிக்கு பெரிய கஷ்டமும் அல்லது அவளுடைய அப்ரீதியும் உண்டாகும்.

4-வது பாவத்தில் புதன் தங்கினால் ஜாதகனுக்கு நண்பர்கள், பணம், கௌரவம், வித்தை, புகழ், பிரசித்தி முதலியவைகள் ஏற்படுகின்றன.

5-வது பாவத்தில் புதன் தங்கினால் ஜாதகனுக்கு அறத்தில் ஈடுபாடும், குழந்தைகள், பணம் இவற்றின் லாபமும், கூர்மையான புத்தியும் உண்டாகும்.

6-வது பாவத்தில் புதன் தங்கினால் ஜாதகனுக்குப் பணப் பெருக்கமும், அதிகமான கௌரவமும், பிரசித்தியும், தைன்ய பரிகாரமும் உண்டாகும்.

7-வது பாவத்தில் புதன் தங்கினால் தொடக்கத்தில் எல்லோருடைய அன்பையும் இழந்து, பின்பு கடைசியில் அதைப் பெறுவான். அனிஷ்டமெல்லாம் தொலையும். துன்பமும், இன்பமும் மாறி மாறி வரும்.

8-வது பாவத்தில் புதன் தங்கினால் மனத்தாங்கல், சண்டை, மதம், அறிவு இவைகள் ஏற்படும்.

9-வது பாவத்தில் புதன் தங்கினால் திறமையுள்ளவனும், தாயார் குலத்திலும், தகப்பானார் குலத்திலும் சிறந்த புகழ் பெற்றவனும் தோள் பலத்தினால் புகழ்பெற்றவனாக ஆவான்.

10-வது பாவத்தில் புதன் தங்கினால் அவசியமான கலைகளில் ஈடுபாடையும், மேனி அழகையும், மனைவி, கௌரவம், பொருள் இவைகளுக்கு நாசத்தையும் கொடுப்பான்.

11-வது பாவத்தில் புதன் தங்கினால் ஸ்திரீ லாபம், மித்ர லாபம், சகோதர லாபம், புத்ர லாபம், பண லாபம் உண்டாகும்.

12-வது பாவத்தில் புதன் தங்கினால் அபகீர்த்தி, பண நாசம், துன்பம் இவைகள் உண்டாகின்றன.

4-வது பாவத்தின் அதிபதியான புதன் 12 பாவங்களில் தங்கினால் ஏற்படுகின்ற பலன் மேலே இவ்வாறு சொல்லப்பட்டது.

கருவுற்ற தாயின் மரண யோகங்கள்

இதற்குமேல் மாத்ரு பாவத்தில் சிறப்பான அம்சங்கள் சொல்லப்படுகின்றன.

குறிப்பு :- மாத்ருபாவ விஷயமாகச் சொல்லப்படவிருக்கிற இந்த முதல் செய்யுளிலிருந்து தொடர்ந்து 45-வது செய்யுள் வரை சொல்கின்ற எல்லா பலன்களும் நிஷேக லக்னம் அல்லது கருவுற்ற காலத்தில் பிரச்ன லக்னம் இவற்றைக் கொண்டு சொல்லுதல் வேண்டும்.

(1) 7, 8-வது பாவங்களில் ஒரு ராசியிலோ அல்லது இரண்டு ராசிகளிலுமோ மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட கொடிய கிரகங்கள் தங்கியிருந்து அவர்களுக்கு ஏதாவது ஒரு கொடிய கிரகத்தின் பார்வையும், பகலில் ஜனனமும் ஏற்பட்டாலும், (2) ஞாயிறு 12-வது பாவத்திலும், செவ்வாய் 4-வது பாவத்திலும், மதி 8-வது பாவத்திலும் தங்கி இருந்தாலும் கருவுற்றிருந்தபடி தாயாரும் குழந்தையும் சேர்ந்து இறப்பார்கள்.

(1) ஞாயிறு அல்லது மதி அல்லது வெள்ளி இரு கொடிய கிரகங்களின் மத்தியில் தங்கியிருந்து சுபகிரகங்களாலும் பார்க்கப்படாமல் இருந்தாலும் கர்பத்தில் இருக்கும் குழந்தையும், கர்பிணியான தாயாரும் ஒன்றாகவே இறப்பார்கள். (2) லக்னத்தில் செவ்வாயும், 7-வது பாவத்தில் ஞாயிறும் தங்கியிருந்தால் பிரசவ காலத்தில் ஆயுத சிகிச்சை ஏற்பட்டு தாயாரும், குழந்தையும் ஒன்றாகவே இறப்பார்கள்.

(1) 2, 12-வது பாவங்களில் மூன்று கொடிய கிரகங்கள் தங்கியிருந்து, அந்த கிரகங்களுக்குக் கொடிய கிரகத்தின் பார்வையும், சுபகிரகங்களது பார்வை இன்மையும் ஏற்பட்டால் மேற்கூறிய பலனே ஏற்படும். (2) பிரஸ்தார அஷ்டவர்க்கம் என்னும் சர்வாஷ்டக வர்க்கத்தில் லக்னத்தில் இரண்டுக்கும் மேற்பட்ட கொடிய கிரகங்களின் பிந்துக்கள் ஏற்பட்டு செவ்வாய் 8-வது பாவத்தில் தங்கினால் கர்பிணி குழந்தை சகிதம் இறப்பாள்.

குறிப்பு : மேற்கூறிய இரண்டாவது யோகத்தில் "க்ரஸ்தௌ ரவீந்தூ" என்ற பாடமும் உண்டு. அந்த பாடத்தில் மதி அல்லது ஞாயிறுக்கு கிரகணம் ஏற்பட்டு லக்னத்தில் கொடிய கிரகங்களும், 8-வது பாவத்தில் செவ்வாயும் தங்கினால் குழந்தையும், தாயாரும் இறப்பார்கள் என்று அறியவும்.

(1) சனி, செவ்வாய் இவ்விருவரின் பார்வை மதிக்கு ஏற்பட்டு, சுபகிரகங்களால் பார்க்கப்படாமல் இருந்தால்

கருவுற்ற தாயார் இறப்பாள். குழந்தை பிழைக்கும். (2) மதி தங்கின ராசியிலிருந்து 2-வது அல்லது 9-வது ராசியில் அல்லது இரு ராசிகளிலும் எல்லா கொடிய கிரகங்களும் தங்கினால் கருவுற்ற தாயும், சேயும் இறப்பார்கள்.

(1) 1, 6, 7, 8, 12-வது பாவங்களில் வரிசையாக எல்லா பாப கிரகங்களும் தங்கினால் கர்ப்பிணி குழந்தையுடன் இறப்பாள். (2) 6, 12-வது பாவங்களில் எல்லா கொடிய கிரகங்களும் தங்கினால் கர்ப்பிணி பிழைப்பாள், குழந்தை மரிக்கும். (3) 1, 7, 8 பாவங்களில் எல்லா கொடிய கிரகங்களும் தங்கினால் கர்ப்பிணி இறப்பாள், குழந்தை பிழைக்கும்.

(1) மதி தங்கின ராசியிலிருந்து 7-வது ராசியில் மூன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட கொடிய கிரகங்கள் தங்கினாலும், (2) மதி இருக்கும் இடமிருந்து 10-வது ராசியில் ஞாயிறு கொடிய கிரகத்தோடு தங்கினாலும், (3) வெள்ளி தங்கின ராசியிலிருந்து 5-வது ராசியில் தங்கின ஞாயிறுக்கு சனியின் பார்வை அல்லது சேர்க்கை ஏற்பட்டிருந்தாலும் கருவுற்ற தாயார் இறப்பாள்.

குறிப்பு :- இனி மேலே கூறப்படும் செய்யுளிலிருந்து தொடங்கி ஜன்ம லக்னத்தை அடிப்படையாகக் கொண்டு பலன் சொல்லப்படுகிறது.

(1) இரவில் பிறந்த ஜாதகனுக்கு மதி தங்கின ராசியில் இருந்து, 5 அல்லது 9-வது ராசியில் சனியும், (2) பகலில் பிறந்த ஜாதகனுக்கு வெள்ளி தங்கின ராசியிலிருந்து 5 அல்லது 9-வது ராசியில் செவ்வாயும் தங்கி அவனுக்கு கொடிய கிரகங்களின் பார்வை ஏற்பட்டாலும், (3) 2, 12-வது பாவங்களில் ஏதாவது ஒன்றில் சனியும், மற்றொன்றில் ஞாயிறும், (4) லக்னத்தில் மதியும், 8-வது பாவத்தில் ஞாயிறும் தங்கினாலும் இந்த நான்கு யோகங்களில் பிறந்த ஜாதகனின் தாய் இறப்பாள்.

குழந்தையை விட்டுவிடும் யோகம்

க்ஷீணமதிக்கு சுபகிரகத்தின் சேர்க்கை இல்லாமல் அவன் தங்கின ராசியிலிருந்து 5-வது ராசி அல்லது 9-வது ராசி அல்லது 5, 9-வது ராசிகளிலும் மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட கொடிய கிரகங்கள் தங்கினால் பிறந்தபின் ஆறு மாதத்திற்குள் தாயார் குழந்தையை விட்டு விடுவாள். இதில் சந்தேகமே இல்லை.

செவிலித்தாய் யோகம்

(1) சனியும் செவ்வாயும் எந்த ராசியிலாவது ஒரே நவாம்சத்தில் இருந்தாலும், (2) மதி தங்கின ராசியிலிருந்து 1, 4, 7, 10-வது ராசியில் தங்கினாலும், குழந்தையை தாய் சில தினங்கள் வரை காப்பாற்றிவிட்டு பிறகு விட்டுவிடுவாள். பிறகு வளர்ப்புத் தாயாரின் மூலம் அக்குழந்தை வளர்க்கப்படும்.

மாதாவிற்கு அரிஷ்ட யோகங்கள்

மதிக்கு கொடிய கிரகங்களுடன் சேர்க்கை அல்லது இரு கொடிய கிரகங்களின் மத்தியில் இருக்கை ஏற்பட்டால் குழந்தையின் தாய்க்கு ஆபத்து ஏற்படுவது நிச்சயம் என்று அறியவும்.

சனியினால் பார்க்கப்பட்ட மதி, மேஷம் அல்லது விருச்சிக நவாம்சம் பெற்று, செவ்வாய் அல்லது கேது அல்லது ராகுவினால் பார்க்கப்படின் தாய்க்கு நாசம் உண்டாகும்.

மதி மகரம் அல்லது கும்ப நவாம்சம் பெற்று, 4-வது பாவத்தில் க்ஷீண பாவத்தையோ நீசத்தன்மையையோ அடைந்து பாபக் கிரகங்களுடன் சேர்ந்து அல்லது பார்க்கப்பட்டு, குரு அல்லது சுக்ரன் இவர்களால் பார்க்கப்படாமலும் இருக்கிற யோகத்தில் பிறந்த ஜாதகனது குழந்தைப் பருவத்திலேயே தாய் இறப்பாள்.

4-வது பாவத்தில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட கொடிய கிரகங்கள் தங்கவேண்டும். மதி கொடிய கிரகத்தின் நவாம்சத்தில் இருக்கவேண்டும். இந்த யோகத்தில் மதிக்கு எல்லா சுபகிரகங்களின் பார்வை இருந்தாலும் குழந்தையின் தாய் இறப்பாள்.

மதி, மகரம் அல்லது கும்ப நவாம்சத்தில் தங்கியிருந்து, சனியினால் பார்க்கப்படின் தாய்க்கு பிரசவ காலத்தில் நிச்சயம் துன்பம் ஏற்படும்.

ந்ருஸிம்ஹன் இவ்விஷயத்தில் கூறுகிறான் -

எல்லா கொடிய கிரகங்களும் 6, 7, 8, 12-வது பாவங்களில் ஒன்றிலோ, இரண்டிலோ, மூன்றிலோ அல்லது நான்கு பாவங்களிலோ தங்கினால் தாயாரும், குழந்தையும் ஒரே நேரத்தில் இறப்பார்கள்.

அதே ந்ருஸிம்ஹன் என்ற ஜோதிடர் மற்றொரு செய்யுளில், இச்செய்யுளில் சொன்ன விஷயத்தை விவரித்து மாத்ரு மரணயோகத்தையும் குழந்தை மரண யோகத்தையும் பிரித்துச் சொல்கிறார்.

குறிப்பு :- இச்செய்யுள் இந்த அத்தியாயத்தில் 44-வது செய்யுளாக உள்ளது. அதற்கு அங்கேயே வியாக்யானம் செய்யப்பட்டுள்ளது. இச்செய்யுளுக்கு இங்கே சமஸ்கிருதத்தில் இந்நூலாசிரியர் விளக்கம் செய்திருக்கிறார். அது இச்செய்யுளின் கீழே அங்கேயே தரப்பட்டுள்ளது.

தேவகீர்த்தி என்னும் நூலாசிரியரும் மேற்கூறிய விஷயத்தை அப்படியே சொல்லியிருக்கிறார்.

3 அல்லது அதற்கு மேற்பட்ட கொடிய கிரகங்கள் 6, 12-வது பாவத்தில் தங்கினால் தாய் பிழைத்து, குழந்தை இறக்கும். அதே கிரகங்கள் 7, 8-வது பாவத்தில் தங்கினால் குழந்தை பிழைத்து, தாய் மரிப்பாள்.

மற்றொரு செய்யுளில் **ந்ருஸிம்ஹதைவக்ஞர்** வேறு யோகங்களைச் சொல்லியிருக்கிறார். அச்செய்யுளை எழுதி அதை சம்ஸ்கிருதத்தில் நூலாசிரியர் மொழிபெயர்த்திருக் கிறார். தன் மொழிபெயர்ப்புக்கும், ந்ருஸிம்ஹதைவக்ஞரின் செய்யுளுக்கும் ஆதாரமாக **தேவகீர்த்தி** என்னும் நூலாசிரியரின் செய்யுட்களை எடுத்துரைத்திருக்கிறார். இச்செய்யுள் இந்நூலில் இந்த அத்தியாயத்தில் 45-வது செய்யுளாக இந்நூலாசிரியரால் எடுத்துரைக்கப்பட்டு இருக்கிறது. இங்கு சொன்ன எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து இச்செய்யுளுக்கு முன்பே வியாக்யானம் செய்யப் பட்டிருக்கிறது. ஆகையால் இங்கு வியாக்யானம் செய்யவில்லை.

ந்ருஸிம்ஹன் என்ற சோதிடரின் நூலிலுள்ள இச்செய்யுள் இந்நூலில் 46-வது செய்யுளாக இருக்கிறது. இதற்கு இந்நூலாசிரியரால் இங்கு செய்யப்பட்ட சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பையும் அதற்கு ஆதாரமாக எடுத்துக்கூறிய தேவகீர்த்தியின் செய்யுளையும் ஆதாரமாகக் கொண்டு 46-வது செய்யுளிலேயே வியாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது.

59, 69-வது செய்யுட்கள் இந்நூலின் இந்த அத்யாயத்தில் 40, 43-வது செய்யுட்களாக உள்ளன. அரிச்சுவடியில் அங்கும் இங்கும் பாடபேதம் உண்டு. அது () என்ற குறிக்குள் கொடுக்கப்பட்டிருக்கிறது. வியாக்யானம் அங்கேயே கொடுக்கப்பட்டிருக்கிறது.

4-வது பாவத்தில் தங்கின மதிக்குக் கொடிய கிரகங்களின் பார்வை ஏற்பட்டு, 8-வது பாவாதிபதி கிரகம் தனது சத்ரு ராசி அல்லது நீச ராசியில் தங்கினால் தாயார் இறப்பாள்.

3, 5-வது பாவங்களில் கொடிய கிரகங்களும், மதிக்குக் கொடிய கிரகங்களின் சேர்க்கையும் ஏற்பட்டு 4-வது பாவத்தின் அதிபதி கிரகம் தனது சத்ரு ராசி அல்லது தனது நீச ராசியில் தங்கினால் தாயாருக்குக் கொடிய ரோகம் உண்டாகும்.

மதி பாப கிரகங்களுக்கு மத்தியில் இருந்து, 4-வது பாவாதிபதி பாபருடன் சேர்ந்து, சுபகிரகங்களால் பார்க்கப் படாமலும் இருந்தால் தாய்க்கு மரணம் ஏற்படும், அல்லது மரணத்திற்கு ஒப்பான கண்டம் ஏற்படும்.

4-வது பாவத்தின் அதிபதி கிரகம் பலம் குறைந்து 6, 8, 12 பாவங்களில் ஏதாவது ஒரு பாவத்தில் இருந்து, செவ்வாய் அல்லது ஞாயிறு 4-வது பாவத்திலும் தங்கினால் தாயார் இறப்பாள்.

க்ஷீண மதிக்கு 6, 8, 12-வது பாவங்களில் ஏதாவது ஒரு பாவத்தில் பாப கிரகங்களுடன் தங்கியிருந்து, 4-வது பாவத்திற்கும் கொடிய கிரகங்களின் சேர்க்கை ஏற்பட்டால் தாயார் இறப்பாள்.

வீடு, நிலம் இவைகள் விருத்தியாகும் யோகம்

4-வது பாவத்தின் அதிபதி கிரகம் தனது ராசி அல்லது தனது மித்ர ராசி அல்லது தனது உச்ச ராசி இவைகளில் ஏதாவது ஒன்றில் தங்கியிருந்து அவனுக்கு சுபகிரகங்களின் பார்வை அல்லது சேர்க்கை ஏற்பட்டால் வீடு, நிலம் முதலியவைகள் விருத்தி அடையும்.

குறிப்பு :- முன்பு கூறப்பட்ட சுலோகங்களில் மாதாவுக்கு அரிஷ்டம் சொல்லப்பட்டது. இனி, மனைவியின் அரிஷ்டமும் அடுத்த செய்யுட்களில் சொல்லப் படுகிறது. இவ்வழியைப் பின்பற்றி எல்லா பாவங்களுக்குரிய பொருட்களின் நாசத்தையும் அறியவும்.

மனைவி நாச யோகங்கள்

(1) 7-வது பாவத்தின் அதிபதி கிரகம் தனது சத்ரு க்ஷேத்திரம் அல்லது தனது நீச க்ஷேத்திரத்தில் தங்கி இருந்தலும், (2) மௌட்யம் அடைந்திருந்தாலும் (3) கொடிய கிரகங்களால் பார்க்கப்பட்டாலும் களத்திர ஸ்தானாதிபதி

பாபர்களுடன் சேர்ந்தோ அல்லது பார்க்கப்பட்டோ இருந்தாலும் மனைவி இறப்பாள் என்று ஞானிகள் சொல்கிறார்கள்.

வெள்ளி தங்கின ராசியிலிருந்து 2, 12-வது ராசிகளிலும் வெள்ளியுடனும், 7-வது பாவத்திலும் கொடிய கிரகம் தங்கினால் மனைவி மரிப்பாள்.

வெள்ளிக்குக் கொடிய கிரகங்களின் சேர்க்கை ஏற்பட்டு 7-வது பாவத்தின் அதிபதி கிரகம் பலம் குறைந்து 6 அல்லது 8 அல்லது 12-வது பாவத்தில் தங்கவேண்டும். இம்மாதிரி உள்ள யோகத்தில் பிறந்தவனின் மனைவி இறப்பாள்.

பலதார யோகம்

7-ம் பாவாதிபதி பரமோச்ச பாவத்தை அடைந்து, களத்ர காரகன் சுக்கிரன் சுபர்களால் பார்க்கப்பட்டோ அல்லது பரமோச்ச பாவத்தை அடைந்திருந்தால் பல மனைவிகளை உடையவனாக இருப்பான் என்று புத்திமான்கள் கூறுகிறார்கள்.

பூர்வபாராசர்யத்தில் 4-வது பாவம் என்னும்
பதிமூன்றாவது அத்தியாயம் முற்றும்.

பதிநான்காவது அத்தியாயம்

மரணத்திற்குக் காரணமான யோகங்கள்

பலமில்லாத ஞாயிறு அல்லது செவ்வாய் 8-வது பாவத்தில் தங்கியிருந்து, 2-வது பாவத்தில் கொடிய கிரகங்களின் சேர்க்கை ஏற்படின் பித்த ரோகத்தினால் ஜாதகனுக்கு மரணம் உண்டாகும்.

மதி, ஜல ராசியான கடகம், விருச்சிகம், மகரத்தின் பிற்பகுதி, மீனம் இவைகளுள் ஏதேனும் ஒரு ராசியில் இருந்தாலும், அல்லது குரு 8-ம் பாவத்தை அடைந்து பாப கிரகங்களால் பார்க்கப்பட்டுமிருந்தால் க்ஷயரோகத்தினால் மரணம் ஏற்படும்.

(1) மதி மேற்கூறிய யோகத்திலுள்ளபடி இருப்பினும் (2) 8-வது பாவத்தில் சனி தங்கினாலும் இவ்விருவருக்கும் கொடிய கிரகங்களின் பார்வை ஏற்பட்டால் வாத ரோகத்தின் மூலம் மரணம் ஏற்படும்.

வெள்ளி 8-வது பாவத்தில் தங்கியிருந்து, கொடிய கிரகங்களால் பார்க்கப்படின் வாதரோகம் அல்லது க்ஷயரோகம் அல்லது பிரமேகரோகம் இவற்றால் மரணம் என்று கண்டுகொள்ளவும்.

புதன், ஞாயிறுடன் கலந்து அல்லது ஸிம்ம ராசியில் 8-வது பாவத்தில் தங்கி இருந்து கொடிய கிரகங்களால் பார்க்கப்பட்டால் வாத, பித்த, கபம் என்ற திரிதோஷங் களினால் அல்லது ஜ்வர ரோகத்தினால் மரணம் உண்டாகும்.

ராகு கிரகம் 8-வது பாவத்தில் தங்கியிருந்து கொடிய கிரகங்களால் பார்க்கப்பட்டால் சிறங்கு முதலிய உஷ்ண ரோகங்களால் அல்லது பாம்பு கடியினால் மரணம் ஏற்படும்.

கேது கிரகம் 8-வது பாவத்தில் தங்கியிருந்து கொடிய கிரகங்களால் பார்க்கப்பட்டால் அம்மை முதலிய உஷ்ண ரோகத்தினாலோ அல்லது பைத்திய ரோகத்தினாலோ மரணம் ஏற்படும்.

பித்ரு மரண யோகம்

ஞாயிறு தங்கின ராசியிலிருந்து 3 அல்லது 8 அல்லது 9-வது ராசியில் கொடிய கிரகம் தங்கியிருந்து, 9-வது பாவத்தின் அதிபதி கிரகத்திற்குக் கொடிய கிரகத்தின் சேர்க்கை ஏற்படின் தகப்பனார் இறப்பார்.

9-வது பாவத்தின் அதிபதி கிரகம் பலமில்லாமல் 6 அல்லது 8 அல்லது 12-வது பாவத்தில் தங்கி 9-வது பாவத்தில் செவ்வாய் அல்லது ஞாயிறு தங்கினால் தந்தை இறப்பார்.

நானாவித ரோக யோகங்கள்

ஞாயிறு அல்லது மதி 2-வது பாவத்தில் அல்லது 8-வது பாவத்தில் தங்கியிருந்து லக்னத்தை செவ்வாய் பார்த்தால் சிரங்கு முதலிய ரோகங்கள் உண்டாகின்றன.

8-வது பாவத்தில் செவ்வாய் தங்கி, கொடிய கிரகங்களால் பார்க்கப்பட்டு 2 அல்லது 8-வது பாவத்தில் கேது தங்கினால் கட்டி, புண் முதலிய ரோகங்கள் ஏற்படுகின்றன.

லக்னத்தில் சனியும் 6 அல்லது 8-வது பாவத்தில் மதியும் தங்கியிருந்து, செவ்வாயினால் பார்க்கப்பட்டால் வாத ரத்த ரோகம் ஏற்படும்.

கொடிய கிரகத்தோடு கூடிய மதி, 6 அல்லது 8-வது பாவத்தில் தங்கியிருந்து, 8-வது பாவாதிபதி ராகுவால் பார்க்கப்பட்டால் ஜனனேந்திரியத்திலுண்டான (குஹ்ய) ரோகத்தினால் பாதிக்கப்படுவான்.

சனி லக்னத்திலும், க்ஷீண மதிக்குக் கொடிய கிரகத்தின் சேர்க்கை ஏற்பட்டு 6 அல்லது 8-வது பாவத்தில் இருக்கையும் ஏற்பட்டால் குல்மம் எனப்படும் வயிற்று நோயுண்டாகும்.

(1) லக்னாதிபதி கிரகத்திற்கு ராகுவின் சேர்க்கை ஏற்படினும், (2) லக்னத்தில் கொடிய கிரகம் தங்கி இருப்பினும் இவ்விரு யோகங்களில் 8-வது பாவத்தில் சனி தங்கினால் வயிறு ரோகம் ஏற்படும்.

மகரம், கடகம், மீனம் இம்மூன்று ராசிகளில் அல்லது அந்த ராசிகளின் நவாம்சங்களில் மதி தங்கியிருந்து, அவனுக்கு சனி அல்லது செவ்வாயின் சேர்க்கை ஏற்பட்டால் குஷ்டரோகம் உண்டாகும்.

4-வது பாவத்தில் ராகு தங்கியிருந்து கொடிய கிரகங்களால் பார்க்கப்பட்டு லக்னாதிபதிக்குப் பலம் இல்லாதிருந்தால் மார்பு வலியின்மூலம் உடம்பு பாதிக்கப்படும்.

செவ்வாய் 4-வது பாவத்திலும், லக்னாதிபதி கிரகம் சத்ரு ராசி, அல்லது நீச ராசியில் தங்கியிருந்து, ஏதோ ஒரு ராசியில் தங்கின சனிக்குக் கொடிய கிரகங்களின் பார்வை ஏற்பட்டால் சூல ரோகத்தினால் உபாதை ஏற்படும்.

8-வது பாவாதிபதி பலமில்லாதவனாக 8-வது பாவத்திற்கு சனியின் பார்வையும், லக்னத்திற்குக் கொடிய கிரகங்களின் பார்வையும் ஏற்பட்டால் அன்னதுவேஷ ரோகம் ஏற்படும்.

உபாதையை உண்டுபண்ணும் கிரகங்கள்

லக்னம் சர ராசி, ஸ்திர ராசி அல்லது உபய ராசி இவைகளுள் ஒன்றாக இருந்து சர ராசிக்கு லாப ஸ்தானமான 11-ம் பாவத்திலும், ஸ்திர ராசிக்கு தர்மஸ்தானமான 9-ம் பாவத்திலும், உபய ராசிக்கு தனஸ்தானமான 2-ம்

பாவத்திலும் இருக்கிற கிரகங்களைக் கொண்டும் இம்மூன்று ராசிகளுக்கும் கேந்திர ஸ்தானங்களான 4, 7, 10-ம் பாவங்களில் இருக்கிற கிரகங்களைக் கொண்டும் ஜாதகனுக்கு உபாதை சொல்லப்படுகிறது.

குறிப்பு : பிரச்னமார்க்கம் முதலிய கிரந்தங்களில் உபய ராசி லக்னமாக இருந்தால் 7-வது பாவம் பாதக ஸ்தானம் எனப்படும் என்று சொல்லியிருக்கிறது. சர ராசிகளுக்கு ஸ்திர ராசிகளும், ஸ்திர ராசிகளுக்கு சர ராசிகளும் பாகஸ்தானம் என்று மேற்கூறிய செய்யுளின் உட்கருத்தாகும். ஆகையால், உபய ராசிகட்கு உபய ராசிகள்தான் பாதக ஸ்தானங்கள் என்று கூறுவது சாலப்பொருந்தும். இந்நூலில் உபயராசிகட்கு சர ராசிகள் பாதக ஸ்தானம் என்று கூறப்பட்டுள்ளது. ப்ரச்ன மார்க்கம் முதலிய க்ரந்தங்களைக் கொண்டு பார்த்தாலும் உபய ராசிகட்கு உபய ராசிகள்தான் பாதக ஸாதனம் என்று தெரிகிறது. ஆகையால் இந்நூலில் உபய ராசிகட்கு சர ராசிகள் பாதக ஸ்தானம் என்று கூறுவது பொருந்தாது என்று தோன்றுகிறது.

பாதக ஸ்தானங்களில் இருக்கின்ற கிரகங்களின் பலன்

ஞாயிறு முதலிய கிரகங்கள் பாதக ஸ்தானங்களில் தங்குவதால் ஏற்படும் பலன்கள் இனிவரும் செய்யுட்களினால் கூறப்படுகின்றன.

பாதக ஸ்தானத்தில் ஞாயிறு தங்கினால் சிவகணங்களாகிற பூதகணங்களினால் பீடை (வியாதி) உண்டாகும். மதி தங்கினால் துர்க்கையினால் உண்டுபண்ணப்பட்ட வியாதியும், தர்மதேவதையின் மூலம் ஏற்பட்ட விஷ சம்பந்தமான ரோகமும் உண்டாகும்.

செவ்வாய் தங்கினால் ஷண்முகன் மூலமுண்டாகிய வியாதியும், பைரவன் முதலான ஷண்முக கணங்களினால் மிகுந்த ரோகமும், புதன் தங்கினால் விஷ்ணு மற்றும்

ஆகாயத்தில் விமானத்தில் சஞ்சரிக்கின்ற கந்தர்வர்கள், கின்னரர்கள், யக்ஷர்கள் முதலானோர்களின் கோபத்தால் ரோகமுண்டாகும்.

வியாழன் தங்கினால் பிராமண சாபம், தேவதைகளின் கோபம் இவற்றால் ரோகமுண்டாகும்.

வெள்ளி தங்கினால் யக்ஷர்கள், ப்ரும்மராக்ஷஸர்கள் இவர்களின் கோபத்தால் ரோகமுண்டாகும்.

சனி தங்கினால் பூதநாதர்கள், இறந்தோர்களின் ஆவி இவர்களின் கோபத்தால் ரோகமுண்டாகும்.

ராகு தங்கினால் ஸர்ப்பத்தின் சாபத்தாலும், கேது தங்கினால் சண்டாளனது கோபத்தினாலும் ரோகம் உண்டாகும்.

இவ்வாறு ஞாயிறு முதலிய கிரகங்கள் பாதக ஸ்தானங்களில் தங்குவதால் உண்டாகும் ரோகங்கள் ஞானிகளால் கூறப்படுகின்றன.

ஏவல் செய்வதற்கான கிரக அமைப்புகள்

லக்னத்தில் சத்ரு ஸ்தானமான 6-ம் பாவாதிபதியும், கர்ம ஸ்தானமான பத்தாமிடத்தில் சத்ரு ஸ்தானாதிபதி அஸ்தமனம் அடைந்திருந்தாலும், லக்னம் செவ்வாயினால் பார்க்கப் பட்டாலும் ஏவல் செய்யப்படுவதால் உபாதைகள் ஏற்படும்.

சத்ரு ஸ்தானமான ஆறாம் பாவாதிபதி லக்னத்தில் தங்கியிருந்து, செவ்வாய் கிரகம் லக்னாதிபதியுடன் சேர்ந்தோ அல்லது 1, 4, 7, 10-வது பாவங்கள் ஏதேனும் ஒன்றில் இருந்தாலும் ஏவல், பில்லி, சூன்யம் முதலியவற்றால் உபாதைகள் ஏற்படும்.

(1) சர ராசி லக்னமாக அமைந்து, (2) ஸ்திர ராசியாக அமைந்த 11-வது பாவத்திலோ அல்லது நான்காவது பாவத்திலோ அல்லது (3) 12-வது ராசியாக உள்ள உபய

ராசியிலோ செவ்வாய் கிரகம் இருந்து சத்ரு காரக கிரகத்தினால் பார்க்கப்பட்டும் இருந்தால் பகைவர்களால் செய்யப்பட்ட ஏவல் காரணமாக ஸ்திரமான ரோகம் உண்டாகும்.

த்ருஷ்டி தோஷத்தால் ஏற்படும் ரோகங்கள்

கேது கிரகம் 4-ம் பாவம், 10-ம் பாவம் அல்லது லக்னத்திலிருந்து சத்ரு கிரகத்தினால் பார்க்கப்பட்டும் அல்லது 1, 4, 7, 10-வது பாவங்களில் ஏதாவது ஒரு பாவத்தில் மாந்தி கிரகமும் தங்கியிருந்தால் தேவதைகளைக் காண்பதால் (பயந்த குணத்தினால்) ரோகமுண்டாகும்.

லக்னத்தில் பாப க்ரஹங்களும், 7-ம் பாவத்தில் சனியும் தங்கியிருந்து மதிக்கு பாப கிரகங்களின் பார்வையும் ஏற்பட்டால் பிசாசைப் பார்ப்பதால் (பயந்த குணத்தினால்) ரோகம் ஏற்படும்.

தனம் அழிவதற்கான கிரக அமைப்புக்கள்

(1) 2-ம் பாவாதிபதி (தனாதிபதி) 6 அல்லது 12-ம் பாவத்தில் தங்கியிருந்து, 12-ம் பாவாதிபதி 2-ம் பாவமான தன ஸ்தானத்திலும், (2) 11-ம் பாவாதிபதி 6, 8, 12-வது பாவங்களில் ஏதாவது ஒரு பாவத்தில் தங்கியிருந்தாலும் தனநாசம் ஏற்படும்.

வியாழன் 12-ம் பாவத்தில் தங்கியிருந்து, 2-ம் பாாதிபதி பலமற்றவனாகவும், லக்னம் சுபகிரகங்களால் பார்க்கப் படாமலும் இருந்தால் தனநாசம் உண்டாகும் என்று அறிவுடையோர் கூறுவர்.

பூர்வபாராசர்யத்தில் அரிஷ்டாத்யாயம் என்னும்
பதிநான்காவது அத்தியாயம் முற்றும்.

பதினைந்தாவது அத்தியாயம்

ஐந்தாம் பாவத்தில் ஞாயிறு முதலிய கோள்கள் தங்குவதால் ஏற்படும் பலன் கூறுப்படுகிறது

ஞாயிறு 5-ம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன் சரீர சுகம், குழந்தைகள், தனம் இவைகளற்றவனாகவும், உழவுத் தொழில் செய்பவனாகவும் அல்லது மலைகளிலும், சுரங்கங் களிலும் வேலை செய்பவனாகவும், மிக்க அறிவு உடையவனாகவும், சரீர பலமற்றவனாகவும், அற்பாயுளை உடையவனாகவும் இருப்பான்.

மதி 5-ம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன் பராக்கிரமம் அற்றவனாகவும், கல்வி கற்பதில் ஈடுபாடுடையவனாகவும், ஆடைகள், உணவு இவைகளைச் சேகரிப்பவனாகவும், அதிகமான குழந்தைகளை உடையவனாகவும், நற்குணம் உடைய நண்பர்களை உடையவனாகவும், கூர்மையான அறிவுடையவனாகவும் இருப்பான்.

செவ்வாய் 5-ம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன், சரீர சுகமற்றவனாகவும், பொருளற்றவனாகவும், நண்பர்களற்ற வனாகவும் (நண்பர்களால் விடப்பட்டவனாகவும்) சபல புத்தி உடையவனாகவும், கோள் சொல்பவனாகவும், தீய செயல்களிலேயே ஈடுபடுபவனாகவும், துஷ்டனாகவும், அங்க ஊனமுடையவனாகவும் இழிந்த குணமுடைய வனாகவும் இருப்பான்.

புதன் 5-ம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன், மந்திரம் அறிந்தவனாகவும், ஏவல் வைப்பதில் சாமர்த்தியம் வாய்ந்தவனாகவும், அதிகமான குழந்தைகளை உடையவனாகவும், படித்தவனாகவும், ஸுகம், ப்ரதாபம் இவைகளை உடையவனாகவும், எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் கூடியவனாகவும் இருப்பான்.

வியாழன் 5-ம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன், சரீர சுகம், மிகுதியான குழந்தைகள், நண்பர்கள் இவர்களுடன் கூடியவனாகவும், அறிவாளியாகவும், தைரியசாலியாகவும், சிறந்த ஐச்வர்யங்களை உடையவனாகவும், எப்பொழுதும் சுகமாக இருப்பவனாகவும் இருப்பான்.

வெள்ளி 5-ம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன், சரீர சுகம் உடையவனாகவும், பிள்ளைகள், நண்பர்கள் இவர்களின் விருத்தியை உடையவனாகவும், காமுகனாகவும், மிகுந்த தனம் உடையவனாகவும், எக்காரியத்திலும் பிறரால் தடுக்கப்பட முடியாதவனாகவும், மந்திரியாகவோ அல்லது அரசனாகவோ இருப்பான்.

சனி 5-ம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன் சரீர சுகமற்றவனாகவும், மகப்பேறற்றவனாகவும், நண்பர்கள் அற்றவனாகவும், புத்தியற்றவனாகவும், உணர்வற்ற வனாகவும், பைத்தியமாகவும், எப்பொழுதும் ஏழையாகவும் இருப்பான்.

ராகு 5-ம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன் கீழ்நிலையில் உள்ளோரை அண்டியவனாகவும், நிலையற்ற குணம் உடையவனாகவும், மிகுதியான மகப்பேறற்றவனாகவும் (மிதமான குழந்தைகளை உடையவன்), கல்நெஞ்சனாகவும், மிகுந்த கோபமுடையவனாகவும், தனது காரியத்தில் ஈடுபாடு உடையவனாகவும், தனது உறவினர்களால் விடப்பட்ட வனாகவும், பிதுங்கிய கண்களையுடையவனாகவும், எப்பொழுதும் வியாதியால் பீடிக்கப்பட்டவனாகவும், கீழ்நோக்கிப் பார்ப்பவனாகவும், அழகற்றவனாகவும், தன் தன் வருணத்திற்கு ஏற்ற தெய்வ காரியங்கள், பித்ரு காரியங்களைச் செய்யாதவனாகவும், மிதமாகப் பேசுபவனாகவும் இருப்பான்.

கேது 5-ம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன், கொடிய புத்தியுடையவனாகவும், கெட்ட ஸ்வபாவமுடைய

வனாகவும், வயிற்று நோயுடையவனாகவும், அரசனாகவும், பலம் பொருந்திய சரீரத்தை உடையவனாகவும் (இவனைவிட பலமுள்ளோரிடம் பகைமை உடையவனாகவும்) சுகானுபவமுடையவனாகவும் இருப்பான்.

மகப்பேறும் அ:.து இல்லாமையும் ஏற்படுவதற்கேற்ற கிரகங்களின் சேர்க்கை

5-ம் பாவம் சுபக்கிரகங்களுடன் கூடியதாகவோ, சுபர்களால் பார்க்கப்பட்டதாகவோ, 5-ம் பாவாதிபதி சுபக்கிரகமாக இருந்தாலும் ஜாதகனுக்கு சந்ததிகள் (புத்திரப்பேறு) உண்டாகும். இதற்கு நேர்மாறாக, 5-ம் பாவம் பாபகிரகங்களுடன் கூடியதாகவோ, பாபர்களால் பார்க்கப் பட்டதாகவோ, 5-ம் பாவாதிபதி பாபக்கிரகமாகவும் இருந்தால் மகப்பேறு உண்டாகாது.

தனது வாரிசாக அமையும் மகப்பேறு யோகம்

5-ம் பாவம் சுபக்கிரகத்தோடு கூடியதாகவும், புத்திரஸ்தானாதிபதி குருவர்க்கத்தில் இருப்பவனாகவும், சுபராசியில் இருப்பவனாகவும் இருந்தால் ஜாதகனுக்கு அவனது வழித்தோன்றல் பிறப்பான். 5-ம் பாவ பலனை, லக்னத்தைக் கொண்டும், சந்திரன் தங்கிய லக்னத்தைக் கொண்டும் அல்லது இவ்விரு லக்னங்களில் எதற்கு மிகுந்த பலம் உண்டோ அதைக்கொண்டும் நன்கு ஆராய்ந்து கூறவேண்டும்.

மிகுதியாகப் பெண்கள் பிறக்கும் யோகம்

5-ம் பாவத்தில் சுக்கிரனும், சந்திரனும் கூடியிருந்தாலும் மதியின் வர்க்கத்தில் வெள்ளியிருந்தாலும், சந்திரன், வெள்ளி இவ்விருவர்களால்பார்க்கப்பட்டாலும், அல்லது 5-ம் பாவம் சமராசியாக (உபய ராசியாக) இருந்து அதில் சுக்கிரனும் சந்திரனும் இருந்தாலும் பெண் குழந்தைகள் மிகுதியாகப் பிறக்கும். மேற்சொன்னபடி இல்லாமல் மாறுபட்டிருந்தால் ஆண் குழந்தைகள் பிறக்கும்.

பிள்ளைகள் எவ்வளவு என்றறிதல்

5-ம் பாவத்திற்கும் மதி நின்ற ராசியின் அம்சத்திற்கும் ஏற்படுகின்ற நவாம்சங்களின் எண்ணிக்கையைக் கொண்டு பிள்ளைகளின் எண்ணிக்கையைக் கூறவேண்டும். 5-ம் பாவத்திற்குச் சுபர்களின் பார்வை ஏற்பட்டால் புத்திரப்பேறு இரண்டு மடங்காகும். பாபர்களின் அம்சத்தில் 5-ம் பாவம் அமைந்தாலும், பாபர்களால் பார்க்கப்பட்டாலும் சந்ததி ஏற்படுவது கடினம்.

பிள்ளைப்பேறு இல்லாமற்போகும் யோகம்

5-ம் பாவத்தில் வியாழன், செவ்வாய் இவர்களின் சம்பந்தம் பெறாமலும், சனியினால் பார்க்கப்பட்டும், பலமற்றவனாகவும் புதன் தங்கியிருந்தால் மகப்பேறு உண்டாகாது. சனியின் ஸப்த வர்க்கத்தை மதி அடைந்திருந்தாலும், 5-ம் பாவாதிபதியும், களத்ரகாரகனும் சனியுடன் சேர்ந்திருந்தாலும் மகப்பேறு உண்டாகாது.

5-ம் பாவாதிபதி ஞாயிறு, வெள்ளி இவர்களால் பார்க்கப்பட்டால் மகப்பேறு உண்டாகும். ஆனால் 5-ம் பாவத்தில் செவ்வாயிருந்தால் பிறந்தபின் குழந்தை மரிக்கும். இதனால் சந்ததி விருத்தியாகாது. வியாழனால் பார்க்கப்பட்டால் முதலில் பிறந்த குழந்தை இறக்கும். வெள்ளியினால் பார்க்கப்பட்டால் பாம்பு கடித்து இறக்கும்.

வியாழன் தங்கிய ராசியிலிருந்து 5-வது ராசியில் பாப கிரகங்கள் தங்கியிருந்தால் புத்திரநாசம் உண்டாகும். 5-ம் பாவம் சுபக்ஷேத்திரமாக இருந்தால் சுபத்தைக் கொடுக்கும். குழந்தைக்கு நன்மை உண்டாகும்.

பல குழந்தைகள் பெறும் யோகம்

மதி 5-ம் பாவத்தை அடைந்து மேஷம், மிதுனம் முதலிய ஓஜோ ராசிகள், ஆண் கிரகங்களின் நவாம்சமும் பெற்று,

ஞாயிறால் பார்க்கப்பட்டும் இருக்குமானால் பல குழந்தைகள் உண்டாகும். ஆனால் துன்பத்தை அனுபவிப்பவனாகவும், மனைவியை இழந்தவனாகவும் இருப்பான் ஜாதகன்.

5-ம் பாவாதிபதியும், களத்ரகாரகனும், பலம் மிக்க பாபர்களுடன்கூடி, பாபர்களின் கிரத்தில் தங்கினாலும், சுபர்களின் பார்வையைப் பெறாமலிருந்தாலும், இந்த யோகத்தில் பிறந்த குழந்தைகள் மிகக் கொடியவர்களாக இருப்பார்கள்.

5-ம் பாவாதிபதி சுக்கிரனால் பார்க்கப்பட்டோ அல்லது கூடியோ இருந்தால், வேசியினிடத்தில் (தாஸியினிடம்) பல குழந்தைகள் பிறக்கும், மதி நின்ற ராசியைக் கொண்டும் பலன் சொல்லவேண்டும் என்று சில சோதிட நூல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

வம்சத்தை நாசம் செய்யும் குழந்தைகள் பிறக்கும் யோகம்

லக்னத்திலிருந்து 10-ம் பாவத்தில் மதியும், 7-ம் பாவத்தில் சுக்கிரனும், 4-ம் பாவத்தில் எல்லா பாபக் கிரகங்களும் தங்கியிருந்தால், இந்த யோகத்தில் பிறக்கும் குழந்தை வம்சத்தை நாசம் செய்யும்.

லக்னம், 5-ம் பாவம், 8-வது அல்லது 12-வது பாவங்களில் பாபர்கள் தங்கியிருந்தாலும்; புதனும், வெள்ளியும் அஸ்தமனம் அடைந்திருந்தாலும், 5-ம் பாவாதிபதி பாபியாகவும் இருந்து, 5-ம் பாவத்தில் வியாழனும் தங்கியிருக்கப் பிறந்த ஜாதகன் வம்சத்தை நாசம் செய்வான்.

மதி நின்ற ராசியிலிருந்து 8-வது ராசியில் பாப கிரகமும், 8-ம் பாவாதிபதியும், 5-ம் பாவத்தில் நின்று மதி நின்ற லக்னத்திற்கு இருபுறமும், பாப கிரகங்களும் நின்று, புத்திர காரகன் பலமற்றவனாகவும் இருக்கப் பிறந்த ஜாதகன் வம்சத்தை அழித்துவிடுவான்.

காலந்தாழ்ந்து மகப்பேறு உண்டாகும் யோகம்

லக்னத்தில் செவ்வாயும், 8-ம் பாவத்தில் சனியும், 9-வது பாவத்தில் சூரியனும் தங்கியிருந்தால், அந்த ஜாதகனுக்குக் காலந்தாழ்ந்து மகப்பேறு உண்டாகும்.

லக்னத்தில் மூன்றும் அதற்கு மேற்பட்ட கிரகங்கள் தங்கியிருந்து, மதியும் 11-ம் பாவத்தையடைந்து, வியாழன் 5-ம் பாவம் அல்லது 9-ம் பாவங்களில் பாபர்களுடன் சேர்ந்தோ இருந்தால், இந்த யோகத்தில் பிறந்த ஜாதகனுக்குக் காலந்தாழ்ந்து மகப்பேறு உண்டாகும்.

மனைவியும் குழந்தையும் மரிக்கும் யோகம்

லக்னம், 8-ம் பாவம், 12-ம் பாவம் இவைகளில் பாபக் கிரகங்கள் தங்கியிருந்து; மதியோ, வெள்ளியோ 5-ம் பாவத்தில் தங்காமல் மற்ற பாவங்களில் தங்கியிருந்து, 7-ம் பாவாதிபதி 5-ம் பாவத்தில் தங்கியிருந்தாலும், இந்த யோகத்தில் பிறந்த ஜாதகனது மனைவியும் பிள்ளையும் மரணம் அடைவார்கள்.

தந்தையைக் காட்டிலும் சிறந்த குணமுடைய மகன் பிறக்கும் யோகம்

5-ம் பாவம் சுபக்கிரகங்களின் கிரணங்களைப் பெற்று இருந்தால் இந்த ஜாதகனது பிள்ளை அறிவு, ஆற்றல் இவைகளில் தந்தையைக் காட்டிலும் மிகுந்த நற்குணம் உடையவர்களாக இருப்பார்கள். 5-ம் பாவாதிபதிக்கு பாபக் கிரகங்களின் கிரணங்கள் ஏற்பட்டு, சுபக்கிரகங்களின் கிரண சம்பந்தமும் ஏற்படாதிருந்தால் ஜாதகன் அதே குலத்தில் மீண்டும் பிறக்கிறான்.

பிறர் மனைவியிடம் மகப்பேற்றை அடையும் யோகம்

சுபனாகவும், பலம் பொருந்தியதாகவும் உள்ள ஒரு கிரகம், வியாழனது வர்க்கத்தில், மகர ராசியை அடைந்ததாகவும் இருந்தாலும், தனது உச்ச ராசியிலோ, தனது

ராசியையோ அடைந்திருந்தாலும் இந்த ஜாதகனுக்கு பிறர் மனைவியிடத்தில் மகப்பேறு உண்டாகும்.

மக்களழிவும் மக்கட்பேறும் உண்டாகும் யோகம்

5-ம் பாவத்தில் பலமற்ற பாபக்கிரகம் தங்கினால் புத்திர நாசத்தைச் செய்கிறான். 8-ம் பாவாதிபதியாக இல்லாத மற்ற பலம்பொருந்திய சுபக்கிரகங்கள் மக்கட்பேற்றைக் கொடுக்கும்.

5-ம் பாவத்தில் மதி தங்கினால் அதிகமான குழந்தைகளைப் பெறும் பாக்கியத்தை உடையவனாக இருப்பான். 2-ம் பாவத்தில் ஞாயிறு பிற கிரகங்களுடன் சேராமல் தனித்திருந்தால் பிள்ளைப்பேறு உண்டாகும்.

விவாஹ காலத்தில் வைக்கப்பட்ட லக்னத்தைக்கொண்டு மகப்பேறறியும் யோகங்கள்

மேஷம், கடகம், விருச்சிகம் இம்மூன்று ராசிகளுள் ஏதேனும் ஒரு ராசி 2-வது ஸ்தானமாக அமைந்து, மதியும் தங்கி இருக்கின்ற நிலையில் விவாஹ லக்னம் அமைந்திருந்தால் மகப்பேறு உண்டாகும். விவாஹ லக்னத்துக்கு 5-ம் பாவத்தில் மதி தங்கினால் குழந்தைகள் குறைவாகப் பிறக்கும் பல மனைவிகளை உடையவனாகவும் இருப்பான்.

5-ம் பாவம் கடக ராசியாக இருந்து, அதில் வியாழனும் தங்கியிருந்தால் பெண் குழந்தைகள் அதிகம் பிறக்கும். 5-ம் பாவத்தில் புதன் தங்கினால் பிள்ளைகள் அதிகம் பிறக்காது. வெள்ளி தங்கினால் இரண்டாவது மனைவி ஏற்பட்டு அவளிடம் குழந்தைகளை அதிகம் பெறுவான். மதியின் ராசியான கடகத்தில் சுபர்களும், அசுபர்களும் கூடியிருந்தால் மிகுந்த பொருள்களை உடையவனாக இருப்பான்.

மதி பாபர்கள், சுபர்கள் இவர்களுடன் கூடியிருந்தால் பொருளற்றவனாக இருப்பான்.

சிம்மம் 5-ம் பாவமாக அமைந்து, மதியும் அதில் தங்கினால் பெண் குழந்தைகள் மிகுதியாகப் பிறக்கும். கன்னி 5-ம் பாவமாக அமைந்து மதியும் அதில் தங்கி 4-ம் பாவத்தில் வெள்ளி தங்கினாலும் பெண் குழந்தைகள் மிகுதியாகப் பிறக்கும்.

5-ம் பாவம் பாபக்கிரகத்தின் சொந்த வீடாகவோ, (ராசியாகவோ), உச்ச ராசியாகவோ அமைந்து, அதில் அந்த பாபக்கிரகம் தங்கியிருந்தால் குழந்தைகள் மிகுதியாகப் பிறக்கும். 5-ம் பாவத்தில் பாபக்கிரகங்கள் தங்கியிருந்தாலும், அதற்குரிய ராசியாக இருப்பின் குழந்தைகள் மிகுதியாகப் பிறக்கும்.

புத்திர சோகம் ஏற்படக்கூடிய யோகங்கள்

5-ம் பாவம் சனியின் சொந்த வீடாக இருந்து, அதில் சனி தங்கியிருந்தால் ஜாதகன் புத்திர சோகத்தை அடைவான். சனி சிம்மத்திலிருந்தாலும், 9-ம் பாவம் அல்லது 3-ம் பாவத்தில் தங்கியிருந்தாலும் புத்திர சோகத்தை அடைவான்.

வியாழன், 3-ம் பாவத்திலோ அல்லது 5-ம் பாவத்திலோ தங்கியிருந்தாலும் புத்திர சோகம் ஏற்படும். மீன ராசி 9-ம் பாவமாகவோ, 5-ம் பாவமாகவோ இருந்து, அதில் வியாழன் தங்கியிருந்தாலும் புத்திர சோகம் ஏற்படும்.

ஸப்தமாதிபதி, 5-ம் பாவத்தில் தங்கியிருந்தால் மனைவிக்கு மரணம் ஏற்படும். அல்லது மகப்பேறு குறைவாக இருக்கும். 5-ம் பாவாதிபதி 7-ம் பாவத்தில் தங்கி இருந்தாலும், 7-ம் பாவத்தில் சுபக்கிரகங்கள் தங்கி இருந்தாலும், ஜாதகனது மனைவி சுகமாக இருப்பாள். மக்கட்பேறும் மிகுதியாக இருக்கும்.

ஜனன காலத்தில் கன்னி, விருச்சிகம், ரிஷபம் அல்லது சிம்மம் 5-ம் பாவமாக அமையப்பெற்ற ஜாதகன் மிகக் குறைவான குழந்தைகளை உடையவனாகவும், வீடற்றவனாகவும், புத்திர சோகத்தையும் அடைபவனாக இருப்பான்.

பிறர் மகனைத் தத்து எடுத்துக்கொள்ளும் யோகம்

சந்திரன் சனைச்சரனுடன்கூடி சிம்ம ராசியை அடைந்தவனாக இருந்துகொண்டு, புத்ர காரகனை அல்லது புத்திர ஸ்தானாதிபனைப் பார்த்தால் ஜாதகன் பிறர் மகனைத் தத்து எடுத்துக்கொள்வான். இதுபோன்று, சந்திரன் புதனுடன்கூடி சிம்ம ராசியை அடைந்தவனாக இருந்துகொண்டு, புத்திரகாரகனை அல்லது புத்திர ஸ்தானாதிபதியைப் பார்த்தல் பிறர் மகனைத் தத்து எடுத்துக் கொள்வான்.

5-ம் பாவத்தில், செவ்வாயின் ஸப்தமாம்ச பாகத்தை அடைந்து, சனியுடன்கூட களத்ரகாரகன் அல்லது களத்ர ஸ்தானாதிபதி தங்கியிருந்து மற்றெந்த கிரகங்களின் பார்வையும் இல்லாதிருந்தால் ஜாதகன் பிறர் குழந்தையை வாங்கி வளர்ப்பான்.

5-ம் பாவத்தில் பாபக் கிரகங்களின் வர்க்கத்தில் சனியும், சூரியனும் சேர்ந்திருந்தாலும், செவ்வாயுடன் சேர்ந்தோ அல்லது அவனது பார்வையையோ பெற்றிருந்தாலும், இந்த யோகத்தில் பிறந்த ஜாதகனது குழந்தை கீழ்மகன் ஒருவனுக்குப் பிறந்ததாக இருக்கும்.

5-ம் பாவத்தில் தங்கியிருக்கிற மதி, செவ்வாயின் அம்சத்தை அடைந்தவனாகவும், சனியினால் பார்க்கப்பட்டவனாகவும், மற்ற எந்த கிரகங்களாலும் பார்க்கப்படாமலும் இருந்தால் ஜாதகனுக்குப் பிறக்கும் குழந்தைகள் கர்ப்பத்திலேயே இறந்து பின் பிறக்கும்.

5-ம் பாவத்தில் செவ்வாய் தங்கியிருந்து, மதியின் ஷட்வர்க்கத்தை அடைந்து, ஞாயிறினால் பார்க்கப்பட்டும் இருந்தால், இந்த ஜாதகனுக்குப் பிறந்த குழந்தை பெற்றோர்களால் கைவிடப்பட்டு முன்பின்னறியாத ஒருவனால் எடுத்து வளர்க்கப்படும் என்று கருணமுனி என்பவர் கூறிகிறார்.

தந்தையின் ஜன்ம லக்னத்துக்கு, 8-வது ராசியில் பிறந்திருந்தாலும் அல்லது ஜாதகனின் லக்னத்தில் மேற்கூறப்பட்ட 8-வது ராச்யாதிபதி தங்கியிருந்தாலும், மற்றெந்த கிரகங்களுடன் சேராமலும் இருந்தாலும் இந்த ஜாதகனைக் கொண்டுதான் பித்ரு காரியங்களைச் செய்யச் சொல்வார்கள்.

லக்னம் அல்லது 11-ம் பாவத்தில் சுபகிரகம் தங்கியிருந்தால் பெண் குழந்தைகள் மிகுதியாகப் பிறக்கும். புதன் இருந்தால் ஆண் குழந்தைகள் குறைவாகப் பிறக்கும். வெள்ளி இருந்தால் 2-ம் மனைவியிடம் அதிகம் ஆண் குழந்தைகள் பிறக்கும்.

த்ரிகோணம் என்று அழைக்கப்படும் 5-ம் பாவத்தைக் கொண்டு "பிரதிபே", "மநீஷா", தாய், கல்வி, மக்கட்பேறு இவைகளை அறியவேண்டும். (த்ரிகோணத்திற்குத் த்ரிகோணமான) 5-ம் பாவத்திற்கு 5-ம் பாவமான 9-ம் இடத்தைக்கொண்டும் அறியவேண்டும்.

குறிப்பு :- பிரதிபா - திடீரென்று தோன்றும் கருத்து அல்லது கற்பனை - வடமொழியில் ப்ரக்ஞா என்பர். "நவநவோந்மேஷஶாலிநீ ப்ரதிபா மதா" புதிது புதிதாகத் தோன்றும் கற்பனைகள் என்றும் கூறுவர். மநீஷா - புத்திசாலித்தனம். கெட்டவர்களைக்கூட தன்வயப்படுத்தக் கூடிய கூர்மையான அறிவு.

ப்ரதிபைக்கதிபர்கள் - ஞாயிறு, வியாழன், வெள்ளி
மநீஷைக்கதிபர்கள் - ஞாயிறு, மதி, புதன்
தாய்க்கு அதிபர்கள் - மதி, புதன்
கல்விக்கு அதிபர்கள் - ஞாயிறு, மதி, புதன்
மக்கட்பேறுக்கு - ஞாயிறு, வியாழன்

தனத்தைக் கொடுப்பவன் வியாழன், குழந்தைகட்கும் பெற்றோருக்கும் பரஸ்பரம் அன்பை வளர்ப்பவன் சனியும், வியாழனும், புருஷனுக்கு மனைவியிடம் அன்பை வளப்பவன் சனியுமாவார்கள். எவனுடைய ஜனன காலத்தில் ஜாதக ரீதியாக சகோதரஸ்தானாதிபதியும், சகோதர காரகனும், தன ஸ்தானாதிபதியும், தனகாரகனும், எவ்வளவு கிரகங்களுடன் சேர்ந்திருக்கின்றார்களோ அவ்வளவு சகோதரர்கள், குழந்தைகள், மனைவிகள் இவர்களோடு கூடினவனாக இருப்பான்.

மனைவி, மக்கட்பேறு, சகோதர்கள் இவர்கள் அற்றவனாக இருக்கும் யோகம்.

(1) 3-ம் பாவாதிபதியும், சகோதர காரகனும் 6, 8, 12-வது பாவங்களுள் ஏதேனும் ஒன்றிலிருந்து சனி, ராகு, கேது இந்த மூன்று கிரகங்களுள் ஏதேனும் ஒன்றுடன் சேர்ந்தோ அல்லது சனி, ராகுவினாலோ அல்லது சனி, கேதுவினாலோ பார்க்கப்பட்டும் இருந்தால் இந்த ஜாதகனுக்குச் சகோதரன் இருக்கமாட்டான்.

(2) 5-ம் பாவாதிபதியும், புத்திரகாரகனும், 6, 8, 12-வது பாவங்களுள் ஏதேனும் ஒன்றிலிருந்து சனி, ராகு அல்லது கேது இவர்களுடன் சேர்ந்தோ அல்லது சனி, ராகு அல்லது சனி, கேது இவர்களால் பார்க்கப்பட்டோ இருந்தால் இந்த ஜாதகனுக்கு மக்கட்பேறு கிடையாது.

(3) 7-ம் பாவாதிபதியும், களத்திரகாரகனும் 6, 8, 12-வது பாவங்களுள் ஏதேனும் ஒன்றிலிருந்து சனி, ராகு அல்லது கேது இவர்களுடன் சேர்ந்தோ அல்லது சனி, கேது இவர்களால் பார்க்கப்பட்டோ இருந்தால் ஜாதகனுக்கு மனைவி இருக்கமாட்டாள்.

தந்தை, மகன், மகள், இவர்கள் நீண்ட ஆயுளுடன் இருக்கும் யோகம்

(1) 5-ம் பாவாதிபதியோ அல்லது புத்திரகாரகனோ, ஞாயிறோ அல்லது குருவோ, பித்ருகாரகனான ஞாயிறோ 5-ம் பாவத்திலோ, லக்ன பாவத்திலோ இவர்களது மித்ர க்ஷேத்திரத்திலோ, சுபக்ஷேத்திரத்திலோ இவர்களது உச்ச க்ஷேத்திரத்திலோ அல்லது இவர்களுடைய சொந்த வீட்டிலோ, சேர்ந்தோ அல்லது தனித்தோ இருந்தாலும், (2) லக்னாதிபதி 5-ம் பாவாதிபதி இருவரும் சுப ஸ்தானங்களை அடைந்திருந்தாலும், உச்ச பாவத்தை அடைவதற்கு ஆரம்ப நிலையிலோ, நடுநிலையிலோ இருந்தாலும், லக்னத்திலோ, 5-ம் பாவத்திலோ இருக்கிற கிரகங்களால் பார்க்கப்படினும், 1, 2, 4, 5, 7, 9, 10, 11-வது பாவங்களை அடைந்திருந்தாலும், 5-ம் பாவத்தில் தங்கின கிரகங்களுடன் சேர்ந்திருந்தாலும், ஜாதகனின் தந்தை நீண்ட ஆயுளுடன் இருப்பான். குழந்தையும் நீண்ட ஆயுளுடனும், மிக்க அறிவுடையதாகவும், இதனுடன் பிறந்த ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் பூர்ணாயுளுடனும் மிக்க செல்வத்துடனும் இருப்பார்கள்.

தந்தை நடுத்தர வயதுடன் இருக்கும் யோகம்

5-ம் பாவாதிபதியும், 9-ம் பாவாதிபதியும், புத்திரகாரகனும், பித்ருகாரகனும் நீச பாவத்தை அடைந்தோ அல்லது அஸ்தங்க தோஷத்தை அடைந்தோ அல்லது சத்ரு க்ஷேத்திரத்தை அடைந்திருந்தாலோ, பாப கிரகங்களுடன் சேர்ந்தோ அல்லது பார்க்கப்பட்டோ அல்லது வயோதிகத் தன்மையை அடைந்தவர்களாக இருந்தாலும் லக்னத்துக்கு 6, 8, 12-வது பாவங்களை அடைந்திருந்தாலும், 6, 8, 12-வது பாவாதிபதிகளால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனின் தந்தைக்கு நடுத்தர வயதுடையவனாக இருக்கின்ற ஆயுள்பாவம் ஏற்படும்.

பால்யத்தில் பித்ரு மரண யோகம்

9-ம் பாவாதிபதியும், பித்ருகாரகனும் 9-ம் பாவத்தை அடைந்து, சத்ரு கிரகங்கள் பலம் பெற்றுமிருந்தால் ஜாதகன் குழந்தைப் பருவத்தில் இருக்கும்பொழுதே தந்தை இறந்து விடுவான்.

தந்தை நீண்ட ஆயுளுடன் இருப்பதற்கான யோகம்

பித்ருகாரகனும், 9-ம் பாவாதிபதியும் லக்னத்தில் மித்ர கிரகங்களுடன் இருந்து உச்ச பாவத்திற்குச் செல்லும் ஆரம்ப நிலையிலோ அல்லது நடுநிலையிலோ இருந்தாலும், ஜன்ம லக்னம் சுபகிரகங்களுடன் கூடியிருந்தாலும், அல்லது சுப கிரகத்தினால் பார்க்கப்பட்டாலும், 9-ம் பாவாதிபதியோ அல்லது பித்ருகாரகனோ அதனது உச்ச ராசியில் இருந்தாலும், இந்த ஜாதகனது தந்தை நீண்ட ஆயுளுடன் இருப்பான்.

தந்தையின் மரணம் ஏற்படும் தசையறிதல்

(1) 9-ம் பாவாதிபதியோ அல்லது பித்ருகாரகனோ, இவ்விருவருமோ 6, 8, 12-வது பாவங்களுள் எந்த பாவாதிபதியுடன் சேர்ந்து எந்த பாவத்தில் இருக்கிறானோ, அந்த பாவாதிபதியின் மகாதசையில் தந்தைக்கு மரணம் ஏற்படும். *(2)* 6-ம் பாவாதிபதியுடன் ஏதாவது பாபக்கிரகம் சேர்ந்திருக்குமேயானால் அப்பொழுது லக்னாதிபதியின் மகாதசையில் மரணம் ஏற்படும். *(3)* 6-ம் பாவாதிபதியுடன் கூடியிருக்கிற கிரகத்தின் மகாதசையில் தந்தைக்கு மரணம் ஏற்படும்.

பெற்றோர்களுள் முதலில் தந்தைக்கு மரணம் ஏற்படும் யோகம்

பித்ருகாரகனான ஞாயிறும், 9-ம் பாவாதிபதியும் ஜாதகனின் ஜன்ம லக்னத்திற்கு 6, 8, 12-வது பாவங்களில் இருந்தாலும், பித்ரு ஸ்தானமான 9-ம் பாவத்துக்குக் கேந்திர ஸ்தானங்களான 1-ம் பாவமாகிய லக்ன ஸ்தானம், 4-ம்

பாவம், 7-ம் பாவம், 10-ம் பாவங்களிலும், 5-ம் பாவத்திலும் சத்ருக்கள் இருந்தாலும், மாத்ரு ஸ்தானாதிபதியும், மாத்ரு காரகனும் ஒருவனாகவே இருந்து, மாத்ரு ஸ்தானத்திற்கு லாப ஸ்தானமான 11-ம் இடத்திலோ தனஸ்தானமான 2-ம் இடத்திலோ கேந்திர ஸ்தானங்களான 1, 4, 7, 10-ம் இடங்களுள் ஏதேனும் ஒன்றிலோ, திரிகோண ஸ்தானங்களான 1, 5, 9-ம் இடங்களுள் ஏதேனும் ஒன்றிலோ இருந்தாலும் முன்சொன்ன பித்ருஸ்தானமான 9-ம் பாகத்திற்குக் கேந்திரங்களில் இருந்தாலும் அல்லது அவைகளைப் பார்த்தாலும், இந்த ஜாதகனது தந்தை, தாய் இறப்பதற்கு முன் இறந்துவிடுவான்.

தந்தைக்கு இறுதிச் சடங்கை செய்யமுடியாமற்போகும் யோகம்

9-ம் பாவாதிபதி ஞாயிறுடன் சேர்ந்து 6, 8, 12-வது பாவங்களில் இருந்தால் ஜாதகன் தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிச் சடங்கினைச் செய்யமாட்டான்.

பெற்றோர்கள் ஒருவர்பின் ஒருவராக இறந்துவிடும் யோகம்

9-ம் பாவாதிபதியும், 4-ம் பாவாதிபதியும் ஒருவராகவே இருந்தால் தாய் தந்தையர் இருவரும் ஒருவர் பின் ஒருவராக இறந்துவிடுவார்.

தெய்வத்தின் சாபத்தினால் புத்திரனை இழக்கும் யோகம்

4, 5, 9-ம் பாவாதிபதிகளுக்கும், பித்ருகாரகனான ஞாயிறுக்கும், மாத்ருகாரகனான சந்திரன் அல்லது சுக்கிரன் இவர்களுக்கும் பாபர்களின் சம்பந்தம் ஏற்பட்டிருந்தாலும், 9-ம் பாவாதிபதி அஸ்தமனமடைந்து இருந்தாலும் இந்த ஜாதகன் தெய்வ சாபத்தால் புத்திரனை இழப்பான் என்று முனிவர்கள் கூறுகிறார்கள்.

பித்ரு சாபத்தினால் புத்திரனை இழக்கும் யோகம்

வெள்ளி, வியாழன், 5-ம் பாவாதிபதி அல்லது லக்னாதிபதி பாபர்களின் சம்பந்தம் பெற்று, களத்ர

ஸ்தானாதிபதி மௌட்யத் தன்மையை (ஞாயிறுக்குச் சமீபத்தில் தங்கினால்) அடைந்திருந்தால் இந்த ஜாதகன் பித்ரு சாபத்தினால் புத்திரனை இழப்பான்.

புத்திரனை இழப்பதற்குரிய மற்ற யோகங்கள்

வியாழனும், லக்னாதிபதியும் பலம் பெற்றவர்களாகவும், 4-ம் பாவத்தில் பாபிகள் இருந்து, அந்த 4-ம் பாவாதிபதியும், 6, 8, 12-ம் பாவங்களை அடைந்திருந்தாலும் புத்திர நாசம் ஏற்படும். அல்லது ஸ்தான தோஷத்தாலும் புத்திர நாசமேற்படும் என்று யவனர் முதலான ஞானிகள் கூறுவர்.

வியாழன், வெள்ளி, லக்னாதிபதி ஆகிய இவர்கள் மிக்க பலமுடையவர்களாகவும், 4, 5, 9-ம் பாவாதிபதிகளும் பலம் பெற்றவர்களாகவும் இருந்து, ஞாயிறு பாபர்களுடன் கூடியிருந்தாலும், இந்த ஜாதகன் பித்ரு சாபத்தினால் புத்திரனை இழப்பான்.

ப்ரச்ன காலத்தில் அப்பொழுது உதயமாகும் லக்னத்தில் இரு பாபர்கள் இருந்தால் ப்ரச்னத்தைக் கேட்க வந்தவன் பித்ரு தோஷத்தினால் புத்திரனை இழந்தவனாக இருப்பான். ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் பாப கிரகமிருந்தாலும் அல்லது 9-ம் பாவத்தில் பாப கிரகம் இருந்தாலும் பாட்டனின் சாபத்தால் ஜாதகன் புத்திரனை இழந்தவனாக இருப்பான்.

5-ம் பாவத்தில் வியாழன் இருந்து 4-ம் பாவாதிபதி அங்கு உச்ச பாவத்தையும் அடைந்திருந்தால், இந்த ஜாதகனது புத்திரன் அவனுக்கு பந்துவைப்போல் (உறவினனைப்போல்) இருப்பான். தந்தையைப் போன்ற உருவத்தை உடையவனாகவும், மிகவும் அறிவுள்ளவனாகவும் இருப்பான்.

மேற்கூறப்பட்ட யோகத்தில் புத்திர பாவத்தைக் கூறும்பொழுது 4-ம் பாவம், மூலத்திரிகோணம், அந்தந்த கிரகங்களின் சொந்த வீடு, நட்பு வீடு இவைகளின்

பலாபலங்களைப் பொறுத்தும் (மூலத்திரிகோணத்தில் ¼ பாகம் குறைந்ததாகவும், தனது ராசியில் ½ பாகம் குறைந்ததாகவும், நட்பு ராசியில் ¾ பாகம் குறைந்ததாகவும் பாபத்வம் இருக்கும்) ஜாதகனுக்குக் குழந்தைகள் பிறக்கும்.

சந்ததி அற்றுப்போகும் யோகம்

இனி, சந்ததி அற்றுப்போவதற்கான லக்ஷணத்தைச் சொல்கிறார் :-

10-வது பாவத்தில் மதியும், *7*-வது பாவத்தில் வெள்ளியும், *4*-வது பாவத்தில் பாபக் கிரகங்களும் இருந்தால் சந்ததி அற்றுப்போகும். இவ்விஷயத்தில் சந்தேகமே இல்லை.

5-வது பாவத்தின் அதிபதி *8*-வது பாவத்திலும், பாப கிரகங்கள் *4*-வது பாவத்திலும், வியாழன் *6*-வது பாவத்திலும் இருந்தால் சந்தேகமின்றி சந்ததி அற்றுப்போகும்.

லக்னாதிபதி *6* அல்லது *8*-வது பாவத்தில் தங்கியிருந்து, *5*-வது பாவத்தின் அதிபதி கிரகம், பாப கிரகங்களின் சேர்க்கையை அடைந்திருந்தாலும், பார்வையை அடைந்திருந்தாலும், சத்ரு ராசி அல்லது நீச ராசியில் தங்கினாலும் புத்ரநாசம் ஏற்படும் என்று அறிவுடையோர் கூறுவர்.

1, 7, 9, 12-வது பாவங்களில் எல்லா பாப கிரகங்களும் தனியாகவோ அல்லது ஒன்றுகூடியோ தங்கினால் அசைக்க முடியாதவாறு ஸ்திரமாக இருக்கின்ற துவேஷத்தால் வம்சத்தை அழிப்பவர்கள் ஆவார்கள்.

68-வது செய்யுளில் சொன்ன யோகத்தையே 7-ல் ப்ருகுவின் புத்ரன் பாபர்களுடன் கூடியிருந்தால் வம்சத்தை அழித்துவிடுவான் என்கிற ஒரு பிரமாண வசனத்தினால் சாதித்திருக்கிறார். அதனால் *68, 72*-வது செய்யுட்களுக்கு ஒரே வியாக்யானம் என்று அறியவும்.

லக்னத்தில் வியாழனும், மதி தங்கின இராசியிலிருந்து 7-வது ராசியில் செவ்வாயும் சுபகிரகத்தினது சேர்க்கை அல்லது பார்வையும் இல்லாமல் 4-வது பாவத்தில் இருக்கிற பாபக் கிரகங்களால் பார்க்கப்பட்டும் இருந்தால், இந்த ஜாதகன் அவனது வமிசத்தை அழிப்பவனாக இருப்பான்.

1, 5, 8, 12-வது பாவங்களில் தனியாகவோ அல்லது ஒன்றுகூடியோ எல்லா பாப கிரகங்களும் தங்கினால் வம்ச நாசமேற்படும்.

1, 8, 12-வது பாவங்களில் எல்லா பாப கிரகங்களும் தனியாகவோ அல்லது ஒன்றுகூடியோ தங்கியிருந்து 5-வது பாவத்தில் மதி தங்கினால் வம்ச நாசமேற்படும்.

புதன், வெள்ளி இவ்விரு கிரகங்களும் தங்கின ராசியில் இருந்து 7, 4-வது ராசிகளில் பாப கிரகமும், வியாழன் தங்கின ராசியிலிருந்து 4, 7-வது ராசிகளில் வெள்ளி தங்கினாலும், மதி தங்கின ராசியிலிருந்து 8-வது ராசியில் ஏதாவது ஒரு பாப கிரகம் தங்கினாலும் ஜாதகன் அவனுடைய வம்சத்தை அழிப்பவனாக இருப்பான்.

லக்னாதிபதி கிரகம் 5-வது பாவத்திலும் எல்லா பாப கிரகங்களும் லக்னம் அல்லது 4-வது பாவத்தில் தங்கி இருந்தாலும் மதி தங்கின ராசியிலிருந்து 5-வது பாவம் பலமற்றிருப்பினும் இந்த ஜாதகனது வம்சம் அழிந்துவிடும்.

பூர்வபாராசர்யத்தில் புத்ர பாவம் அத்தியாயம் என்னும்
பதினைந்தாவது அத்தியாயம் முற்றும்.

முதற்பகுதி முற்றிற்று.

பூர்வபாராசர்யம்

(பிற்பகுதி)

சந்தான தீபிகை என்கிற

முதல் அத்தியாயம்

ஐந்தாம் பாவம், ஏழாவது பாவம் இவ்விரண்டினையும் ஆராய்ந்து, மனைவி, மக்கட்பேறு இவர்களைப்பற்றி அறியும் கிரகங்களின் நிலை கூறப்படுகிறது.

கடவுள் வணக்கம்

குருநாதன், கணேசன், சரஸ்வதிதேவி இவர்களை வணங்கி, பிரமனை மனதால் ஸ்மரித்து; சிவன், விஷ்ணு, நவக்கிரகங்கள் இவர்களையும் பூஜித்து, எனது குருவான "நாராயணர்" என்பவரையும் தியானம் செய்து, இவர்களது அனுக்ரக பலத்தினால் மக்கட்பேற்றைப் பற்றிய விஷயத்தை நன்கு விளக்கும் சந்தான தீபிகை என்னும் பூர்வபாராசர்யம் என்னும் நூலின் பிற்பகுதியை கூறப்போகிறேன்.

உறுதிமொழி

"வராஹமிஹிரர்" என்னும் சோதிட வல்லுநரால் எழுதப்பட்ட "ப்ருஹஜ்ஜாதகம்" எனப்படும் ஹோரா சாத்திரத்தையும், "ஸ்ரீபதி", "கேசவன்" இவர்களால் எழுதப்பட்ட "ஜாதகபத்ததி" என்னும் நூலையும், "கல்யாணவர்மன்" என்ற அரசனால் எழுதப்பட்ட "சாராவளி" என்னும் நூலையும் அவ்வாறே பராசரரின் கருத்தினையும், ஏனைய "ப்ரச்ன" சாத்திரங்களையும் நன்கு ஆராய்ந்து அந்தந்த நூல்களில் கூறப்பட்டுள்ள விஷயங்களின் சாராம்சத்தையும் கருத்திற்கொண்டு மக்கட்பேற்றுக்குரிய இலக்கணத்தைக் கூறப்போகிறேன்.

மக்கட்பேற்றுக்குத் தகுதியற்றோர்

மலடி, கிழப்பருவம் அடைந்தவள், மெலிந்த உடலுடையவள், பூப்படையாத இளம்பெண், நோயுற்றவள், மாதவிடாய் ஆகாதவள், கடினமான உறுப்பு உடையவள், பருத்த மேனியுடையவள் இவர்கள் மக்கட்பேற்றை அடையத் தகுதியற்றவர்கள்.

மக்கட்பேறற்றுப்போதல், தத்து எடுப்பது முதலானவற்றின் யோகம்

இனி, மக்கட்பேறற்றுப் போவது, தத்து எடுத்துக் கொள்வது, புத்திரசோகம், குறைந்த மக்களையடைவது, மிகுதியான மக்களைப்பெறுவது இவைகளைப்பற்றிக் கூறப்படுகிறது.

மக்கட்பேறற்றுப்போதல்

வியாழன், லக்னாதிபதி, களத்ரஸ்தானாதிபதி, புத்திர ஸ்தானாதிபதி இந்நால்வரும் பலமற்றவர்களாக இருந்தால் இந்த ஜாதகனுக்கு மக்கட்பேறு இல்லை.

5-வது பாவத்தில் பாப கிரகம் தங்கியிருந்து, 5-ம் பாவாதிபதியும், நீச ஸ்தானத்தையும் அடைந்திருந்து சுபக் கிரகங்களால் பார்க்கப்படாமலும் இருந்தால் இந்த ஜாதகனுக்கு மக்கட்பேறு இல்லை.

8-ம் பாவாதிபதி 5-ம் பாவத்திலும், 5-ம் பாவாதிபதி 8-ம் பாவத்திலும், சுபர்களால் பார்க்கப்படாமலோ அல்லது அவர்களுடன் சேராமலும் இருந்தால் இந்த ஜாதகனுக்கு மக்கட்பேறு இல்லை.

ஏதாவதொரு பாப கிரகம் 5-ம் பாவத்தை அடைந்து, 5-ம் பாவாதிபதியும் பாப கிரகங்களின் மத்தியிலிருந்து சுபர்களுடன் சேராமலும் அல்லது பார்க்கப்படாமலும் இருந்தால் இந்த ஜாதகனுக்கு மக்கட்பேறு இல்லை.

வியாழன் பாப கிரகங்களின் மத்தியிலிருந்து புத்திரகாரகன் பலமற்றவனாகயிருந்து, சுபர்களுடன் சேராமலும் அல்லது பார்க்கப்படாமலும் இருந்தால் இந்த ஜாதகனுக்கு மக்கட்பேறு இல்லை.

5-வது பாவத்தின் இருபுறமும் பாப கிரகங்கள் தங்கி இருந்து, சுபர்கள் தங்கியிருக்காமலும் அல்லது சுபர்களால் பார்க்கப்படாமலும் இருந்தாலும், 5-ம் பாவாதிபதி பாபர்களுடன் கூடியிருந்தாலும், இந்த ஜாதகனுக்கு மக்கட்பேறு இல்லை.

5-ம் பாவாதிபதி தனது நீசராசியை அடைந்திருந்தாலும், தனது சத்ரு ராசியை அடைந்திருந்தாலும், சூரியனின் ஒளிக்கதிரில் மௌட்யத் தன்மையை அடைந்திருந்தாலும் 6, 8, 12-ம் பாவதிபதிகளுடன் கூடியிருந்தாலும் அல்லது அவர்களால் பார்க்கப்படாமலும், லக்னத்திற்கும் 5-ம் பாவாதிபதிக்கும், புத்திரகாரகனுக்கும் சுபர்களின் பார்வை இல்லாதிருந்தாலும், இந்த ஜாதகனுக்குப் பிறந்த குழந்தைகள் தங்குது கடினம். ஆதலால் மக்கட்பேறு இருக்காது.

மிகுந்த பலத்துடன் கூடிய பாப கிரகம் 5-ம் பாவத்தில் தங்கியிருந்து, அதற்கு புத்திரகாரனின் பார்வையும் ஏற்படாதிருந்தால், இந்த ஜாதகனுக்கு மக்கட்பேறில்லை.

பிறர் குழந்தையை தத்து எடுத்துக்கொள்ளும் யோகம்

மிதுனம் அல்லது கன்னி, மகரம் அல்லது கும்பம் 5-ம் பாவமாக அமைந்து இவைகளில் சனி அல்லது மாந்தி இவர்கள் இருந்தாலும் அல்லது இவர்களால் பார்க்கப் பட்டாலும் இந்த ஜாதகன் பிறர் குழந்தையை தத்து எடுத்துக்கொள்வான்.

கன்னியில் மாந்தியிருந்து, 5-வது பாவம் சனியின் வீடாக இருந்து, சனியும் அதிலிருந்தால் ஜாதகன் தத்து எடுத்துக்கொள்வான். மேற்கூறப்பட்ட யோகத்தில் சனியோ மாந்தியோ வியாழனல் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குச் சந்ததி (வழித்தோன்றல்) ஏற்படும்.

மக்களை இழத்தல்

பாப கிரகத்தின் ஆட்சியுள்ள ராசி 5-ம் பாவமாக அமைந்து, 5-ம் பாவத்தில் பாப கிரகங்கள் இருந்தாலும், வியாழன் மகர ராசியை அடைந்திருந்தாலும், இந்த ஜாதகன் புத்திரசோகத்தை அடைபவனாக இருப்பான்.

மிதமான மக்களைப் பெறுதல்

வியாழன் மீனத்தில் இருந்தால் மிகக் குறைவாகக் குழந்தைகள் பிறக்கும். தனுசில் இருந்தால் காலந்தாழ்ந்து (சாந்தி, பரிகாரங்கள் செய்தபின்) மிகவும் கஷ்டப்பட்டு குழந்தைகள் பிறக்கும். கடகத்தில் இருந்தால் சந்ததி ஏற்படாது. கும்பத்தில் இருந்தால் நல்ல சந்ததிகள் ஏற்படும்.

மக்கட்பேறடைதல்

5-ம் பாவம் சுபர்களுடன் கூடியிருந்தாலும், சுபர்களால் பார்க்கப்பட்டாலும், சுபகிரகத்தின் பாவமாக இருந்தாலும், இந்த ஜாதகனுக்குக் குழந்தைகள் பிறக்கும். இப்படி இல்லாமல், 5-ம் பாவம் பாப கிரகங்களுடன் கூடியதாகவும், பாபர்களாலும் பார்க்கப்பட்டும், பாப கிரகத்தின் அம்சமாகவும் இருந்தால் குழந்தைகள் பிறக்காது.

லக்னாதிபதியும், 5-ம் பாவாதிபதியும் சேர்ந்திருந்தாலும் அல்லது ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டாலும் அல்லது லக்னத்தில் 5-ம் பாவாதிபதியும், 5-ம் பாவத்தில் லக்னாதிபதியும் இருந்தால், இந்த ஜாதகனுக்குக் குழந்தைகள் பிறக்கும்.

பூர்ணபலம் பெற்ற 5-ம் பாவாதிபதி, வெள்ளி, வியாழன், 4-ம் பாவாதிபதி இவர்களால் புதன் பார்க்கப்பட்டாலும், புத்திரகாரகன் பலம் பெற்றிருந்தாலும் 5-ம் பாவம் பலம் பெற்றிருந்தாலும் குழந்தைகள் அதிகமாகப் பிறக்கும்.

லாப ஸ்தானமான பதினொன்றாமிடத்தில் 5-ம் பாவாதிபதி பலம் பொருந்தியவனாக, ஹோராபதியுடன்[1] சேர்ந்தோ அல்லது சுபர்களால் பார்க்கப்பட்டோ, பாபர்களின் சம்பந்தமும் இல்லாமலிருந்தால் மிகுந்த சந்ததிகள் ஏற்படும்.

மேஷம் அல்லது சிம்மம் அல்லது விருச்சிகம் அல்லது மீனம் 5-ம் பாவமாக அமைந்து, அதில் செவ்வாய் இருந்து வியாழனால் பார்க்கப்பட்டவனாகவும் இருந்தால் ஜாதகனுக்குக் குழந்தைகள் பிறக்கும்.

5-ம் பாவம் சுபக்கிரகங்கள் தங்கியுள்ள இரு ராசிகளுக்கு மத்தியில் இருந்தாலும், சுபர்களால் பார்க்கப்பட்டாலும் அல்லது 5-ம் பாவாதிபதியால் பார்க்கப்பட்டாலும், (அந்த ஸ்தானாதிபதியால்) 5-ம் பாவாதிபதி, 5-ம் பாவத்திலேயே இருந்தாலும் குழந்தைகள் பிறக்கும்.

5-ம் பாவாதிபதி பலம்பெற்று, 5-ம் பாவத்திலோ அல்லது 7-ம் பாவத்திலோ அல்லது லக்னத்திலோ இருந்து பாபர்கள் சம்பந்தமோ அல்லது பார்வையோ இல்லாமல் இருந்தால் குழந்தைகள் பிறக்கும்.

5-ம் பாவம் சுபர்களுடன் சேர்ந்தோ அல்லது புத்திரகாரகன் அல்லது 5-ம் பாவாதிபதியுடன் சேர்ந்தோ, வியாழன் இருக்கிற ராச்யாதிபதி, சுபர்களுடன் சேர்ந்தோ இருந்தாலும் பிள்ளைகள் பிறக்கும்.

---

1. ஒவ்வொரு நாளையும் (பகல் 12 மணி நேரங்களையும், இரவு 12 மணி நேரங்களையும்) சூரியன் முதலான ஏழு கிரகங்களுக்கும் ஒவ்வொன்றுக்கு 1 மணி வீதமாக கால அளவு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த காலங்களுக்கு ஹோரா காலம் என்று பெயர். உதாரணமாக ஞாயிற்றுக்கிழமைக்கு முதல் காலம் காலை 6-00 மணி முதல் 7-00 மணிவரை சூரியனின் ஹோரை என்றும், பின்வரும் ஒவ்வொரு மணியும் வெள்ளி, புதன், சந்திரன், சனி, குரு, செவ்வாய் இவர்களின் காலம் என்ற முறையில் வரும். மற்ற நாட்களுக்கும் அந்தந்த நாட்களுக்குரியவன் ஹோரை முதலிலும், மற்றவர்களது ஹோரை தொடர்ந்தாற்போல் பின்பு வரும். இந்த ரீதியில் வரும்பொழுது ஜாதகன் எந்த கிரகத்தின் ஹோரையில் பிறக்கிறானோ அவன் ஹோராபதி.

வியாழன் கன்னி ராசியிலோ, சுபக்கிரகங்களின் ராசிகளிலோ அல்லது லக்னத்திலோ இருக்கப்பெற்று, பாபக்கிரகங்களால் பார்க்கப்படாமலும் இருந்தால் குழந்தைகள் பிறக்கும்.

பீஜக்ஷேத்திர விளக்கம்

(1) ஞாயிறு, வியாழன், சனி இம்மூன்று கிரகங்களின் ஸ்புடத்தைக் கூட்டி வருகின்ற ராசி, பாகை, கலை, விகலைகள் பீஜஸ்புடமாகும். (2) மதி, புதன், வியாழன், லக்னம் இந்நான்கையும் கூட்டி வருகின்ற ராசி, பாகை, கலை, விகலைகள் க்ஷேத்திரஸ்புடமாகும். இவ்விரண்டும் சந்தான ஸ்புடமாகும். பீஜஸ்புடமும், நவாம்ச ராசியும் பலம் பொருந்தியிருந்தால் ஆண் குழந்தைகள் பிறக்கும். க்ஷேத்திர ஸ்புடமும், நவாம்ச ராசியும் பலம் பொருந்தியதாக இருந்தால் பெண் குழந்தைகள் பிறக்கும்.

குளிகன் இருக்கிற ராசி அல்லது குளிகன் இருக்கின்ற நவாம்ச ராசி அல்லது 11-ம் பாவாதிபதி இருக்கின்ற நவாம்ச ராசி இம்மூன்றினுள் ஏதாவது ஒன்றில் பீஜஸ்புடாதிபதி இருந்தால் ஆண் குழந்தையும், க்ஷேத்திர ஸ்புடாதிபதி இருந்தால் பெண் குழந்தையும் பிறக்கும். ஆனால் இந்த யோகத்தில் பீஜஸ்புடாதிபதியோ அல்லது க்ஷேத்திர ஸ்புடாதிபதியோ 6, 8, 12-ம் பாவங்களை அடைந்துவிடாது இருத்தல் வேண்டும்.

கருத்தரிக்கும் காலம்

புரட்டாசி மாதத்தில் பகலில் பிறந்த பெண், கன்னி ராசியில் வியாழன் கோசார ரீதியாக சஞ்சரிக்கின்றபொழுது கர்ப்பம் தரிப்பாள்.

புரட்டாசி மாதத்தில் இரவில் பிறந்த பெண், கன்னி ராசியில் ஞாயிறும், சனியும் இருந்து, வியாழனும் கோசார ரீதியாக சஞ்சரிக்கின்றபொழுது கர்ப்பம் தரிப்பாள்.

5-வது பாவத்தில் சனியிருந்து, கன்னியில் வியாழனும் இருந்து, 5-ம் பாவாதிபதி 1, 4, 7, 10 பாவங்களில் கோசார ரீதியாக வரும் சமயத்தில் பெண் கர்ப்பம் தரிப்பாள்.

ப்ரச்னத்தைக் கொண்டு பிறக்கப்போவது ஆண் அல்லது பெண் என்பதை அறிதல்

பிரச்ன காலத்தில், லக்னத்தில் ஞாயிறு, வியாழன், மதி இருந்தாலும் அல்லது ஓஜ ராசியில், ஓஜ நவாம்சத்தை அடைந்திருந்தாலும், இவர்கள் பலம் பெற்றிருந்தாலும், பிறக்கப்போகும் குழந்தை ஆணாக இருக்கும். இதற்கு மாறாக இருந்தால் (சம ராசியிலோ, சம ராசி நவாம்சத்திலோ ஞாயிறு, வியாழன், மதி இருந்து பலமற்றவர்களாக இருந்தால்) பெண் குழந்தையாக இருக்கும்.

மிகவும் அதிகமான அளவு மக்களைப்பெறுதல்

5-ம் பாவாதிபதி பரமோச்ச பாகத்தை அடைந்து, புருஷக் கிரகத்தின் நவாம்சத்தில் இருந்து, சுபர்களால் பார்க்கப்பட்டும் இருந்து, 5-ம் பாவம் பாபர்களால் பார்க்கப்படாமலும் அல்லது பாபர்களுடன் சேராமலும் இருந்தால் அதிகமான அளவு குழந்தைகள் பிறக்குமென்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

புத்திரனை இழக்கும் யோகம்

5-ம் பாவாதிபதி மிக்க பலம்பெற்று 6, 8 அல்லது 12-வது பாவத்திலிருந்து 6, 8, 12-வது பாவாதிபதிகளால் பார்க்கப்பட்டோ அல்லது அவர்களுடன் கூடியிருந்தாலோ ஜாதகன் மகனை இழப்பான்.

மிகவும் அதிகமான அளவு மக்களைப் பெறுவதற்குரிய மற்றுமொரு யோகம்

5-ம் பாவாதிபதி 1, 2, 4, 7, 9, 10, 11-வது பாவங்களுள் ஏதேனும் ஒன்றிலிருந்து பாபர்களால் பார்க்கப்படாமலும் இருந்தால் அதிகமான குழந்தைகள் பிறக்கும்.

சாபத்தின் காரணமாக மக்களை இழத்தல்

5-ம் பாவாதிபதி 1, 2, 4, 7, 9, 10, 11-வது பாவங்களுள் ஏதேனும் ஒன்றிலிருந்து பாபர்களால் பார்க்கப்பட்டால் தெய்வத்தின் சாபத்தால் புத்திரநாசம் ஏற்படும்.

வியாழன், லக்னம், 9 அல்லது 10-ம் பாவத்தில் மாந்தியுடன்கூடி 6-ம் பாவாதிபதியுடன் சேர்ந்தோ அல்லது அவனால் பார்க்கப்பட்டோ இருந்தால் பிராம்மண சாபத்தினால் புத்திரநாசம் ஏற்படும்.

5-ம் பாவாதிபதி செவ்வாயுடன் கூடியோ அல்லது 6-ம் பாவாதிபதி செவ்வாயுடன் கூடியோ இருந்தாலும், 5-ம் பாவாதிபதி, 6-ம் பாவத்தில் தங்கினாலும் சத்ருவின் கோபத்தால் புத்திரநாசம் ஏற்படும்.

5-ம் பாவாதிபதி செவ்வாய் அல்லது 8-ம் பாவாதிபதியுடன் சேர்ந்தோ, சுபர்களால் பார்க்கப்படாமலோ இருந்தால் சத்ரு சாபத்தால் புத்திரநாசம் ஏற்படும்.

மாத்ரு ஸ்தானமான 4-ம் பாவத்தில் பாப கிரகம் இருந்து புத்திரகாரகன் சனியுடன் சேர்ந்து 12-ம் பாவத்திலும், 8-ம் பாவத்திலும் பாப கிரகமிருந்தாலும் அன்னையின் சாபத்தினால் புத்திரநாசம் ஏற்படும்.

9-ம் பாவம் பாப கிரகத்துடன் கூடியதாகவும், 5-ம் பாவாதிபதி சனியுடன் சேர்ந்து 12-ம் பாவத்திலும், 8-ம் பாவத்திலும் பாப கிரகமிருந்தால் அன்னையின் சாபத்தினால் புத்திரநாசம் ஏற்படும்.

லக்னத்தில் சனியும், 5-ம் பாவத்தில் ஞாயிறும், லக்னம் 5 அல்லது 9-ம் பாவத்தில் ராகுவும் இருந்தால் ஸர்ப்ப சாபத்தினால் புத்திரநாசம் ஏற்படும் என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

வியாழன் 6 அல்லது 8-வது பாவத்திலும், லக்னம் 5 அல்லது 9-ம் பாவங்களில் மற்றெல்லா கிரகங்களும் இருப்பின், பெண்களைத் துன்புறுத்தியதால் ஏற்பட்ட குற்றம் காரணமாகப் புத்திரநாசம் ஏற்படும்.

புதன் 6, 8 அல்லது 12-வது பாவத்தில் இருந்து, பாபர்கள் 1, 4, 7, 10 அல்லது 5-ம் பாவத்திலிருந்தால் பித்ரு சாபத்தினால் புத்திரநாசம் ஏற்படும்.

பிறர் குழந்தையை தத்து எடுத்துக்கொள்ளுதல்

ராகு செவ்வாயுடன் கூடினவனாகவும், 5-ம் பாவாதிபதியினால் பார்க்கப்படாமலும் இருந்தால் பிறந்த பிள்ளைகள் தங்காது. பிறர் பிள்ளையைத் தத்து எடுத்துக்கொள்வான்.

மதி பாபர்கள் இருக்கிற லக்னத்தில் இருந்து, 5-ம் பாவாதிபதி 9-ம் பாவத்திலிருந்தாலும், லக்னாதிபதி தனது மூலத்திரிகோணங்களில் இருந்தால் பிறர் பிள்ளையைத் தத்து எடுத்துக்கொள்வான்.

புத்திர ஸ்தானமான 5-ம் பாவத்தில் சுபர்கள் இருந்து (பாபர்கள் பார்வை அல்லது சேர்க்கையில்லாமல்) பூர்ண பலத்துடன் இருந்தாலும், ஆரூடம் கேட்க வந்த சமயத்தில் அமைந்த லக்னத்தைக் காட்டிலும் ஜன்ம லக்னம் பலம் பெற்றிருந்தாலும் மறுதாரத்தினிடம் மகப்பேறு உண்டாகும்.

ஆரூட காலத்திய லக்னமும், ஜன்ம லக்னமும் பலவீனமாக இருந்தால் பிறர் குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்வான்.

மிதுனம், கன்னி, மகரம் அல்லது கும்பம் இந்த நான்கினுள் ஒன்று 5-ம் பாவமாக அமைந்து, அது மதி, சனி இவர்களால் பார்க்கப்பட்டோ அல்லது இவர்களுடன் சேர்ந்தோ இருந்தால் பிறர் பிள்ளையைத் தத்து எடுத்துக் கொள்வான்.

மிதுன லக்னம், மிதுன ராசியின் 4-வது பாகம் அல்லது மிதுனம் சனியின் நவாம்ச பாகமாக இருந்து, அதில் 5-ம் பாவாதிபதி இருந்தாலும், பிறர் குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்வான்.

6-ம் பாவாதிபதி புதன், ஞாயிறு இவர்களுடன் சேர்ந்து, சனியின் நவாம்சத்தில் இருந்தால் பிறர் குழந்தையைத் தத்து எடுத்துக்கொள்வான்.

தத்து எடுத்துக்கொண்டபின் குழந்தை பிறக்கும் யோகம்

5-ம் பாவாதிபதி சனியின் நவாம்சத்தை அடைந்து, வியாழனும், வெள்ளியும் அவர்களது ராசியில் இருந்தால் தத்து எடுத்துக்கொண்டபின் குழந்தை பிறக்கும்.

வளர்பிறையில் சனியின் நவாம்சத்தை மிகுதியான கிரகங்கள் அடைந்திருந்தால், 5-ம் பாவத்தில் வியாழனும் இருந்தால் பிறர் குழந்தையைத் தத்து எடுத்துக்கொள்வான்.

5-ம் பாவாதிபதி சனியின் நவாம்சத்தை அடைந்து வியாழனும் மகரம் அல்லது கும்பத்தில் இருந்து சனியுடன் சேர்ந்தோ அல்லது அவனால் பார்க்கப்பட்டோ இருந்தால் பிறர் குழந்தையைத் தத்து எடுத்துக்கொள்வான்.

காலந்தாழ்ந்து குழந்தை பிறக்கும் யோகம்

பகலில் பிறந்த ஜாதகன், அவனுடைய ஜனன காலத்தில் செவ்வாய் ஜன்ம லக்னத்திலோ அல்லது 8-வது ராசியையோ அடைந்திருந்து, 5-ம் பாவத்தில் ஞாயிறும் இருந்தால் விவாகமாகி வெகுநாட்களுக்குப் பிறகு குழந்தை பிறக்கும்.

சனி ஜன்ம லக்னத்திலும், வியாழன் 8-ம் பாவத்திலும், செவ்வாய் 12-ம் பாவத்திலும் இருந்து, 5-ம் பாவாதிபதியும் பலமற்றவனாகவும் இருந்தால் இந்த ஜாதகனுக்குக் காலம் தாழ்ந்து குழந்தை பிறக்கும்.

மதி 11-ம் பாவத்தில் மிகுதியான கிரகங்களுடன் கூடினவனாக இருந்து, வியாழன் 5-ம் பாவத்தை அடைந்த பாப கிரகங்களால் பார்க்கப்பட்டு இருந்தால் இந்த ஜாதகனுக்குக் காலந்தாழ்ந்து குழந்தை பிறக்கும்.

பிள்ளை பிறக்கும் காலம்

வியாழன் ஜன்ம லக்னம், சந்திர லக்னம், 2, 7, 9 அல்லது 11-வது ராசிகளில் சஞ்சரிக்கும் பொழுது அல்லது இரண்டாம் இடத்திற்குரியவன் 5-ம் இடத்தில் சஞ்சரிக்கும்பொழுது குழந்தை உண்டாகும்.

5-ம் பாவாதிபதியுடன் சேர்ந்த கிரகங்களும், 5-ம் பாவாதிபதியினால் பார்க்கப்பட்ட கிரகங்களும், 5-ம் பாவாதிபதியின் நவாம்சத்தை அடைந்த கிரகங்களும் லக்னாதிபதியும், சந்திர லக்னாதிபதியும், கோசார ரீதியாக அவரவர்கள் ஸ்தானத்திற்கு வரும்பொழுதும் 5-ம் பாவாதி பதியுடன் சேர்ந்த அல்லது பார்க்கப்பட்ட அல்லது 5-ம் பாவாதிபதியின் நவாம்சத்தை அடைந்த கிரகங்கள் அல்லது 5-ம் பாவாதிபதியின் தசை அல்லது அந்தர்தசா காலங்களில் குழந்தை பிறக்கும்.

61, 62-ம் செய்யுளில் கூறப்பட்ட கிரகங்களில் எந்த கிரகத்திற்குப் பூர்ணபலம் இருக்கிறதோ அதனது தசையில் கோசார ரீதியாக அதனது ராசியில் வரும்பொழுது குழந்தை பிறக்கும்.

சத்ரு ராசி, நீச ராசி, சத்ரு கிரகத்தின் நவாம்சம் இவைகளை அடை.யாதவைகளும், 6-ம் பாவாதிபதியுடன் கூடினவைகளும், 5-ம் பாவத்தை அடைந்தவைகளும் வியாழனின் நவாம்ச பாகத்தை அடைந்தவைகளுமான கிரகங்களின் எண்ணிக்கையைக் கொண்டு ஜாதகனுக்கு எவ்வளவு குழந்தைகள் என்று கூறவேண்டும்.

வியாழன், ஜன்ம லக்னாதிபதி, சந்திர லக்னாதிபதி, 5-ம் பாவாதிபதி இவர்களின் தசையில் அல்லது ஞாயிறின் ஹோரையை அடைந்த கிரகங்களின் தசையில் குழந்தை பிறக்கும்.

லக்னாதிபதி, 5-ம் பாவாதிபதி, 7-ம் பாவாதிபதி, 9-ம் பாவாதிபதி இவர்களின் தசையிலோ அல்லது 5-ம் பாவத்தில் இருக்கிற கிரகத்தின் தசையிலோ குழந்தை பிறக்கும்.

5-ம் பாவதிபதி, வியாழன் அல்லது இவர்கள் இருக்கிற ராசியின் நவாம்சத்தை அடைந்த கிரகங்கள் இவர்களுள் பூர்ண பலம்பெற்ற கிரகத்தின் தசையில் அல்லது இவர்களது ஹோரையிலோ குழந்தை பிறக்கும்.

வியாழன், வியாழனது நவாம்ச பாகத்தை அடைந்த கிரகங்கள் மூலத்திரிகோணத்தை அடைகின்றபொழுது குழந்தை பிறக்கும். இவ்வாறு மற்ற சாஸ்திரங்களை ஆய்ந்து ஜன்ம காலத்தைக் கொண்டு (லக்னத்தை) மிக நுட்பமாக அறிந்து வம்சாவளியை நிரூபிக்கவேண்டும்.

பூர்வபாராசர்யத்தில் பிற்பகுதியில் சந்தானதீபிகை என்னும் முதலாவது அத்தியாயம் முற்றும்.

இரண்டாவது அத்தியாயம்

6-வது பாவத்தில் இருக்கின்ற ஞாயிறு முதலான கிரகங்களின் பலன்

ஞாயிறு 6-வது பாவத்தை அடைந்திருந்தால் மிகவும் காமியாகவும் மிகுந்த பசியுடையவனாகவும், மிகுந்த பலம் உடையவனாகவும், நிறைந்த செல்வம் உடையவனாகவும் பிரசித்திபெற்ற குணம் உடையவனாகவும் இருக்கிற அரசனாகவோ அல்லது சேனாதிபதியாகவோ இருப்பான்.

வளர்பிறை அல்லது தேய்பிறையில் இருக்கிற மதி 6-வது பாவத்தில் இருந்தால் எப்பொழுதும் நோயுற்றவனாக இருப்பான். மதி 6-வது பாவத்தில் இருந்தால் தண்ணீரால் உண்டாகிறதும் அல்லது வ்ரணத்தினால் (புண்ணால்) உண்டாகிறதும், வயிற்றில் உண்டாகிறதுமான ரோகத்தினால் பீடிக்கப்பட்டவனாக இருப்பான். தேய்பிறைச் சந்திரனாகில் அல்பாயுஸாக இருப்பான்.

செவ்வாய் 6-வது பாவத்தில் இருந்தால் மிகவும் பசி உடையவனாகவும், மிகுந்த பலமுடையவனாகவும், மிகுந்த வீர்யமுள்ள ஆண்மகனின் உடலமைப்பை உடைய வனாகவும் பிறக்கிறான். 6-ம் பாவம் கடக ராசியாகவிருந்து அதில் செவ்வாய் இருந்தால் ஜாதகன் தனது பந்துக்களை ஜயிப்பவனாகவும், குலத்திலுள்ளவர்களுள் சிறந்தவனாகவும் இருப்பான்.

புதன் 6-வது பாவத்தில் இருந்தால் ஜாதகன் எப்பொழுதும் மறுத்துக் கூறுபவனாகவும், சண்டை செய்பவனாகவும், சண்டையில் எதிரியால் ஜயிக்கப்பட்ட வனாகவும் (எதிரியிடம் தோற்றுப்போகின்றவனாக) இருப்பான்.

வியாழன் 6-வது பாவத்தில் இருந்தால் ஜாதகன் பெண்களிடம் தோற்றுப்போகின்றவனாகவும், சத்ருக்களைக் கொல்பவனாகவும், உலகப் பிரசித்திபெற்றவனாகவும் இருப்பான்.

வெள்ளி 6-வது பாவத்தில் இருந்தால் பெண்களுக்கு (மனைவிக்கு) கேடு உண்டாகும். விரோதிகள் மிகுதியாக இருப்பார்கள். ஐச்வர்யமற்றவனாக இருப்பான். மிகவும் பயந்த குணமுடையவனாகவும், கவலையுடையவனாகவும் இருப்பான்.

சனி 6-வது பாவத்தில் இருந்தால் மிகுந்த காமியாகவும், நல்ல உடற்கட்டை உடையவனாகவும், மிகுந்த பராக்கிரமம் உடையவனாகவும், மிகுதியாகச் சாப்பிடுகிறவனாகவும் விஷமமான (குறும்புத்தனமான) குணம் உடையவனாகவும், எண்ணற்ற பகைவர்களின் கூட்டத்தை அழிப்பவனாகவும் ஜாதகன் இருப்பான்.

ராகு 6-வது பாவத்தில் இருந்தால் விஷத்தைக் கொடுப்பவனாகவும், கண்ணோய் உடையவனாகவும், அரசனுக்குப் பிரியமானவனாகவும், மிகவும் தன்மானம் உடையவனாகவும், சத்துருக்கள் எல்லோரையும் தன்வயப் படுத்துபவனாகவும், பிற்காலத்தில் பிசாசு முதலான கிரகங்களால் பீடிக்கப்பட்டவனாகவும் ஜாதகன் இருப்பான்.

கேது 6-வது பாவத்தில் இருந்தால் உதாரகுணம் உடையவனாகவும், நல்ல தர்மத்தைச் செய்பவனாகவும், கல்வி அறிவுடையவனாகவும், உறவினர்களிடம் அன்பு கொண்டவனாகவும், எல்லோராலும் வணங்கத் தகுந்த பெரியோனாகவும் ஜாதகன் இருப்பான்.

ஞாயிறு 6-வது பாவத்தில் இருந்தால் ஜாதகன் காமியாகவும், பலமுள்ளவனாகவும், அரசனிடமிருந்து பெறப்பட்ட தனத்தை உடையவனாகவும், நிறைந்த செல்வம் உடையவனாகவும், எப்பொழுதும் தன் பிள்ளையை வெறுப்பவனாகவும் மிக்க புகழுடையவனாகவுமிருப்பான்.

மதி 6-வது பாவத்தில் இருந்தால் ஜாதகன் சத்ருக்கள் கண்டு நடுங்கக்கூடிய பராக்கிரமம் உடையவனாகவும், மிகுந்த உற்சாகம் உடையவனாகவும் இருப்பான்.

செவ்வாய் 6-வது பாவத்தில் இருந்தால் ஜாதகன் அதிகமாகச் சாப்பிடுவனாகவும், தலைவனாகவும், பல சத்ருக்களைத் தனது பராக்கிரமத்தினால் வெல்பவனாகவும், மிகுந்த பலமுள்ளவனாகவும் இருப்பான்.

புதன் 6-வது பாவத்தில் இருந்தால் ஜாதகன் பலமற்ற வனாகவும், எப்பொழுதும் துன்பங்களை அனுபவிப்ப வனாகவும், சத்ருக்கள் அற்றவனாகவும் இருப்பான்.

வியாழன் 6-வது பாவத்தில் இருந்தால் ஜாதகன் அறிவற்றவனாகவும், சத்ருக்கள் அற்றவனாகவும், ஏழையாகவும் இருப்பான்.

வெள்ளி 6-வது பாவத்தில் இருந்தால் ஜாதகன், பெண்களை வெறுக்கின்றவனாகவும் (பெண்களால் வெறுக்கப்படுகிறவன் என்று கூறுதல் பொருந்தும்), சத்ருக்கள் எல்லோரையும் அழிப்பவனாகவும் இருப்பான்.

சனி 6-வது பாவத்தில் இருந்தால் ஜாதகன் மிகுதியாகச் சாப்பிடுகிறவனாகவும், நிறைந்த செல்வம் உடைய வனாகவும், அரசனிடமிருந்து பெறப்பட்ட தனத்தை உடையவனாகவும் இருப்பான்.

புதன் பாப கிரகங்களுடன் சேர்ந்து 6-வது பாவத்தில் இருந்தால் ஜாதகன் எல்லோருக்கும் விரோதியாகவும், தனது குலத்திலுள்ளவர்களுடன் விரோத மனப்பான்மை உடைய வனாகவும், தாயாரை இழப்பவனாகவும், துக்கத்தினால் தவிக்கின்றவனாகவும் இருப்பான்.

புதனும், வெள்ளியும் 6-வது பாவத்தில் இருந்தால் ஜாதகன் பலவிதமான இன்னல்களை அனுபவிப்பவனாக இருப்பான். ஞாயிறும், செவ்வாயும் 6-வது பாவத்தில் இருக்கப்பிறந்தவன் புண்ணால் ஏற்பட்ட வடுக்களை உடையவனாகவும், துக்கத்தை அனுபவிப்பவனாகவும் இருப்பான்.

சனியும், ஞாயிறும் 6-வது பாவத்தில் இருந்தால் ஜாதகன் தன்னினத்தை விட்டு கீழ்நிலையை அடைபவனாகவும், மிகவும் பயந்த குணமுடையவனாகவும் இருப்பான். சுபக்கிரகாதிபதிகள் இவர்களைப் பார்த்தால் ஜாதகன் தனது இடத்தை விட்டு விடுவான். ஜாதிப்பிரஷ்டம் ஏற்படாது.

மதி 6-வது பாவத்தில் 9 கிரகங்களுள் எந்த ஒரு கிரகத்துடன் சேர்ந்திருந்தாலும் மனதில் விவரிக்க இயலாத துக்கத்தை உடையவனாக இருப்பான். சண்டாளன் முதலானவர்களிடம் பகையும், வாழ்க்கையில் பிற்காலத்தில் மிகுந்த துக்கத்தை உடையவனாகவும் இருப்பான்.

செவ்வாய் 6-வது பாவத்தில் இருந்து, சனியினால் பார்க்கப் பட்டால் ஜாதகனுக்கு விரோதிகள் உண்டாகின்றனர். சுபருடன் சேர்ந்தோ, சுபரால் பார்க்கப்பட்டோ இருந்தால் விரோதியிடமிருந்து பயம் ஏற்படாது. இவ்வாறு 6-வது பாவாத்தியாத்தில் விஸ்தாரமாகக் கூறப்பட்டது யாவற்றையும் நன்கு ஆலோசிக்க (ஆராய) வேண்டும்.

6-வது பாவம் முதல் 12-வது பாவம் முடிய உள்ள கிரகங்களின் அதிபர்களும், அவர்களால் ஏற்படும் பலனும்

6-வது பாவத்திற்கு சுபக்கிரகங்களின் பார்வை இல்லாதிருந்தால் எல்லோருடைய பகையும், சத்ருவிடம் தோற்றுப்போவதும், கோபமும், பேராசையும், பொறாமையும் உண்டாகும். (6-வது பாவத்தை லக்னமாகக் வைத்துக்கொண்டு அந்த ராசியில் இருந்து தொடங்கி 12 ராசிகளையும் 6-வது பாவத்திற்குரிய 12 பாவங்களாக நினைத்து அவைகளில் இருக்கின்ற கிரகங்களின் நிலையை அறிந்து அதனை அனுசரித்து பலன் சொல்லவேண்டும்.) மேற்கூறிய 12 பாவங்களுக்கும் முறையே (1) ஞாயிறு, (2) ஞாயிறு, (3) ஞாயிறு, (4) செவ்வாய், (5) செவ்வாய், (6) மதி, (7) செவ்வாய், (8) சனி, (9) செவ்வாய், (10) ஞாயிறு, (11) செவ்வாய், (12) சனியும் அதிபராவார்கள்.

6-வது பாவத்தை லக்னமாக எடுத்துக்கொண்டால், லக்ன பாவம், 2-மிடமாகிய தனபாவம், 3-மிடமாகிய சகோதர பாவம், 6, 7, 8-வது பாவங்களுக்கு ஞாயிறும், 4, 5, 7, 9, 11-வது பாவங்களுக்கு செவ்வாயும், 11-வது பாவத்திற்கு மதியும் அதிபர்களாவார்கள். மேற்கூறிய கிரகங்களுக்கு வியாழனின் சேர்க்கையோ அல்லது பார்வையோ இல்லாவிடில் அந்தந்த பாவங்களிலுள்ள கிரகங்களால், அந்தந்த பாவங்களின் பலன்கள் வீணாகும்.

உறவினர் நோய் முதலியவற்றால் ஏற்படும் தொல்லையற்றிருத்தல்

6-ம் பாவாதிபதி, 6-ம் பாவத்தில் இருக்கும் கிரகம், சனைச்சரன் இவர்கள், இவர்களது உச்சராசி, அவரவர்களுக்கு உரிய ராசி, சுபராசி, நீச ராசிக்கடுத்த ராசி (யௌவன ராசி) இவைகளில் இருந்தாலும், உச்ச ராசிக்கு உரியவர்கள் 1, 4, 7, 9, 10, 11 ஆகிய இடங்களுள் ஒன்றில் இருந்தாலும், 6-ம் பாவம் முதல் 12-ம் பாவம் முடிய உள்ள ராசிகளின் அதிபர்களும், லாபம், கேந்திரம், திரிகோணம் இவைகளில் இருந்தாலும், இந்த ஜாதகனுக்கு உறவினர், விரோதி, நோய் இவைகளால் உண்டாகிற தொந்திரவு இருக்காது.

தந்தை முதலியோர்களின் பகையால் செல்வம் அழிதல்

19-வது செய்யுளில் கூறப்பட்டவாறு 6-வது பாவம் முதல் 12-வது பாவம் முடிய உள்ள அந்தந்த பாவாதிபதிகள் (சூரியனில்) அஸ்தங்க தோஷம் அடைந்திருந்தாலும், நீசத் தன்மையை அடைந்திருந்தாலும், பாபர்கள், சத்ருக்கள் இவர்களுடன் சேர்ந்திருந்தாலும், அல்லது இவர்களால் பார்க்கப்பட்டிருந்தாலும், பாப க்ஷேத்திரங்களுக்கு உரியவர்களானாலும், மேற்கூறப்பட்ட ராசிக்கு உரியவர்களால் பார்க்கப்பட்ட பாவாதிபதிகளானாலும் இவ்வாறான அமைப்பைக்கொண்ட ஜாதகன், அவனது தந்தை, தாய், மகன், மனைவி, உறவினர், உடன் பிறந்தோர் இவர்களது விரோதம் காரணமாகச் செல்வம் அழிந்துவிடும்.

சுபர்கள் 6, 8, 12-வது பாவங்களிலிருந்தால் அந்தந்த பாவங்களுக்குரியவற்றை நாசம் செய்பவர்களாவார்கள்.

விரோதியினால் தொந்தரவு உண்டாகாதிருத்தல்

சுபர்கள் 6, 8, 11-வது பாவங்களில் இருந்தால் விரோதியினால் ஏற்படும் தொந்திரவு உண்டாகாது.

செவ்வாய் 6-வது பாவாதிபதியுடனோ அல்லது 6-வது பாவாதிபதி அவனது வீட்டிற்கு ஆறாம் பாவாதிபதியுடன் சேர்ந்திருந்தால் சத்ருபாதை கிடையாது.

லக்னாதிபதி 6-வது பாவத்தை அடைந்திருந்தால் சத்ருவினால் தொந்திரவு கிடையாது.

ஆதாயம், செல்வப்பெருக்கு உண்டாகும் யோகம்

லக்னாதிபதி 10-வது பாவத்தில் இருந்தால், 10-வது பாவத்திற்குரிய தொழில் முதலானவற்றிற்கு ஏற்றத்தைச் செய்வான். லக்னாதிபதி 11-வது பாவத்தில் இருந்தால் செல்வத்தின் பெருக்கைச் செய்வான்.

பகைவனற்றிருத்தல்

6-ம் பாவாதிபதி லக்னத்திலும், லக்னாதிபதி ஞாயிறின் பாவமான சிம்மத்தில் அல்லது 3-வது பாவத்திலும் இருந்தால் ஜாதகனுக்குப் பகைவனே இருக்கமாட்டான்.

தந்தை, தமயன் இவர்களிடம் பகைத்துக்கொள்ளுதல்

6-ம் பாவாதிபதி செவ்வாய் மிதுன லக்னத்தில் இருந்து, பித்ரு ஸ்தானமாகிய 9-ம் பாவாதிபதி துலாத்தில் இருந்தால் தந்தை, மூத்த சகோதரன் இவர்களுடன் பகை உண்டாகும். இவ்வாறு இல்லாமல் இருந்தால் மேற்கூறியபடி பகை உண்டாகாது.

6-வது பாவாதிபதி செவ்வாய் மிதுன லக்னத்தில் இருந்து, பித்ரு ஸ்தானமாகிய 9-ம் பாவாதிபதி துலாத்தில் இருந்தாலும், இவர்கள் சுபர்களால் பார்க்கப்பட்டாலும் தந்தை, மூத்த சகோதரன் இவர்களிடம் பகை உண்டாகாது.

லக்னாதிபதி 6-ம் பாவாதிபதியுடன் சேர்ந்தோ, பார்க்கப்பட்டோ இருந்தால் உடலுக்கும், மனதிற்கும் நோயுண்டாகும்.

மனைவியைப் பற்றியறிதல்

லக்னஸ்புடம், சந்திரஸ்புடம், மாந்திஸ்புடம் இந்த மூன்றையும் கூட்டினால், இது லக்ன திரிஸ்புடம் என்று கூறப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு பாவத்தின் ஸ்புடத்தை, சந்திரஸ்புடம், மாந்திஸ்புடம் இவ்விரண்டின் கூட்டுத் தொகையுடன் கூட்டினால் அந்தந்த பாவத்தின் த்ரிஸ்புடம் ஏற்படும். இவ்வாறு 12 பாவங்களுக்கும் 12 திரிஸ்புடங்கள் ஏற்படுகின்றன. ஜாதகத்திலோ அல்லது பிரச்ன காலத்திலோ அந்தந்த பாவ திரிஸ்புடத்தில் அந்தந்த பாவாதிபதி தங்கினால் அந்த பாவத்திற்கு நாசம் செய்வான் என்று பிரச்னமார்க்கம் முதலிய நூல்களில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தைச் சூசகமாகத் தெரிவிப்பதற்காக, இந்த நூலில் 7-வது பாவாதிபதி, சந்திரன், குளிகன் இம்மூவரின் கூட்டுத்தொகையான திரிஸ்புடத்தைக் கொண்டு மனைவி அற்றுயிருத்தலை அறியவேண்டும் என்று கூறப்பட்டிருக் கிறது. இவ்வாறு சப்தம பாவ திரிஸ்புடமும், 7-வது பாவாதிபதியின் ஸ்புடமும் சமமாக இருந்தால் அந்த ஜாதகனுக்கு மனைவி இல்லை. அதாவது திருமணம் இல்லை என்று தெரிந்துகொள்ளவேண்டும்.

சனிக்கிழமை, மறுதினம் ஞாயிறன்று சூரிய உதயத்திற்குப் பிறகு 2-வது நாழிகையும், இதற்குப்பின் 64-வது நாழிகை என்று கூறப்பட்டிருக்கிறது. இதனால் ஞாயிறு உதயத்திற்குப்பின் 10-வது நாழிகையில் குளிகன் உதயம் என்று அறியவேண்டும். குளிகன் உதித்த நாழிகையை இஷ்ட காலமாக வைத்துக்கொண்டு, அதனால் லக்னத்தைச் சாதிக்கவேண்டும்.

இதுபோல் மாந்தி அல்லது குளிகஸ்புடம் செய்ய வேண்டும். இந்நூலில் சூசகமாக சனி, வெள்ளி இக்கிழமைகளில் பகலில் மட்டும் குளிகனது நாழிகைகள் கூறப்பட்டு இருக்கின்றன. இவ்வாறு வரிசையாக 26, 28, 18, 14, 10-வது நாழிகைகள் ஞாயிற்றுக்கிழமை முதல் வியாழக்கிழமை முடியவும் 10, 6, 2, 26, 22, 18, 14-வது நாழிகைகள் கிரமமாக ஞாயிறு முதல் சனி முடியவும் இரவில் குளிகோதய நாழிகைகள்.

பூர்வபாராசர்யத்தில் பிற்பகுதியில் ஷஷ்டபாவாத்யாயம் என்னும்
இரண்டாம் அத்தியாயம் முற்றும்.

மூன்றாவது அத்தியாயம்

(ஏழாவது பாவம்)

7-ம் பாவத்தை அடைந்த ஞாயிறு முதலான கோள்களினால் உண்டாகும் பலன்கள்

ஞாயிறு 7-ம் பாவத்தில் இருந்தால் ஏழையாகவும், பிறரால் அவமதிக்கப்பட்டவனாகவும், விகாரமான சரீரத்தை உடையவனாகவும், கடவுள் பக்தி உடையவனாகவும், நோயுற்றவனாகவும், அரசாங்கத்தாரால் சிறை வைக்கப்பட்டு மிகுந்த துன்பத்தை அனுபவிப்பவனாகவும், கெட்ட வழியில் செல்வதில் ஈடுபாடு உடையவனாகவும், பெண்களை வெறுப்பவனாகவும் இருப்பான்.

வளர்பிறை மதி 7-ம் பாவத்தில் இருந்தால் பகைவரால் எதிர்க்கமுடியாதவனாகவும், சுகானுபவம் உடைய வனாகவும், அழகான உடற்கட்டு உடையவனாகவும், சிற்றின்பப் பிரியனாகவும் இருப்பான். தேய்பிறை மதி இருந்தால் ஏழையாகவும், வியாதியால் பீடிக்கப்பட்ட வனாகவும் இருப்பான்.

செவ்வாய் 7-ம் பாவத்தில் இருந்தால், மனைவியற்ற வனாகவும் (மனைவியை இழந்தவனாகவும்), வியாதியால் பீடிக்கப்பட்டவனாகவும், கெட்ட வழியில் செல்பவனாகவும், யௌவன வயதுடைய பெண்களுக்குத் துன்பத்தைக் கொடுப்பவனாகவும், பாபம் செய்பவனாகவும், பெண்களிடம் மிகுந்த ஈடுபாடுடையவனாகவும் (மிகவும் காமுகனாகவும்), பித்தம் அதிகமாகவுள்ள சரீரத்தை உடையவனாகவும் இருப்பான். (ஏழையாகவும், பலவிதமான தொந்திரவுகளினால் தாபமடைந்தவனாகவும், வாடின மேனியை உடையவனாகவும் இருப்பான்.

புதன் 7-ம் பாவத்தில் இருந்தால் நல்ல அறிவுள்ள வனாகவும், தன்னை நன்கு அலங்கரித்துக்கொள்பவனாகவும்

இருப்பான். நல்ல குலத்தில் தோன்றாதவளும், கலகம் செய்வதையே சுபாவமாக உடையவளும், பலதிறப்பட்ட சிந்தனை உடையவளுமான மனைவியை அடைவான்.

வியாழன் 7-ம் பாவத்தில் இருந்தால் அழகனாகவும், அழகான மனைவியை உடையவனாகவும், தந்தையைக் காட்டிலும் சிறந்த குணங்களை உடையவனாகவும், நல்ல பேச்சாளனாகவும், கவியாகவும், எங்கும் தலைமை ஸ்தானத்தை வகிப்பவனாகவும், மேதாவியாகவும், மிக்க புகழ்பெற்றவனாகவும் இருப்பான்.

வெள்ளி 7-ம் பாவத்தில் இருந்தால் மிகவும் அழகான மனைவியை அடைந்து மிகவும் சௌக்கியத்தை அனுபவிப்பவனாகவும், மிகுந்த செல்வத்தை உடையவனாகவும், எவரிடமும் சண்டை சச்சரவு முதலியவற்றை ஏற்படுத்திக் கொள்ளாதவனாகவும், எப்பொழுதும் (மனைவி, மக்கள், வீடு, நிலம், ஐச்வர்யம், புகழ் முதலான) சௌபாக்கியத்துடன் இருப்பான்.

சனி 7-ம் பாவத்தில் இருந்தால் எப்பொழுதும் நோயுற்றவனாகவும், மனைவியை இழந்தவனாகவும், ஏழையாகவும், அருவருப்பான தோற்றம் உடையவனாகவும், பாவம் செய்பவனாகவும், பல இழிவான தொழிலைச் செய்பவனாகவுமிருப்பான்.

ராகு 7-ம் பாவத்தில் இருந்தால் மனைவியை இழந்தவனாகவும், விசாலமான புத்தியை உடையவனாகவும், பல நற்பணிகளைச் செய்ய முற்படுகின்றவனாகவும், மந்திர சாஸ்திரங்களில் ஈடுபட்டு அதற்கான தீக்ஷை பெற்றவனாகவும், சுதந்திரனாகவும், கால், கண், பல் இவைகளில் நோயுடையவனாகவும், கெட்ட புத்தி உடையவனாகவும் (பிறரால் இகழத்தக்க செயலை உடையவனாகவும்) இருப்பான்.

மேலும், ராகு 7-ம் பாவத்தில் இருந்தால், கெட்ட குணமுள்ள மனைவியை உடையவனாகவும், பலமற்றவனாகவும், கெட்ட புத்தி உடையவனாகவும், எப்பொழுதும் கோபம் உடையவனாகவும், மதம் கொண்டவனாகவும் (பைத்தியம் கொண்டவனாகவும்) எக்காரியத்திலும் கவனமற்றவனாகவும் இருப்பான்.

கேது 7-ம் பாவத்தில் இருந்தால், பிறரால் நிந்திக்கப் பட்டவனாகவும், அடிமையாகவும், தாசியைக் காதலிப்பவனாகவும், பொறாமைத்தனமுடையவனாகவும், இளைத்த மேனியுடையவனாகவும், அருவருக்கத்தக்க குணம் உடையவனாகவும் இருப்பான்.

7-வது பாவத்தில் இருக்கின்ற கிரகங்களின்பலன் மற்றொரு விதம்

ஞாயிறு 7-ம் பாவத்தில் இருந்தால் பெண்களை த்வேஷிப்பவனாகவும், தீவிரமான கோபமுடையவனாகவும், கொடிய சுபாவமுள்ளவனாகவும் இருப்பான். மதி 7-ம் பாவத்தில் இருந்தால் பெண்களுக்கு வசப்பட்ட வனாகவும், அழகுடையவனாகவும், தாக்ஷிண்ய ஸ்வபாவம் உடையவனாகவும் இருப்பான்.

செவ்வாய் 7-ம் பாவத்தில் இருந்தால் இயற்கையாகவே சண்டை போடுவதில் ஆசைகொண்டவனாகவும், கொடிய வன்ாகவும், பந்துக்களால் விடப்பட்டவனாகவும் இருப்பான்.

புதன் 7-ம் பாவத்தில் இருந்தால் அங்கஹீனனாகவும், (ஊனமுற்ற அவயவத்தை உடையவனாகவும்) சிற்பம் முதலான கலைகளில் தேர்ச்சி பெற்றவனாகவும், வியாபாரத் துறையில் நல்ல தேர்ச்சி பெற்றவனாகவும் இருப்பான்.

வியாழன் 7-ம் பாவத்தில் இருந்தால் தகப்பனைக் காட்டிலும் சிறந்தவனைாகவும், நல்ல மனைவியை உடையவனாகவும், புத்திமானாகவும் இருப்பான்.

வெள்ளி 7-ம் பாவத்தில் இருந்தால், பல தாசிகளை உடையவனாகவும், அழகானவனாகவும், செல்வந்தனாகவும் இருப்பான்.

சனி 7-ம் பாவத்தில் இருந்தால் மனைவியிடமிருந்து பெறப்பட்ட நோயினால் வாடுபவனாகவும், வீணான தான்யம், அன்னம் இவைகளைப் புசிப்பவனாகவும் இருப்பான்.

ராகு, கேது 7ம் பாவத்திலிருந்தால் அங்கஹீனனாகவும், கீழ்நிலையிலுள்ள குடும்பத்தில் பிறந்த பெண்ணை மணந்தவனாகவும் இருப்பான்.

7-ம் பாவமானது விருச்சிக ராசியாக அமைந்து, அதில் வெள்ளியிருந்தால் மனைவி இழப்பான். 7-ம் பாவத்தில் மதியும், வெள்ளியும் கூடினால் பெண் குழந்தைகள் அதிகம் பிறக்கும். வெள்ளிமட்டிலிருப்பின் சித்தபுருஷனாக இருப்பான்.

7-ம் பாவம் ரிஷபமாக இருந்து அதில் புதனிருந்தால் முதல் மனைவியை இழந்து மறுதாரம் மணந்து கொள்பவனாக இருப்பான். மகரம் 7-ம் பாவமாக இருந்து, அதில் வியாழனிருந்தால் மனைவியை இழப்பவனாக இருப்பான்.

7-ம் பாவத்தில் 5-ம் பாவாதிபதி இருந்தால் மனைவியை இழந்து மிகவும் துன்பத்தை அடைவான். 7-ம் பாவத்தில், 8-ம் பாவாதிபதி இருந்தால் மனைவியை இழப்பான். இல்லற வாழ்க்கையின் சுகானுபவமற்றவனாகவும், சாதுவாகவும் இருப்பான். (இது மேஷ லக்னத்திற்கு விதிவிலக்கு).

7-ம் பாவம் கடகமாக அமைந்து, அதில் சனியும், செவ்வாயும் இருந்தால் அழகான மனைவியை உடையவனாக இருப்பான். மகரம் அல்லது கும்பம் 7-ம் பாவமாக அமைந்து அதில் சனியும், செவ்வாயும் இருந்தால் அழகான மனைவியை உடையவனாக இருப்பான் என்றும் கொள்ளல்வேண்டும்.

செவ்வாய் 7-ம் பாவத்தில் இருந்தால் மனைவியை இழந்தவனாக இருப்பான். அல்லது மனைவியை விட்டுப் பிரிந்திருப்பான். 7-ம் பாவத்தில் செவ்வாய் இருந்து சனியினால் மட்டும் பார்க்கப்பட்டவனாகவும் ஏனைய கிரகங்களால் பார்க்கப்படாதவனாகவும் இருப்பின் மனைவி இறப்பாள்.

7-ம் பாவம் மிதுனமாக அமைந்து, அதில் சனியும், ஞாயிறும் இருந்தால் மனைவியை இழந்தவனாகவோ அல்லது பிள்ளையற்றவனாகவோ இருப்பான். இதில் ராகுவும், ஞாயிறும் இருந்தால் பெண்கள் சேர்க்கையாலும், விவசாயத்தில் ஈடுபடுதலின் மூலமாகவும் தனம் இழந்தவனாக இருப்பான்.

7-ம் பாவம் கன்னி ராசியாக இருந்து அதில் வியாழனும், 4-வது பாவத்தில் பாப கிரகங்களும் இருந்தால் மனைவி இறப்பாள். அதில் மதி இருந்து ஞாயிறில் அஸ்தங்கதனாகில் ஏதாவது ஒரு அவயவத்திற்கு ஊனம் ஏற்படும். (ஊனமுற்ற அவயவத்தை உடையவனாக இருப்பான்.)

7-ம் பாவம் மீன ராசியாக இருந்து அதில் ஞாயிறு இருந்தால் சந்ததியற்றவனாக இருப்பான். பாப கிரகங்களாக இருந்து அவைகள் தங்களது உச்ச ராசியிலோ அல்லது தனது சொந்த வீட்டிலோ இருந்தால் மனைவிக்கு நாசம் ஏற்படாது.

சனியின் நவாம்சத்திலோ, சனியுடன் சேர்ந்தோ அல்லது சனியின் ராசிகளான மகரத்திலோ அல்லது கும்பத்திலோ, சுக்ரன் இருந்து நீச ராசிக்குரிய கிரகங்களின் அம்சத்திலோ அல்லது அவர்களுடன் சேர்ந்தோ இருந்தால் தாழ்ந்த குல ஸ்த்ரீயுடன் தொடர்புகொள்ள விரும்புவான்.

வெள்ளி, செவ்வாயின் நவாம்சம் அல்லது செவ்வாய்க்குரிய ராசியான மேஷம் அல்லது விருச்சிகத்தில் இருந்து, செவ்வாயுடன் சேர்ந்தோ அல்லது அவனால் பார்க்கப்பட்டோ இருந்தால் பிறர் மனைவியுடன் சேர விரும்புவான்.

வெள்ளி 7-ம் பாவத்திலிருந்தாலும் அல்லது மற்ற எந்த பாவத்திலிருந்தாலும் (அந்தந்த பாவத்திற்கு ஏற்றபடி) பிறர் மனைவியை விரும்புதல் முதலான குணங்கள் ஏற்படும்.

7-ம் பாவம் சனி அல்லது செவ்வாயின் நவாம்சமாக அமைந்து, 7-ம் பாவாதிபதி சனியின் ராசிகளான மகரம் அல்லது கும்பத்திலோ, செவ்வாயின் ராசியான மேஷம் அல்லது விருச்சிகத்திலோ இருந்தால், இந்த ஜாதகனது மனைவி வேசியாகவோ அல்லது விபசாரம் செய்பவளாகவோ இருப்பாள் என்பது திண்ணம்.

7-ம் பாவம் பாப கிரகங்களின் அம்சமாக அமைந்து, அதில் மதியிருந்தாலும் அல்லது 12-ம் பாவத்தை அடைந்து இருந்தாலும், வெள்ளி பாப கிரகங்களுடன் சேர்ந்திருந்தாலும் பெண் மூலமாக ஜாதகனுக்கு மரணம் ஏற்படும்.

வெள்ளியின் ராசி அல்லது வெள்ளி இருக்கும் நவாம்ச ராசி இவைகளின் நிறம் உருவம், குணம் இவைகளுக்குச் சமமான நிறம், உருவம், குணம் இவைகளை உடையவளாக இருப்பாள் பெண் (ஜாதகன் அடையப்போகும் பெண்). அல்லது 7-ம் பாவாதிபதியின் நவாம்ச ராசியின் நிறம் முதலியவைகளுக்கு ஒப்பானதாகவோ அல்லது களத்ரகாரகனின் குணம், நிறம் முதலியவற்றிற்கு ஒப்பான குணம், நிறம் முதலியவைகளை உடையவளாக இருப்பாள். மேற்கூறிய நிலையில் வெள்ளியின் பலாபலத்தைப் பொறுத்து மனைவியாக வாய்க்கப்போகிறவள் அல்லது மனைவியின் குணங்களைக் கூறவேண்டும்.

வெள்ளி, மதி, வியாழன், புதன் இந்நால்வரும் அல்லது மூவரோ அல்லது இருவரோ 7-ம் பாவத்தில் இருந்தாலும் அல்லது 7-ம் பாவம் இவர்களால் பார்க்கப்பட்டாலும், அல்லது இவர்களின் ராசிகளிலோ நவாம்சத்திலோ இருந்தாலும் அல்லது இவர்களால் பார்க்கப்பட்டாலும், இவ்வாறான கிரக அமைப்புக்களுடன் பிறந்த ஜாதகனது மனைவி மேற்கூறப்பட்ட வெள்ளி முதலான கிரகங்கள்,

ராசிகள், நவாம்ச ராசிகள் இவைகளின் நிறம், குணம், உருவம் முதலியவைகளை உடையவளாக அமைவாள்.

7-ம் பாவத்தில் பாப கிரகங்கள் இருந்தால் மனைவியை இழப்பான். ஜன்ம லக்கினம், சந்திர லக்கினம் இந்த இரண்டினுள் எது பலம் பெற்றதாக உள்ளதோ அதிலிருந்து 7-ம் பாவத்தை எடுத்துக்கொண்டு பலன் கூறவேண்டும். இவ்வாறான நிலையில் 7-ம் பாவத்தில் மதி, ஞாயிறு, செவ்வாய் இவர்கள் இருந்தால் மறுமணம் செய்து கொள்வான்.

7-ம் பாவத்தின் நவாம்சத்திலுள்ள அல்லது 7-ம் பாவாதிபதியின் நவாம்சத்திலுள்ள கிரகங்களின் எண்ணிக்கைப்படியோ அல்லது இவைகளை எவ்வளவு கிரகங்கள் பார்க்கின்றனவோ அந்த அளவு எண்ணிக்கை உடையவர்களாக மனைவிகள் ஏற்படுகிறார்கள். 7-ம் பாவத்தில் ஞாயிறு மட்டிலிருந்தாலும், செவ்வாயின் நவாம்சத்தில் சனி மட்டிலிருந்தாலும், ஒரே மனைவிதான் உண்டு.

7-ம் பாவத்தில் மதியோ அல்லது வெள்ளியோ, ஞாயிறில் அஸ்தங்கதர்களாக (பலம் குன்றியவர்களாக) இருந்தால் (எப்பொழுதாவது) அதிகமாகப் பேசமாட்டான். வெள்ளி பலம் பொருந்தியவனாகவும், சுபர்களால் பார்க்கப்பட்டவனாகவும் இருந்தால் மிகவும் அதிகமாகவும் நல்ல பேச்சாளனாகவும் இருப்பான்.

7-ம் பாவத்தில் ஞாயிறும், வெள்ளியும் சேர்ந்து இருந்தாலும், 7-ம் பாவத்தை மதி, செவ்வாய், சனி, வியாழன் இவர்கள் பார்த்தாலும், ஜாதகன் தனது ஜாதியில் பிறந்த மனைவியை அடைவான். 6, 8, 12-ம் பாவங்களில் ஞாயிறும், வெள்ளியும் இருந்தால் கணவனுடன், கணவனது வீட்டில் சுகமாக வசிப்பாள் மனைவி என்று முனிவர்கள் கூறுகின்றனர்.

சனி நின்ற லக்னத்திலிருந்து, வெள்ளி 7-வது பாவத்தின் கடைசி நவாம்சம் அல்லது முதல் நவாம்சமான

கண்டாந்தத்தில் இருந்தால் 5-ம் பாவத்தில் சுபர்களும் இல்லாமலிருந்தால் ஜாதகனின் மனைவி மலடியாக இருப்பாள்.

லக்னம், 12, 8 இவைகளில் பாப கிரகங்களிலிருந்து 2-வது பாவத்தில் மதியும் இருந்தால் ஜாதகன் மனைவியற்ற வனாக இருப்பான். மேலும் மகன்களால் விடப்பட்ட வனாகவும் இருப்பான். (மேலும் மகன்களால் விடப்பட்டவனாகவும் இருப்பான்.)

7-ம் பாவத்திற்குச் செவ்வாய் அல்லது சனியின் ஷட்வர்க்கம் ஏற்பட்டு வெள்ளியினால் பார்க்கப்பட்டால் நற்குலத்தில் பிறந்தவனாக இருப்பினும் ஜாதகன் மனைவியுடன்கூட விபசாரம் செய்பவனாக இருப்பான்.

7-ம் பாவத்தில் புதனும், வெள்ளியும் அஸ்தங்கதர்களாக இருப்பார்களேயானால் ஜாதகன் மனைவி அற்றவனாகவும், பிள்ளைப்பேறற்றவனாகவும் இருப்பான். 7-ம் பாவத்தை சுபகிரகங்கள் பார்த்தால் ஜாதகன் நல்ல பெண்ணை மணந்துகொள்வான்.

11-ம் பாவத்தில் இரு கிரகங்களிருந்தால் இருதாரம் ஏற்படுவது நிச்சயம். அவ்விரு கிரகங்களும் சுபர்களாக அல்லது அசுபர்களாக அல்லது சுபர்களும், அசுபர்களும் கலந்துள்ளனரா என்பதை ஊகித்து பலன் கூறவேண்டும்.

7-ம் பாவம் உச்ச ராசியாக இருந்தால் ஜாதகனது மனைவி நிறைந்த செல்வத்துடன் வருவாள். (இதை ஸ்த்ரீதனம் அல்லது மஞ்சக்காணி சொத்து என்று கூறுவர்.) 7-ம் பாவம் நீசஸ்தானமாக அமைந்தால் ஜாதகனது மனைவி குறைந்த செல்வத்துடன் வருவாள்.

7-ம் பாவாதிபதி அல்லது களத்ரகாரகன் உச்ச ராசியில் இருப்பதாலோ, வக்ரத்தன்மையை அடைவதாலோ அல்லது லக்ன கேந்திரத்தில் இருப்பதாலோ மிகுந்த பலமுள்ளவனாக இருப்பின் இந்த ஜாதகன் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை அடைவான்.

7-ம் பாவாதிபதி உபய ராசியிலோ அல்லது அதன் நவாம்ச ராசியிலோ இருந்தால் ஜாதகன் இருமனைவிகளை மணந்துகொள்வான். மனைவியின் பெயர், சிற்றின்பம் முதலானவைகளையும், தேசாந்திரம் போதல் முதலியவற்றையும் 7-ம் பாவத்தின் தன்மையை அறிந்து கூறுதல் வேண்டும்.

7-பாவம், 7-ம் பாவாதிபதி அல்லது களத்திரகாரகன், வெள்ளி இருக்கும் ராசி, களத்ரகாரகனான வெள்ளி இருக்கும் ராசியாதிபதி, உச்சராசி, ஸ்வக்ஷேத்திரம், மூலத்திரிகோணம், வர்க்கோத்தமம் இவைகளில் இருந்தாலும் அல்லது இந்த இடங்களில் இருக்கின்ற கிரகங்களின் பார்வையைப் பெற்றிருந்தாலும் அல்லது சேர்ந்திருந்தாலும் அல்லது உச்சராசி முதலானவைகளில் இருந்தாலும் 1, 2, 4, 5, 7, 9, 10, 11-வது பாவங்களில் இருந்தாலும் அல்லது அந்த பாவாதிபதி களுடன் சேர்ந்திருந்தாலும் அவர்களால் பார்க்கப்பட்டாலும், ஜாதகனுக்கு எல்லாவிதமான சௌபாக்யங்களும், செல்வங்களும், நீண்ட ஆயுளும், எல்லா நல்ல லக்ஷணங் களோடு கூடிய மனைவியும் ஏற்படும்.

கணவன் மனைவி இவர்களுக்கு நிறைந்த செல்வம் உண்டாகும் யோகம்

11-ம் பாவாதிபதி 1, 4, 5, 7, 9, 10-ம் பாவங்களில் இருந்தால் கணவன், மனைவி இருவருக்கும் நிறைந்த செல்வம் கிடைக்கும். சுகவாழ்வு உண்டாகும்.

2, 11-ம் பாவாதிபதிகள் 9, 2-ம் பாவங்களில் இருந்தாலும் 2, 11-ம் பாவாதிபதிகளும் சேர்ந்து 1, 2, 4, 5, 7, 9, 10, 11-ம் பாவங்களில் இருந்தாலும் கணவன், மனைவி இவர்களுக்கு நிறைந்த செல்வமும், சுகபோகங்களும் உண்டாகும்.

கணவன், மனைவி இருவர்களின் ஜாதகத்திலும் 2, 11-ம் பாவாதிபதிகள் அவைகளின் உச்ச ராசியிலோ அல்லது உச்ச ராசிக்குரியவர்களுடன் சேர்ந்தோ இருந்தாலும் இவர்களுக்குச் செல்வம் மேலும் மேலும் பெருகிக்கொண்டே இருக்கும்.

11-ம் பாவாதிபதி பாபியாக இருந்து, அஸ்தங்கதனா கவும் இருந்து; 6, 8, 12-ம் பாவங்களில் இருந்தால் நிறைந்த செல்வம் உண்டாகும்.

11-ம் பாவாதிபதி ஞாயிறுடன் சேர்ந்து, அஸ்தமனம் அடைந்து; 6, 8, 12-ம் பாவங்களின் அதிபர்களுடன் சேர்ந்து இருந்தால் ஜாதகன் ஏழையாகிவிடுவான்.

7-ம் பாவாதிபதி, களத்ரகாரகனான வெள்ளி, 2-ம் பாவத்திற்குரியவன் இம்மூவரும் 7-ம் பாவத்தில் இருக்கிற கிரகம் இந்நால்வரும், நீசராசியை அடைந்திருந்தாலும், பலம் குன்றியவர்களாக இருந்தாலும், சத்ரு க்ஷேத்திரத்தை அடைந்திருந்தாலும் அல்லது நீசராசி முதலானவைகளுக்கு உரியவர்களால் பார்க்கப்பட்டாலும் மனைவிக்கு ஆயுள் குறையும், சௌபாக்கியமும் குன்றிவிடும்.

ஞாயிறுடன் சேர்ந்த நான்கு கிரகங்கள் சுபர்களாகவும், மிக்க பலம் பெற்றவர்களாகவும், நீசராசி, பாப கிரகத்தின் ராசி, க்ஷீணகதியை அடைந்திருக்கும் கிரகங்கள் நின்ற ராசி, சத்ருராசி, 6, 8, 12-வது பாவங்களுள் ஏதேனும் ஒன்றில் இருந்தாலும் மேற்கூறிய ராசியாதிபதிகளால் பார்க்கப் பட்டாலும் நீண்ட ஆயுளும், நிறைந்த செல்வமும் உண்டாகும்.

4 பாப கிரகங்கள் அவைகளின் நீச ராசியில் இருந்தாலும், அஸ்தங்கத தோஷத்தைப் பெற்றாலும் 1, 2, 4, 5, 7, 9, 10, 11-ம் பாவங்களில் இருந்தால் ஜாதகனுக்கு ஏற்படக்கூடிய சௌபாக்யம், ஆயுள் முதலானவைகள் நாலில் ஒரு பங்குதான் உண்டாகும்.

நான்கு கிரகங்கள், அதனது மித்ரராசி அல்லது 11-ம் பாவம் அல்லது அவைகளின் (மேற்கூறிய நான்கு கிரகங்களின்) நவாம்ச ராசியை அடையாத ஞாயிறுடன் சேர்ந்திருந்தால் ஆயுள் பாவம் முக்கால் பாகம் உண்டாகும்.

மனைவியின் ஜாதகத்தில் 5-ம் பாவத்தில், சுபகிரகங்களோ, மித்ரராசிக்குரிய கிரகங்களோ அல்லது 11-ம் பாவாதிபதியோ இருந்தாலும், 5-ம் பாவாதிபதி 11, 2, 1, 4, 7, 10, 5, 9-ம் பாவங்களில் இருந்தால் நீண்ட ஆயுளும், நிறைந்த செல்வமும் உண்டாகும்.

7, 8, 9, 10-ம் பாவங்கள் நீச ராசிகளாகவோ, அஸ்தங்கதமான கிரகங்களை உடையவைகளாகவோ, சத்ரு க்ஷேத்திரங்களாகவோ, சத்ருக்கள் இருக்கின்ற ராசிகளாகவோ, க்ஷீண கதியை அடைந்திருக்கும் கிரகத்துடன் கூடிய ராசிகளாகவோ, பாப கிரகங்களை உடையதாகவோ இருந்தால் ஆயுளும், சௌபாக்யமும் குறையும்.

11-ம் பாவாதிபதி 6, 8, 12-வது பாவங்கள் ஏதேனும் ஒன்றில் இருந்து 7, 8, 9, 10-ம் பாவங்களுக்குரிய பாவாதிபதிகள் அவைகளது நீச ராசியிலோ, அஸ்தங்கத தோஷத்தை அடைந்திருந்தாலோ ஆயுளும், சௌபாக்யம் முதலானவைகளும் குறையும்.

பெண் ஜாதகத்தில் கணவன் சம்பந்தமான கிரகமும் (9-மிடத்துக்குரியவனும்) ஆண் ஜாதகத்தில் 7-ம் பாவத்திற்கு உரிய கிரகமும் (களத்ரகாரகனும்) ஒருவருக்கொருவர் மித்ரர்களானால் கணவன், மனைவி இருவரும் ஒத்த மனது உடையவர்களாக வாழ்வார்கள். சத்ருக்களாக இருந்தால் சத்ருக்களாக வாழ்வார்கள்.

பெண் ஜாதகத்தில் லக்னம் முதலான 12 பாவங்களுக்கும் க்ரமமாக கீழ்க்கண்டவிதம் ஸம்ஞைகள் :- (1) லக்னம் - உடம்பு, (2) தனம், (3) சகோதரன், (4) தாய், (5) தகப்பன், (6) சத்ரு, (7) புத்திரபாக்யம், (8) மரணம், (9) கணவன், (10) ஜீவனோபாயம், (11) லாபம், (12) செலவு என்பன.

பெண் ஜாதகத்தில் 5-ம் பாவாதிபதி, 2-ம் பாவத்தில் இருந்தால் கணவனுடைய வீட்டில் வாகனாதிகளை அடைவாள்.

1, 5, 7, 11-ம் பாவங்களில் வியாழன், முழுமதி அல்லது சனி இவர்கள் அவரவர்களது உச்ச ராசியில் இருந்தால் அல்லது உச்ச ராசியைக் குறித்து சென்றுகொண்டிருந்தால் ஜாதகனுக்குக் குதிரை முதலிய வாகனங்களும், சீடன் முதலான பரிவாரங்களும் உண்டாகும்.

சுபகிரகம், உச்ச ராசியாக அமைந்த இரண்டாமிடத்தில் இருந்தாலும் அல்லது உச்ச ராசிக்குச் செல்வதற்கு ஆரம்ப நிலையில் உள்ளதாக அமைந்த இரண்டாமிடத்தில் இருந்தாலும் மிகுதியான நரவாகனம் முதலான வாகனங்கள் கிடைக்கும்.

லக்னாதிபதியும், தனாதிபதியும், 10-மிடத்துக்கு உடையவனும் இரண்டாமிடத்தில் இருந்தால் மிக்க செல்வப்பெருக்கும் வாகனங்களும் கிடைக்கும்.

5-ம் பாவத்தை அடைந்த 7-ம் பாவாதிபதி, அவன் இருக்கும் 5-ம் பாவம் சுபக்ஷேத்திரமாகவோ, 7-ம் பாவாதிபதியின் உச்ச வீடாகவோ அல்லது உச்ச ராசிக்குச் செல்வதற்கு முதற்படியான யௌவன ராசியாகவோ இருந்தாலும், சுபர்களால் உச்ச ராசிக்குரிய க்ரகத்தாலும் பார்க்கப்பட்டோ அல்லது அவர்களுடன் சேர்ந்தோ இருந்தாலும், 7-ம் இடத்திற்கு லாப ஸ்தானமான 5-ம் இடத்திற்குரியவன் இருந்தாலும் இந்த யோகத்தில் பிறந்த பெண்ணுக்கு அவளது ஜாதியில் பிறந்தவன் கணவனாகக் கிடைப்பான். மேற்கூறிய யோகத்தில் மதியும், புதனும் இருக்கில் நடுத்தர வகுப்பிற் பிறந்தவன் கணவனாக வருவான்.

9-ம் பாவாதிபதி அவனுடன் உச்ச ராசியிலோ, மித்ர ராசியிலோ, சுபராசியிலோ, உச்ச ராசிக்குச் செல்வதற்கு முதற்படியான யௌவன ராசியிலோ, 5-ம் பாவத்திலோ இருந்தாலும், மதியினால் பார்க்கப்பட்டோ அல்லது மதியுடன் சேர்ந்தோ இருந்தாலும் ஜாதகனுக்கு ஆயுள் குறைவாக இருக்கும்.

பெண்கள் ஜாதகத்தில் 9-ம் பாவாதிபதி, 6-ம் பாவமான சத்ரு வீட்டில் இருந்தால் கணவன் நோயுற்றவனாக இருப்பான்.

7-ம் பாவாதிபதி, 12-ம் பாவத்தை அடைந்திருந்தால் கணவன் நீண்ட ஆயுளுடன் இருப்பான். சகல சௌபாக்கயங் களும் கிட்டும்.

பெண் ஜாதகத்தில் 7-ம் பாவத்திற்குரியவன், 9-ம் பாவாதிபதி, நீச ராசியில் இருக்கின்றவன், அஸ்தங்கத தோஷமடைந்த கிரகம், க்ஷீணகதியை அடைந்திருக்கும் க்ரகம் இவர்களுடன் சேர்ந்திருந்தால், இந்த ஜாதகிக்கு கணவன் மூலம் கிடைக்கும் சௌக்கியம் கிட்டாது. கணவனும் குறைந்த ஆயுளை உடயவனாக இருப்பான்.

7-ம் பாவாதிபதி, 4-ம் பாவத்தை அடைந்திருந்தாலும் அல்லது 7-ம் பாவத்திலேயே இருந்தாலும், கணவன் யாகம் செய்து அதில் வெற்றி கண்டவனாக இருப்பான்.

7-ம் பாவாதிபதி புதன், வியாழன், மதி, வெள்ளி இவர்களின் ராசிகளுள் ஏதேனும் ஒன்றிலிருந்தாலும் அல்லது இவர்களால் பார்க்கப்பட்டாலும், லக்னத்திற்கு 7-ம் பாவத்தை அடைந்து மேற்கூறப்பட்ட புதன் முதலான கிரகங்களுடன் சேர்ந்திருந்தாலும், 7-ம் பாவமும், அதனுடைய உச்ச வீடாகவோ அமைந்திருந்தால், இந்த யோகத்தில் பிறந்த ஜாதகனுக்கு நிறைந்த செல்வமும், நிறைவு பெற்ற வாகனங்களும் இருக்கும்.

9-ம் பாவத்தில் 5-ம் பாவாதிபதி இருந்து, 7-ம் பாவாதிபதிகளான புதன், வியாழன், மதி, சுக்ரன் இவர்களுள் எவராவது ஒருவர் இருந்து, அவர்கள் 9-ம் பாவத்தை அடைந்து, 9-ம் பாவாதிபதியும் சுபஸ்தானம் அல்லது 11-ம் இடத்தையும் அடைந்திருந்தால் தகப்பனின் செல்வத்தை அடைவான்.

8-ம் பாவாதிபதி பூர்ண பலத்துடன் 8-ம் பாவத்தில் இருந்தாலும், ஆயுட்காரகனான சனி 1, 6 அல்லது 11-ம் இடங்களுள் ஒன்றில் இருக்கப் பிறந்தவன் நீண்ட ஆயுளுடன் வாழ்வான்.

ஆயுட்காரகனான சனி, மேற்கூறிய 1, 6 அல்லது 11-ல் அஸ்தங்கதனானால் ஜாதகன் நடுத்தரவயது உடையவனாக இருப்பான்.

12-ம் பாவாதிபதி 1, 4, 7, 10 அல்லது 11-ம் பாவங்களுள் ஏதேனும் ஒன்றில் இருந்து, அஸ்தங்கத தோஷத்தை அடைந்திருந்தால் குறைந்த ஆயுளை உடையவனாக இருப்பான்.

1, 4, 5, 7, 9, 10, அல்லது 11-ம் பாவங்களில் அமைந்திருக்கிற க்ரகத்துடன் எவ்வளவு கிரகங்கள் சேர்ந்து இருக்கின்றனவோ அவ்வளவு வீடுகள் ஜாதகனுக்கு உண்டாகும்.

மேற்கூறப்பட்ட 1, 4, 5, 7, 9, 10 அல்லது 11-ம் பாவங்களுள் சர ராசியாக இருந்தால் வேற்றூரிலும், ஸ்திர ராசியாக இருந்தால் உள்ளூரிலும், உபய ராசியாக இருந்தால் உள்ளூரிலும், வேற்றூரிலும் வீடுகள் இருக்கும்.

மேற்கூறப்பட்ட 1, 4, 5, 7, 9, 10 அல்லது 11-ம் பாவங்களுள் ஒன்றில் இருக்கிற கிரகம் வியாழனாக இருந்து, வர்க்கோத்தமத்தை அடைந்தவனாக இருந்தாலும், 9-ம் பாவத்திற்கோ, 2-ம் பாவத்திற்கோ 1, 4, 7, 10-க்கு உடையவனாகவோ இருந்தாலும், பாப சம்பந்தமின்றி பூர்ண பலத்துடன் இருந்து, பூமி காரகனான செவ்வாய் வர்க்கோத்தமத்தை அடைந்திருந்தாலும் தங்கத்தால் அமைக்கப்பெற்ற ராஜமாளிகைக்குச் சமமான வீடு இருக்கும்.

சகோதர ஸ்தானமான 3-ம் பாவாதிபதி ஆண் கிரகமாக இருந்து, ஆண் ராசியையும் அடைந்திருந்து, ஆண் கிரகங்களுடன் சேர்ந்தோ அல்லது அவைகளால் பார்க்கப்பட்டோ இருந்து, 5-ம் பாவத்தில் 7-ம் பாவாதிபதியும்

இருந்தால் ஜாதகனின் சகோதரன் மிக்க செல்வந்தனாகவும் சுகமாக வசிப்பவனாகவும் இருப்பான்.

11-ம் பாவாதிபதி 5-ம் பாவத்தை அடைந்திருந்தால் ஜாதகனின் சகோதரன் நீண்ட ஆயுளுடன் வாழ்வான்.

7-ம் பாவம் சர ராசியாக இருந்து, அதன் அதிபதி எந்த ராசியில் எவ்வளவு கிரகங்களுடன் சேர்ந்து இருக்கிறானோ, ஜாதகனுக்கு அவ்வளவு பிள்ளைகள் பிறக்கும்.

சர ராசியாக அமைந்த 9-ம் பாவத்தில் மூன்றாம் பாவத்திற்கு உடையவன் எவ்வளவு கிரகங்களுடன் சேர்ந்து இருக்கிறானோ அவ்வளவு பிள்ளைகள் ஜாதகனுக்குப் பிறக்கும்.

சர ராசியாக அமைந்த 11-ம் பாவத்தில் இருக்கிற லக்னாதிபதி எவ்வளவு கிரகங்களுடன் சேர்ந்திருக்கிறானோ அவ்வளவு பிள்ளைகள் ஜாதகனுக்குப் பிறக்கும். 7-ம் பாவாதிபதி ஸ்திர ராசியாக அமைந்த 2-ம் பாவத்தில் இருந்தால், எவ்வளவு கிரகங்களுடன் சேர்ந்திருக்கிறானோ அவ்வளவு மனைவிகளும், மிகுந்த சௌபாக்யமும், போகமும், பிற ஊர்கள் அல்லது பிறநாடுகளுக்குச் செல்லும் யோகமும் ஜாதகனுக்கு உண்டாகும்.

வேறு சோதிட நூல்களில் கூறப்பட்டுள்ள 7-ஆம் பாவத்தைப்பற்றிய விஷயங்கள்

7-ம் பாவாதிபதி, 2-ம் பாவாதிபதி, வெள்ளி நின்ற ராசிக்குரியவன், பெண் கோள்கள்; 7-ம் பாவாதிபதியும், வெள்ளியும் கூடியும், 7-ம் பாவத்தில் நின்ற கோளும் ஆக இம்மூவரும், ராசிநாதனும், அவரவர்களுடைய உச்ச ராசி, அவர்கட்குரிய ராசி இவைகளில் நின்றாலும், யௌவனத் தன்மையை உடைய்வர்களாக இருப்பினும், நண்பர்கள் ராசி, வர்க்கோத்தமம் 1, 4, 7, 10, 5, 9 இவ்விடங்களில் நின்றாலும்; 1, 4, 7, 10-ஆமிடங்கட்குரியவர்களுடன் சேர்ந்திருந்தாலும்

அல்லது பார்க்கப்பட்டாலும் அல்லது 2, 11, 1, 5, 9, 4, 7, 10 இந்த ராசிகளில் பலம் பெற்றவர்களாகவோ, பலம் பெற்ற கோள்களுடன் கூடியோ இருந்தாலும் கணவன் - மனைவி இவர்களுக்கு நன்மை உண்டாகும்.

7-ம் பாவத்தில் இருப்பதும், 7-ம் பாவாதிபதியால் பார்க்கப்படுவதும், அல்லாமலும் 7-ம் பாவாதிபதியுடன் கூடி நிற்பதும் கோளுக்கு ஏற்பட்ட பலமாகும். இவ்வாறு பலம் பெற்ற கோள்கள் நின்ற ராசிக்குரியவர்களால் பார்க்கப் பட்டாலும் அல்லது அவர்களுடன் கூடி நின்றாலும் நன்மை உண்டாகும்.

மேற்கூறியவாறு பலம்பெற்ற கோள்களுடன் சேர்ந்தோ தனித்தோ 7-ம் பாவத்தில் நிற்கின்ற கோள்களைக் கொண்டு நல்ல லக்ஷணங்கள் யாவும் பொருந்தியவளும், நற்குணங்களை உடையவளும், செல்வத்துடன் கூடியவளுமான மனைவி வாய்ப்பதைக் கூறவேண்டும். இவ்வாறான மனைவியை அடைவதால் கணவனும் செல்வத்தையும், நீண்ட ஆயுளையும் அடைவான். பெண்களுடைய ஜாதகத்தில் 5-ம் பாவம் லாப ஸ்தானம் என்று கூறப்பட்டுள்ளது.

லக்னாதிபதி 1, 3, 4, 5, 7, 9, 10, 11-ம் பாவங்களில் நின்றாலும், லாபாதிபதியுடன் சேர்ந்தோ அல்லது அவனால் பார்க்கப்பட்டோ இருந்தாலும், ஜாதகன் நிறைந்த செல்வத்தை அடைபவனாகிறான்.

11-ம் பாவாதிபதி வர்க்கோத்தமாம்சத்தை அடைந்த கோள்கள் நின்ற ராசிக்கு லாப ஸ்தானமாக அமைந்த 11-ம் இடத்திற்குரியவன் 2-ம் பாவத்தை அடைந்திருந்தாலும், 2-ம் பாவாதியுடன் சேர்ந்து 2, 1, 4, 7, 10, 5, 9-ஆம் பாவங்களில் நின்றாலும் ஜாதகன் அவனது முயற்சியால் தேடப்பட்ட செல்வத்தை அனுபவிப்பவன் ஆகிறான்.

2 அல்லது 11-ம் பாவாதிபதி, பாப ராசியையோ அல்லது நீச ராசியையோ அடைந்திருந்தாலும் அல்லது 7, 8 அல்லது

12-ம் பாவங்களில் இருந்தாலும் அல்லது 7, 8 அல்லது 12-ம் பாவாதிபதிகளால் பார்க்கப்பட்டோ அல்லது அவர்களுடன் சேர்ந்தோ இருந்தாலும் அல்லது அஸ்தங்கத தோஷத்தை அடைந்திருந்தாலும் செல்வமற்றவனாகிவிடுவான்.

9-ம் பாவாதிபதி, 6-ம் பாவாதிபதி நின்ற ராசிக்கு உரியவன், 7-ம் பாவத்தில் நின்ற கோள்கள் இவர்கள் எந்த ராசியில் இருக்கின்றார்களோ, அந்த ராசிக்குரியவன் இவர்கள் லக்னாதிபதியுடன் சேர்ந்தோ அல்லது அவனால் பார்க்கப்பட்டோ இருந்தால், அல்லது சுபர்களுடன் சேர்ந்தோ அல்லது பார்க்கப்பட்டோ இருந்தால் ஜாதகன் அபரிமிதமான செல்வப்பெருக்கை உடையவனாகிறான்.

5-ம் பாவாதிபதி 1, 2, 4, 5, 7, 9 அல்லது 10-ம் பாவங்களுள் ஒன்றிலிருந்து 6, 8 அல்லது 12-ம் பாவாதிபதிள் அவர்களது நீச ராசி அல்லது ஹீன ராசி அல்லது சத்ருவின் ராசியை அடைந்தோ அல்லது அஸ்தங்கத தோஷத்தை அடைந்தோ இருந்தால் ஜாதகன் நிறைந்த செல்வத்துடன் வாழ்வான்.

5-ம் பாவாதிபதி, 9-ம் பாவாதிபதி, 7-ம் பாவாதிபதிகள் 6, 8 அல்லது 12-ம் பாவங்களை அடைந்தோ அல்லது 6, 8 அல்லது 12-ம் பாவாதிபதிகளால் பார்க்கப்பட்டோ அல்லது சேர்ந்தோ இருந்தாலும் ஜாதகன் ஆயுள் குறைந்துவிடும். மனைவியின் மூலம் உண்டாகிற சௌபாக்கியமும், பிள்ளைகளால் உண்டாகிற சௌபாக்கியமும் அழிவதுடன் மனைவியும் மரித்து விடுவாள். பிறருடன் சௌஜன்மயாகப் பழகுவதும் (சௌஜன்ய குணம் போய் விரோத மனப்பான்மை உண்டாவது) நன்கு பேசும் திறனும், உதாரகுணமும் சென்றுவிடும்.

நான்கு கோள்கள், 7-ம் பாவத்தை அடைந்தவர்களாகவும், சுபர்கள் அல்லது அசுபர்கள் அல்லது இருவர்களுடனோ சேர்ந்திருந்தாலும், பாப ராசியிலோ அல்லது சத்ரு ராசியிலோ அல்லது நீச ராசியிலோ இருந்தாலும், க்ஷீணகதியை அடைந்தவர்களாகவோ அல்லது அஸ்தங்கத தோஷத்தை அடைந்தவர்களாகவோ இருந்தாலும்

அல்லது 6, 8 அல்லது 12-ம் பாவத்தை அடைந்தவர்களாகவோ அல்லது 6, 8 அல்லது 12-ம் பாவாதிபதிகளால் பார்க்கப்பட்டோ அல்லது அவர்களுடன் சேர்ந்தோ இருந்தாலும் இந்த நான்கு கோள்கள் எவைகளுடன் சேர்ந்திருக்கின்றனவோ அல்லது எவைகளால் பார்க்கப்பட்டு இருக்கின்றனவோ அதற்கேற்றவாறு ஜாதகனுக்கு 1/8 பங்கு பலன் ஏற்படும். சௌஜன்யம் (நட்பு), ஆயுள், செல்வம் இவைகளும் மிகவும் குறைவாக இருக்கும்.

7-ம் பாவத்தை அடைந்த நான்கு கோள்கள் பாபர்களாகவோ அல்லது அவர்கள் நின்ற 7-ம் பாவம் அக்கோள்களின் நீச ராசியாகவோ அல்லது சத்ரு ராசியாகவோ இருந்தாலும். அல்லது 1, 2, 4, 5, 7, 9 அல்லது 10-ம் பாவங்களில் நின்றாலும் ஜாதகனுக்கு மனைவிக்கு (¼) மனித ஆயுளில் நாலில் ஒரு பங்குதான் ஆயுள் காலமாகும்.

7-ம் பாவத்தை அடைந்த நான்கு கோள்கள், மித்திரர் களானால், 2 அல்லது 11-ம் பாவத்தை அடைந்தவர்களாகவோ இருந்தால், ஒரே ராசியில் ஞாயிறுடன் சேர்ந்து, ஆனால் ஞாயிறின் ஒளியில் அஸ்தங்கதர்களாக ஆகாமல் இருந்து பூர்ணபலத்துடன் இருந்தால் இந்த யோகத்தில் பிறந்த ஜாதகனது மனைவிக்கு மனித ஆயுளில் பங்குதான் ஆயுட்காலமாகும்.

களத்ரகாரகன் முதலான நான்கு கோள்கள் சுப க்ஷேத்திரமாகவோ அல்லது மித்ர க்ஷேத்திரமாகவோ அமைந்த 5-ம் பாவத்தில் நின்று, 11-ம் பாவத்தில் நின்ற மதியினால் பார்க்கப்பட்டும் இருந்தால் ஜாதகனுக்குப் பிறருடன் நட்பு, நீண்ட ஆயுள், நிறைந்த செல்வம் இவைகள் உண்டாகும். மேற்கூறப்பட்ட நான்கு கோள்களும் நின்ற ராசிக்குரியவர்கள் 1, 2, 4, 5, 7, 9 அல்லது 10-வது பாவங்களில் நின்றால் மனைவிக்கு நீண்ட ஆயுளும், நற்குணங்களும், நிறைந்த ஐச்வர்யமும் உண்டாகின்றன.

7-ம் பாவாதிபதி அல்லது களத்ரகாரகனான வெள்ளி இவர்கள் நின்ற ராசிக்குரியவர்கள் அவர்களது சத்ரு

ராசியையோ அல்லது நீச ராசியையோ அல்லது பாப ராசியையோ அடைந்திருந்தால் இந்த ஜாதகனது மனைவிக்கு ஆயுள் குறைவாக இருக்கும். சௌபாக்கியமும் குறைவாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

7-ம் பாவாதிபதி அல்லது களத்திரகாரகனான வெள்ளி இவர்கள் அவர்களது ராசி அல்லது உச்ச ராசி அல்லது சுபர்களது ராசி அல்லது 11-மிடம், அல்லது 1, 4, 5, 7, 9 அல்லது 10-ஆமிடங்கள் இவைகளில் நின்றால் மனைவிக்கு நீண்ட ஆயுளும், நிறைந்த செல்வமும் இருக்குமென்று கூறப்படுகிறது.

7-ம் பாவாதிபதி அல்லது களத்ரகாரகனான வெள்ளி இவர்கள் 7-ம் பாவத்திலேயோ அல்லது 6 அல்லது 12-ம் பாவங்களிலோ நின்றால் மனை வியின் ஆயுளும் செல்வமும் குறையும்.

7-ம் பாவாதிபதி அல்லது களத்ரகாரகனான வெள்ளி இவர்கள், பாபர்களது ராசி, நீசராசி, சத்ரு ராசியை அடைந்தாலோ அல்லது அவைகளில் நின்ற கோள்களால் பார்க்கப்பட்டாலோ மனைவியின் ஆயுளும், செல்வமும் குறையும்.

கணவன், மனைவி இவ்விருவரின் ஜாதகத்திலும் கணவன் அல்லது மனைவி சம்பந்தமான கோள்களும் அல்லது களத்ரஸ்தானமான 7-ம் பாவாதிபதிகளும் ஒருவருக்கொருவர் மித்ரர்களாக இருந்தால் கணவன், மனைவி இருவரும் மித்ரர்களாகவும், சமானமாக இருந்தால் சமானமாகவும், சத்ருக்களாக இருந்தால் சத்ருக்களாகவும் இருப்பார்கள்.

இனி, மகளிர் ஜாதகத்தில் 12 ராசிகளைக்கொண்டு அறியப்படும் பாவங்கள் கூறப்படுகின்றன.

மகளிர் ஜாதகத்தில் (1) லக்னம்-உடல், (2) 2-ம் பாவம் - செல்வம், (3) 3-ம் பாவம் - உடன்பிறந்தோர், (4) 4-ம் பாவம் -

தாய், (5) 5-ம் பாவம் - தந்தை, (6) 6-ம் பாவம் - பகை, (7) 7-ம் பாவம் - பிள்ளைப்பேறு, (8) 8-ம் பாவம் - சௌபாக்யமும் மரணமும், (9) 9-ம் பாவம் - அறம், (10) 10-ம் பாவம் - அறப்பணி ஜீவனம், (11) 11-ம் பாவம் - லாபம், (12) 12-ம் பாவம் செலவு. இவ்வாறு 1-ம் பாவம் முதல் 12-ம் பாவம் முடிய உடலமைப்பு, செல்வம், உடன்பிறந்தோர், நட்பு, மக்கட்பேறு, பகை, கணவன், மரணம், தர்மம், தொழில், லாபம், செலவு இவைகளை அறியவேண்டும்.

பெண்கள் ஜாதகத்தில் 5-ம் பாவம் லாபஸ்தானம் என்று கூறப்படுகிறது. 5-ம் பாவாதிபதி 2-ம் பாவத்திலிருந்தால், இவளது கணவன், மனிதர்களால் இழுத்துச்செல்லப்படுகிற அல்லது சுமந்துசெல்லப்படுகிற வண்டி அல்லது பல்லக்கு முதலான வாகனங்களை உடையவனாக இருப்பான்.

பெண்கள் ஜாதகத்தில் 2-ம் பாவாதிபதி 1, 2, 4, 7 அல்லது 10 பாவங்களுள் ஒன்றில் இருந்தால், இவள் ஆயுட்காலம் பூராவும் வாகனம் கிடைக்கும் யோகம் இருக்கும்.

பெண்கள் ஜாதகத்தில் 11-ம் பாவாதிபதி வியாழனாக இருந்து, அவனது உச்ச ராசியை அடைந்திருந்தாலும், உச்ச ராசிக்குச் செல்லும் நிலையில் பால்யநிலை (இளநிலை)யையோ அல்லது யௌவன (இடைப்பட்ட) நிலையையோ அடைந்திருந்தாலும், 2-ம் பாவத்தில் பலம் பெற்றுமிருந்தால் கணவனுக்குத் தங்கத்தால் செய்யப்பட்ட வாகனம் கிடைக்கும் யோகம் உண்டாகிறது. மேற்கூறிய நிலையில் வெள்ளி இருந்தால் வெள்ளியால் செய்யப் பட்டதும், சனி இருந்தால் குதிரை கட்டிய வாகனங்களும் உண்டாகும்.

பெண் ஜாதகத்தில் 11-ம் பாவாதிபதி உச்ச ஸ்தானமாக அமைந்த 2-ம் பாவத்தை அடைந்து, 2-ம் பாவாதிபதியும் லாபஸ்தானமான 11-ம் பாவத்தையும் அடைந்திருந்தால் இவள் கணவன் மிக அதிகமான வாகனங்களுடனும், நிறைந்த செல்வத்துடனும் வாழ்வான் என்பது உறுதி.

பெண் ஜாதகத்தில் 11-ம் பாவாதிபதி நின்ற ராசிக்குரியவன் 1, 2, 4, 7, 10 அல்லது 11-ம் பாவங்களுள் ஒன்றில் இருந்தால் இவள் கணவன் ஏராளமான நரவாஹன யோகமுடையவனாக வாழ்வான் என்பது நிச்சயம்.

பெண் ஜாதகத்தில் 2-ம் பாவாதிபதியும், 9-ம் பாவாதிபதியும், 10-ம் பாவம் அல்லது 11-ம் பாவத்தில் இருந்தால் இவள் கணவன் ஏராளமான செல்வமும், நரவாகன யோகமும் உடையவனாக இருப்பான்.

பெண் ஜாதகத்தில் 7-ம் பாவம் புத்திர ஸ்தானம் என்று கூறப்படுகிறது. புத்திர ஸ்தானமாக அமைந்த 7-ம் பாவாதிபதி, சுபனாகவோ அல்லது உச்ச ராசியை அடைந்தவனாகவோ, மித்ரர்களது ராசியை அடைந்தவனாகவோ அல்லது அவனது ராசியிலேயே இருந்தோ அல்லது யௌவன நிலையை அடைந்தோ அல்லது மேற்கூறப்பட்ட நிலையில் இருக்கின்ற கிரகங்களால் பார்க்கப்பட்டோ அல்லது அவர்களுடன் சேர்ந்தோ இருந்தால், அந்தந்த கிரகங்களின் தசாகாலம் அல்லது புத்தி காலங்களில் இந்த பெண்கள் அதிகமான பிள்ளைகளைப் பெறுவார்கள்.

இனி, புத்திரர்களை இழக்கும் யோகம் கூறப்படுகிறது.

புத்திர ஸ்தானாதிபதி அல்லது புத்திரகாரகன் பாபக் கிரகங்களின் ராசியில் நின்றாலும், நீசராசியில் நின்ற கிரகங்களால் பார்க்கப்பட்டாலும் அல்லது அஸ்தங்கத தோஷத்தை அடைந்த கிரகத்தினால் பார்க்கப்பட்டாலும் அல்லது அதுவே அஸ்தங்கத தோஷத்தை அடைந்திருந்தாலும், இந்த ஜாதகன் அல்லது ஜாதகி தான்பெற்ற பிள்ளையை இழப்பர்.

கணவன், மனைவி இவர்களின் ஜாதிபற்றியும் வகை கூறப்படுகிறது.

பெண் ஜாதகத்தில் அல்லது ஆண் ஜாதகத்தில் 7-ம் பாவத்தில் நின்ற கிரகத்தின் ஜாதியை உடையவனாக

வாய்க்கும் கணவன் அல்லது மனைவி இருப்பார்கள். 7-ம் பாவத்தில் வியாழன் அல்லது வெள்ளி நின்றால் உயர் ஜாதியில் பிறந்தவனாகவும், மதி அல்லது புதன் நின்றால் மத்திம ஜாதியில் பிறந்தவனாகவும், மற்ற கிரகங்கள் நின்றால் கீழ்ப்பட்ட ஜாதியில் பிறந்தவனாகவும் வாய்க்கப்போகும் கணவன் அல்லது மனைவி இருப்பார்கள்.

பெண் ஜாதகத்தில் 7-ம் பாவாதிபதியோ அல்லது களத்ர காரகனோ அவனது சொந்த வீட்டிலோ அல்லது உச்ச ராசியிலோ, மித்ர ராசியிலோ, சுபர் வீட்டிலோ யௌவனத் பாவத்தை உடையவர்களாகவும் அல்லது 7-ம் பாவத்திற்கோ அல்லது களத்ரகாரகனான வெள்ளியின் ராசிக்கு 11-ம் பாவத்திலோ இருந்தால் இவ்வாறான யோகத்தில் பிறந்த பெண்களுடைய கணவனது ஆயுட்காலம் நூறு ஆண்டுகள் இருக்கும். (நூறாண்டு காலம் வாழ்வான் என்பது.)

பெண் ஜாதகத்தில் ஞாயிறு நீங்கலாக மற்ற கோள்கள் 7-ம் பாவாதிபதியாக இருந்து, அவர்கள் 12-ம் பாவத்தை அடைந்திருந்தால் இவ்வாறான யோகத்தில் பிறந்த பெண்ணின் கணவன் நீண்டகாலம் நோயினால் பீடிக்கப் பட்டவனாகவும், செல்வமற்றவனாகவும் (வறியவனாகவும்) குறைந்த ஆயுளை உடையவனாகவும் இருப்பான்.

ஆண், பெண் இருவர்களுடைய ஜாதகத்திலும், 9-ம் பாவத்தில் 9-ம் பாவாதிபதியுடன் புதன், வியாழன், மதி அல்லது வெள்ளி இவர்கள் தனித்தோ அல்லது சேர்ந்தோ இருந்தாலும் அல்லது அவரவர்களது ராசியில் அஸ்தங்கதர் களாக இல்லாமலோ அல்லது க்ஷீணகதியை அடையாமலோ இருந்தால் ஆண், பெண் (கணவன்-மனைவி) இருவரும் ஒருமித்த சுகானுபவம் உடையவர்களாக இருப்பார்கள்.

ஆண், பெண் (கணவன்-மனைவி) இருவர்களுடைய ஜாதகத்திலும் 7-ம் பாவத்தில் வெள்ளி இருந்தாலும், 7-ம் பாவாதிபதி வெள்ளியுடன் சேர்ந்து 1, 2, 4, 5, 7, 9, 10 அல்லது 11-ம் பாவங்களிலிருந்தால் இவர்கள் நீண்ட ஆயுளுடனும், நிறைந்த செல்வம், வாகனம் முதலியவற்றுடன் சுகமாக வாழ்வார்கள்.

ஜாதகனின் தந்தையின் ஜாதகத்தில் புத்திரகாரகனோ அல்லது 5 அல்லது 9-ம் பாவாதிபதியோ, வியாழன், புதன் மதி அல்லது வெள்ளி இவர்களுள் ஒருவன் பாக்கியஸ்தானமாக அமைந்து 9-ம் பாவத்தில் இருந்து, 9-ம் பாவாதிபதியும், வெள்ளியும் சேர்ந்து 11-ம் பாவத்தில் இருந்தால் தந்தையால் ஈட்டப்பெற்ற செல்வம் கிடைக்கும்.

8-ம் பாவாதிபதியோ அல்லது ஆயுட்காரனாகிய சனியோ, 11, 2 அல்லது 8-ம் பாவத்திலோ பூர்ணபலம் பெற்றவர்களாயும் இருந்தால், இந்த ஜாதகன் நீண்ட ஆயுள் உடையவனாக வாழ்வான். பலம் மத்யமமாயிருப்பின் நடுத்தர ஆயுள் உடையவனாகவும், பலம் குன்றியிருந்தால் குறைந்த ஆயுளை உடையவனாகவும் இருப்பான்.

12-ம் பாவாதிபதி, 9-ம் பாவத்தில் நின்று, ஞாயிறும் 11-ம் பாவம் அல்லது 1, 4, 5, 7, 9 அல்லது 10-ம் பாவங்களில் எவ்வளவு கோள்களுடன் கூடியிருக்கிறானோ அவ்வளவு எண்ணிக்கையைக் கொண்ட வீடுகள் ஜாதகனுக்கு இருக்கும். மேற்கூறப்பட்ட யோகத்தில் 12-ம் பாவாதிபதியோ அல்லது ஞாயிறோ நின்ற ராசிகள் சரராசியாக இருந்தால் வேற்றூரிலும். ஸ்திர ராசியாக இருந்தால் உள்ளூரிலும், உபய (இரட்டை) ராசிகளாக இருந்தால் உள்ளூரிலும், வெளியூரிலும் வீடுகள் இருக்கும்.

2-ம் பாவாதிபதி, 2-ம் பாவத்திலோ அல்லது 1, 4, 5, 7, 9 அல்லது 10-ம் பாவங்களுள் ஒன்றில் இருந்தாலும் அல்லது வர்க்கோத்தமத்தை அடைந்திருந்தாலும், இந்த ஜாதகனுக்குத் தங்கத்தினால் கட்டப்பட்ட மாடியுடன் கூடியதும் (மிக வேலைப்பாடுடன் கூடிய மாடிவீடு எனக் கொள்ளுதல் வேண்டும்). ராஜபோகத்திற்குரிய ஏராளமான விலை உயர்ந்த பொருட்களுடன் கூடிய வீடு இருக்கும்.

எவனுடைய ஜாதகத்தில் லக்னாதிபதி சத்ரு ராசியில் இருந்தாலும் அல்லது செவ்வாயுடன் கூடியிருந்தாலும்,

மெலிந்த உடலமைப்புடன் இருப்பான். லக்னாதிபதி 2-ம் பாவாதிபதியுடன் சேர்ந்திருந்தால் மிகுந்த செல்வம் உடையவனாக இருப்பான்.

11-ம் பாவாதிபதி அவனுடைய மித்ர ராசியிலோ அல்லது 2-ம் பாவத்திலோ இருந்தால், ஜாதகன் பல லக்ஷக்கணக்கான செல்வம் உடையவனாக அரசனைப்போல் வாழ்வான்.

எவனுடைய ஜாதகத்தில் 3-ம் பாவாதிபதி ஆண் கிரகமாகவும், ஆண் ராசியில் மற்றொரு ஆண் கிரகத்துடன் கூடியிருந்தாலும், 11-ம் பாவத்தில் நின்று ஆண் கிரகத்தினால் பார்க்கப்பட்டாலும் 1, 2, 4, 5, ,7, 9 அல்லது 10-ம் பாவங்கள் ஒன்றில் இருந்தாலும், இந்த ஜாதகன் சகோதரனுடன் கூட. செல்வத்துடன் சுகமாகவும், நீண்ட ஆயுளுடனும் வாழ்வான் என்பது உறுதி.

3-ம் பாவாதிபதியும் அவனுடன்கூட மற்றும் ஆண் கிரகமும், 3, 8, 11 அல்லது 5-ம் பாவங்களில் ஒன்றில் இருந்தால் ஜாதகனது மைத்துனன் குணமுள்ளவனாகவும், நீண்ட ஆ புள் உடையவனாகவும், சுகபோகங்களை அனுபவிப்பவனாகவும் நிறைந்த செல்வம் உடையவனாகவும் இருப்பான்.

லக்னம் சர ராசியாகவோ, ஸ்திர ராசியாகவோ அல்லது உபய ராசியாகவோ இருந்தால், என்ன சுகத்தைக் கொடுக்குமோ, அதே பலனை 7-ம் பாவாதிபதியும், 9-ம் பாவாதிபதியும், 11-ம் பாவாதிபதியும் அளிப்பார்கள் என்று கூறப்படுகிறது.

எவனுடைய ஜாதகத்தில் 7-ம் பாவாதிபதி எவ்வளவு கிரகங்களுடன் கூடியிருக்கின்றானோ, அவன் ஜன்ம லக்னத்திலிருந்து எத்தனையாவது ராசியை அடைந்து இருக்கிறானோ அந்த ராசிகளின் எண்ணிக்கை எவ்வளவோ, எவ்வளவு கிரகங்களால் 7-ம் பாவாதிபதி பார்க்கப்படுகின்றானோ, அவ்வளவு பிள்ளைகள் ஜாதகனுக்குப் பிறக்கும் என்று கூறப்படுகிறது.

7- வது, 9-வது பாவாதிபதிகளுடன் கூடிய கிரகங்கள்; 9-வது, 11-வது பாவாதிபதிகளுடன் கூடிய கிரகங்கள்; 11-வது, 5-வது பாவாதிபதிகளுடன் கூடிய கிரகங்கள் எவ்வளவோ, அவ்வளவு பிள்ளைகள் ஜாதகனுக்குப் பிறக்கும் என்று கூறவேண்டும்.

திருமணத்தைப் பற்றிய விவரங்கள் கூறப்படுகின்றன

வெள்ளி உபசய ராசிகளான 3, 6, 10 அல்லது 11-ம் பாவங்களுள் ஏதேனும் ஒன்றில் நின்றாலும் அல்லது மிக்க பலம் பெற்றவனாக லக்னத்தில் நின்றாலும், சுபகிரகங் களுடன் கூடியோ அல்லது அவர்களால் பார்க்கப்பட்டோ இருந்தாலும் சிறு வயதிலேயே திருமணம் நடக்கும் அல்லது வெள்ளி பலம் பெற்றவனாக சுபர்களது க்ஷேத்திரங்களுள் ஒன்றில் லக்னாதிபதியுடன் கூடினாலும் அல்லது பலம்பெற்ற மற்ற கிரகங்களுடன் கூடிநின்றாலும், இந்த யோகத்தில் பிறந்த ஜாதகனுக்கு சிறுவயதிலேயே திருமணம் நடக்கும்.

ஜன்ம லக்னம் சுபராசியாக அமைந்து, அதில் வெள்ளி நின்றாலும், ஜனன காலத்தில் வெள்ளி பலம் பெற்றவனாக இருந்து, லக்னாதிபதியுடன் கூடிநின்றாலும், இந்த யோகத்தில் பிறந்த ஜாதகனுக்குச் சிறுவயதிலேயே திருமணம் நடக்கும்.

எவனுடைய ஜாதகத்தில் வெள்ளியும், மதியும் பால்ய நிலையைக் கடந்து, உபய ராசிகளான 3, 6, 10 அல்லது 11-ம் பாவங்களை அடைந்திருந்தால் நிறைந்த செல்வப் பெருக்கைக் கொடுப்பார்கள். இவர்கள் பலம் பெற்றவர் களாகவும், சுபர்களாகவும் இருந்தால் திருமணம் நடந்த சிறிது காலத்திற்குள்ளாகவே பிள்ளைப்பேற்றைக் கொடுப்பவர் களாக இருப்பார்கள்.

இருதாரம் மணந்துகொள்ளும் யோகம் கூறப்படுகிறது

வெள்ளி, புதன், வியாழன் இம்மூன்று கிரகங்களும் ஜன்ம லக்னத்தில் அஸ்தங்கதர்களாகவோ அல்லது 1, 4, 7, 10-ம் பாவங்களுள் ஒன்றில் நின்றாலும், ஸ்திர ராசியில் மதி நின்று வியாழன், புதன், வெள்ளி இவர்களால் பார்க்கப்பட்டாலும், அநேகமாக ஜாதகன் அனுபவிக்கக்கூடிய சுகபோகங்களில் பாதியளவுதான் சுகபோகங்களை உடையவனாக இருப்பான். லக்னத்தில் வெள்ளியும், மதியும் நின்றாலும் அல்லது வியாழன் நின்ற ராசியில் நின்றாலும் இளம்வயதிலேயே திருமணம் நடக்கும். லக்னம் சுபர்களுடன் கூடி மதி, வெள்ளி இவர்களால் பார்க்கப்பட்டும் இருந்தால் இந்த ஜாதகன் இருதாரங்களை மணந்துகொள்பவனாக இருப்பான்.

பெண் மகவு பிறக்கும் யோகம் கூறப்படுகிறது

வெள்ளியும், மதியும் நின்ற ராசிகளுள் ஒன்றிலோ அல்லது இவர்களால் பார்க்கப்பட்ட ராசிகளுள் ஒன்றிலோ அல்லது கடகத்தில் இவ்விரு கிரகங்களுள் நின்ற யோகத்தில் பிறந்த ஜாதகன் அதிகமான பெண்களைப் பெறுவான் என்று பராசரர் முதாலன மகரிஷிகள் கூறுகின்றனர்.

வெள்ளி உபய ராசியிலோ அல்லது அவனுடைய ஷட்வர்க்கத்தில் நின்றோ அல்லது 7-ம் பாவம், 12-ம் பாவம் இவைகளில் ஒன்றில் நின்றோ, பலம் பெற்றவனாக லக்னத்தைப் பார்த்தால் இந்த யோகத்தில் பிறந்த ஜாதகனுக்கு அதிகமான பெண் குழந்தைகள் பிறக்கும்.

வெள்ளி லக்னத்திலோ, லக்னத்தின் திரேக்காணத்திலோ அல்லது தனது ஷட்வர்க்கத்திலோ பலம் பெற்றவனாக பெண் ராசியின் நவாம்சத்திலோ இருந்தாலும் **அல்லது** மதியினால் பார்க்கப்பட்டோ அல்லது அவனுடன் கூடியோ நின்றால், இந்த ஜாதகனுக்குப் பெண் குழந்தைகள் பிறக்கும்.

ப்ரச்னத்தைக் கொண்டு திருமணம் நடக்கும்விதம் கூறப்படுகிறது

திருமண விஷயமாய் ஒருவர் கேட்கும்பொழுது, அப்பொழுது உதயமான ராசி மதியினுடையதாக இருந்து, அதில் வெள்ளி நின்றாலும் அல்லது வெள்ளி அவனது ராசி அல்லது உச்ச ராசியில் நின்றாலும் அல்லது வியாழனின் ராசி உதயமாகி, அதில் வெள்ளி நின்றாலும், அல்லது ஞாயிறின் ராசி உதயமாகி ஞாயிறும், அவனது உச்ச ராசியை அடைந்து இருந்தாலும் அல்லது வியாழன் ப்ரச்ன காலத்தில் தோன்றிய லக்னத்தில் அஸ்தங்கதனாகவோ அல்லது புதனுடன் சேர்ந்தோ நின்றாலும் திருமணம் நிச்சயமாக நடக்கும் என்று கூறவேண்டும்.

பிரச்னகாலத்தில் உதயமான லக்னத்திற்கு 7-ம் பாவத்திலோ அல்லது 2-ம் பாவத்திலோ, வெள்ளி நின்று மதியினால் பார்க்கப்பட்டாலும், பாப கிரகங்களால் பார்க்கப்படாமலும் அல்லது அவர்களுடன் கூடி இல்லாமலும் இருந்தால், திருமணம் நிச்சயமாக நடக்கும் என்று கூறவேண்டும்.

ஜாதகத்தைக் கொண்டு திருமணம் நடக்கும் விதம் கூறப்படுகிறது

களத்ரகாரகன் அல்லது 7-ம் பாவாதிபதி நின்ற ராசிக்கு உரியவனது நவாம்ச ராசிநாதனுடையதோ அல்லது வெள்ளி அல்லது மதி இவ்விருவருள் பலம் பெற்றவர் எவரோ அவருடைய தசையில் அல்லது 7-ம் பாவாதிபதி நின்ற ராசிக்கு நவாம்ச ராசியிலோ அல்லது அந்த ராசியின் திருகோணங்களாக அமைந்த 1, 5 அல்லது 9-வது ராசிகளுள் ஒன்றில் வியாழன் கோசார ரீதியாக வரும் சமயம் ஜாதகனுக்குத் திருமணம் நடைபெறும் என்று கூறவேண்டும்.

லக்னாதிபதி நின்ற நவாம்சராச்யாதிபதி நின்ற ராசியில் ஞாயிறு, வியாழன் அல்லது மதி, கோசார ரீதியாக வருங்காலத்தில் ஜாதகனுக்குத் திருமணம் நடைபெறும்.

லக்னாதிபதி 7-ம் பாவாதிபதி இவர்களுள் பலம் பெற்ற கிரகம் எதுவோ, அது நின்ற ராசியின் நவாம்சாதிபதி, அதனது ராசியில் கோசார ரீதியாக வரும் சமயம், அந்த ராசிக்குரிய கிரகம் பிற கிரகங்களுடன் கூடியிருக்கும்பொழுது மற்றவை களைவிட பலமுள்ளதாக இருக்கின்றதோ அப்பொழுது அல்லது மதி அதனுடைய துவாதசாம்ச பாகத்தை அடைந்த ராசியில் அல்லது 5 அல்லது 9-ம் இடத்தில் நிற்கின்ற சமயம் ஜாதகனுக்குத் திருமணம் நடக்கும்.

மதியோ அல்லது 7-ம் பாவாதிபதியோ, லக்னாதிபதி அல்லது 7-ம் பாவாதிபதி இவர்கள் நின்ற ராசியில் அல்லது களத்ரகாரகன் நின்ற ராசியில் அல்லது 11-ம் பாவாதிபதி அல்லது 7-ம் பாவாதிபதி நின்ற ராசியின் நவாம்சராச்யாதிபதி நின்ற ராசியில் அல்லது 7-ம் பாவத்திலோ வியாழன் கோசார ரீதியாக வரும் சமயம் ஜாதகனுக்குத் திருமணம் நடக்கும்.

எவனுடைய ஜாதகத்தில் சுபக்கிரகம் லக்னத்திற்கு 1, 4, 5, 7, 9 அல்லது 10-ம் பாவங்களிலோ அல்லது மதி நின்ற ராசி அல்லது 7-ம் பாவம் இவைகளில் இருக்கிறதோ இந்த ஜாதகனுக்கு அழகான மனைவி வாய்ப்பாள். பாப கிரகம் நின்றால் அழகில்லாத மனைவி கிடைப்பாள் என்று கூறவேண்டும்.

7-ம் பாவாதிபதி பலம் பெற்றிருந்தால் இந்த ஜாதகனுக்குத் திருமணம் மிகவும் நல்ல முறையில் நடக்கும்.

7-ம் பாவாதிபதி மிக்க பலம் பெற்றவனாக இருந்தால் இந்த ஜாதகனுக்கு நல்ல குணமுடையவளும், அழகு உடையவளுமான மனைவி வாய்ப்பாள். 7-ம் பாவாதிபதி நீசனாகவும், அஸ்தங்கத தோஷத்தை அடைந்திருந்தால் குணமற்றவளாகவும், அழகில்லாதவளாகவும் மனைவி வாய்ப்பாள்.

கணவன் மனைவி இவர்களது உறவு கூறப்படுகிறது

ஜாதகனின் 7-ம் பாவம், 7-ம் பாவத்தில் நிற்கின்ற கோள்கள், 7-ம் பாவத்தைப் பார்க்கின்ற கோள்கள் இவைகளைக்கொண்டு, கணவன்-மனைவி இருவர்களுடைய நட்பு, மனைவியின் குணம் இவைகளைக் கூறவேண்டும். இந்நிலையில் 7-ம் பாவம் ஆண் ராசியாக அமைந்து, ஆண் கோளினால் பார்க்கப்பட்டால், மனைவியினிடம் நட்புறவு கொள்ளமாட்டான். கணவன் - மனைவிக்கு ஹிதம் செய்பவனாக இருக்கமாட்டான். அவ்வாறில்லாமல் பெண் ராசியாக அமைந்து பெண் கோள்களால் பார்க்கப்பட்டால், மனைவியிடம் நட்புடன் பழகுவான். கணவன்-மனைவி இருவரும் நட்புடையவர்களாக இருப்பார்கள்.

லக்னாதிபதியும், 7-ம் பாவாதிபதியும் சத்ருவின் ராசியில் நின்றாலும், மித்ர ராசியில் நின்று சத்ருவாக இருக்கின்ற கோள்களால் பார்க்கப்பட்டாலும், இந்த யோகத்தில் பிறந்த கணவன்-மனைவி இருவரும் ஒருவருக்கு ஒருவர் விரோதிகளாக இருப்பார்கள்.

7-ம் பாவத்தில் வெள்ளி நின்றாலும், 7-ம் பாவத்தை ஞாயிறு நின்ற ராசியின் அம்சத்தில் அஸ்தங்கதனாக இருந்து, பார்த்தாலும் இந்த யோகத்தில் பிறந்த பெண் கணவனுக்கு மிகவும் விருப்பமுடையவளாக இருப்பாள். 7-ம் பாவம் பெண் ராசியாகவிருந்து, அதன் நவாம்சத்தில் வெள்ளி நின்றாலும் அல்லது அதைப் பார்த்தாலும் இந்த யோகத்தில் பிறந்த பெண் நல்ல அறிவுடையவளாகவும், சிறந்த குணம் உடையவளாகவும் இருப்பாள்.

லக்னத்தில் வெள்ளியும், மதியும் நின்றாலும் அல்லது லக்னத்தை இவ்விரு கிரகங்களும் பார்த்தாலும் அல்லது 11-ம் பாவத்தில் நின்றாலும் இந்த யோகத்தில் பிறந்த கணவன், மனைவி இருவரும் விரோதமின்றி நட்புடையவர்களாகவும், செல்வத்துடன் மகிழ்ச்சியுடனும் வாழ்வார்கள்.

வெள்ளியும், மதியும் பலம் பெற்றவர்களாக உபய ராசிகளில் ஒன்றிலோ, பெண் ராசிகளின் நவாம்ச ராசிகளில் ஒன்றிலோ இருந்தாலும், மனித ராசியில் நின்று லக்னத்தைப் பார்த்தாலும், இந்த யோகத்தில் பிறந்த ஜாதகனுக்கு நல்ல பெண் கிடைத்து விவாகம் நடக்கும்.

ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை மணக்கும் யோகம் கூறப்படுகிறது

உபய ராசி லக்னமாக அமைந்து, அதில் மதி நின்றாலும் அல்லது உபய ராசியின் நவாம்ச ராசியில் நின்றாலும், 7-ம் பாவத்தில் மதி நின்று சுபக்கிரகங்களுடன் கூடியிருந்தாலும், இந்த அமைப்பைக்கொண்டு இந்த யோகத்தில் பிறந்த ஜாதகனுக்கு வாய்க்கப்போகும் மனைவிகள் இருவரா அல்லது மூவரா என்பதையும், அவனது குணம், புகழ் இவைகளையும் கூறவேண்டும்.

லக்னத்திலோ அல்லது 7-ம் பாவத்திலோ ஒன்றுக்கு மேற்பட்ட கிரகங்கள் இருக்குமானால் இந்த ஜாதகனுக்கு பல மனைவிகள் வாய்ப்பார்கள். (ஒன்றுக்கு மேற்பட்ட இரண்டு அல்லது மூன்று மனைவிகளை அடைவான்.)

7-ம் பாவத்தில், 7-ம் பாவாதிபதியுடன் வெள்ளியும் இருந்தால் நிறைந்த செல்வத்துடன் பாக்கியம் பெற்றவனாக இருப்பான் ஜாதகன். இவ்வாறின்றி பாப கிரகங்கள் இருந்தால் இரு தாரத்தை மணப்பவனாக இருப்பான்.

7-ம் பாவத்தில் நபும்ஸகக் கிரகம் (அலிக்கிரகம்) நின்றாலும் அல்லது 7-ம் பாவம் உபய ராசியாக அமைந்து, அதன் நவாம்ச ராசியில் நபும்ஸக கிரகம் நின்றாலும், இந்த ஜாதகன் இரு தாரத்தை அடைவான். 11-ம் பாவத்தில் இருக்கின்ற கிரகங்களின் எண்ணிக்கையைக் கொண்டும் கிரகங்களின் தன்மையைக்கொண்டும் ஜாதகனின் குணம் முதலானவற்றை அறிந்து கூறவேண்டும்.

7-ம் பாவாதிபதி உபய ராசியில் நின்று, வெள்ளி வக்ரியாகவோ அல்லது அவனது உச்ச ராசியிலோ அல்லது 11-ம் பாவத்திலோ நீண்ட நாள் நின்றால், இந்த யோகத்தில் பிறந்த ஜாதகன் இரு தாரங்களை மணப்பவனாக இருப்பான்.

லக்னாதிபதி நின்ற ராசியிலிருந்தோ அல்லது சனியின் ராசிகளான மகரம் அல்லது கும்பங்களில் இருந்து, எட்டியிருக்கிற ராசிகளில் (8-ம் பாவம் முதல் 12-ம் பாவம் வரை உள்ள) ராசிகளில் 7-ம் பாவாதிபதியோ அல்லது வெள்ளியோ நின்றால், இந்த யோகத்தில் பிறந்த ஜாதகனுக்கு வெகுதூர தேசத்திலிருந்து பெண் கிடைக்கும் என்று கூறலாம். வெகுநாட்கள் கழித்து பிள்ளைப்பேறும் உண்டாகும்.

இரண்டாம் பாவத்தைப் பாப கிரகங்கள் பார்த்தால் செல்வம் அழிந்துவிடும். சுபர்கள் பார்த்தால் செல்வம் மிக அதிகமாகக் கிடைக்கும். 5-ம் பாவத்தை பாபர்கள் பார்த்தால் குழந்தைகள் தங்காது (இறந்துவிடும்). 5-ம் பாவத்தை சுபர்கள் பார்த்தால் குழந்தைகள் அதிகமாகப் பிறக்கும்.

மதியோ அல்லது வெள்ளியோ பாபர்களுடன்கூடி நின்றால் பெண்களுடன் சண்டை போடுபவனாக இருப்பான். இதுபோல் 4-ம் பாவம், 7-ம் பாவம் இவைகளிலும் பாபர்கள் நின்றால் பெண்களுடன் சண்டை போடுபவனாக இருப்பான். (தாம்பத்திய சுகம் கிட்டாது).

பிரச்னத்தைக்கொண்டு தாம்பத்ய உறவு எவ்வாறு உளது என்று கூறப்படுகிறது

பிரச்ன காலத்தில் அப்பொழுது உதயமான லக்னத்தில் இருந்து, 7-ம் பாவத்தில் அல்லது 8-ம் பாவத்தில் தேய்பிறை மதி பாபர்களுடன் கூடியோ அல்லது அவர்களால் பார்க்கப்பட்டோ இருந்தாலும், ஜாதகனுக்குத் திருமணம் நடைபெற்று இருந்தாலும் மனைவியின் சம்பந்தம் ஏற்படாது (மனைவியுடன் கூடியிருக்கமாட்டான்).

பிரச்ன காலத்தில் உதயமான (சிரோதய ராசிகளுள்) சிரோதய ராசிகளான கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம் இந்நான்கினுள் ஒன்றிலோ, உபய ராசிகளான கன்னி அல்லது மிதுனத்திலோ புத்திரகாரகனான வியாழன் நின்று வெள்ளி, மதி, புதன் இவர்களால் பார்க்கப்பட்டால் இந்த யோகத்தில் பிறந்த ஜாதகன் மிகுந்த செல்வத்தையும், பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் அடைவதுடன் வேறு பெண்களையும் மணப்பான்.

பிரச்ன காலத்தில் வியாழன் நின்ற ராசியோ, வெள்ளி நின்ற ராசியோ அல்லது புதன் நின்ற ராசியையோ உதயமாகி, இவ்வாறான உதய லக்னத்துக்குக் கேந்திர ஸ்தானங்களான 1, 4, 7 அல்லது 10-ம் பாவங்களில் ஒன்றிலோ அல்லது மகரத்திலோ வியாழன் நின்றால் ப்ரச்னம் கேட்கவந்தவன் அதிகமான பிள்ளைகள், பேரன்கள் இவர்களை உடையவனாகவும், பெருஞ்செல்வத்துடன் கூடியவனாகவும் இருப்பான். வேறு பெண்களையும் மணப்பான் என்று கூறவேண்டும்.

பிரச்ன காலத்தில் உதயமான லக்னம், அதற்கு 4, 8 அல்லது 12-ஆமிடங்களில் பாபர்கள் நின்றாலும் அல்லது அந்த இடங்களை பாபர்கள் பார்த்தாலும், ப்ரச்னம் கேட்க வந்தவனது செல்வம் அழிவதுடன், உடல் நலனும் கெட்டு விடும் என்று கூறவேண்டும். இதுபோல் ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னத்திற்கு 3, 6 அல்லது 11-மிடங்களில் பாப கிரகங்கள் எல்லாம் நின்றால் அவரிடம் விரோத பாவம் கொண்ட சத்ருக்கள் அழிந்துவிடுவார்கள். இது நிச்சயம் என்று கூறவேண்டும்.

ப்ரச்ன காலத்தில் மதி பாபர்களுடன் கூடி அப்பொழுது உதயமான ராசிக்கு 6 அல்லது 8-ம் பாவத்தில் நீச பாவத்தை அடைந்திருந்தால் எந்த ஒரு மனிதனைப் பற்றி கேட்கப்பட்டதோ அவனுக்கு மரணத்தைக் கொடுப்ப வனாகிறான். மதி 6 அல்லது 8-ம் பாவத்தை அடைந்திருந்தால்

திருமணத்தைக் கொடுப்பவனாகிறான். மதி 6 அல்லது 8-ம் பாவத்தில் செவ்வாயுடன் கூடி, அஸ்தங்கதனாகவும் இருந்தால் எவனுக்காக பிரச்னம் கொடுக்கப்பட்டதோ அவனுக்கு மரணத்தைக் கொடுப்பவனாகிறான் என்று கூறவேண்டும். பாப கிரகங்கள் எல்லாம் அவர்களது நீச ராசியிலோ, சத்ரு ராசியிலோ, 7 அல்லது 8-ம் பாவத்தையோ அடைந்தவர்களாக இருந்தால், மரணத்தைக் கொடுப்பவர்கள் ஆவார்கள். லக்னத்தில் இருந்தால் நோயையும், 5-ம் பாவத்தை அடைந்தால் மனைவியை பிள்ளையற்றவளாகவோ அல்லது மலடியாகவோ செய்துவிடுவார்கள்.

பிரச்ன காலத்தில் உதயமான ராசிக்கு 3, 6, 9 அல்லது 11-ம் பாவங்களுக்கு ஒன்றில் சுபகிரகங்கள் இருந்தால் சுபத்தை செய்பவராவார்கள். 7-ம் பாவத்தில் சுபர்களும், அசுபர்களும் கலந்திருந்தாலும் அல்லது 7-ம் பாவத்தை சுபர்களும், அசுபர்களும் பார்த்தாலும், பிரச்னத்திற்கு உரியவனுக்கு வாய்க்கப்போகும் மனைவி முன்பு ஒருவனை மணந்தவளாக இருப்பாள் என்று கூறவேண்டும்.

பிரச்ன காலத்தில் உதயமான ராசிக்கு 7-ம் பாவத்தில் வெள்ளி நின்று, அது வெள்ளியின் உச்ச ராசியாகவோ அல்லது சுப ராசியாகவோ இருந்தால் பிரச்னத்திற்குரியவன் பல பெண்களை மணப்பவனாவான் அல்லது மனைவிகள் பலர் உண்டு என்று கூறவேண்டும்.

ஜனன காலத்திய கோள்களின் நிலையைக்கொண்டு ஜாதகனின் நிறம், குணம், மனைவி இவைகளை அறிதல்

பெண் ஜாதகத்தில் 7-ம் பாவத்தில் வியாழனும், வெள்ளியும் பாபருடன் கூடி நின்றால் கணவன்-மனைவிக்கு சமமான குணம், நிறம் முதலியவைகளுடன் இருப்பான். புதன் பாபருடன்கூடி நின்றால் கணவன்-மனைவியைவிட குறைந்த குணம் முதலியவற்றை உடையவனாக இருப்பான். ஆண் ஜாதகத்தில் 7-ம் பாவத்தில் மதி நின்றால் மனைவி குணம், குலம், நிறம் முதலியவற்றால் கணவனுக்குச் சமமாக

இருப்பாள். குரு, சுக்கிரர்களுடன் கூடி நின்றாலும் குணம், நிறம் முதலியவற்றால் சமானமாக இருப்பதுடன் கணவனைவிட குணம் முதலியவற்றால் உயர்ந்தவளாக இருப்பாள்.

7-ம் பாவத்தில் செவ்வாயும், வெள்ளியும் கூடி நிற்கப் பிறந்தவன், இரு தாரத்தை மணப்பவனாக இருப்பான். இதுபோன்று 9-ம் பாவத்தில் நின்றாலும் இருதார மணம் உடையவனாக இருப்பான். ஆனால் சிலர் இதற்கு நேர்மாறாக இருதார மணமில்லை என்று கூறுகின்றனர்.

லக்னத்தில் சனி நின்று, லக்னத்தில் (அல்லது சந்திரன் நின்ற ராசியில்) கடைசி பாகத்தில் (4-ம் பாதத்தில்) வெள்ளியும் நின்று, சுப ராசிகள் சுபர்களால் பார்க்கப்படா விடில் ஜாதகனின் மனைவி மலடியாக இருப்பாள்.

3-ம் பாவத்திற்கு, 7-ம் பாவத்தைக் கொண்டு சகோதரனின் மனைவியைப் பற்றியும், 5-ம் பாவத்தைக் கொண்டு சகோதரனின் பிள்ளைகளைப் பற்றியும், 5-ம் பாவத்திற்கு 7-ம் பாவத்தைக் கொண்டு மகனின் மனைவியைப் பற்றியும், 5-ம் பாவத்திற்கு 5-ம் பாவத்தைக் கொண்டு மகனுடைய மகன்களைப் பற்றியும் தீர்மானிக்க வேண்டும்.

லக்னாதிபதி நின்ற ராசியிலிருந்து 5-ம் பாவம், 7-ம் பாவம் இவ்விரு பாவங்களுள் எது பலம் பெற்றதாக உள்ளதோ அது சுபர்கள், அசுபர்களுடன் கூடியிருந்தாலும் அல்லது சுபர்கள், அசுபர்களால் பார்க்கப்பட்டாலும், இந்த ஜாதகனது மனைவி மறு பிரசவத்தின்போது (இரண்டாவது பிரசவத்தின் போது) இறந்துவிடுவாள். 5-ம் பாவமும், 7-ம் பாவமும் பலம் பொருந்திய கிரகம் சூன்யமாக இருந்தாலும் அல்லது பாபர்களுடன் சேர்ந்தோ அல்லது பார்க்கப்பட்டோ இருந்தால் ப்ரசவிக்காமலேயே இறந்து விடுவாள்.

அலி கிரகம் நின்ற ராசியிலிருந்து 7-ம் பாவத்தில் நின்றவர்களாயும், பெண் ராசியில் நிற்கின்றவர்களாகவும், ஞாயிறு, வெள்ளி, புதன் இவர்கள் இருந்தால் ஜாதகனுக்கு அதிகமான (ஒன்றுக்கு மேற்பட்ட) மனைவிகள் ஏற்படுகிறார்கள்.

மதியும், வெள்ளியும் 7-ம் பாவத்தில் நின்றால் ஜாதகன் அதிகமாகப் புண்ணிய காரியங்கள் செய்பவனாக இருப்பான். உலகத்திலுள்ளோரால் புகழப்பெற்ற பிள்ளைகளை உடைய வனாகவுமிருப்பான்.

3-ம் பாவாதிபதி 9 அல்லது 10-ம் பாவத்தில் நின்றால் ஜாதகன் சகோதரனால் தேடப்பட்ட செல்வத்தைக் கொண்டு ஜீவிப்பவனாக இருப்பான்.

பெண் ஜாதகத்தில் 8-ம் பாவாதிபதி, பாபர்களுடனோ அல்லது ராகுவுடனோ அல்லது கேதுவுடனோ கூடியிருந்தால் இந்த ஜாதகி கணவனின் அனுமதிபெற்று விபசாரம் செய்பவளாக இருப்பாள்.

பெண் ஜாதகத்தில் 7-ம் பாவாதிபதி பெண் ராசியை அடைந்து, பெண் ராசியை லக்னமாகக் கொண்டு பிறந்திருந்தால், இந்தப் பெண்ணின் கணவன் பிறர் மனைவி களுடன் சேருபவனாகிறான்.

பூர்வபாராசர்யம் பிற்பகுதியில் களத்ரபாவ நிருபணம் என்னும் மூன்றாவது அத்தியாயம் முற்றும்.

நான்காவது அத்தியாயம்

(எட்டாம் பாவம்)

8-ம் பாவத்தைக்கொண்டு ஜாதகனது குணங்கள் செயல்கள் இவையறிதல்

8-ம் பாவாதிபதி ஜன்ம லக்னத்தில் அஸ்தங்கதனாக இருந்தால் (ஞாயிறின்கீழ் ஒளியற்றவனாக இருந்தால்) இந்த ஜாதகன் கண்ணோயுடையவனாகவும், சுகமற்றவனாகவும், செல்வமற்றவனாகவும், அற்பாயுளுள்ளவனாகவும், பாம்பு போல் தனது இனத்தவரால் விரட்டப்பட்டவனாகவும் இருப்பான். (அதாவது, பாம்பைக்கண்டு மனிதர்கள் பயப்படுவதுபோல் இவனைக்கண்டு இனத்தவர்கள் பயப்படுவார்கள் என்பது கருத்து).

ஞாயிறு 8-ம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன் பிறர் மனதைக் கவரும் அழகுடையவனாகவும், கலகம் செய்வதில் விருப்பமுடையவனாகவும், (கோள் சொல்லி ஒருவருக்கு ஒருவர் சண்டை போட்டுக்கொள்ளும் வண்ணம் செய்யும் குணமுடையவன் என்று பொருள்) மகிழ்ச்சியற்றவனாகவும், மிக்க நுண்ணறிவு உடையவனாகவும், மிக்க ஒளி உடைய வனாகவும், வயிற்று நோய் உடையவனாகவும், இளைத்த மேனி உடையவனாகவும் இருப்பான்.

தேய்பிறை மதி 8-ம் பாவத்தில் இருக்கப்பிறந்தவன் அற்பாயுளனாக இருப்பான். வளர்பிறை மதி 8-ம் பாவத்தில் இருக்கப்பிறந்தவன் கொடையாளியாகவும், யாசிப்பவர் களுக்குச் செல்வத்தைக் கொடுப்பவனாகவும், போர் புரியும் ஆற்றலுடையவனாகவும் இருப்பான்.

செவ்வாய் 8-ம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன் நோயுற்ற சரீரத்தை உடையவனாகவும், அற்பாயுள் உள்ளவனாகவும், விகாரமான மேனியை உடையவனாகவும், இழிசெயல் செய்பவனாகவும், கெட்ட பிள்ளைகளை உடையவனாகவும், துக்கத்தால் பீடிக்கப்பட்டவனாகவும் இருப்பான்.

8-ம் பாவம் செவ்வாயின் உச்ச ராசியாக அமைந்து அதில் செவ்வாய் நின்றால் (மிதுன ராசியில் அல்லது மிதுன லக்னத்தில் பிறந்திருந்தால்) வேஷமற்றவனாகவும் (ஆடை ஆபரணங்களின்றி சாதாரண உடையில் இருப்பவன்) பெருஞ்செல்வம் உடையவனாகவும், ஒரு கூட்டத்திற்குத் தலைவனாகவும், படித்தவனாகவும் (பண்டிதனாகவும்) பிரசித்திபெற்ற பெயருடையவனாகவும்; பலமுள்ள வனாகவும், நீண்ட ஆயுளை உடையவனாகவும், தன் குலத்திற்குப் பெருமை தேடித்தருபவனாகவும் இருப்பான்.

புதன் 8-ம் பாவத்தில் இருக்கப்பிறந்தவன் அரசனுக்கு ஒப்பானவனாகவோ அல்லது சேனைகட்கு அதிபதியாகவோ இருப்பான். மேலும் புதன் 8-ம் பாவத்தில் இருந்தால், பெருஞ்செல்வமுடையவனாகவும், வணக்கமுடைய வனாகவும், பல வீடுகளை உடையவனாகவும், சூரனாகவும் (பலவானாகவும்) இருப்பான்.

வியாழன் 8-ம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன் விரோதிகளால் தோற்கடிக்கப்பட்டவனாகவும், நீண்ட ஆயுளை உடையவனாகவும், கூலியாளாகவும் (அடிமை யாகவும்), சோம்பேறியாகவும், தன்னினத்தவர்களை த்வேஷிப்பவனாகவும், அல்லது தன்னினத்தவர்களால் த்வேஷிக்கத் தகுந்தவனாகவும், ஆரம்பமுதல் இழிகுலத்தில் பிறந்த பெண்களை அனுபவிப்பவனாகவும் இருப்பான். வியாழனுக்கு 8-ம் பாவம் நீசஸ்தானமாக அமைந்து, அதில் அதிநீச பாவத்தை (5-வது பாகையை)யும் அடைந்திருந்தால் நுண்ணறிவுடையவனாகவும், நீண்ட ஆயுளை உடைய வனாகவும் இருப்பான்.

குறிப்பு :- மிதுன ராசி அல்லது மிதுன லக்னத்தில் பிறந்தவனாக இருக்கவேண்டும் என்பது கருத்து.

வெள்ளி 8-ம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன் ஈடு இணையற்ற சுகானுபவமுடையவனாகவும், பெருஞ்செல்வ முடையவனாகவும், அரசனுக்கு ஒப்பானவனாகவும், ஒவ்வொரு கணமும் மகிழ்ச்சி உடையவனாகவும் இருப்பான்.

சனி 8-ம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன் குஷ்டம், மூலரோகம் இவைகளால் மிகவும் வருந்துகின்றவனாகவும், அற்பாயுளனாகவும், எப்பொழுதும் எக்காரியத்திலும் முயற்சியற்றவனாகவும், ஏழையாகவும், கோபம் உடையவனாகவும், சண்டையில் (போரில்) மிகுந்த பராக்கிரமம் உடையவனாகவும் இருப்பான்.

ராகு 8-ம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன், தனது அறிவாற்றலால் எல்லோரையும் மகிழ்விக்கச் செய்பவனாகவும், ஊனமற்ற அவயவங்களை உடைய வனாகவும், பிள்ளையற்றவனாகவும், பரிசுத்தமுள்ள வனாகவும், மேகரோகம் முதலியவைகளால் பீடிக்கப்பட்ட சரீரத்தை உடையவனாகவும், நடுத்தர வயது உடைய வனாகவும், வயிற்றுப்போக்கு உடையவனாகவும், வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்படுபவனாகவும், இயற்கையாகவே மிகுந்த கோபமுடையவனாகவும், குற்றவாளியாகவும், மிகவும் மெதுவாக (காலந்தாழ்ந்து) வேலையை உரிய காலத்தில் செய்துமுடிக்காதவன்), எதற்கும் தகுதியுடையவனாகவும் இருப்பான்.

8-ம் பாவம் உச்சஸ்தானமாக அமைந்து, அதில் கேது இருக்கப்பிறந்தவன் நொண்டியாகவும், எப்பொழுதும் ஏழையாகவும், பிறருடைய செல்வத்தை அடைய விரும்புகின்றவனாகவும், குற்றஞ்சாட்டப்பட்டவனாகவும், இகழ்ந்து ஒதுக்கப்பட்டவனாகவும் இருப்பான்.

8-ம் பாவத்தைக்கொண்டு மரணமும், காரணமும் அறிதல்

(இயற்கையாகவோ, ஸ்தானத்தினாலோ, மற்ற கோள்களின் சேர்க்கையாலோ) பலம்பெற்ற கோளினால் 8-ம் பாவம் பார்க்கப்பட்டால் தாதுக்கள் (ரசம், ரத்தம், மாம்ஸம், கொழுப்பு, எலும்பு, மஜ்ஜை, சுக்ரம் இவைகளுக்குத் தாதுக்கள் என்று பெயர்) கொதிப்பதால் ஏற்படுகிற வியாதியினால் மரணத்தை அடைபவனாகவும், 8-ம் பாவத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கோள்கள் நின்றால்

தாதுக்களினால் ஏற்பட்டதும், மற்ற தோஷங்களாலும் ஏற்பட்டதுமான நோயினால் மரணத்தை அடைபவனாகவும் இருப்பான் ஜாதகன்.

ஜன்ம லக்னம், மதி நின்ற ராசி இவ்விரண்டினுள் எது விசேஷமாக பலம் பெற்றதாகவுள்ளதோ அதற்கு 8-ம் பாவத்தில் நின்ற கிரகங்களைக்கொண்டு ஜாதகனது மரணத்தைக் கூறவேண்டும். லக்னத்திற்கு 8-ம் பாவ ராசியின் தேசம் எதுவோ அங்கு மரணம் ஏற்படும்.

லக்னாதிபதி நின்ற ராசி அல்லது லக்னத்திற்கு நவாம்சமாக அமைந்த ராசி இவைகள் நிமித்தமாக மரணத்தைக் கூறவேண்டும். ஜன்ம லக்னம் மேஷ ராசியாகவோ, நவாம்ச ராசியாக மேஷம் அடைந்தோ இருந்தால், (8-ம் பாவம் அல்லது 8-ம் பாவத்தின் நவாம்ச ராசி மேஷமாக இருந்தால்) ஜ்வரம், விஷம் அல்லது பித்த ரோகங்களுள் ஒன்றினால் மரணமுண்டாகும். 8-ம் பாவத்தில் நின்ற கோள்கள், 8-ம் பாவத்தைப் பார்க்கின்ற கோள்கள் இவைகளால் ஏற்படுகின்ற தோஷங்களுக்குச் சமமான தோஷங்களால் ஏற்படுகின்ற வியாதியினால் மரணம் ஏற்படும் என்பது கூறப்படுகிறது.

8-ம் பாவம் அல்லது 8-ம் பாவத்தின் நவாம்ச ராசி ரிஷபமாகவோ அல்லது ரிஷபத்தின் நவாம்சமாகவோ இருந்தால் தலைவலி அல்லது தலையில் ஏற்படுகிற நோய் உஷ்ணாதிக்கத்தினால் ஏற்படுகிற நோய் அல்லது வயிற்று வலி முதலான வயிற்றுக் கோளாறுகளால் மரணம் உண்டாகும்.

8-ம் பாவம் அல்லது 8-ம் பாவத்தின் நவாம்ச ராசி கடகமாகவோ அல்லது கடக நவாம்சமாகவோ இருந்தால், ஜலத்தில் மூழ்குவதாலும் அல்லது அந்தத் துவேஷம் என்னும் நோயினாலாவது மரணம் உண்டாகும்.

8-ம் பாவம் அல்லது 8-ம் பாவத்தின் நவாம்ச ராசி சிம்மமாகவோ அல்லது சிம்ம நவாம்சமாகவோ இருந்தால்

கொப்புளங்கள் உண்டாவதாலும் அல்லது விஷம், ஜ்வரம், ஆயுதம் இவைகளுள் ஏதாவது ஒன்றினால் மரணம் உண்டாகும்.

8-ம் பாவம் அல்லது 8-ம் பாவத்தின் நவாம்ச ராசி கன்னி அல்லது கன்னியின் நவாம்சமாகவோ இருந்தால், தண்ணீர், நெருப்பு, ஆண்குறியில் ஏற்படுகிற நோய், சண்டை இவைகள் முதலானவைகளால் மரணம் உண்டாகும்.

8-ம் பாவம் அல்லது 8-ம் பாவத்தின் நவாம்ச ராசியில் கிரகங்கள் இல்லாத நிலையில் கூறப்பட்ட பலன் கிரகங்கள் நின்ற நிலையிலும் ஒன்றாகவே இருக்கும். மிதுனம் அல்லது மிதுனத்தின் நவாம்சமாக இருந்தால் காசம், சுவாசம், உஷ்ணாதிக்யத்தால் ஏற்படும் நோய், வயிற்று வலி இவைகள் முதலானவைகளால் மரணம் ஏற்படும்.

துலாம் அல்லது துலா ராசியின் நவாம்சமாக இருந்தால் புத்திக்கோளாறு அல்லது ஜ்வரம், சன்னிபாத ஜ்வரம் அல்லது அந்தந்த தசைகள், புக்திகளில் ஏற்படக்கூடிய ரோகங்களினால் மரணம் உண்டாகும்.

விருச்சிகம் அல்லது விருச்சிக ராசியின் நவாம்சமாக இருந்தால், பாம்பு கடித்தலால் அல்லது தேள் கொட்டுவதால் ஏற்படும் தோஷத்தால் மரணம் ஏற்படும்.

தனுஸ் ராசி அல்லது தனுஸ் ராசியின் நவாம்சமாகவோ இருந்தால், விஷம் அல்லது விஷம் கலந்த உணவை உட்கொள்ளுவதால் ஏற்படும் நோய் அல்லது ஆயுதம், கம்பு, அம்பு இவைகளால் அடிக்கப்பட்டோ அல்லது சிங்கம் முதலான பிராணிகளின் காரணமாகவோ மரணம் உண்டாகும்.

மகரம் அல்லது மகர ராசியின் நவாம்சமாக இருந்தால் வயிற்றுவலி அல்லது சன்னிபாதம் காரணமாகவோ மரணம் உண்டாகும். மகரம் அல்லது மகர ராசியின் நவாம்சத்தில் பாபர்கள் நின்றால் புலி முதலியவைகளாலோ அல்லது பாம்பு முதலானவைகளாலோ மரணம் உண்டாகும்.

கும்பம் அல்லது கும்ப ராசியின் நவாம்சமாக இருந்து அதில் பாபர்கள் நின்றால், புலியினாலோ அல்லது ஆயுதத்தாலோ அல்லது பாம்பு கடிப்பதாலோ அல்லது காசரோகம், ஜ்வரம், யக்ஷர்கள் (ஆகாயத்தில் சஞ்சரிக்கும் கந்தர்வர்களைப் போன்றவர்கள்) இவர்களால் ஏற்படுகிற ரோகங்கள் இவைகளால் மரணம் உண்டாகும். ஜாதகன் நினைத்ததை அவனது மரண காலத்திற்குள் பூர்த்தி செய்பவனாக இருப்பான்.

மீனம் அல்லது மீன ராசியின் நவாம்சமாக இருந்தால் பாம்பு கடிப்பதாலோ, ஜ்வரத்தாலோ, சன்னிபாதத்தாலோ அல்லது மரம், மேடு முதலிய உயர்வான இடத்திலிருந்து கீழே விழுவதாலோ அல்லது இயந்திரத்தாலோ, படகு உடைவதாலோ, நீரில் வாழ்கின்ற தவளை முதலான ஜந்துக்களினாலோ அல்லது இடிவிழுவதாலோ ஏற்படுகின்ற நோயினால் மரணம் உண்டாகும்.

பூர்ண ஆயுளையுடைய ஒருவன், மரணத்தைக் கொடுக்கவல்ல தசை வரும்பொழுது, இயற்கையாகவே மரணத்தை அடைகிறான். இவன் ஜ்வரம், அதிசாரம், மிகுதியான தண்ணீர் வேட்கை, வயிற்று வலி இவைகளால் மரணம் அடைவதில்லை என்று கூறவேண்டும்.

குறிப்பு :- அற்பாயுளுள்ளவர்கள் ஜ்வரம் முதலிய வற்றால் அகால மரணம் அடைகிறார்கள். உரிய வயது வந்து இறப்பவர்கள் தசா காலத்தில் ஏற்படுகின்ற நோயினால் இறப்பவர்கள். இது எல்லோருக்கும் பொது.

மரணத்தைப்பற்றி கூறுகின்ற நிலையில் 1, 8 அல்லது 12-வது பாவங்களில் மதி நின்றால் தண்ணீரினாலோ இயந்திரத்தின் காரணமாகவோ மரணம் ஏற்படும்.

செவ்வாயோ அல்லது செவ்வாயும், சனியும் சேர்ந்து பாபர்களின் நடுவில் அமைந்திருக்கின்ற 1, 8 அல்லது 12-ம்

பாவங்களில் நின்று, சுபர்களால் பார்க்கப்படாமலும் இருந்து, மதியும் கன்யா ராசியில் நின்றால் தூக்குப் போட்டுக் கொள்வதாலோ அல்லது நெருப்பினாலோ அல்லது பாம்பு கடிப்பதாலோ அல்லது ஆயுதங்களால் தாக்கப்பட்டோ அல்லது மேலிருந்து கீழே விழுவதாலோ மரணமுண்டாகும்.

10-ம் பாவத்தில் ஞாயிறும், 4-ம் பாவத்தில் செவ்வாயும் நின்று சுபர்களுடன் கூடாமலும், லக்னத்தில் சுபர்கள் இல்லாமலும் இருந்தால் இந்த யோகத்தில் பிறந்தவனுக்குக் காளை முட்டுவதாலோ அல்லது சூலத்தினால் குத்தப்பட்டோ மரணமுண்டாகும்.

8-ம் பாவத்தில் சுபனும், 1, 4 அல்லது 7-ம் பாவங்களில் பாப கிரகங்களும் இருந்தால் இந்த யோகத்தில் பிறந்தவனுக்குச் சூலத்தில் ஏற்றப்படுவதாலோ அல்லது மார்புவலி காரணமாகவோ மரணம் ஏற்படும்.

4-ம் பாவத்தில் சனியும், லக்னத்தில் மதியும், 10-ம் பாவத்தில் செவ்வாயும், இவ்வாறான யோகத்தில் பிறந்தவன் கிணற்றில் விழுவதாலோ அல்லது சண்டை போடுவதாலோ மரணம் அடைகிறான்.

கன்னி லக்னமாக அமைந்து, அதில் ஞாயிறும், மதியும் சேர்ந்திருந்து, பாப கிரகங்களால் பார்க்கப்பட்டும் இருந்தால் இந்த யோகத்தில் பிறந்தவன் போர்க்களத்திலோ அல்லது கொம்புள்ள பிராணி முட்டுவதாலோ கோரைப்பற்களுடைய கொடிய பிராணி தாக்குவதாலோ மரணம் அடைகிறான்.

கடக ராசியின் மையப்பகுதி லக்னமாக அமைந்து கன்னியில் மதியும் நிற்கப்பெற்ற யோகத்தில் பிறந்தவன் நீரில் மூழ்குவதாலும், வயிற்று நோயாலும் மரணம் அடைகிறான். மேஷம் அல்லது விருச்சிக ராசியில் மதி நின்று அவ்விரு ராசிகளுக்கும் 12-ஆமிடத்தில் பாப கிரகங்கள் நிற்பார்களானால் விரோதியால் கொல்லப்படுவான். அல்லது நெருப்பினால் மரணம் அடைவான்.

மதி கன்னியில் நின்று, கன்னிக்கு 12-ம் பாவத்தில் பாபர்கள் நின்ற யோகத்தில் பிறந்தவன் ரத்தக்கொதிப்பால் மரணமடைவான். மகரம் அல்லது கும்ப நவாம்சத்தில் மதி நின்று, அவ்விரு ராசிகட்கும் 12-ம் பாவத்தில் பாப கிரகங்கள் நிற்கப் பிறந்தவன் சுருக்குப் போட்டுக்கொள்வதாலோ, பாம்பு கடிப்பதாலோ, சூலத்தில் ஏற்றுவதாலோ, கயிற்றால் கட்டிப் போடுவதாலோ மரணம் அடைவான்.

மீன ராசியில் ஞாயிறோ அல்லது மதியோ நின்று, பாபர்களுடன் கூடின மேஷ ராசியில் மதி நின்று அஸ்தங்கத தோஷத்தை அடைந்தாலோ, பெண் காரணமாக மரணம் ஏற்படும். இச்சம்பவம் ஜாதகனது சொந்த வீட்டிலேயே ஏற்படும் என்று வேறு சிலர் கூறுகிறார்கள்.

லக்னத்துக்கு 5-ம் பாவத்தில் செவ்வாயோ அல்லது ஞாயிறோ நின்று 2, 8 அல்லது 10-ம் பாவத்தில் மதி நின்றால், இந்த யோகத்தில் பிறந்தவன், மிக்க கொடிய விஷத்தை உண்பதாலோ அல்லது சூலத்தில் ஏற்றிவைப்பதாலோ அல்லது குறுகலான ஆழ்ந்த இடங்களில் (சுரங்கத்தில் அகப்பட்டுக்கொள்வதாலோ மரணம் அடைகிறான்).

4-ம் பாவத்தில் ஞாயிறோ அல்லது தேய்பிறை மதியோ நின்றால் ஜாதகன் விரோதியால் கொல்லப்பட்டு மரணம் அடைவான். 8-ம் பாவத்தில் சனி தங்கினால் கட்டையால் அடிக்கப்பட்டு மரணம் அடைவான்.

லக்னத்திற்கு 4, 2 அல்லது 10-ம் பாவங்களில் செவ்வாய், ஞாயிறு, சனி இவர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தோ இருந்தால் ஆயுதத்தாலோ, நெருப்பினாலோ, அரசனது கோபம் காரணமாகவோ ஜாதகன் மரணம் அடைவான்.

2-ம் பாவத்தில் சனியும், 4-ம் பாவத்தில் மதியும், 10-ம் பாவத்தில் செவ்வாயும் இருக்கப் பிறந்தவன் பூச்சிக் கடியினால் ஏற்பட்ட தோஷத்தால் மரணம் அடைவான்.

செவ்வாய் 4-ம் பாவத்திலும், ஞாயிறு 10-ம் பாவத்திலும், மதி 8-ம் பாவத்திலும் நிற்கப் பிறந்தவன் ஊர்தியினாலோ அல்லது விரோதியினாலோ, காளை முட்டுவதாலோ மரணம் அடைவான்.

7-ம் பாவத்தில் செவ்வாயும், லக்னத்தில் தேய்பிறை மதியுடன் கூட சனியும், ஞாயிறும் நிற்கப் பிறந்தவன் இயந்திரத்தாலோ, நாற்காலி போன்ற ஆசனங்களிலிருந்து விழுவதாலோ, ஆயுதங்களால் தாக்கப்படுவதாலோ, வீடு இடிந்து விழுவதாலோ மரணம் அடைவான்.

துலா ராசியில் செவ்வாயும், ரிஷபத்தில் ஞாயிறும், மகரம் அல்லது கும்பத்தில் மதியும் நிற்கப் பிறந்தவன் நோயினால் பீடிக்கப்பட்டவனாக மலஜலங்கள் படுக்கையிலேயே இருக்கும்படியான நிலையில் மரணமடைவான்.

8-ம் பாவத்தில் தேய்பிறை மதி நின்று, பலம்பெற்ற சனியினாலும் பார்க்கப்பட்டதான யோகத்தில் பிறந்த ஜாதகன் ஆசனவாயில் ஏற்படும் நோய் (மூல ரோகம்) பவுத்திரம் அல்லது போர்க்களம் சென்று போரிடுதல் இதன் காரணமாக மரணம் அடைவான்.

செவ்வாய் லக்னம் அல்லது 7-ம் பாவத்திலும், சனி 8-ம் பாவத்திலும், மதி 4-ம் பாவத்திலும் நிற்கப் பிறந்தவன் வானத்தில் சஞ்சரிக்கின்ற யக்ஷர்கள் என்றவர்களால் உண்டாகிற (பிசாசு பிடித்தல்) நோயினால் மரணம் அடைகிறான்.

லக்னம், 8-ம் பாவம் அல்லது 1, 5, 9 இவைகளில் ஞாயிறு, செவ்வாய், சனி, மதி இவர்கள் சேர்ந்தோ, தனித்தோ நின்றிருக்கப் பிறந்தவன் தண்ணீரில் விழுந்து மூழ்குவதாலோ, இடி விழுவதாலோ, சுவர் இடிந்து விழுவதாலோ மரணம் அடைகிறான்.

ராகு 7-ம் பாவத்திலும், லக்னத்தில் சனியும், 1, 5 அல்லது 9-ம் பாவத்தில் ஞாயிறும் இருக்கப் பிறந்தவன் பாம்பு கடிப்பதால் மரணம் அடைகிறான்.

1, 4, 7, 8 அல்லது 10-ம் பாவங்களில் ஞாயிறின்றி, மதியுடன் ராகு நிற்கப் பிறந்தவன், பாம்பு கடிப்பதால் இறக்கிறான்.

பாப கிரகங்களின் நவாம்சத்தில் பாப கிரகங்களுடன் கூடிநிற்கப் பிறந்தவன், அவன் செய்த தவறால் மரணம் அடைகிறான். 8-ம் பாவத்தில் பாப கிரகங்களுடன் கூட ராகு நின்றாலும் இந்த யோகத்தில் பிறந்தவன், அவன் செய்த தவறால் மரணம் அடைகிறான்.

பாப கிரகம்4-ம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன், தண்ணீரினால் மரணம் அடைவான். 4-ம் பாவத்தில் செவ்வாய், சனியுடன் கூடி நிற்கப் பிறந்தவன், குட்ட நோயாலோ அல்லது காமவேட்கை மிகுதியால் ஏற்படுகிற நோயாலோ மரணம் அடைவான்.

மக்கட்பேறின் குறைவுக்குக் காரணம் கூறுதல்

வியாழன் அவனது ராசிகளான தனுசு அல்லது மீனத்தில் நின்றாலும், அல்லது 8-ம் பாவத்தில் நின்றாலும் இந்த யோகத்தில் பிறந்தவனுக்கு மக்கட்பேறு குறைவாக இருக்கும். செவ்வாய் சனியுடன் கூடி 8-ம் பாவத்தில் நிற்கப் பிறந்தவன் மக்களைப் பெற்று, பின் அவைகளை இழந்தவனாக (மக்களற்றவனாக) இருப்பான்.

ஒன்றுக்கு மேற்பட்ட கோள்கள் கூடுவதினால் மரணம் கூறுதல்

செவ்வாய் ஏதாவது நான்கு கிரகங்களுடன் கூடி நிற்கப் பிறந்தவன், ஏழ்மை காரணமாகவோ, அல்லது தண்ணீராலோ மரணம் அடைவான். 8-ம் பாவத்தில் இருக்கின்ற பாப கிரகங்களைக்கொண்டு, குறைந்த மக்கட்பேற்றையும், சுகம், துக்கம் இவைகளையும் கூறவேண்டும்.

சுபகிரகங்கள் 8-ம் பாவத்தை அடைந்திருந்தால் ஜாதகன் நோய்வாய்ப்படாமல் சுகமாக மரணம் அடைவான். பாப கிரகங்கள் மேஷம், 6-ம் பாவம் அல்லது 8-ம் பாவமாக அமைந்து அதில் நின்றால் தாகம், அதிசாரம், ஆயுதம் இவைகளால் மரணம் அடைவான்.

பாப கிரகங்கள் 6-ம் பாவம் அல்லது 8-ம் பாவமாக அமைந்த மேஷத்தைப் பார்த்தால் ஜாதகன் செல்வம் அழிவதால் அல்லது விஷம் அருந்துவதால் இறப்பான். ரிஷபம் 8-ம் பாவ ராசியாக அமைந்து அதில் நான்கு கிரகங்கள் நின்றால் ஜாதகன் திருடன், பகைவர்கள், நெருப்பு, கொடியவர்கள், செல்வம் இவைகளால் மரணமடைகிறான்.

மிதுனம் 8-ம் பாவமாகவோ அல்லது பாவத்தின் ஷட்வர்க்க ராசிகளுள் ஒன்றாகவோ இருக்கப் பிறந்தவன் போரில் ஆயுதங்களால் தாக்கப்பட்டோ, இடிவிழுந்தோ மரணம் அடைகிறான். அல்லது காச ரோகம், மூச்சுத்திணறல், மேலிருந்து கீழே விழுதல் அல்லது சூலரோகத்தினாலோ மரணம் அடைகிறான்.

கடகம் 8-ம் பாவமாகவோ அல்லது 8-ம் பாவத்தின் ஷட்வர்க்க ராசிகளுள் ஒன்றாகவோ இருந்து பாப கிரகங்களால் பார்க்கப்பட்டதாகவோ இருந்தால் இந்த யோகத்தில் பிறந்த ஜாதகன் மகோதரம் என்னும் வியாதியாலும், பிரமேகம் (படை), முள் குத்துதல் இவைகளுள் ஒன்றால் மரணம் அடைவான்.

யவனர்கள் (கிரேக்கர்கள்) கூறுவது

சிங்கம் 8-ம் பாவமாகவோ அல்லது 8-ம் பாவத்தின் ஷட்வர்க்க ராசிகளுள் ஒன்றாகவோ இருந்து பாப கிரகங்களால் பார்க்கப்பட்டுமிருந்தால் இந்த யோகத்தில் பிறந்த ஜாதகன் மூலரோகம், தண்ணீர், படை, விஷம், ஆயுதம், கோபம், விரோதி, நாற்கால் பிராணி இவைகளுள் ஒன்றால் மரணம் அடைவான் என்று யவனர்கள் கூறிகிறார்கள்.

கன்னி 8-ம் பாவமாகவோ அல்லது 8-ம் பாவத்தின் ஷட்வர்க்க ராசிகளுள் ஒன்றாகவோ இருந்து பாப கிரகங்களால் பார்க்கப்பட்டால் இந்த யோகத்தில் பிறந்த ஜாதகன் பெண் காரணமாகவோ, ஊர்தியின் காரணமாகவோ, தலை வலியாலோ, காற்றாலோ, நாற்கால் பிராணியினாலோ மரணம் அடைவான்.

ரிஷபம் அல்லது விருச்சிகம் 8-ம் பாவமாகவோ அல்லது 8-ம் பாவத்தின் ஷட்வர்க்க ராசிகளுள் ஒன்றாகவோ இருந்து பாப கிரகங்களால் பார்க்கப்பட்டால், இந்த யோகத்தில் பிறந்த ஜாதகன் தாகம், அதிசாரம் (பேதி), கூர்மையான ஆயுதம், செங்கல், சிறிய கற்கள் முதலான வற்றால் மரணம் அடைவான்.

தனுஸ் ராசி 8-ம் பாவமாகவோ அல்லது 8-ம் பாவத்தின் ஷட்வர்க்க ராசிகளுள் ஒன்றாகவோ இருந்து பாபர்களால் பார்க்கப்பட்டும் இருந்தால் இந்த யோகத்தில் பிறந்த ஜாதகன் வயிற்றுக்கோளாறு அல்லது வயிற்று நோய் அல்லது காற்றினால் ஏற்படுகிற பற்பல நோய்கள் அல்லது காற்றடித்தல் அல்லது பிசாசு பிடித்தல் இவைகளுள் ஒன்றினால் மரணம் அடைவான்.

மகரம் 8-ம் பாவமாகவோ அல்லது 8-ம் பாவத்தின் ஷட்வர்க்க ராசிகளுள் ஒன்றாகவோ இருந்து பாபர்களால் பார்க்கப்பட்டும் இருந்தால், இந்த யோகத்தில் பிறந்த ஜாதகன் அரசன், விஷம், புலி இவைகளுள் ஒன்றின் காரணமாக மரணமடைவான் அல்லது செல்வம், திருடன் காசநோய் இவை காரணமாக மரணமடைவான்.

கும்பம் 8-ம் பாவமாகவோ அல்லது 8-ம் பாவத்தின் ஷட்வர்க்க ராசிகளுள் ஒன்றாகவோ இருந்து பாபர்களால் பார்க்கப்பட்டும் இருந்தால், இந்த யோகத்தில் பிறந்த ஜாதகன் புலிகளாலோ, தண்ணீரினாலோ, வயிற்று நோயினாலோ, குதிரை அல்லது யானையின்மேல் சவாரி செய்வதாலோ, பெண் செய்த குற்றத்தாலோ மரணம் அடைவான்.

மீனம் 8-ம் பாவமாகவோ அல்லது 8-ம் பாவத்தின் ஷட்வர்க்க ராசிகளுள் ஒன்றாகவோ இருந்து பாபர்களால் பார்க்கப்பட்டும் இருந்தால் இந்த யோகத்தில் பிறந்த ஜாதகன் குல்மம், கிரஹணி, மேகரோகம், விஷம் இவைகள் காரணமாக மரணம் அடைவான். அல்லது தண்ணீரில் படகு உடைந்துபோவதாலோ, மார்வலி காரணமாகவோ மரணம் அடைவான்.

எந்த ஒரு கிரகத்தினுடைய ராசியில் வெள்ளி நின்ற லக்னத்திற்கு 8-ம் பாவத்தில் மதியும் நிற்கப் பிறந்தவள் மதியின் ஆதிபத்ய தோஷத்தால் மரணம் உண்டாகும் என்று கூறவேண்டும்.

லக்னத்திற்கோ அல்லது மதி நின்ற திரேக்காணத்திற்கோ 22-வது திரேக்காணம் மரணத்திற்குக் காரணமாகும். அந்த திரேக்காணத்தின் அதிபதி எந்த ராசிக்கு கோசார ரீதியில் வருகிறானோ அப்பொழுது மரணம் நேரிடும் என்று கூறவேண்டும்.

குறிப்பு:- திரேக்காணம் ஓர் ராசியை மூன்று கூறு செய்வது, திரேக்காணத்தின் முதற்கூறுக்கு அந்த ராசிக்கு உடையவன், 2-ம் கூறுக்கு 5-ம் ராசிக்கு உடையவன்; 3-ம் கூறுக்கு 9-ம் ராசிக்கு உடையவன் இவ்வாறாகக் கணக்கிடல் வேண்டும்.

லக்னத்திற்கு 12-ம் பாவத்தில் நின்ற கிரகங்கள் ஜாதகன் இறக்கும் தருவாயில், அக்காலத்தில் அவைகளின் (கிரகங்களின்) நிலைக்கேற்றவாறு மோஹத்தைக் கொடுக்கின்றன. மேலும், 12-ம் பாவத்தில் நிற்கின்ற கிரகங்கள் அல்லது பார்க்கின்ற கிரகங்கள் இவைகளின் தன்மையைக்கொண்டு மயக்கத்தைக் கூறவேண்டும் என்று சோதிடநூல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

லக்னத்தில் நவாம்சாதிபதியின் க்ஷேத்திரம் (நிலம் அல்லது இடம்) எதுவோ அங்கு ஜாதகனுக்கு மரணம்

ஏற்படும். லக்னத்தின் நவாம்சாதிபதியின் குணத்திற்கு ஏற்றவாறு மயக்கம் ஏற்படும். அல்லது நவாம்சாதிபதியின் பார்வை லக்னத்திற்கு ஏற்படாமல் இருக்குமானால் மயக்கம் இரண்டு மடங்காக இருக்கும் என்று கூறப்படுகிறது.

குறிப்பு:- "லக்னத்தில் எவ்வளவு பாகைகள் சென்றிருக்கின்றனவோ அவ்வளவு நாழிகைகள் மரண காலத்தில் நினைவற்ற நிலையில் இருக்கிறதாகவும், லக்ன நவாம்சாதிபதி எவராலும் பார்க்கப்படாவிட்டால் மேற்கூறிய நினைவாற்ற நிலை இருமடங்காகும் என்று கொள்ள வேண்டும்".

4 அல்லது 10-வது பாவங்களில் பாப கிரகங்களும், 8-வது பாவத்தில் சுபகிரகங்களும் நின்று 12-வது பாவத்திற்குச் சுப கிரகங்களின் பார்வையும் இல்லாவிட்டால் மரண சமயத்தில் ஏற்படுகின்ற நினைவற்ற நிலை மூன்று மடங்காக இருக்கும்.

பூர்வபாராசர்யம் பிற்பகுதியில் அஷ்டமபாவாத்யாயம் என்னும் நான்காம் அத்தியாயம் முற்றும்.

ஐந்தாவது அத்தியாயம்

(தசாபல அத்தியாயம்)

ஞாயிறு தசைப்பலன்

ஞாயிறு தசையில் அரசனது கோபம், பிறரிடம் மனத்தாங்கல், சரீரத்தில் நோயும், மிகுந்த பயமும், பிராணிகளிடமிருந்து பயமும், ஜ்வரமும், கிலேசம் அடைதலும் உண்டாகும்.

குறிப்பு :- சாராவளியில் தசாபலன்களைக் கூறுமிடத்து நற்பலனைத்தரும் தசை, தீய பலன்களைத்தரும் தசை என தனித்தனியே ஒவ்வொரு கிரகத்தின் தசையைப் பற்றியும் கூறுகிறார். இந்நூலில் அவ்வாறு கூறப்படவில்லை. எனினும், சாராவளியில் கூறப்பட்டதையும் கருத்தில் கொள்வதற்காக விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"நற்பலனைத் தரும் சூரிய தசையில்" காடு, மலை, மருந்து, வழிநடை, நஞ்சூட்டல், அறியாதிருத்தல் என்னும் இவைகளால் கிலேசமடைதலும், மலை, சுரங்கம் இவைகளிலிருந்து கிடைக்கும் பொருள்களையும், தந்தம், தோல், நெருப்பு இவைகள் சம்பந்தமான வியாபாரம் செய்தலும், ராஜ சன்மானம், மனோதர்மம், விடாமுயற்சி, ஒழுக்கம், நுண்மதி, கீர்த்தி, சிறப்பு இவைகளை அடைவதும், அரசனைப்போன்று செயல்படும் திறன் அல்லது பிரபுவாக இருக்கும் தன்மையை உடையவனாக இருப்பது ஆகிய இவைகள் உண்டாம். *(சாராவளி - அத். 40; சுலோ. 25-26)*

"தீயபலனைத் தரும் சூரிய தசையில் தொழிலாளர்களால் தொந்திரவும், பொருட்சேதமும், திருடர்களிடமிருந்து பயமும், கண்ணோயும், ஆயுதம், அரசன், நீர், நெருப்பு இவைகளால் ஆபத்தும், பாவகாரியம் செய்தலும், பசி, சோகம் இவைகள் மிகுதியாக இருத்தலும், நெஞ்செரிவு, பித்த நோய், உடலில் காயம் உண்டாதல் ஆகிய இவை உண்டாகும்." *(சாராவளி - அத். 40; சுலோ. 27-28)*

சந்திர தசைப்பலன்

மதியின் தசையில் ஸ்தான நாசம், மிகுதியான கிலேசம், தந்தையின் மரணமும், நோயின் காரணமாகவோ அல்லது விரோதியிடமிருந்தோ அல்லது உறவினரிடமிருந்தோ மிகுந்த பயமும், பந்துக்களின் துவேஷமும், அரசனிடமிருந்து பயமும் உண்டாகும்.

குறிப்பு :- "நற்பலனைத்தரும் சந்திரதசையில் பெண்கள் மூலம் பொருள் பெறுதலும், மென்மையான குணமும், தண்ணீர், பன்னீர், பால், வெண்ணெய், தயிர், கரும்பு, சர்க்கரை இவைகளால் செல்வப் பெருக்கும், விநோதமும், பார்ப்பனர் மூலமாக மகிழ்ச்சியும், செல்வம் பெறுதலும், மந்திர ஸித்தியும், சிறந்த ஆடைகள், மலர்கள் கிடைக்கப் பெறுதலும், மெலிந்த சுபாவமும், புத்தி சக்தியும், தைரியமும், புஷ்டியும், குருஜனங்கள், அரசர் என்னும் இவர்களால் சிறப்பிக்கப்படுதலும் உண்டாகும்."

(சாராவளி - அ. 40; சுலோ. 29-30)

"தீயபலனைத்தரும் சந்திர தசையில் எதிர்பாராத விதமாகப் பொருள் அழிந்துபோதலும், அரசனின் கோபமும், சபையில் மனக்குறைவு ஏற்படுதலும், தன் சுயமுயற்சியால் காரியத்தை முடித்தலும், வலிமை உடையோரிடம் பகையும், தன் குலத்திலுள்ளோர்க்கு அச்சத்தை உண்டுபண்ணக்கூடிய சுபாவமும், உறவினருடன் போரிடுதலும், துன்பமும், எப்பொழுதும் உறங்கிக்கொண்டிருத்தலும், சோம்பலும், பெண்களால் பயமும், எவரிடமும் பற்றின்மையும் உண்டாகும்." *(சாராவளி - அத். 40; சுலோ. 31-32)*

தசைகளின் பலனைப்பற்றி கூறுமிடத்து சந்திர தசைக்கு வளர்பிறை தசமி வரை மத்திம பலன் என்றும், தேய்பிறை பஞ்சமி வரை முழுப்பலன் என்றும், ஷஷ்டி முதல் அமாவாசை முடிய அதமபலன் என்றும் பலதீபிகையில் கூறப்பட்டுள்ளதையும் கருத்தில் கொள்ளவேண்டும். *(பலதீபிகை - அத். 19; சுலோ. 18)*

செவ்வாய் தசைப்பலன்

செவ்வாயின் தசையில் திருடர்களால் துன்புறுத்தப் படுதலும், அரசனுடன் சண்டையும் (அரசாங்கத்துடன் சண்டையும்), விவசாயம், பசு, பூமி இவைகளின் நாசமும், கலகமும், சண்டையும், போரும் உண்டாகும்.

குறிப்பு :- நற்பலனைக் கொடுக்கும் செவ்வாய் தசையில் அரசனாலும், நெருப்பினாலும், செல்வப்பேறு, திருடுதல், பகைமையை வெல்லுதல், கொடிய உயிரினங்கள், விஷ சிகித்சை, படைக்கலம், கட்டுப்படுதல், கீழ்த்தரமான மந்திரப் பிரயோகம், இயந்திரச் செலவுகள், நில சம்பந்தமான வேலைகள் இவைகள் மூலமாகவும் வசப்படுத்துதல் பகையை உண்டுபண்ணுதல், இதற்கான மந்திரங்களைச் செய்தல் மூலமாகவும், சூதாடல், கள், சாராயம், மருந்து இவைகளை உற்பத்தி செய்வது அல்லது விற்பது மூலமாக பலதிறப்பட்ட பொருட்களை அடைவதும் உண்டாகும். *(சாராவளி - அத். 40; சுலோ. 33-34)*

தீய பலனைத்தரும் செவ்வாய் தசையில் உறவினர்கள், மனைவி, மக்கள், உடன்பிறந்தோர் ஆகிய இவர்களுடன் விரோதம் கொள்பவனாகவும், எதிலும் ஆசை கொள்ளுதல், ஈடுபடுதல், சோம்பல், இரத்தக்கோளாறு, வெட்டுண்டல், சிதைவு, உடலில் காயம் உண்டாவது, பரத்தையருடன் சேருவது ஆகிய இவற்றைப் பெறுபவனாகவும், குருவினுடன் விரோதம், வித்வான்களைப் பகைத்துக் கொள்ளுதல் இவைகளை உடையவனாகவும், பாபத்தைச் செய்பவனாகவும், செல்வத்தைத் தீயவழியில் செலவு செய்வதின் காரணமாக நோய்களை அனுபவிப்பவனாகவும் இருப்பான். *(சாராவளி - அத். 40; சுலோ. 35-36)*

ராகு தசைப்பலன்

ராகுவின் தசையில் கீழ்நிலை மக்களிடமிருந்தும், விரோதிகளிடமிருந்தும் அச்சமும், திருடர்கள், பாம்பு,

அரசன், விஷம் இவர்களிடமிருந்து பயமும், இழிகுலத்தில் பிறந்தோருடன் நட்பும் உண்டாகும்.

வியாழன் தசைப்பலன்

வியாழனின் தசையில் திருமணம் முதலான மங்களச் செயல்களும், மனைவி, புத்திரப்பேறு இவைகளை அடைவதும், தெய்வானுக்ரஹமும், பிராம்மணர்களால் உபசரிக்கப்படுவதும், தன் குலத்துக்கேற்ற தர்மங்களைச் செய்வதும் சரீர ஆரோக்கியமும் உண்டாகும்.

குறிப்பு :- நற்பலனைக் கொடுக்கும் குரு தசையில் அரசன், அமைச்சன், உயர்பதவியைப் பெறுதல், நியாயமான வழியிற்சென்று பொருளீட்டுதல், தன்மானம், கல்வி, நற்குணங்கள், புகழ்பெறும் ஆற்றல், சிறந்த உறவினர்களை அடைதல், மனைவி, பொன், யானை, குதிரை, வாகனங்கள், செல்வம் இவைகள் விருத்தியடைதல், மங்கள காரியங்களை செய்தலும், சரீர ஆரோக்கியமும், விரோதிகளின் பகை ஒழிதலும், தான் எடுத்துக்கொண்ட காரியங்கள் எல்லாம் நிறைவு பெறுதலும், பேரரசனின் மகிழ்ச்சி, மக்கட்கூட்டம். அரசாங்கம். வணிகர், ஆசிரியன் இவர்கள் மூலமாகப் பொருள்கிடைப்பதும், புலவர்கட்கு கிடைக்கக்கூடிய குடை, கொடி, வெண்சாமரம், மலர், வெண்பட்டு ஆடை, நல்ல உணவு முதலியவற்றைப் பெற்று மகிழ்ச்சியுறல் இவைகள் உண்டாகும். *(சாராவுளி - அத். 40; சுலோ. 41, 42, 43)*

தீய பலனைத் தரும் குரு தசையில் உடல் வீங்குவது, மிக்க துன்பம், முட்டாள்தனம், குன்ம வியாதி, செவி நோய் இவைகள் உண்டாகும். மேலும், பயந்த சுபாவம், அரசர் அல்லது அரசாங்கத்திடமிருந்து பயம், பாவிகளிடமிருந்து பயமும், பேராசையும், சோம்பலும், புத்தித் தடுமாற்றமும் உண்டாகும்.

சனி தசைப்பலன்

சனியின் தசையில் விவசாயம், பசு சேதமடைதலும், சோம்பலும், வேலை ஆட்களைப்பெறுதலும், வாத ரோகமும், உத்தியோகத்தில் இடையூறும், நிலம் கிடைக்கப் பெறுதலும் உண்டாகும்.

குறிப்பு :- நற்பலனைத் தரும் சனி தசையில் கழுதை, ஒட்டகம், எருமை இவைகளின் மூலம் பொருட் பெருக்கமும், ஒழுக்கந்தவறிய பெண் அல்லது தன்னைவிட வயதில் மூத்த பெண்ணுடன் சேர்தல், தானியங்களால் (கொள்ளு, எள், வரகு) லாபமும், ஒரு கழகத்திற்கோ, ஒரு ஊராட்சிக்கோ அல்லது நகராட்சிக்கோ தலைமைப் பதவி ஏற்றலும், சிறப்புறுதலும், உலோகங்களால் (இரும்பு, பித்தளை) லாபமும், ஸ்திரமான வாசஸ்தலமும் உண்டாகும். *(சாராவளி - அத். 40, சுலோ. 49, 50)*

தீய பலனைத்தரும் சனி தசையில் வாகனங்கள் அழிவதும், புத்தி மயக்கமும், இடம்விட்டு இடம்மாறிப் போவதும், சுகக்கேடும், உறவினர், மனைவி இவர்களை விட்டுப் பிரிதலும், போர், கல்வியில் தர்க்கம் செய்வது இவைகளில் தோற்றுப் போதலும், சூதாடல், கள் குடித்தல், வாதம் அல்லது வாயு நோய்கள் அடைதலும், தருமம் செய்யமுடியாத நிலை ஏற்படுதல், கலகமிடுதல், சிறை செல்லுதல், தந்திரமாகப் பிறரைக் கவருதல், மனவருத்தம் அடைதல், அங்கஹீனனாதல், வேலையாட்களோடும், புதல்வர்களுடனும் சண்டை போடுவது நிகழும். *(சாராவளி- அத்40; சுலோ. 51, 52)*

புதன் தசைப்பலன்

புதன் தசையில் கல்வியறிவுடையோரின் (வித்வான்களின்) கூட்டத்தில் கலந்துகொள்வது, சத்ருக்களான பெரியோர்களுடன் சேருதல், தனது பந்துக்கள் தன்னை நாடிவருவது, ஆபரணங்கள் கிடைப்பது, சாஸ்திரம் முதலிய கல்வித்துறையில் அறிவுபெறுவது மிகவும் சுகமாக இருப்பது இவைகள் உண்டாகும்.

குறிப்பு :- சுபனான புதன் தசையில் மகன், உறவினர், பிரபுக்கள், தீக்ஷை பெற்றோர், அரசன், வியாபாரி, புராணம் சொல்பவர் இவைகள் மூலம் செல்வப்பெருக்கு உண்டாவதும், சிறந்த குதிரை, நிலம், சுவர்ணம், முத்து இவற்றின் மூலமாகவும் பொருள் பெருகுவதும், இன்பம், சௌபாக்யம், அறிவு வளர்ச்சி, உலகப் பிரசித்தி, அறம் செய்வது, காரியத்தை முடிப்பது, நகைச்சுவையில் ஈடுபாடு கொள்வது, சத்ருக்களை அழிப்பது, எழுத்து, கணிதம் (வானசாஸ்திரம்), கணக்கு, சித்திரம் வரைவது, சிற்பத் தொழில் இவற்றில் திறமை அடைவது, சபையில் வெற்றி கொள்வதால் மகிழ்ச்சி அடைவதும் நடைபெறும். *(சாராவளி-அத். 40; சுலோ. 37, 38, 39)*

அசுபனான புதன் தசையில் வாதம், பித்தம், கபம் இவைகளின் தோஷங்களால் வியாதியை அடைவதும், பிறர் வெறுக்கத்தக்கபடி கடுமையாகப் பேசுவதும், பிறரிடம் கட்டுப்படுதலும், சிறைவாசமும், எதிரிகளிடம் பயமும், மனக்கிலேசமும், இருதயநோயும், உடல் வலுக்குறைதலும் உண்டாகும். *(சாராவளி-அத். 40; சுலோ. 40)*

கேது தசைப்பலன்

கேதுவின் தசையில் மனக்கிலேசமும், சண்டையும், உடலில் நோயும், கெட்ட கனவும், வாங்குவதற்கு அருகதையற்ற பொருளை வாங்கத்தகாதவர்களிடம் இருந்து தானமாகப் பெறுவதும், மனைவி, மக்கள், உறவினர் இவர்களுக்குத் தொந்திரவு கொடுப்பதும் உண்டாகும்.

சுக்கிர தசைப்பலன்

சுக்கிர தசையில் வாஹனம், பெண் (மனைவி), மக்கட்பேறு, செல்வம் இவைகளை அடைதலும், நல்ல நேர்த்தியான உணவு கிடைத்தலும், ஆபரணம், வஸ்திரம் இவைகளைப் பெறுதலும், பிறர் மனைவியை அடைதலும் உண்டாகும்.

குறிப்பு :- சுபனான சுக்கிர தசையில் நிலம், வீடு இவைகளை மிகுதியாகப் பெறுவது, சயனசுகம் (படுக்கைக்கு வேண்டிய சிறந்த பொருட்களை வாங்கி சுகம் அனுபவிப்பது) மனைவி, மாலை, வஸ்திரம், திண்பண்டம், யசஸ், செல்வம் இவைகளைப்பெற்று லாபம் அடைதல், இசைப் பயிற்சியில் ஆர்வம், பெண்களுடன் இன்புறுதல், அரசாங்கம் மூலமாகவோ, உழவுத்தொழில் மூலமாகவோ செல்வப் பெருக்கடைதல், மிக்க அறிவுடையோனாயிருத்தல் (சமயோசித புத்தி), தான் விரும்பியவற்றை பெறுதல், எப்பொழுதும் சுகமாக இருத்தல், உறவினருடன் இருப்பது இவைகள் உண்டாகும். *(சாராவளி-அத். 40; சுலோ. 46, 47)*

அசுபனான சுக்கிர தசையில் தன் குடும்பத்திலுள்ள பெரியோர்களுடன் குணத்தில் சிறந்தவர்களுடனும் (சாதுக்களுடன்) தர்க்கம் செய்வதும், வாகனத்திலிருந்து கீழே விழுதலாலும், ஆசனங்களிலிருந்து விழுவதாலும் கஷ்டப்படுவதும், அரசாங்கத்தாலும், பெண்களாலும் துன்பமடைவதும், இழிசெயல் செய்வாரோடு கூடிப் பழகுவதும் ஆகிய இவைகள் உண்டாகும். *(சாராவளி-அத். 40; சுலோ. 48)*

ஞாயிறு தசை - ஞாயிறு புக்தியின் பலன்

ஞாயிறு தசை - ஞாயிறு புக்தியில், தாபஸ்வரமும், மிக்க கஷ்டமும், அரசனிடமிருந்து பயமும், எப்பொழுதும் மிகவும் பயமும், கெட்ட கீர்த்தியும், ஸ்தான நாசமும் ஏற்படும்.

ஞாயிறு தசை - மதியின் புக்தியின் பலன்

ஞாயிறு தசை - மதியின் புக்தியில், பிறர் வீட்டில் விருந்துண்டலும், பாயசம், இனிய தின்பண்டம், வாஹனம், ஆபரணம் இவைகளைப் பெறுதலும், மனச்சாந்தி அல்லது சந்தோஷம், மிகவும் சுகமாக இருப்பது, இவைகளை அடைதல் ஏற்படும்.

ஞாயிறு தசை - செவ்வாய் புக்தியின் பலன்

ஞாயிறு தசை - செவ்வாய் புக்தியில் காயம் அல்லது அடிபடுதல் இவைகளால் உண்டாகும் விரணம், யானை வெகுளுவதால் ஏற்படக்கூடிய பயமும், பூமி நாசம் அடைதலும் (நிலம் கைவிட்டுப் போவது), அரசனிடமிருந்து பயமும் உண்டாகும்.

ஞாயிறு தசை - ராகு புக்தியின் பலன்

ஞாயிறு தசை - ராகு புத்தியில், பாம்புகளிடமிருந்து பயமும், மிக்கக் கஷ்டமும், திருடர்கள், நெருப்பு, அரசன் இவர்களால் தொந்திரவும், இழிவான செயலில் ஈடுபடுதலும், பிறருடன் விரோதித்துக் கொள்ளுதலும் உண்டாகும்.

ஞாயிறு தசை - வியாழனது புக்தியின் பலன்

ஞாயிறு தசை - வியாழனது புத்தியில், சுகமாக இருத்தல், நண்பர்களை அடைவது, செல்வத்தைப் பெறுவது, புத்திரர்கள், மனைவி, நண்பர்கள் இவர்களால் சௌக்கியம், நோயற்ற வாழ்வுடன் த்ருடகாத்திரனாக இருப்பது, மனச் சந்துஷ்டி (மனதில் மகிழ்ச்சி ஏற்படுதல்) இவை உண்டாகும்.

ஞாயிறு தசை - சனி புக்தியின் பலன்

ஞாயிறு தசை - சனி புக்தியில், பணியாட்களை இழப்பதும், காலில் நோயும், விவசாயம், தான்யங்கள், செல்வம் இவைகள் அழிதலும், உடல் வலியும், வாத ரோகமும் உண்டாகும்.

ஞாயிறு தசை - புதன் புக்தியின் பலன்

ஞாயிறு தசை - புதன் புக்தியில், ஸஜ்ஜனங்களின் சேர்க்கையும், பெரியோர்களின் கூட்டத்தில் கலந்து கொள்வதும், புராணங்களைக் கேட்பதும், அல்லது

சொல்வதும், தனது உறவினர்களாலும், அரசர்களாலும் ஸௌக்யத்தை அடைதலும் உண்டாகும்.

ஞாயிறு தசை - கேது புக்தியின் பலன்

ஞாயிறு தசை - கேது புக்தியில், கெட்ட தின்பண்டம், உணவு இவைகளை உட்கொள்ளுதலும், மனைவி, மக்கள் மற்றும் பிறரால் இகழப்படுகின்ற நிலையிலுள்ளவனாகவும், கெட்ட பெயரை அடைபவனாகவும், இகழத்தக்கதான கெட்ட புத்தி உடையவனாகவும் ஆகிறான்.

ஞாயிறு தசை - வெள்ளி புக்தியின் பலன்

ஞாயிறு தசை - வெள்ளி புக்தியில், எல்லாவிதத்திலும் ஸௌக்யமாக இருத்தலும், மிக உயர்ந்த பதவியும், நோயற்ற வாழ்வும், சுகமாக இருத்தலும், சுபமான காரியங்கள், சங்கீதம், நாட்டியம் இவைகள் நடைபெறுதலும் உண்டாகும்.

ஞாயிறின் சூக்ஷ்ம தசையின் பலன்

ஞாயிறின் சூக்ஷ்ம தசையில், அதிகாரம் (வயிற்றுப் பெரும்போக்கு), சோம்பல், பிறரிடம் கோள் சொல்லுதல் உறவினரை இழத்தல், தந்தைக்குச் சமமான உறவினரை இழத்தல் (பெரிய தந்தை அல்லது சிறிய தந்தை) இவை உண்டாகும்.

மதியின் சூக்ஷ்ம தசையின் பலன்

மதியின் சூக்ஷ்ம தசையில் அறுவகைச் சுவையுடன் கூடிய உணவும், நண்பர்களை அடைவதும், மனதுக்கு மகிழ்ச்சியும், மிக்க சுகமும், முத்துமாலை அல்லது முத்துக்களால் செய்யப்பட்ட ஆபரணங்களைப் பெறுதலும் நடைபெறும்.

செவ்வாயின் சூக்ஷ்ம தசையின் பலன்

செவ்வாயின் சூக்ஷ்ம தசையில், கலகமும், திருடர்களால் தொந்திரவும், சரீர பீடையும், நிலம் அழிதலும், மிகவும் பயமும், கொப்புளங்கள் உண்டாவதும் வயிற்றுவலி முதலான நோயும் உண்டாகும்.

ராகுவின் சூக்ஷ்ம தசையின் பலன்

ராகுவின் சூக்ஷ்ம தசையில், பிரயோஜனமற்ற சரீர ச்ரமமும், அதனால் ஏற்படுகின்ற கஷ்டமும், திருடர்கள், நெருப்பு, அரசர்கள் இவர்களால் தொந்திரவும், இழிந்த செயல் புரிவோர்களாலும், பாம்பினாலும், விஷத்தாலும், உடலில் நோயுண்டாகுதலும் ஏற்படும்.

வியாழனின் சூக்ஷ்ம தசையின் பலன்

வியாழனின் சூக்ஷ்ம தசையில் பிறருக்கு உதவி செய்வதாகிற தர்மத்தைச் செய்வதும், மனை, மக்கள், அரசர்கள் இவர்களால் சௌக்யத்தையும், இனிய சுபாவத்துடன் இருப்பது, பிறருக்குச் சிலரிடம் நல்ல வார்த்தைகளைச் சொல்லி அல்லது சாமர்த்தியமாகப் பேசி காரியங்களைச் செய்துகொடுப்பதின் வாயிலாக உதவி புரிதலும் நடைபெறும்.

சனியின் சூக்ஷ்ம தசையின் பலன்

சனியின் சூக்ஷ்ம தசையில் உறவினர்களில் எவரேனும் இறந்தால் உண்டாகிற தீட்டு (ஆசௌசம்) ஏற்படுதலும், பொய் சொல்லும் குணமும், கோபம் உண்டாதலும், பணியாள், அரசன் இவர்களிடமிருந்து பயமும், கடுஞ்சொற்களைப் பேசுதலும், பணக்கஷ்டமும், நோயும் உண்டாகும்.

புதனின் சூக்ஷ்ம தசையின் பலன்

புதனின் சூக்ஷ்ம தசையில் வித்வான்களை அடைவதும், வாதம், பித்தம், கபம் என்கிற இம்மூன்று நாடிகளின் தோஷத்தால் உண்டாகும் நோயும், மஞ்சக்காமாலை, பாண்டு ரோகம் இவைகள் உண்டாவதும் உத்யோகத்தை இழப்பதும், அதனால் மிகுந்த துக்கத்தை அனுபவிப்பதும் உண்டாகும்.

கேதுவின் சூக்ஷ்ம தசையின் பலன்

கேதுவின் சூக்ஷ்ம தசையில் எடுத்த காரியம் அனைத்தும் வீணாவதும், நண்பர்கள் விரோதமும், விவசாயம் கெட்டுப் போவதும், அதனால் பயமும், எக்காரியத்திலும் மெதவலான தன்மையும், கலகம் உண்டாவதும், பூமி நாசமும் உண்டாகும்.

சுக்கிரனின் சூக்ஷ்ம தசையின் பலன்

சுக்கிரனின் சூக்ஷ்ம தசையில் பலவிதமான சத்ருக்கள் அதிகமாக ஏற்படுதலும், சிற்றின்பத்தில் திளைத்திருத்தலால் நோய்வாய்ப்படுதலும், பிறர் மனைவியிடம் கூடுவதில் விருப்பமுடையவனாக இருத்தலும், தன்னினத்தவருடன் கலகம் செய்தலும், கோபம் கொள்வதும் உண்டாகும்.

ஞாயிறின் பிராண தசையின் பலன்

ஞாயிறின் பிராண தசையில் கட்டுப்படுதலும் (ஜெயில் வாசம்), அரசனின் கோபமும், பணத்தின் காரணமாக தொந்திரவும், பதவியிலிருந்து இறக்கப்படுவதும், வாதம், பித்தம், கபம் இம்மூன்றின் தோஷங்களால் ஏற்படுகிற நோயை அடைதலும், சந்நிபாத ஜ்வரமும் உண்டாகும்.

மதியின் பிராண தசையின் பலன்

மதியின் பிராணதசையில் நறுமணமுள்ள பொருள்கள், வாஹனங்கள், சௌக்கியம், அதிரசம் முதலான சுவையுள்ள தின்பண்டங்கள், பலவிதமான பழங்கள், சிறந்த ஆடைகள் இவைகளையடைவது, மனச்சாந்தி அல்லது மகிழ்ச்சி அடைதல் இவைகள் உண்டாகும்.

செவ்வாயின் பிராண தசையின் பலன்

செவ்வாயின் பிராண தசையில் கொப்புளங்கள் உண்டாவது, கலகம், போர், சகோதரர்களுடன் பகைமை, மரணம், கீழே விழுதல், நெருப்புப் பிடித்தல், திருடர்களால் தொந்திரவு இவைகள் உண்டாகும்.

ராகுவின் பிராண தசையின் பலன்

ராகுவின் பிராண தசையில் அரசனிடமிருந்து பயமும், உற்றார் உறவினர்களிடம் மனத்தாங்கல், ஜ்வரத்தால் வருந்துவது, விஷம் காரணமாக பயம், உறவினர்களின் மரணம், பொருள் அழிவது ஆகிய இவைகள் உண்டாகும்.

வியாழனின் பிராண தசையின் பலன்

வியாழனின் பிராண தசையில் விவாஹம் முதலான மங்களகரமான காரியங்களைச் செய்வதும், நவக்ரஹங்கள் முதலான தெய்வங்களின் அருளைப்பெற சாந்தி ஹோமங்கள் செய்வது, சரீர ஆரோக்யம் ஏற்படுவது, தேவர்கள், பிராம்மணர்கள் இவர்களைப் பூசிப்பது, தான் விரும்பிய வாகனத்தைப் பெற்று அதில் பிரயாணம் செய்வது, தான் எடுத்துக்கொண்ட செயலின் பலனை அடைவது ஆகிய இவைகள் நடைபெறும்.

சனியின் பிராண தசையின் பலன்

சனியின் பிராண தசையில் அளவுக்கதிகமான பசி, தாகம் எடுத்தல் இவைகளால் தொந்திரவும், துக்கத்தை அடைதலும், வித்வான்களுக்குத் தொந்திரவு கொடுப்பதும், புத்தியில் கலக்கமும் (பைத்தியம் பிடித்தல்), நிலம், மனைவி, செல்வம் இவைகள் அழிந்துபோவதும் உண்டாகும்.

புதனின் பிராண தசையின் பலன்

புதனின் பிராண தசையில் நிலம் கிடைப்பது, நல்ல மனைவியை அடைவது, செல்வமுண்டாவது இவைகள் நடைபெறும்.

கேதுவின் பிராண தசையின் பலன்

கேதுவின் பிராண தசையில் மிகவும் அஜாக்கிரதையாக இருத்தலும், நியாயமற்ற காரியங்களைச் செய்வது, பந்துக்களை விட்டுப் பிரிந்துபோவது, கெட்ட கனவு காண்பது, கெட்ட பெயரை அடைவது ஆகிய இவைகள் உண்டாகும்.

வெள்ளியின் பிராண தசையின் பலன்

வெள்ளியின் பிராண தசையில் எப்பொழுதும் எக்காரியத்திலும் உற்சாகமாயிருத்தலும், விவாஹம் முதலான மங்கள காரியங்களைச் செய்வதும், சில சமயங்களில் மந்த புத்தியுடன் இருத்தல், மனைவி, மக்கள், நண்பர்கள் இவர்களிடம் பிரியமாகப் பழகுவது, வாகனம், ஆடைகள், ஆபரணங்கள் இவைகளைப் பெறுவது ஆகிய இவைகள் உண்டாகும்.

கீழே கூறப்பட்ட இப்பலன்கள் எல்லாம் மனிதர்கள் எல்லோருக்கும் அவரவர்களுடைய தசா காலங்களில் நிகழக் கூடியது பொதுவாகக் கூறப்பட்டது. ஆனால் கீழே கூறப்பட்டவைகள், உலகில் சிலருக்குப் பலிதமாகலாம், அல்லது பலிதமாகாமலும் இருக்கலாம்.

சோதிட நூல் வல்லுநர்கள், கீழே கூறப்பட்டவைகளை ஆய்ந்து, ஒருவனுடைய ஜனன காலத்திய கிரஹங்களின் நிலை அவைகளினுடைய தன்மை இதையறிந்து கிரஹங்களின் பலனைத் தீர்மானமாகக் கூறவேண்டும்.

கிரஹங்களின் தன்மையை அறியாமல் கூறினால், புத்திமான்களான முன்னோர்களான, சோதிட வல்லுநர்களான பிராம்மணர்களால் கூறப்பட்டவை யாவையும் பயனற்றவையாக ஆகிவிடும். கணிதம், ஹோரா சாத்திரம், சம்ஹிதை என்ற மூன்றிலும் தேர்ச்சிபெற்ற சோதிடன் இவைகளை அறிந்து கூறுவான். இவைகளை அறியாதவன்

கூறமாட்டான். ஆதலால் சோதிடம் சொல்லப்புகுமுன் சோதிட சாத்திரத்தை நன்குணர்ந்து பின் கூறவேண்டும் என்பது கருத்து.

மதியின் தசையின் பலன்

மதியின் தசையில் பல ராஜ்யங்களைத் தன்வசப் படுத்துதலும், (அரசனாக இருப்பவர்) பல ராஜ்யங்களுக்குச் செல்வதும், அரசனால் விசேஷமாக கௌரவிக்கப்படுவதும், தலைமை ஸ்தானத்தை அடைவதும், அரசாங்க சம்பந்தமான செயற்குழுவில் முக்கிய ஆலோசகராக இருப்பதும், அல்லது குறிப்பிட்ட மந்திரத்தைப் பெறுவதும், நாடெங்கும் மக்களால் கௌரவிக்கப்படுவதும் மிகுந்த கீர்த்தி உண்டாவதும் ஆகிய இவைகள் நடைபெறும்.

மதியின் அந்தர் தசையில் (புக்தியில்) விவாஹம் முதலான மங்கள காரியங்கள் நடைபெறுவதும், அறுசுவை உணவு பெறுவதும் சௌக்கியமும், அரசனின் ப்ரீதியும், அதனால் மிக்க சுகமும், ஆபரணம், ஆடை, செல்வம் இவைகளைப் பெறுதல் இவைகள் உண்டாகும்.

மதியின் தசை, செவ்வாயின் அந்தர் தசையில் (புக்தியில்) நெருப்புப் பிடித்தலும், எல்லோரிடமும் மனத்தாங்கலும், ஜ்வரம், இரணக்கொப்புளங்கள் உண்டாவது இவைகளால் பயமும், நிலம் சம்பந்தமாகத் தகராறுகளும், அதனால் உண்டாகிற சண்டையும், மிக்க கோபமும் உண்டாகும்.

மதியின் தசை ராகுவின் அந்தர் தசையில் (புக்தியில்) திருடர்கள், விரோதிகள் இவர்களிடமிருந்து பயமும், பணக் கஷ்டமும், பாம்பு கடித்தலும், தேள் கொட்டுவதும், அரசனின் கோபமும், உறவினரை இழப்பதும் ஆகிய இவைகள் உண்டாகும்.

மதியின் தசை வியாழனின் அந்தர்தசையில் (புக்தியில்) சரீர சௌக்கியமும், அரச வம்சத்தவரிடமிருந்து உதவி

பெறுவதால் தைரியமும், அஷ்டைச்வர்யங்களையும் அடைவதும், ஆபரணங்களைப் பெறுவதும், அரசனால் கொண்டாடப் பெறுதலும் (சன்மானம் பெறுதல்) உண்டாகும்.

மதியின் தசை சனியின் அந்தர் தசையில் (புக்தியில்) சில காலம் சுகமாக இருத்தலும், சில காலம் துக்கத்தை அடைவதும், சில சமயம் எல்லோராலும் கொண்டாடப் படுதலும், சில சமயம் நல்ல எதிர்காலம் ஏற்படுதலும், உறவினர்களை இழப்பதும், எல்லோரிடமும் மனத்தாங்கலும் உண்டாகும்.

குறிப்பு :- மதியின் தசையில் புதன், கேது, வெள்ளி இவர்களின் அந்தர்தசைப் பற்றி கூறியிருக்கும், பாகங்கள் மூலச்சுவடியில் . . . இந்த அடையாளமிடப்பட்டுவிடப் பட்டிருக்கின்றன.

ஞாயிறு முதலான ஒன்பது கோள்களின் ஐந்து வகை மார்க்கங்களும் பலன் கூறுவதற்குரிய முறையும் கூறப்படுகிறது

ஞாயிறு முதலான ஒன்பது கோள்களுடைய தசையின் வழி ஐந்துவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது - தசை, அந்தர்தசை (புக்தி), அந்தராந்தர் தசை, சூக்ஷ்ம தசை, பிராண தசை, பொதுவாக எல்லோருடைய ஜாதகத்திலும், ஐந்து விதமான தசைகளின் ஐந்து விதமான நடைமுறைகள் உண்டு.

ஜாதகனுக்குப் பலன்கூறப் புகுமுன் கவனிக்கப்படவேண்டியவை கூறப்படுகிறது

ஒவ்வொரு மனிதனுடைய ஜாதகத்திலும் அந்தந்த ராசிகளில் இருக்கின்ற கிரஹங்களுக்கு ஏற்றவாறு பலன் தனித் தனியாக நடைபெறுகின்றன. எல்லோருக்கும் ஒரே மாதிரியாக பலன் நடப்பதில்லை. இதற்குக் காரணம் ஒவ்வொரு கிரஹங்களின் பலம் அல்லது பலமற்ற நிலைதான். இவைகளை அறிந்து பலன் கூறவேண்டும்.

லக்னபாவம் முதல் 12-ம் பாவம் முடிய உள்ள பாவங்களுள், ஒவ்வொரு பாவத்திலும் நிற்கின்ற கோள்களின் நிலை அதாவது ஆரோஹ நிலையில் இருத்தல். (நீச ராசியில் இருந்து, உச்ச ராசிக்குச் செல்லுதல்) அவரோஹ நிலையில் இருத்தல் (உச்ச ராசியிலிருந்து, நீச ராசிக்குச் செல்லுதல்) அந்தந்த கிரஹங்களின் உச்ச ராசியில் இருத்தல், அதனது ராசிகளிலிருத்தல், நட்பு ராசி, சத்ரு ராசி, நீச ராசி இவைகளில் இருத்தலால் உண்டாகின்ற பலனும், ப்ரதான தசாநாதனும், புக்தி நாதனும் ஒருவருக்கொருடைய ராசியிலிருந்து 6-ம் பாவம், 8-ம் பாவத்தையடைதல் (ஷஷ்டாஷ்டம பாவத்தை அடைதல்) லக்னத்திற்கு 12-ம் பாவத்தை அடைதல், நீச ராசியின் அம்சத்தை அடைவது, இதுபோன்ற ஸம்ஞாத்யாயத்தில் கூறப்பட்டுள்ள பலன், கர்மஸ்தானம், ஜீவஸ்தானம் இவைகளில் நின்ற கிரஹங்களுக்குக் கூறப்பட்டுள்ள பலன்கள் ஆசிரயயோகத்தினுள் கூறப்பட்ட பலன்கள், (அதாவது ஆட்சி, நட்பு, உச்சம், பகை, நீசம் என்னும் ஐவகை நிலையில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கோள்களிருப்பின் தரும்பலன்) அஷ்டவர்க்க அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள பலன்கள், இயற்கையாக ஏற்படுகின்ற நட்பு, பகை இவைகளையுடைய கோள்களினால் உண்டாகிற பலன் ஜாக்ரதவஸ்தை, ஸ்வப்நாவஸ்தை, சுஷுப்த்யவஸ்த்தை (விழித்திருத்தல், கனவு, தூங்குகின்ற நிலையிலேயே மெய்யுணர்வு மறந்திருத்தல்) ஆகிய இந்நிலைகளில் உண்டாகிறதும், பால்யம் முதலான வயதில் உண்டாகிறதும், இதுபோன்று வைசேஷிகம் என்னும் அம்சத்தில் உண்டாகிறதும், கிரகங்களின் பார்வையால் உண்டாகிறதுமான பலனும், கிரகங்களின் மிகுதியான எண்ணிக்கையாலும், அவைகளின் சேர்க்கையாலும் (சாங்கியோகம்) உண்டாகிறதும், சுநபாயோகம், அனபாயோகம் போன்ற யோகங்களினால் உண்டாகிறதும், வாஸியோகம், சாமரயோகம் போன்ற முக்கியமான மிக உயர்ந்த மனிதர்களுக்குரிய யோகத்தினால் உண்டாகிறதும், சங்கம், சாமரம், பேரி முதலானவைகளும் காஹளம் முதலானவைகளுமான மஹாபுருஷர்களுக்குரிய

லக்ஷணங்களினால் ஏற்படுகிற ராஜயோகங்களின் பலனும், லக்னம் முதலான பாவங்கள், சரீரம், குடும்பம், சகோதரம் இவைகள் முதலானவைகளுக்குக் காரக கிரஹங்களின் ஸம்பந்தத்தினால் ஏற்படுகின்ற பலனும் ஆகிய யாவற்றையும் அந்தந்த பாவாதிபதிகளின் தசை, அந்தர் தசைகளில் சேர்த்துக் கூறவேண்டும். எந்த யோகங்களுக்கு எந்த கிரஹம் கர்த்தாவோ, அந்த யோககாரகனின் தசையில் அந்தந்த கிரஹங்களின் சேர்க்கையால் உண்டாகிற பலனைக் கூறவேண்டும்.

எந்த ஒரு யோகத்தில் அந்த யோகத்தைச் செய்கிற ஒன்றுக்கு மேற்பட்ட கிரஹங்கள் இருந்தால், அவைகளுள் பலம்பெற்ற கிரஹத்தினால் அந்த யோகத்தின் பலன் உண்டாகிறது என்று கூறவேண்டும். மிகுந்த பலம் கொண்ட கிரஹத்தின் தசையில்தான் நல்ல பலன்கள் கிடைக்கும். பலம் பெறாததோ அல்லது பாபக்கிரஹத்தின் தசையிலோ நல்ல பலன் கிடைக்காது.

பலமற்ற கிரஹத்தின் தசையிலும், லக்னத்திலிருந்து 6, 8 அல்லது 12-ம் பாவங்களையடைந்த கிரஹங்களின் தசையில் மிகவும் கஷ்டமான பலன் கிடைக்கும். மிக்க பயமும் ஏற்படும். இவ்வாறான தசைகளில் நோயும், மரணமும், உத்தியோகம் அல்லது ஜாதகன் இருக்கிற வீடு இவைகளுக்கு அழிவும் ஏற்படும் என்று கூறவேண்டும். (6-வது பாவத்தில் நின்றவனது தசையில் நோய்வாய்ப்படுதலும், 8-மிடத்தில் நின்றவனது தசையில் மரணமும், 12-வது பாவத்தில் நின்றவனது தசையில் உத்யோகநாசம் அல்லது தான் இருக்கும் இடத்திற்கு நாசம் என்ற முறையில் கொள்ள வேண்டும்.)

கிரஹங்கள் லக்னம் முதல் 12 பாவங்களில் எந்தெந்த பாவங்களில் நிற்கின்றனவோ, அதற்கேற்றவாறு உண்டாகிற பலனும், 12 பாவங்களின் திரேக்காணத்தில் நிற்பதால் ஏற்படுகின்றதும், நவாம்சம், துவாதசாம்சம், திரிம்சாம்சம்

இவைகளில் கிரஹஙகள் நிற்பதால் உண்டாகிற பலனும், எவைகளோ அவைகளை அந்தந்த தசை, அந்தர்தசை இவைகள் நடக்கும்பொழுது அவைகளையும் ஆராய்ந்து கூறவேண்டும்.

தசைகள் நான்குவிதமாகக் கூறப்படுகின்றன. அவைகள்: (1) உத்பன்னதசை, (2) மஹாதசை, (3) சௌக்கிய தசை, (4) பந்துதசை என்பன. இவ்வாறான தசைகளின் பிரிவை, மதி எந்தெந்த பாவங்களில் நிற்கின்றானோ அதை அனுசரித்து நிச்சயிக்கவேண்டும்.

செவ்வாயின் மஹாதசையில், அவனுடைய அந்தர் தசையில் மரணம் உண்டாகும். கடவுளருள் இருக்குமானால் காப்பாற்றப்பட்டவனாக இருப்பான்.

சனியின் மஹாதசையில் செவ்வாயின் அந்தர்தசை நடக்கும்பொழுது ஜாதகன் நீண்ட ஆயுளை உடையவனாக இருப்பினும் மரணத்தை அடைகின்றான்.

பாபக்கிரஹங்களின் மஹாதசையில், பாபக்கிரஹத்தின் அந்தர்தசை வரும் சமயம், மனைவியை இழத்தலும், சத்ருக்கள் பெருகுவதும் ஏற்பட்டு, மரணமும் உண்டாகும் அல்லது பொருளழிவு ஏற்படும்.

8-ம் பாவத்தில் நின்ற கிரஹத்தின் அந்தர்தசையில் மரணம் உண்டாகும். பாபக்கிரஹங்களின் தசையில் பாபக் கிரஹங்களின் அந்தர்தசையில் மரணமோ அல்லது மக்களை இழப்பதோ அல்லது பொருளழிவோ அல்லது விரோதிகள் அதிகமாக உண்டாவதோ ஏற்படும்.

எவனுடைய ஜாதகத்தில், பாபக்கிரஹம் பாபக் கிரஹத்தின் வீட்டையடைந்து, பாபக்கிரஹமும், பாபக் கிரஹத்தின் தசையில் அந்தர்தசையை அடைகின்ற மற்றொரு பாபக்கிரஹமும் ஒன்றுக்கொன்று ஷஷ்டாஷ்டக பாவத்தை அடைந்து, சத்ரு கிரஹத்தால் பார்க்கப்பட்டுமிருந்தால்

மேற்சொல்லப்பட்ட பாபக்கிரஹத்தின் அந்தர்தசையில் ஜாதகனுக்கு மரணம் உண்டாகும். போரில் சத்ரு இவனை வெல்வான். இவன் தோற்கடிக்கப்படுவான்.

லக்னாதிபதியின் சத்ருவான கிரஹத்தின் தசையில் லக்னாதிபதியின் அந்தர்தசையில், எதிர்பாராதவிதமாக மரணம் உண்டாகும் என்று ஸத்யாசாரியரால் கூறப்பட்டது.

லக்னத்திற்கு 6-மிடத்திலோ அல்லது 12-மிடத்திலோ மதியுடன் கூடி நிற்கின்ற கிரஹங்கள், நீச பாவத்தையடைந்த கிரஹங்களாலோ அல்லது சத்ரு கிரஹங்களாலோ பார்க்கப் பட்டுமிருந்தால், சந்திரனுடன் நின்ற கிரஹங்களின் தசையில் மரணம் உண்டாகும். (மரணத்திற்குச் சமமான கண்டம் ஏற்படும் என்று பொருள்.)

8-ம் பாவம் அல்லது 12-ம் பாவத்தை அடைந்த லக்னாதிபதியின் தசை மிகவும் துக்கத்தையோ அல்லது மரணத்தையோ கொடுக்கவல்லது, லக்னாதிபதியின் சத்ரு கிரஹத்தின் தசை மரணத்தைக் கொடுக்கும். 12-ம் பாவத்தை அடைந்திருக்குமானால் அதனது தசையில் சிரச்சேதம் (தலை வெட்டுப்படுதல்) உண்டாகும்.

சனி கடகத்திலோ அல்லது சிம்மத்திலோ நின்று, துலாத்தில் ஞாயிறும் நின்று வியாழனும், செவ்வாயும் 7-ம் பாவத்தில் அஸ்தங்கதர்களாகவும் இருந்தால் சனி தசையில் அல்லது செவ்வாய் அல்லது வியாழன் இவர்கள் தசா காலத்தில் மரணம் உண்டாகும்.

செவ்வாயும், சனியும் 12-ம் பாவத்தில் நின்றாலும் அல்லது மதியும், சனியும் லக்னத்தில் இருந்தாலும், இவ்விரு யோகங்களுடன் வியாழன் அஸ்தங்கதனாகி புதன் 6-ம் பாவத்திலும், ராகு 3-ம் பாவத்திலும் நின்றாலும், விருச்சிகம் அல்லது மகரத்தில் வெள்ளி நின்றாலும் அல்லது கன்னியில் நின்றாலும், இவ்வாறான யோகத்தில் அந்தந்த கிரஹங்களின் தசையிலோ அல்லது தசா ஸந்திகாலத்திலோ அல்லது புதனின் தசாகாலத்திலோ மரணம் உண்டாகும்.

சனியும், செவ்வாயும் ஒரே அம்சத்தில் நின்று, இவ்விரு கிரஹங்களுக்கும் நடுவில் ஞாயிரோ அல்லது புதனோ தங்கினாலும், இவ்வாறான யோகத்தில் பிறந்தவனுக்குச் சனி, செவ்வாய், ஞாயிறு அல்லது புதனின் தசா காலத்தில் மரணம் உண்டாகும். எந்த பாவாதிபதியின் தசை நடக்கிறதோ அப்பொழுது மற்றொரு நல்ல பலனைக் கொடுக்கக்கூடிய பாவாதிபதியின் தசை சேருமானால் அவ்வாறான தசா ஸந்தி காலத்தில், கெட்டவர்களின் கூட்டத்தில் அகப்பட்டுக் கட்டுப்படுதலும், பொருளழிவும், கண்ணில் உபாதையும் உண்டாகும்.

எவனுடைய ஜனன காலத்தில் சுபக்கிரஹங்கள், சத்ரு ராசி அல்லது நீச ராசி இவைகளை அடைந்திருக்கின்றனவோ அவைகளின் தசையில் மனைவி, மகன், பொருள் இவைகளுக்கு அழிவும், அவரவர்கட்குரிய ஆசாரம் கெட்டுப் போவதும், நோயும், சத்ருவிடம் அகப்பட்டுக்கொள்வதும், மரணமும் உண்டாகும்.

எந்த லக்னத்தில் சனியும், செவ்வாயும் ஒரே அம்சத்தை அடைந்தவர்களாக இருந்து மற்ற (பாபக்) கிரஹங்களால் பார்க்கப்பட்டவர்களாகவும் இருந்தால், இவ்விரு கிரஹங்களில் ஒன்றின் அந்தர்தசையில், சூன்யமாக விடப்பட்ட பாகத்தில் (ஒரு தசை முடிந்து மற்றொரு தசை ஆரம்பிப்பதற்கு முன் உள்ள இடைப்பட்ட காலத்தில்) ஜாதகனுக்கு மரணம் உண்டாகும்.

எந்த ஜாதகனுக்கு லக்ன ரீதியாகவோ, சந்திர லக்ன ரீதியாகவோ எந்த கிரஹம் சத்ருவாக அமைந்திருக்கிறதோ அந்த கிரஹத்தின் தசையில், சத்ருவினிடமிருந்து உண்டான பயம் காரணமாக வேறு தேசத்தில் தங்கியிருப்பதும், பல ஊர்களுக்குச் செல்வதும், மனோவியாதியும், கல்வியில் தடங்கல் ஏற்படுவதும், பொருள் அழிவதும், இரு தசைகளின் சந்தி காலத்தில் மரணமும் உண்டாகும்.

லக்னாதிபதியும், 8-ம் பாவாதிபதியும் ஒருவருக்கு ஒருவர் சத்ருவாக இருந்தாலும், இவ்விருவரும் பாபர்களாக இருந்தாலும் இவ்விருவரில் ஒருவர் பாபராகவோ அல்லது சுபராகவோ இருந்தாலும், இவ்விருவரில் எவரின் தசை நடக்கிறதோ அந்த தசையில் விசனமும் மரணமும் உண்டாகும்.

சத்ருவாக அமைந்த 7-வது பாவாதிபதியின் தசையில் சத்ருக்களின் தொடர்பும், இதன் காரணமாக சண்டையும் உண்டாகும். மேலும் மனைவியை இழப்பதும், கண் மறைந்து போவதும் அல்லது ஜாதகனுக்கே மரணமும் உண்டாகும்.

சத்ரு ஸ்தானமாக அமைந்த ராசியில் ஒரே அம்சத்தில் நின்ற இருகிரஹங்களுள் ஒரு கிரஹத்தின் தசையில் ஜ்வரத்தினால் தொந்திரவும், ஓரிடத்தில் கட்டுப்படுதலும், வெளியூர்களுக்குச் செல்வதால் ஏற்படுகின்ற கஷ்டம், விசனம் மிக்க பயம் இவைகள் உண்டாவதும், அரசனிடமிருந்து அல்லது அரசாங்கத்தினிடமிருந்து பயம் உண்டாவதும், நெருப்பாலும் அல்லது ஆயுதத்தினால் ஏற்பட்ட புண் உண்டாவதும், போர் மூள்வதும் உண்டாகும்.

வியாழன் 8-ம் பாவாதிபதியாக இருந்து, அதற்கு சத்ருவான மற்றொரு சிரகத்துடன் கூடியோ அல்லது சத்ரு கிரஹத்தால் பார்க்கப்பட்டோ இருந்து, வியாழன், வியாழனின் சத்ரு கிரஹம் இவர்களின் தசாசந்தியில் ஜாதகனுக்கு மரணம் உண்டாகும்.

8-ம் பாவாதிபதி, 8-ம் பாவாதிபதியின் சத்ரு கிரஹத்துடன் கூட நின்றால், சூன்ய பாகங்களில் (மரணப் பாகையால்) 8-ம் பாவாதிபதியின் தசையில் மரணத்தைக் கொடுப்பான்.

கோள்களின் தற்கால சத்ரு மித்ரத்வம்

இயற்கையாக ஒரு கிரஹத்திற்கு சத்ருவாக இருக்கிற மற்றொரு கிரஹம், தற்கால சத்ருவாக இருந்தால் (தத்காலம், ஜன்மகாலம், யாத்திரை, ப்ரச்னம், விவாஹம்) அது நித்ய சத்ருவாக ஆகிறது. சத்ருவாக அமைந்த கிரஹத்திற்கு சுபனாக இருக்கிற மற்றொரு கிரஹம் ஸ.' மான்ய சத்ருவாக ஆகிறது.

குறிப்பு :- இந்தச் சுலோகத்திற்கு உரை கூடியவரை சுலோகத்திலுள்ள சொற்களின் அமைப்பைக்கொண்டு எழுதப்பட்டிருப்பினும், பிருஹத் ஜாதகம் முதலிய கிரந்தங்களில் கூறப்பட்டுள்ளதை இங்கு விளக்கமாகக் கூறியிருக்கிறேன்.

இயற்கையாக ஜன்ம காலம் முதலான தத்காலங்களில் இரு கிரகங்கள் மித்ரனும் அதிமித்ரனுமாகில், அதிமித்ரன், சத்ருவும், அதிசத்ருவுமாகில் அதிசத்ரு, சத்ருவும் மித்ரனுமாகில் சமன், சத்ருவும் சமனுமாகில் சமன் என்று கொள்ளவேண்டும். (ஹோரா சாஸ்திரம்)

ஒரு கிரஹத்திற்கு மற்றொரு கிரஹம் 2, 12, 11, 3, 10, 4-வது இடங்களில் ஒன்றிருந்தால் தத்கால மித்ரன் என்றும், எந்த கிரஹம், எந்த கிரஹத்தினுடைய உச்ச வீட்டில் இருக்கின்றதோ, அந்த கிரஹம் அதற்கு மித்ரன் என்றும் கொள்ளவேண்டும். மேலும் முன்கூறப்பட்ட 2, 12, 11, 3, 10, 4-ம் இடங்களில் சுபாவ மித்ர கிரஹமிருந்தால் அந்தக் காலத்தில் அந்த கிரஹம் அதிமித்ரன் என்றும், சுபாவ மித்ரக் கிரஹத்திற்குச் சமமான கிரஹமிருக்குமானால் அக்கிரஹம் தத்காலமித்ரன் என்றும், சுபாவ சத்ருகிரஹமிருக்குமானால் அந்த கிரஹம் தத்கால சமன் என்றும் கொள்ளவேண்டும். 1, 9, 5, 6, 8, 7 இவ்விடங்களில் சுபாவ மித்ரகிரஹமிருக்குமானால் அந்தக் கிரஹம் தத்கால சமன் என்றும், சுபாவத்தில் சமமானக் கிரஹமாக இருக்குமானால் அந்த கிரஹம் தத்கால சத்ரு என்றும், சுபாவ சத்ருக் கிரஹமிருக்குமானால் அந்தக்கிரஹம்

தத்காலம் அதிசத்ரு என்றும் கொள்ளவேண்டும். (பிருஹத் ஜாதகம் அத். 2; சுலோ 81) [இவ்வாறு கிரஹங்களின் சத்ரு, மித்ர பாவமறிவது (தத்காலம்) யாத்திரை, விவாஹம் போன்றவைகளில் சத்ரு, மித்ர பாவமறிந்து லக்னத்தை நிர்ணயிக்கவும். ஜாதக பலனைக் கூறுவதற்கும் இன்றியமையாத ஒன்று.]

மரண காலம் அறியும்விதம்

லக்னாதிபதி நீச ராசியிலும், பாபக்கிரஹம் லக்னத்தின் நவாம்சத்திலும் நின்றால், இவர்களது தசையில் மிகுந்த பயமும், வியாதியும் சில நாட்களில் மரணமும் உண்டாகும்.

சுபக்கிரஹங்கள் அஸ்தமனமடைந்து, பாபக்கிரஹங் களுடன் கூடநின்று, பாபக்கிரஹங்களால் பார்க்கப்பட்டு சத்ரு ராசியிலோ அல்லது நீச ராசியிலோ இருந்தால் தேசாந்திரத்தில் மரணமுண்டாகும். மேலும் உறவினர்களுடன் சண்டையும், தனநாசமும் ஏற்படும்.

ஜன்ம ராசி 8, 12-ம் ராசிகளில் கோசார ரீதியாக பாபக் கிரஹங்கள் சஞ்சாரம் செய்யும் காலங்களில் அரிஷ்டம் உண்டாகும். இது பொதுவான விதி. முன்கூறப்பட்ட ராசிகளுள் ஏதாவது ஒரு ராசியில் சனி அல்லது செவ்வாய் நின்றாலும், 12-வது ராசி துலா ராசியாகவோ அல்லது விஷம ராசியாகவோ இருந்து, அதில் மதி நின்றாலும். தனுசில் செவ்வாய் நின்றாலும், மகரத்தில் புதன் நின்றாலும், சிங்கத்தில் வியாழன் நின்றாலும், வெள்ளி கன்னியில் நீசம் அடைந்திருந்தாலும், சனி 12-ம் ராசியை அடைந்திருந்தாலும், மேடத்தில் ராகு நின்றாலும் அல்லது ஜன்ம ராசியில் நின்றாலும் இவ்வாறான அமைப்பைக்கொண்டு பிறந்த சிசு (குழந்தை) எட்டாவது வயதில் மறிக்கும்.

ஜன்ம லக்னாதிபதியின் தசாகாலத்தில் மரணத்தைக் கூறவேண்டும். அல்லது குளிகன் நின்ற ராசிக்குரியவனது தசையில் மரணத்தைக் கூறவேண்டும்.

ஜன்ம ராசியதிபதி, 8-ம் பாவாதிபதி இவர்கள் பாபக் கிரஹங்களாக இருந்தாலும் அல்லது பாபக் கிரஹங்களால் பார்க்கப்பட்டாலும் அல்லது பாபர்களால் பார்க்கப்பட்ட 6 அல்லது 7-வது ராசியை அடைந்திருந்தாலும் இவ்வாறான நிலையில் முன்கூறப்பட்ட மரண விஷயத்தைத் தெரிந்து கூறவேண்டும்.

சனி கோசார ரீதியாக ஜன்ம லக்னத்திற்கோ, திரேக்காண அதிபதியின் ராசியை அடைந்திருந்தாலும், அல்லது திரேக்காணாதிபதியின் ராசிக்கு 5 அல்லது 9-வது ராசியில் நின்றாலும், அந்த சமயத்தில் மரணம் உண்டாகும். சனி 8-வது ராசியின் திரேக்காணாதிபதியின் ராசியிலோ அல்லது திரேக்காணாதிபதி அவனது ராசிக்கு 5 அல்லது 9-வது ராசியிலோ சஞ்சரிக்கும்பொழுது மரணம் உண்டாகும் என்று கூறவேண்டும்.

சனி கோசார ரீதியாக லக்னாதிபதி இருக்கிற ராசிக்கு திரோக்காண ராசியிலிருந்து 7-வது ராசியின் 22-வது திரேக்காணாதிபதியின் ராசியை அடையும் சமயம் அல்லது ஜன்ம ராசியாதிபதி 5 அல்லது 9-வது ராசியை அடையும் சமயம் அல்லது, 8 அல்லது 12-வது ராசியில் சஞ்சரிக்கின்ற சமயம் மரணம் உண்டாகும் என்று கூறவேண்டும்.

சனியும், வியாழனும் கோசார ரீதியாக ஞாயிறு நின்ற ராசியிலிருந்தோ, அல்லது ஜன்ம ராசிக்கு 6 அல்லது 8-வது ராசியிலோ, அல்லது 1, 5, 9-வது ராசிகளுள் ஏதேனும் ஒன்றிலோ சஞ்சரிக்கும் சமயமும், 8-வது பாவாதிபதியின் ராசியை ஞாயிறு அடைந்து, மதி ஞாயிறின் ராசியை அடைந்திருக்கிற சமயமும் மரணம் உண்டாகும் என்று கூறவேண்டும்.

சிலர் மரணத்தைப் பற்றிக் கூறும்பொழுது 8-வது பாவத்தின் திரேக்காணாதிபதி 6, 8 அல்லது 12-ம் இடங்களில் கோசார ரீதியாக எப்பொழுது சஞ்சரிக்கிறானோ, அப்பொழுது

மரணமுண்டென்றாலும், அந்த திரேக்காணாதிபதிக்கு, அந்தந்த ராசியின் ஆதிபத்யமும் இருக்கவேண்டும் என்று கூறுகின்றனர். ஞாயிறு, மதி, செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேதுக்கள் கோசார ரீதியாக சஞ்சரிக்கின்ற பொழுது உண்டாகிற நோய்கள் நெருப்பு, தண்ணீர், ஆயுதம், ஏவல், சூனியம் முதலான கிருத்திரிம நோய்கள், ஜ்வரம், ஜலம், உணவு, தாகம், பசி, விஷ ஜந்துக்களால் நேருகின்ற நோய்கள் முறையே உண்டாகின்றன.

ஞாயிறு முதலான கோள்கள், கோசார ரீதியாகவோ அல்லது இயற்கையாகவோ, அந்தந்த கிரஹங்களினது நீச ராசியை அடைந்திருந்தாலும், அஸ்தமனத்தை அடைந்து இருந்தாலும், சத்ருவின் ராசியை அடைந்திருந்தாலும், 8-வது ராசியையோ அல்லது 12-வது ராசியையோ அடைந்திருந்தாலும், பலமற்றவர்களாக இருந்தாலும், இவ்வாறான நிலையில் இருக்கிற எந்த ஒரு கிரஹத்தின் தசை நடந்தாலும் அப்பொழுது, ஸ்தான ப்ரம்சமும் (இடம்விட்டு மாறுதல் வேலையை இழப்பது), அரசனிடமிருந்து பயமும் உண்டாகும் என்று புத்திமான்கள் கூறுவர்.

ஞாயிறு முதலான கோள்கள் தங்கள் தங்களுடைய உச்ச ராசியையோ, நட்பு ராசியின் அம்சத்தையோ அடைந்து, அதே சமயத்தில் ஒருசில கிரஹங்கள் நீச ராசியை அடைந்தோ, சத்ரு ராசியை அடைந்தோ இருந்தாலும், அல்லது அஸ்தங்கதர்களாகி இருந்தாலும், (அல்லது சத்ரு வீட்டில் அஸ்தங்கதர்களாகி இருந்தாலும்) இவ்வாறான நிலையில் எந்த கிரஹத்தின் தசை நடக்குமோ அதில் நல்லவையும், கெட்டவையுமான பலன்கள் கலந்து உண்டாகும். அந்த தசையின் பிற்பகுதியில் நல்ல பலன்கள் உண்டாகும்.

ஜன்ம ராசி, ஜன்ம லக்னம் இவைகளின் 8-ம் பாவாதி பதிகள், சனி இவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டால் மரணத்தைக் கொடுப்பவர்கள் ஆவார்கள். சனி, பாப ராசியின்

திரேக்காணாதிபதி, குளிகன் நின்ற ராசியதிபதி, எந்த ராசியில் இருக்கிறானோ அந்த ராசியாதிபதி, பலமற்ற ராகு இவர்கள் ஜன்ம லக்னம் அல்லது ராசியிலோ அல்லது 3, 5 அல்லது 7-ம் இடங்களில் நின்று, பாபர்களால் பார்க்கப்பட்டோ அல்லது பாபர்களுடன் கூடியோ இருந்தாலும் இவர்களது தசையில் மிகவும் கஷ்டமும், மரணமும் உண்டாகும்.

ஜன்ம லக்னாதிபதியும், அஷ்டமாதிபதியும் ஒரே ராசியில் நின்றாலும், அல்லது 7-வது பாவத்தை அடைந்திருந்தாலும், இவர்களுடைய தசையிலும் இந்த இருவர்களினுடைய சத்ரு கிரஹத்தின் தசையிலும் மரணம் உண்டாகும்.

சனி 6, 8 அல்லது 12-வது பாவாதிபதிகளின் ஸ்புடத்தைக் கூட்டி வருகிற ராசி அல்லது பாகை அல்லது கலைகளுக்குச் சமமாகவோ அல்லது, அதற்குத் திரிகோணங்களான 5 அல்லது 9-வது ராசிகளில் சனி சஞ்சரிக்கிற சமயத்தில் மரணம் உண்டாகும்.

ஜன்ம காலத்திய அகஸ்ஸின் கணத்தை ஸ்தாபித்து, அதில் 270-ஐ கழித்து, மீதியான அகஸ்ஸின் கணத்திலிருந்து சூரிய ஸ்புடத்தை ஸாதித்து, அந்த சூரிய ஸ்புட ராசி, பாகை, கலை இவைகளிலிருந்து 6, 3 அல்லது 9-வது ராசியில் சனி வருகிற சமயத்தில் மரணம் உண்டாகும். இது நிச்சயம்.

லக்னத்திலிருந்தோ அல்லது சந்திர லக்னத்திலிருந்தோ அல்லது பலம்பெற்ற ராசியிலிருந்தோ, 22-வது திரேக்காணத்தின் மூன்றாவது அம்சத்தில் வியாழன் கோசார ரீதியாக சஞ்சரிக்கும் சமயம், 22-வது திரேக்காணத்தின் அதிபதி 5 அல்லது 9-வது ராசி**யை** அடையும்பொழுதாவது மரணத்தை சோதிடம் அறிந்தவன் கூறவேண்டும்.

ஜன்ம லக்னத்திற்கு 8-வது ராசியின் திரேக்காணாதி பதியின் ராசிக்குரியவன் ராசியில் சனி கோசார ரீதியாக சஞ்சரிக்கின்ற சமயத்தில் மரணம் ஏற்படும் அல்லது சந்திரன்

நின்ற ராசிக்குத் திரேக்காண ராசியின் அதிபதியின் ராசியில் சந்திரன் கோசார ரீதியாக சஞ்சரிக்கும் சமயம் மரணம் உண்டாகும் என்று அறியவேண்டும்.

லக்னாதிபதியின் தசையில், லக்னாதிபதியின் சத்ருவின் அந்தர்தசை முடிகின்ற சமயத்தில், பூர்ணாயுளுடன் இருந்து வாழ்ந்தபின், அந்திமகாலத்தில் மரணம் உண்டாகும்.

ஜாதகன் எந்த ஹோரையில் ஜனித்தானோ அந்த ஜனன காலத்திய ஹோராதிபதியின் ராசியை வியாழன் கோசார ரீதியாக அடைந்தபொழுதோ அல்லது 8-ம் பாவத்தின் திரேக்காணாதிபதியின் ராசியில் கோசார ரீதியாக சஞ்சரிக்கும் சமயத்தில் மரணத்தைக் கூறவேண்டும், சோதிடம் அறிந்தோர்.

மதி நின்ற ராசியாதிபதி அல்லது ஜன்ம லக்னத்தின் அதிபதி இவ்விருவர்கட்கும் சத்ருவான கிரஹம் இயற்கையாக சுபக்கிரஹமாக இருப்பினும், லக்னத்தில் நின்றால், சரீர நாசத்தைச் செய்வான். சத்ருவான அந்த கிரஹம் 6-ம் பாவத்தில் நின்றால், ஜாதகன் துறவியாகி, மகானாகவும் ஆகிவிடுகிறான்.

செவ்வாயின் தசையில், சனியின் அந்தர்தசை வரும் சமயம் நீண்ட ஆயுளையடையக்கூடிய யோகத்தில் பிறந்தவனாக இருப்பினும் மரணம் உண்டாகும்.

6 அல்லது 8-ம் பாவத்தையடைந்த பாபக்கிரஹம் சுபபலனைக் கொடுப்பவனாகிறான். அந்த பாபக் கிரஹமே சுபஸ்தானத்தை அடைந்து, சுபர்களால் பார்க்கப்படாமலும் இருந்தால் அசுபபலனைக் கொடுப்பவனாகிறான். அந்த பாபக்கிரஹத்தின் தசையில் வியாதியால் பீடிக்கப்பட்டோ அல்லது தனத்தின் நிமித்தம் ஏற்பட்ட சண்டை காரணமாகவோ மரணம் உண்டாகும்.

ஜனன காலத்தில் குளிகன் எந்த ராசியில் இருக்கிறானோ அந்த ராசியின் நவாம்சத்தில் சனி கோசாரக் கிரமமாகச்

சஞ்சரிக்கின்ற சமயம் 6, 7, 8 அல்லது 12-ம் பாவங்களிலிருக்கிற கிரஹத்தின் தசை மரணத்தைக் கொடுப்பதாக இருக்கும்.

8-ம் பாவாதிபதி சனியுடனோ அல்லது மாந்தியுடனோ சேர்ந்திருந்தால் அந்த சனியினுடைய தசையிலோ அல்லது அந்தர்தசையிலோ, அல்லது குளிகன் நின்ற ராசியின் நவாம்சத்தை அடைந்த கிரஹத்தின் தசையிலோ மரணம் உண்டாகும். (**ப்ராணிகர்தாஸபாத்**-என்று இருப்பதால் பசு வகுப்பைச் சேர்ந்த மேஷம், ரிஷபம், சிம்மம், தனுசின் பிற்பகுதி, மகரத்தின் முற்பகுதி இவைகளின் நவாம்சத்தில் நிற்கின்ற கிரஹத்தின் தசையில் என்று கொள்ளவேண்டும்.)

60 வயது சென்றபின் சத்ருவான செவ்வாயுடன் சேர்ந்து நிற்கின்ற சனியின் தசையிலோ அல்லது அவனது அந்தர்தசையிலோ மரணம் ஏற்படுவது நிச்சயம்.

லக்னத்தில் நிற்கின்ற சுபக்கிரஹத்தின் தசையில் அரசனாக இருதால், அரசனுக்கு ராஜ்ய லாபமும், அழகிய பெண்ணும் கிடைக்கும். கேந்திர ஸ்தானங்களான 1, 4, 7 அல்லது 10-மிடங்களில் நிற்கின்ற கிரஹத்தின் தசையில் செல்வம், வாகனம், தேகாரோக்கியம் இவைகள் உண்டாகின்றன.

4-வது பாவத்திலிருக்கிற கிரஹத்தின் அந்தர்தசையில் நல்ல நண்பர்களை அடைவதும், தேகாரோக்கியமும், கௌரவமும் பெருகும்.

7-வது பாவத்திலிருக்கிற கிரஹத்தின் அந்தர்தசையில் மனைவிக்கு மரணத்தைக் கொடுப்பான். அல்லது ஜாதகனுக்கே மரணத்தைக் கொடுப்பான். அல்லது சத்ருவுக்கு நாசத்தைச் செய்வான், அல்லது ஜாதகனது மனைவி பிறருடன் கூடுவாள்.

சுபர்களால் பார்க்கப்பட்ட எந்த கிரஹமும், அதனுடைய தசையின் ஆரம்ப காலத்தில் பலம் பெற்றதாக

இருக்கும். மேலும், சுபக்கிரஹத்தின் நவாம்சத்தில் மித்ர வர்க்கத்தையும் அடைந்திருக்குமானால் மரணத்தைக் கொடுக்காது.

பொதுவாக எல்லா கிரஹங்களும் அதனது தசையின் முடிவில் நல்ல பலனைக்கொடுப்பதில்லை. இது பொதுவான தர்மம்.

ஞாயிறு, செவ்வாய், சனி, ராகு இவர்களது தசையின் முடிவில் சுகபோகங்கள், பொருள் இவைகளுக்கு அழிவும், சண்டை முதலான கெட்ட காரியங்களும் நிகழும்.

பாபக்கிரஹங்களுடன் கூடிய எந்த ஒரு கிரஹத்தின் தசையும் கஷ்டத்தைக் கொடுப்பதாகவே இருக்கும். எந்த கிரஹம், எந்த இடத்தில் இருக்கிறதோ அதைக்கொண்டு, அந்த கிரஹத்தின் தசையில் ஏற்படக்கூடிய சுபாசுப பலன்களைக் கூறவேண்டும்.

செவ்வாய், ஞாயிறு, மதி, வியாழனுக்குச் சத்ருவான கிரஹம் இவைகள் 4-ம் பாவத்தையடைந்து, வியாழனும், சனியும் நின்ற ராசியின் நவாம்சத்தில் அபஹாரத்தை (நீச பாவத்தை) அடைந்தால் மரணத்தைக் கொடுப்பவனாகிறான்.

சனியின் சத்ரு கிரஹம் சனியின் சூன்ய பலனையுடைய ராசியில் சஞ்சரிக்கிறவனாக இருந்தால் மரணத்தைக் கொடுப்பவனாகிறான். லக்னத்திற்கு 2-ம் பாவத்தில் சனியும், சனிக்கு 2-ம் பாவத்தில் ஞாயிறும் இருந்தால் ஞாயிறு மரணத்தைக் கொடுப்பவனாகிறான்.

சனியின் சத்ரு வீட்டில் ஞாயிறு, சனியுடன் கூடி நின்றால் அவனது தசையில் கண்ணைப் பறிப்பான். மரணத்தையும் கொடுப்பான். பரஸ்பரம் சத்ருக்களாக இருக்கின்ற இரண்டு கிரஹங்களுள் எந்த ஒரு கிரஹத்தின் தசை அல்லது அந்தர்தசையில், பாபக்கிரஹத்துடன் கூடியதும் சத்ரு கிரஹத்தின் தசாகாலத்தை அடைந்த கிரஹம் எதுவோ அது மரணத்தைக் கொடுக்கிறதாக இருக்கும். இதில் சம்சயம் இல்லை.

வியாழன் 2-ம் பாவத்திலும், ராகு 8-ம் பாவத்திலும் நின்று ஞாயிறு, மதி நீங்கலாக மற்ற ஐந்து கிரஹங்கள் விஷ நாடியின் மூன்றாவது பாகத்தையும் அடைந்திருந்தால் விஷத்தின் காரணமாக மரணத்தைக் கொடுப்பார்கள். ஞாயிறும், மதியும் 8-ம் பாவத்தில் இருந்தால் மரணத்தைக் கொடுப்பவர்களாவார்கள்.

ஜனன காலத்தில் பாபர்களுடன் கூடின ராசி பலம் பெற்றதாக இருந்து, அந்த கூட்டத்தில் நீச கிரஹம் இருந்தால் அதனுடைய தசையில் மரணமுண்டாகும். அல்லது மரணத்திற்கு ஒப்பான கண்டம் ஏற்படும்.

ஜனன காலத்திலோ அல்லது தசா காலத்திலோ அல்லது இரண்டு காலத்திலுமோ, (ஸ்தானத்தாலோ அல்லது சேர்க்கையாலோ) பலம்பெற்ற தசானாதன், சுபரது ராசியை அடைந்திருந்தால் மிகவும் சுபமான பலனைத் தருவான்.

சுப பலனை அளிக்கின்ற ஒரு கிரஹம், சுப ராசியில், சுப வர்க்கத்தை அடைந்து, சுபர்களால் பார்க்கப்பட்டு பலம் பெற்றவனாகவும் இருந்தால், ஜாதகன் விரும்பிய சுப பலனை அளிப்பான் என்பது உறுதி.

பூர்வபாராசர்யம் பிற்பகுதியில் தசைகளின் பலனைக்கூறும் ஐந்தாம் அத்தியாயம் முற்றும்.

ஆறாவது அத்தியாயம்

(ஸங்கீர்ணாத்தியாயம்)

மழையை அறியும்விதம் கூறுதல்

பிரச்ன காலத்தில் உதயமான லக்னம் ஜல ராசிகளுள் ஒன்றாக இருந்து (கடகம், மீனம், மகரத்தின் பின்பாகம்) இவைகளில் வெள்ளியில், மதியும் நின்றாலும் அல்லது ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னங்களான ஜல ராசிகளை வெள்ளியும், மதியும் பார்த்தாலும், ப்ரச்னம் கேட்க வந்தவன் நினைத்தது மழையைப் பற்றியது என்று கூறவேண்டும்.

பிரச்ன காலத்தில் உதயமான லக்னம், வெள்ளி, மதி, வியாழன் இவர்களின் ராசிகளுள் ஒன்றாக இருந்தாலும், அல்லது ப்ரச்ன காலத்தில் உதயமான ராசியில் மதி, வியாழன், வெள்ளி இவர்கள் இருந்தாலும் பெரும் மழை ஏற்படும் என்று கூறவேண்டும்.

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம் ரிஷப ராசியாக இருந்து, மழைக்குக் காரணமாக் கூறப்பட்ட **பரிவேஷம்** முதலிய (பரிவேஷம் - இந்திரன் வில்), தூமகேது இவைகளின் சேர்க்கையை அடைந்து, ஜலக் கிரஹங்களால் (சந்திரன், சுக்கிரன்) பார்க்கப்பட்டும் இருந்தால் (இவ்விதம் மூன்றுவித சம்பந்தத்தை உடையதாக இருந்தால்) மிகவும் பெரிய மழை உண்டாகும் என்று கூறவேண்டும்.

ப்ரச்ன காலத்தில் உதயமான லக்னம், மதிக்கும், வெள்ளிக்கும் உச்ச ஸ்தானங்களான ரிஷபம், மீனம் இவைகளுள் ஒன்றாக இருந்து,முறையே அவைகளில் மதியோ அல்லது வெள்ளியோ இருந்தால் அன்றைய தினமே மழை பொழியும் என்று கூறவேண்டும். இவ்வாறின்றி ப்ரச்ன காலத்தில் உதயமான மேற்படி ராசிகளுக்கு 4-ஆமிடத்தில் மதியோ, வெள்ளியோ, புதனோ இருந்தால் இரண்டு அல்லது மூன்று நாட்களில் மழை பொழியும் என்று கூறவேண்டும்.

பிரச்ன காலத்தில் உதயமான ராசியிலோ அல்லது 4, 7 அல்லது 10-ஆமிடங்களுள் ஒன்றில் முறையே செவ்வாய், சனி, ராகு, புதன் இருந்தால் பெரியகாற்று அடிக்குமேயல்லாது மழை பெய்யாது. இவைகளில் சுபர்கள் இருந்தால் மழை கொஞ்சம் பெய்யும்.

பிரச்ன காலத்தில் உதயமான ராசி ஜலராசிகளான கடகம், மீனம், மகரத்தின் பின் பகுதியாக இருந்து, சனியும், ராகுவும் அதிலிருந்தால் மழை பெய்யாது. இவ்விரு கிரஹங்களுக்கும் மதி, வெள்ளி இவர்களின் பார்வை ஏற்பட்டால் பெரும் மழை பெய்யும் என்று கூறவேண்டும்.

சிற்றின்பத்தைப்பற்றி அறிதல்

மதி 3, 4, 6, 8, 10 அல்லது 11-வது பாவங்களுள் ஒன்றிலிருந்து, வியாழனால் பார்க்கப்பட்டால் இந்த யோகத்தில் பிறந்த ஜாதகனது மனைவி கற்புடையவள் என்று பண்டிதனாக இருப்பவன் கூறவேண்டும்.

(பிரச்ன காலத்திலும் இவ்வாறான கிரக சூழ்நிலை இருக்குமானால் இதையே ப்ரச்னம் கேட்டவனுக்குக் கூறவேண்டும்.)

பிரச்னம்கேட்ட சமயத்தில் உதயமான லக்னத்திற்கு 4-ம் பாவத்தில் மதி நின்று, ஆண் கிரகங்களல் (ஞாயிறு, செவ்வாய், வியாழன்) பார்க்கப்பட்டு, உதயகால லக்னத்தில் பாபர்களும் இருந்தால் பிரச்னம் கேட்டவனின் மனைவி கற்புடையவள் அல்ல என்று கூறவேண்டும்.

பிரச்னம் கேட்ட சமயத்தில் உதயமான லக்னம், மதியின் நீச ராசியாகவோ அல்லது சத்ரு ராசியாகவோ இருந்து அதில் மதி நிற்க, அந்த லக்னம் நீச ராசிக்குரிய கிரகத்தாலோ, சத்ரு கிரகத்தாலோ பார்க்கப்பட்டிருந்து, 7-ம் பாவாதிபதி அஸ்தமனமாகி இருந்தாலும், ப்ரச்னம் கேட்டவனின் மனைவி மிகவும் கூழ்ப்பட்ட நிலையிலுள்ள ஜனங்களால் கூட நிந்திக்கத் தகுந்தவளாக இருப்பாள்.

பிரச்னம் கேட்ட சமயத்தில், மதியின் ராசியிலும், 7-ம் பாவத்திலுமிருக்கின்ற கிரகங்களும் அல்லது எந்த கிரகங்கள் அவைகளின் உச்ச ராசியையோ அல்லது மித்ர ராசியையோ அடைந்தவர்களாக இருந்து, உதயகால லக்னத்திற்கு இரண்டாம் பாவத்தைப் பார்க்காவிடில் பிரச்னம் கேட்டவன் மனைவி வேறொருவன் வீட்டிலிருப்பவளாகக் கூறவேண்டும்.

பிரச்ன காலத்தில் உதயமான லக்னத்தைச் சனியும், செவ்வாயும் பார்த்தாலும் அல்லது லக்னத்திலிருந்தாலும், பிரச்னம் கேட்டவன் மனைவி மற்றவனை அடைந்தவளாக இருப்பாள் என்பது உறுதி.

பிரச்ன காலத்தில் உதயமான லக்னத்திற்கு 4-மிடத்தில் ஞாயிறு நின்றால் ராஜ ஸ்திரீயை அடைய (உயர்ந்த நிலையில் உள்ள ஒரு ஸ்திரீயை என்று கொள்ளவேண்டும்) பிரச்னம் கேட்பவன் விரும்புகிறான் என்றும், உதய லக்னம் வெள்ளி அல்லது செவ்வாய் இவர்களின் ராசியாக இருந்து அதில் இவர்களிருந்தால், கேட்பவன் தன் பந்துவான விதவை ஒருவளைக் காதலிக்கிறான் என்பதில் சந்தேகமில்லை என்றும் கூறவேண்டும்.

பிரச்ன காலத்தில் புதனும், வெள்ளியும் சனியைப் பார்த்தால் பிரச்னம் கேட்பவன் ராஜகன்னிகையை அடைய விரும்புகிறான் என்று சோதிட வல்லுநர்கள் கூறுவர். (அறிவார்கள்)

பிரச்ன காலத்தில் வியாழன் தனது ராசியிலிருந்தாலும், பிரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் மதி நின்றாலும், பிரச்னம் கேட்டவனது மனைவி கணவனிடத்தில் பிரியமாக இருப்பவள் என்று கூறவேண்டும். ஆருட லக்னத்தில் ராகு நின்றால் கேட்பவன் மனைவி சேரத் தகாதவளாக உள்ளவள் என்று கூறவேண்டும்.

பிரச்ன காலத்தில் மதி, பெண் ராசிகளான ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம் அல்லது மீனம் இவைகளுள் ஒன்றில் இருந்தால் கேட்பவனுடைய மனைவி கணவனுக்கு நல்லதை விரும்புபவளாக இருப்பாள் என்று கூறவேண்டும்.

பிரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் மதியும், சனியும் நின்றால் கேட்பவனுடைய மனைவி வயது வந்தவளாக இருப்பாள்.

குறிப்பு :- **வர்த்தகீ: வர்த்தக:** என்ற சொல்லுக்குத் தச்சுத் தொழில் செய்பவன் என்று பொருள். வர்த்தகீ என்றால் தச்சுத் தொழில் செய்யும் இனத்துப்பெண் என்று கொள்ள வேண்டும். **வார்த்தகம்** என்றால் வயதுவந்த நிலையைக் குறிக்கும். வயதுவந்தவள் என்பதைக் குறிப்பிடுவதற்கு **வார்த்தகீ** என்று கூறுவதற்குப்பதில் **வர்த்தகீ** என்று கூறப்பட்டுள்ளதோ என்று தோன்றுகிறது.

பிரச்ன காலத்தில் சனி பாபர்களுடன் கூடி விருச்சிக ராசியிலிருந்தால், கேட்பவனுடைய மனைவி சாமர்த்தியமாக மிகவும் பேசுபவளாக இருப்பாள். உதய லக்னத்திலோ அல்லது மதி நின்ற ராசியிலோ அல்லது சனியின் நீச ராசியிலோ, சனி பாபர்களுடன் கூடிநின்றால் கேட்பவனின் மனைவி பந்துக்களால் தூக்ஷிக்கத்தக்கவளாக இருப்பாள்.

பிரச்ன காலத்தில் உதயமான லக்னத்திற்கு பந்து ஸ்தானமான 4-ம் பாவத்தில் சத்ரு கிரகம் (சனி) நின்றால் கேட்பவனுடைய மனைவி இழிகுலத்தில் பிறந்தவளாக இருப்பாள். சமனாக இருக்கிற கிரகம் அதனது உச்ச ராசியிலோ அல்லது அதனுடைய ராசியிலோ இருந்தால் கேட்பவனது மனைவி உயர்ந்த குலத்தில் பிறந்தவளாக இருப்பாள்.

பிரச்ன காலத்தில் 7-ம் பாவாதிபதியோ, களத்ரகாரகனோ அவனது உச்ச ராசியில் நின்றால் கேட்பவன் மனைவி தாசியாக இருப்பாள். புதன் உச்ச ராசியில் நின்றால் தனது

மனைவியினிடத்தில் மட்டில் ஈடுபாடு உடையவனாக இருப்பாள். ஓஜோ ராசியில் 7-ம் பாவாதிபதியோ, களத்ர காரகனோ அல்லது புதனோ நின்றால் இருமனைவிகளை உடையவனாக இருப்பான்.

பிரச்ன காலத்தில் 7-ம் பாவாதிபதியோ, களத்ரகாரகனோ பலம் பெற்றவர்களாக இருந்தால், (2 அல்லது 7-மிடங்களில்) மூன்று தாரங்களைக் கூறவேண்டும். பிரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் செவ்வாயுடன் மதியும் நின்றால், பிரச்னம் கேட்பவன், பெண்களிடம் ஏற்பட்ட கோபத்தால் பூமியில் தனிமையில் படுப்பவனாக இருப்பான்.

பிரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் வெள்ளியும், ஞாயிறும், மதியுடன் கூடி நின்றால், தனது மனைவியினிடத்தில் ஏற்பட்ட சண்டையின் காரணமாக தரையில் தனிமையில் படுப்பவனாக இருப்பான்.

பிரச்ன காலத்தில் உதயமான லக்னத்திற்கு 7-ம் பாவத்தில் ஞாயிறும், 10-ம் பாவத்தில் செவ்வாயும், 3-ம் பாவத்தில் புதனும் நின்றால், பிரச்னம் கேட்பவனைப் பார்த்து, நீ உன் மனைவியிடம் சண்டைபோட்டு அவளை பூமியில் படுக்கும்படி செய்துவிட்டாய் என்று கூறவேண்டும்.

பிரச்ன காலத்தில் உதயமான லக்னம் 3, 4 அல்லது 7-வது பாவங்களில் வெள்ளியும், மதியும் நின்றால் பிரச்னம் கேட்பவனைப் பார்த்து, நீ உன் மனைவியுடன் சண்டையிட்டு அவளுடைய (வஸ்திரத்தை) ஆடையைக் களைந்துவிட்டாய் அல்லவா என்று கூறவேண்டும்.

பிரச்ன காலத்தில் உதயமான லக்னத்தில் மதியும், 2-ம் இடத்தில் செவ்வாயும் நின்றால், பிரச்னம் கேட்பவனைப் பார்த்து, "நீ திருடர்கள் பயத்தினால் இரவில் தூங்காமல் விழித்துக்கொண்டே இருந்தாய்" என்றும், "விதவையுடன் நீ சேர்ந்திருந்தாய்" என்றும், கேட்பவன் அந்தணனாக இருந்தால் உன்னுடைய பூணூல் அறுந்திருக்குமே ? என்றும் அறிந்து கூறவேண்டும், சோதிடம் அறிந்தவன்.

9, 10, 11, 12-ஆமிடத்தைக் கொண்டு அறியப்படவேண்டியவைகள்

மக்கட்பேறு, ஆசிரியர், (குரு) புண்ணியம், முன்பிறப்பு, தாய்மாமன், அறம், பாக்கியம், மூலிகைகள் இவைகள் ஒன்பதாம் பாவாதிபதியின் மூலம் அறியப்பட வேண்டியவைகள்.

அறிவு, தொழில், மனை, தவநிலை, ஆண்மை, வேதம் முதலிய நூல்களை அறிதல், வாழ்க்கை, வீடு, ஆடை இவைகள் 10-ம் பாவாதிபதியைக் கொண்டு அறியப்பட வேண்டியவைகள்.

பொருள் வரவு, துக்கத்திற்குப் பரிஹாரம், தன்னால் தேடப்பட்ட பொருள் (ஐச்வர்யம், முத்து, பவழம், தானியங்களின் செழிப்பு இவைகள் 11-ம் பாவாதிபதியைக் கொண்டு அறியப்பட வேண்டியவைகள்.

தனநாசம், பாவம், வீடு அழிந்துபோதல், பயம், வேறுதேசம் போவது ஆகிய இவைகள் 12-ம் பாவாதிபதியைக் கொண்டு அறியப்படவேண்டியவைகள்.

பூர்வபாராசர்யம் பிற்பகுதியில் சங்கீர்ணாத்தியாயம் என்னும் ஆறாவது அத்தியாயம் முற்றும்.

ஏழாவது அத்தியாயம்

(அரிஷ்டாத்யாயம்)

திதிகளின் பெயரும் - கண்டாந்தமும் - பயனும்

வளர்பிறை, தேய்பிறை என்ற இரண்டு பக்ஷங்களிலும், பஞ்சமி, தசமி, பூர்ணிமை அல்லது அமாவாசை இந்த திதிகளுக்குப் பூர்ணை என்று பெயர். பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி இந்த திதிகளுக்கு நந்தை என்று பெயர். பூர்ணையின் கடைசி இரண்டு நாழிகைகளும், நந்தையின் ஆரம்பத்தில் இரண்டு நாழிகைகளுமாக நான்கு நாழிகைகளுக்குக் ***கண்டாந்தம்*** என்று பெயர். இந்த கண்டாந்தத்தில் திருமணமோ, யாத்திரையோ செய்யக்கூடாது. யாத்திரையோ, திருமணமோ செய்தால் மரணமுண்டாகும். குழந்தைகளும் பிறக்கக்கூடாது, பிறந்தால் குழந்தை மரிக்கும்.

அமாவாஸை, சுக்கிலபக்ஷப் பிரதமை இவைகளின் நடுவிலும், பஞ்சமி-ஷஷ்டி இவைகளின் நடுவிலும், தசமி-ஏகாதசி இவைகளின் நடுவிலும் முன்திதியின் கடைசி இரண்டு நாழிகைகள், பின் திதியில் ஆரம்பத்திலுள்ள இரண்டு நாழிகைகள் ஆக நான்கு நாழிகைகள் ***திதி கண்டம்*** என்று கூறப்படுகின்றது.

தேய்பிறைச் சதுர்த்தசியில் குழந்தை பிறந்தால் உண்டாகும் பலன்

கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி திதியின் மொத்த நாழிகைகளை ஆறு பாகங்களாகப் பிரித்து, அதில் முதல் பாகத்தில் குழந்தை பிறந்தால் நன்மை ஏற்படும். இரண்டாவது பாகத்தில் பிறந்தால் தந்தையையும், மூன்றாவது பாகத்தில் பிறந்தால் தாயையும், நான்காவது பாகத்தில் பிறந்தால் தாய் மாமனையும், ஐந்தாவது பாகத்தில் பிறந்தால் உடன் பிறந்தோரையும் கொன்றுவிடும். ஆறாவது பாகத்தில் பிறந்த குழந்தையே இறந்துவிடும்.

அமாவாசையில் குழந்தை பிறந்தால் உண்டாகும் பலன்

அமாவாசையை ஆறு பாகங்களாகப் பிரித்து, அவைகளுள் முதல் பாகத்தில் குழந்தை பிறந்தால் பொருள் அழியும். இரண்டாவது பாகத்தில் பிறந்தால் தாயையும், மூன்றாம் பாகத்தில் பிறந்தால் தகப்பனையும், நான்காம் பாகத்தில் பிறந்தால் தாய் மாமனையும் கொன்றுவிடும். ஆறாவது பாகத்தில் பிறந்தால் எவ்வித தோஷமும் கிடையாது.

கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி அல்லது அமாவாசையன்று குழந்தை பிறந்தால் அதற்கான சாந்தி பரிஹாரம் செய்ய வேண்டும். யானை, குதிரை, எருமை இவைகள் கன்று போட்டால் அவைகளைப் பிறருக்குக் கொடுத்துவிட வேண்டும்.

ரத்தினமாலா என்னும் நூலில் கூறப்பட்டுள்ள கண்டாந்தங்கள்

ரேவதியின் கடைசி இரண்டு நாழிகைகளும், அச்வினியின் முதல் இரண்டு நாழிகைகளும், ஆயில்யத்தின் கடைசி இரண்டு நாழிகைகளும், மகத்தின் முதல் இரண்டு நாழிகைகளும், கேட்டையின் கடைசி இரண்டு நாழிகை களும், மூலத்தின் முதல் இரண்டு நாழிகைகளும் ஆக இந்த இருகோள்களின் இடைப்பட்ட நான்கு நாழிகைகளும் ***நக்ஷத்திர கண்டாந்தங்கள்*** அல்லது ***அந்தராள கண்டங்கள்*** என்று பெயர். இந்த கண்டாந்தங்களில் குழந்தை பிறந்தால், குழந்தைக்கு அரிஷ்டம் ஏற்படும். யாத்திரையோ, திருமணமோ செய்தால் அந்த காலங்களில் தீமை ஏற்படும்.

ராசி கண்டாந்தம்

கடகம்-சிம்மம், விருச்சிகம்-தனுசு, மீனம்-மேஷம் இவ்விரு ராசிகளின் முறையே கடைசி இரண்டு நாழிகைகளும் முதல் இரண்டு நாழிகைகளும் ஆக இடைப்பட்ட நான்கு நாழிகைகள் ***ராசி கண்டாந்தங்கள்***

என்று பெயர். இந்த கண்டாந்தங்களில் குழந்தை பிறந்தால், குழந்தை மறிக்கும், தாய் தந்தையர்களையும் பாதிக்கும்.

முன்னும் பின்னுமாக வருகின்ற இரண்டு நக்ஷத்திரங் களுக்கு இடையில் நான்கு நாழிகைகளும், முன்னும் பின்னுமாக வருகின்ற இரண்டு நாட்களுக்கு மத்தியில் நான்கு நாழிகைகளும், முன்னும் பின்னுமாக வருகின்ற இரண்டு ராசிகளுக்கு மத்தியில் ஒரு நாழிகையும் ***கண்டாந்தம்*** என்றும் கூறுவர்.

அனுபவிப்பதற்கு ஒவ்வாத கண்டாந்தங்கள்

கேட்டை நக்ஷத்திரத்தின் கடைசி ஒரு நாழிகையும், மூல நக்ஷத்திரத்தின் முதல் இரண்டு நாழிகைகளும் ***அபுக்த மூலம்*** அனுபவிக்கக்கூடாத கண்டம் என்று பெயர். இதில் குழந்தை பிறந்தால் அதை வேறு ஒருவருக்குக் கொடுத்துவிட வேண்டும். வீட்டில் வைத்துக்கொள்ளக்கூடாது.

கேட்டையின் கடைசி கால் நாழிகையும், மூலத்தின் முதல் கால் நாழிகையும் ஆக இரண்டு நக்ஷத்திரங்களுக்கும் இடைப்பட்ட அரை நாழிகை அந்தராளகண்டம் என்று பண்டிதர்கள் கூறுவர். இதில் குழந்தை பிறந்தால் அது ஆணாயினும், பெண்ணாயினும் அதை வீட்டில் வைத்துக் கொள்ளக்கூடாது என்று பொருள்.

பொதுவாக அபுக்த மூலத்தில் பிறந்த குழந்தையை வீட்டில் வைத்துக்கொள்ளக்கூடாது அல்லது குழந்தையின் தந்தை குழந்தையை எட்டு ஆண்டுகளுக்குப் பார்க்கக்கூடாது.

மூல நக்ஷத்திரத்தின் முதல் பாதத்தில் குழந்தை பிறந்தால் தகப்பனுக்கும், இரண்டாவது பாதமானால் தாய்க்கும், மூன்றாம் பாதமாகில் பொருளுக்கும் நாசம் உண்டாகும். நான்காம் பாதமாகில் நன்மை உண்டாகும்.

ஆயில்ய நக்ஷத்திரத்தின் முதல் பாதத்தில் குழந்தை பிறந்தால் நன்மை உண்டாகும், சுபபலனைத் தரும். இரண்டாவது பாதமாகில் பொருளுக்கு நாசமும், மூன்றாம் பாதமாகில் தாய்க்கும், நான்காம் பாதமாகில் தந்தைக்கும் நாசத்தை விளைவிக்கும். ஆதலால் மூல நக்ஷத்திரத்திலும், ஆயில்ய நக்ஷத்திரத்திலும் குழந்தைகள் பிறந்தால் சாந்தி ஹோமம் செய்யவேண்டும்.

மற்றொரு விதம்

(அ) அபுக்தமூலத்தில் (அனுபவிப்பதற்கு ஒவ்வாத கண்டங்களில்) பிறந்த குழந்தையை, எட்டு வருடமோ அல்லது நான்கு வருடமோ அல்லது ஒரு வருடமோ வெளியில் இருக்கும்படிச் செய்யவேண்டும். வீட்டில் வைத்துக்கொள்ளக்கூடாது. அவ்வாறின்றி முன்கூறப்பட்ட அபுக்தமூலத்தில் பிறந்த குழந்தையை வீட்டில் வைத்துக் கொண்டால் தந்தையை உடனடியாகக் கொன்றுவிடும்.

(ஆ) அபுக்தமூலத்தில் பிறந்த குழந்தையைத் தந்தை பார்க்கக்கூடாது. அக்ஞானத்தினால் தந்தை குழந்தையைப் பார்த்தால் 6 மாதத்தில் தந்தை இறந்துவிடுவான்.

(இ) ரேவதி - அச்வினி, ஆயில்யம் - மகம், கேட்டை - மூலம் இவ்வாறு நக்ஷத்திரங்களின் முன் நக்ஷத்திரங்களின் கடைசி $3\frac{1}{4}$ நாழிகையும், பின் நக்ஷத்திரங்களின் முதல் $3\frac{1}{4}$ நாழிகையும் ஆக $7\frac{1}{2}$ நாழிகைகளுக்கு அபுக்தமூலம் என்று பெயர். இந்த $7\frac{1}{2}$ நாழிகைகளில் (அபுக்தமூலத்தில்) பிறந்த, ஆண் அல்லது பெண் குழந்தையை வேறு ஒருவரிடம் கொடுத்துவிடவேண்டும். வீட்டில் வைத்துக்கொள்ளக் கூடாது.

ஆதலால் அபுக்த தோஷமில்லாத நக்ஷத்திரத்தில் பிறந்த குழந்தையைப் பார்ப்பது தோஷமில்லை. கண்டமும் இல்லை. சாந்தி முதலான காரியங்களும் தேவையில்லை. அபுக்த தோஷமில்லாத காலத்தில் விவாஹம் முதலான சுபகாரியங்களைச் செய்தால் நன்மை உண்டாகும்.

வேறு நூலில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ள கண்டாந்தம்

அச்வினி, மகம், மூலம் இந்த நக்ஷத்திரங்களின் முதல் இரண்டு நாழிகைகளும்; ஆயில்யம், கேட்டை, ரேவதி இந்த நக்ஷத்திரங்களின் கடைசி இரண்டு நாழிகைகளும்; பூரம், பூராடம், பூரட்டாதி இந்த நக்ஷத்திரங்களின் கடைசி இரண்டு இரண்டு (நான்கு) நாழிகைகள் கண்டாந்தம் என்று பெயர்.

கண்டாந்தத்தில் மகன் பிறந்தாலும் அல்லது இறந்தாலும், அவன் குலத்தை அழித்துவிடுவான். தாய், தகப்பன், சகோதரன் இவர்களின் நலனைக்கருதி சாந்திகர்மா செய்யவேண்டும்.

நக்ஷத்திர சாந்தியும் அதன் பயனும்

அனுஷ நக்ஷத்திரத்தின் கடைசி ஒரு நாழிகையும், கேட்டையின் முதல் இரண்டு நாழிகைகளும் ஆக இந்த மூன்று நாழிகைகளும் நக்ஷத்திர சந்தி என்று பெயர். இந்த நக்ஷத்திர சந்தி காலத்தில் குழந்தை பிறந்தால் அது இறந்து விடும்.

மூலா நக்ஷத்திரத்தை 15 பாகமாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்திலும் குழந்தை பிறந்தால் ஏற்படும் பலன் கீழ்க்கண்டவாறு ஏற்படும். முதல் பாகத்தில் குழந்தை பிறந்தால் தகப்பனும், இரண்டாம் பாகத்தில் பிறந்தால் தந்தையின் சகோதரனும் (சிறிய தகப்பனோ அல்லது பெரிய தகப்பனோ), 3-ம் பாகத்தில் பிறந்தால் (சகோதரிக்குத் திருமணமாகி இருந்தால்) சகோதரியின் கணவனும், 4-ம் பாகத்தில் பிறந்தால் தகப்பனின் தகப்பனும் (பாட்டனும்), 5-ம் பாகத்தில் பிறந்தால் தாயும், 6-ம் பாகத்தில் பிறந்தால் தாயின் சகோதரியும், 7-ம் பாகத்தில் பிறந்தால் தாய் மாமனும், 8-ம் பாகத்தில் பிறந்தால் தகப்பனின் சகோதரனின் பத்நியும், 9-ம் பாகத்தில் பிறந்தால் குடும்பத்திலுள்ள அனைவரும், 10-ம் பாகத்தில் பிறந்தால் பசுக்கள் அனைத்தும், 11-ம் பாகத்தில் பிறந்தால் வீட்டு வேலையாட்களும், 12-ம் பாகத்தில்

பிறந்தால் பிறந்த குழந்தையும், 13-ம் பாகத்தில் பிறந்தால் தமையனும், 14-ம் பாகத்தில் பிறந்தால் சகோதரியும், 15-ம் பாகத்தில் பிறந்தால் தாயின் தகப்பனும் இறந்துவிடுவார்கள். (இறப்பதற்குச் சமமான கண்டங்களை அனுபவிப்பார்கள் என்று கொள்ளவேண்டும்.

முன்பு கூறப்பட்ட 15 பாகங்களில் எந்த பாகத்தில் ஞாயிறு, செவ்வாய், சனி, ராகு, இவர்கள் தங்கியிருக் கிறார்களோ அல்லது அந்த பாகத்தைப் பார்க்கிறார்களோ, அப்பொழுது குழந்தை பிறந்தால் அதிலும் சந்திரனுடைய சம்பந்தமும் ஏற்படின் முறையே முன்பு கூறப்பட்டவாறு பலன் உண்டாகும்.

குறிப்பு :- மூல நக்ஷத்திரத்தில் பிறந்தால், மதி, மூல நக்ஷத்திரத்தில் பூராவும் சஞ்சரிக்கின்றான் என்றுதான் கொள்ளவேண்டும். அப்படியிருக்க, மதி நின்றால் என்றதின் கருத்து, மற்ற கோள்களின் சம்பந்தமில்லாமல் நின்றபொழுது என்று கொள்ளவேண்டும்.

திருமணம் முதலிய நற்காரியங்களுக்குப் பந்தற்கால் நடுவதற்கு

வெள்ளிக்கிழமை, வியாழக்கிழமை, புதன்கிழமை இவைகளில் பந்தற்கால் நடுவது நல்லது. அல்லாமல் திங்கட்கிழமையில் பந்தற்கால் நட்டால் கலஹமும், அரிட்டமும் உண்டாகும். ஞாயிறில் செய்தால் நெருப்புப் பிடிக்கும். சனிக்கிழமையில் செய்தால் பெரும் பசிப்பிணி ஏற்படும். செவ்வாயில் செய்தால் எல்லாம் அழிந்துவிடும்.

பரணி நக்ஷத்திரத்தின் பிற்பகுதி, கார்த்திகை நக்ஷத்திரம், ரோஹிணீ நக்ஷத்திரத்தின் முதல் பாகம் இவைகளில் ஞாயிறு நின்ற சமயத்தில் மண்ணால் செய்யப்படுகிற வேலை களையும், மரத்தினால் செய்யப்படுகிற வேலைகளையும், வீடு கட்டுவதையும் ஆரம்பிக்கக்கூடாது. அப்படிச் செய்தால் இந்த வேலைகள் அழிந்துபோவதுடன் எஜமானனும் நாசம் அடைந்துவிடுவான்.

மூலா நக்ஷத்திர சக்கரம்

மனிதனின் உருவத்தை எழுதி, அதில் ஒவ்வொரு அவயவங்களிலும் மூலா நக்ஷத்திரத்தின் மொத்த நாழிகைகளைக் கீழ்க்கண்டவாறு தலைமுதல் கால்வரை பகுத்துக்கொடுத்தால், குழந்தை எந்த அவயவத்திற்குரிய நாழிகையில் பிறந்திருக்கிறதோ அந்த நாழிகையில் அந்த அவயவத்திற்குரிய பலன் எதுவோ அதை அடையும். தலை 7 நாழிகைகள், முகம் 7 நாழிகைகள், வலது கை 5 நாழிகைகள், இடதுகை 5 நாழிகைகள், மார்பு 8 நாழிகைகள், தொப்புள் 11 நாழிகைகள், இடதுகால் 7 நாழிகைகள் இவ்வாறு கணக்கிட்டுக் கொடுக்கவேண்டும். (1) தலை - தந்தைக்குக் கண்டம், (2) முகம் - சுபம், (3) கைகள் - தாய்க்குக் கண்டம், (4) மார்பு - தனநாசம், (5) தொப்புள் - நீண்ட ஆயுள், (6) ஆண்குறி - செல்வம் அழிந்துபோதல், (7) கால்கள் - ராச்சிய சம்பத்து இவ்வாறு பலன் உண்டாகும்.

ஆயில்ய நக்ஷத்திர சக்கரம்

மனிதனின் உருவத்தை எழுதி மூலா நக்ஷத்திரத்திற்குக் கூறப்பட்டதுபோல் தலைமுதல் கால்வரையிலுள்ள அவயவங்கட்கு முறையே தலை 7 நாழிகைகள், முகம், 7 நாழிகைகள், வலது-இடது கைகள் 5+5 நாழிகைகள், மார்பு 8 நாழிகைகள், தொப்புள் 11 நாழிகைகள், ஆண்குறி 3 நாழிகைகள், வலது-இடது கால்கள் 7+7 நாழிகைகள் வீதம் கொடுக்கவேண்டும். எந்த அவயவத்திற்குரிய நாழிகையில் குழந்தை பிறந்திருக்கிறதோ அந்த நாழிகையில் அந்த அவயவத்திற்குரிய பலன் குழந்தைக்குக் கீழ்க்கண்டவாறு உண்டாகும். (1) தலை-ராச்சிய சம்பத்து, (2) முகம்-செல்வம் அழிந்துபோதல், (3) கைகள்-நீண்ட ஆயுள், (4) மார்பு-தனநாசம், (5)தொப்புள்-தாய்க்குக் கண்டம், (6) ஆண்குறி-சுபம், (7) கால்கள்-தந்தைக்குக் கண்டம்.

மூலா நக்ஷத்திரத்தில் மகவு பிறப்பதன் பலன்

மூலா நக்ஷத்திரத்தின் முதல் பாதத்தில் குழந்தை பிறந்தால் தந்தைக்கும், இரண்டாம் பாதத்தில் பிறந்தால் தாய்க்கும், மூன்றாவது பாதத்தில் பிறந்தால் செல்வத்திற்கும் கண்டம், நான்காம் பாதத்தில் பிறந்தால் சுபம் ஏற்படும்.

மூலா நக்ஷத்திரத்தின் மொத்த நாழிகையை ஒரு பாகத்திற்கு 5 நாழிகை வீதம் 12 பாகமாகப் பிரித்து, ஒவ்வொரு பாகத்திற்கும் கீழ்க்கண்டவாறு பலன் கூறவேண்டும். முதல் பாகத்தில் குழந்தை பிறந்தால் தந்தைக்குக் கண்டம், 2-ம் பாகத்தில் தாய்க்குக் கண்டம், 3-ம் பாகத்தில் சகோதரனுக்குக் கண்டம், 4-ம் பாகத்தில் சகோதரிக்குக் கண்டம், 5-ம் பாகத்தில் மாமனார், மாமியார்களுக்குக் கண்டம், 6-ம் பாகத்தில் தகப்பனின் சகோதரனுக்குக் கண்டம், 7-ம் பாகத்தில் தாய் மாமனுக்குக் கண்டம், 8-ம் பாகத்தில் தனநாசம், 9-ம் பாகத்தில் எடுத்துக்கொண்ட எந்த காரியத்திலும் பயம், 10-ம் பாகத்தில் எல்லாவற்றிற்குமே அழிவு, 11-ம் பாகத்தில் ஏழ்மை, 12-ம் பாகத்தில் ராஜ்ய சம்பத்தும் உண்டாகும்.

கேட்டை நக்ஷத்திரத்தில் மகவு பிறப்பதின் பலன்

கேட்டை நக்ஷத்திரத்தின் மொத்த நாழிகையை பாகம் ஒன்றுக்கு 6 நாழிகைகள் வீதம் 10 பாகமாகக் கணக்கிட்டு. ஒவ்வொரு பாகத்திற்கும் கீழ்க்கண்டாவாறு பலன் கூறவேண்டும். முதல் பாகத்தில் மகவு பிறந்தால் தாயின் தாயும், 2-ம் பாகத்தில் தாயின் தகப்பனும், 3-ம் பாகத்தில் தாய் மாமனும், 4-ம் பாகத்தில் தாயும், 5-ம் பாகத்தில் பிறந்த குழந்தையும், 6-ம் பாகத்தில் தகப்பனின் குலமும், 7-ம் பாகத்தில் தாய்-தகப்பன் இருவரின் குலமும், 8-ம் பாகத்தில் தமயனும், 9-ம் பாகத்தில் பின்வரப்போகும் பெண் கொடுத்த மாமனாரும், 10-ம் பாகத்தில் பிறந்த குழந்தையும் அழிந்துவிடும்.

வேறுவிதம்

கேட்டை நக்ஷத்திரத்தின் முதல் பாதத்தில் குழந்தை பிறந்தால் தமயனையும், இரண்டாம் பாதத்தில் பிறந்தால் தம்பியையும், மூன்றாம் பாதத்தில் பிறந்தால் தனத்தையும் அழித்துவிடும். நான்காவது பாதத்தில் பிறந்தால் பிறந்த குழந்தையும் இறந்துவிடும்.

கேட்டை நக்ஷத்திரத்தின் நான்காம் பாதத்தில் ஆண் குழந்தை பிறந்தால் தமயனைக் கொன்றுவிடும். பெண் குழந்தையானால் கொல்லாது. கேட்டை நக்ஷத்திரத்தின் முதல் பாதத்தில் பிறந்த ஆண் குழந்தை அதனுடைய தமயனைக் கொன்றுவிடும் (இறப்பான்). பெண் குழந்தை பிறந்தால் கொல்லாது (தோஷமில்லை) என்றும் கூறுவர்.

மூலம், ஆயில்யம், கேட்டை இந்த நக்ஷத்திரங்களில் குழந்தை பிறந்தால், அதனால் ஏற்படும் தீயபலனைப் போக்க மூன்று பசுக்களை அந்தணர்களுக்குத் தானமாகக் கொடுக்க வேண்டும்.

கேட்டை நக்ஷத்திரத்தின் 4-ம் பாதத்தில் பிறத்தலின் பலன்

கேட்டை நக்ஷத்திரத்தின் நான்காவது பாகத்தை 15 பாகமாகப் பிரித்து, அதில் முதல் 8 பாகத்திற்குள் குழந்தை பிறந்தால் தமயனையும், அடுத்த 4 பாகத்திற்குள் குழந்தை பிறந்தால் தகப்பனைக் கொன்றுவிடும். கடைசி 3 பாகத்திற்குள் குழந்தை பிறந்தால் பிறந்த குழந்தையே மரிக்கும்.

மற்றொரு விதம்

செவ்வாய்க்கிழமையன்று திருவாதிரை நக்ஷத்திரத்தில் குழந்தை பிறந்தால் தமயனைக் கொன்றுவிடும். ஞாயிறன்று மூல நக்ஷத்திரத்தில் குழந்தை பிறந்தால் தகப்பனைக் கொன்றுவிடும். இவ்வாறு கிழமையும், நக்ஷத்திரமும் சேர்வதால் உண்டாகும் பலனைக் கூறவேண்டும்.

தகப்பன் முதலானோரின் நக்ஷத்திரத்தில் குழந்தை பிறந்தால் உண்டாகும் கண்டம் அறிதல்

தகப்பனின் ஜன்ம நக்ஷத்திரம் எதுவோ, அதே நக்ஷத்திரத்திலோ அல்லது, 10-வது நக்ஷத்திரமான அனுஜன்ம நக்ஷத்திரத்தில் குழந்தை பிறந்தால் தந்தைக்குக் கண்டம் உண்டாகும் (தந்தை இறப்பார்). தகப்பனின் ஜன்ம நக்ஷத்திரத்தின் நவாம்சத்திலும், ஜன்ம லக்னத்திலும் குழந்தை பிறந்தால் தகப்பனுக்கு உடனேயே மரணத்தைச் செய்யும்.

ஒரே நக்ஷத்திரத்தில் இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தால் தகப்பனையும், இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தால் தாயையும் கொல்லும். மேலும் ஒரே நக்ஷத்திரத்தில் பிறந்த அக்குலத்திலுள்ள அனைவரையும் கொல்லும். (மரணத்திற்கு ஒப்பான கண்டம் ஏற்படும் என்று பொருள்.)

ஆயில்ய நக்ஷத்திரத்தின் கடைசி இரண்டு நாழிகை களும், மகத்தின் முதல் இரண்டு நாழிகைகளும்; கேட்டையின் கடைசி இரண்டு நாழிகைகளும், மூலத்தின் முதல் இரண்டு நாழிகைகளும்; ரேவதியின் கடைசி இரண்டு நாழிகைகளும், அச்வினியின் முதல் இரண்டு நாழிகைகளும் நக்ஷத்திர கண்டங்கள் என்று கூறப்பட்டது. இவ்வாறான நக்ஷத்திர கண்டத்தில் குழந்தை பிறந்தால் தாய், தகப்பன், பிறந்த குழந்தை, உடன் பிறந்தோர் இறப்பார்கள். ராசி கண்டத்தில் குழந்தை பிறந்தால் குலத்தையே அழித்துவிடும். திதி கண்டத்தில் குழந்தை பிறந்தால் தாய் தகப்பன் இருவரையும் கொன்றுவிடும்.

கண்டாந்த தோஷம் சிறிது இருந்தாலும் அது குலத்தையே அழித்துவிடும். கண்டாந்தங்களில் பிறக்கும் குழந்தை குலத்தையும், உடன் பிறந்தோரையும், தாயையும், தகப்பனையும், தாய் மாமனையும், தந்தையின் உடன் பிறந்தோரையும், தந்தையின் தகப்பனையும்-தாயையும், இவ்வாறு குலத்தில் பிறந்த எல்லோரையும் கொன்றுவிடும். பிறந்த குழந்தையும் ஜீவிக்காது உடனே இறந்துவிடும்.

மற்ற நக்ஷத்திர கண்டங்கள்

உத்திர நக்ஷத்திரத்தின் முதல் பாதத்திலும், பூச நக்ஷத்திரத்தின் 2, 3-வது பாதங்களிலும், சித்திரா நக்ஷத்திரத்தின் 3-வது பாதத்திலும், பரணி நக்ஷத்திரத்தின் 2, 3வது பாதங்களிலும், ஹஸ்த நக்ஷத்திரத்தின் 3-வது பாதத்திலும், ரேவதி நக்ஷத்திரத்தின் 4-வது பாதத்திலும் ஆண் குழந்தை பிறந்தால் தந்தைக்கும், பெண் குழந்தை பிறந்தால் தாய்க்கும் மரணமுண்டாகும்.

பூச நக்ஷத்திரத்தின் முதல் பாதத்தில் குழந்தை பிறந்தால் தகப்பனுக்கும், இரண்டாவது பாதத்தில் பிறந்தால் தாய்க்கும் மரணம் உண்டாகும். 3-வது பாதத்தில் பிறந்தால் பிறந்த குழந்தை மரிக்கும். 4-வது பாதத்தில் பிறந்தால் தாய் மாமனுக்கு மரணம் உண்டாகும். ஆண் ராசியில் பிறந்தால் தகப்பனுக்கும், பெண் ராசியில் பிறந்தால் தாய்க்கும் மரணம் உண்டாகும்.

வேறு விதம்

பூராடம், பூசம் இவ்விரு நக்ஷத்திரங்களின் முதல் பாதத்தில் குழந்தை பிறந்தால் தகப்பனையும், இரண்டாவது பாதத்தில் பிறந்தால் தாயையும் கொன்றுவிடும். மூன்றாவது பாதத்தில் பிறந்தால் பிறந்த குழந்தையும் இறந்துவிடும். நான்காவது பாத்தில் பிறந்தால் தாய் மாமனைக் கொன்றுவிடும்.

பூராட நக்ஷத்திரத்தில் தனுர் லக்னத்தில் குழந்தை பிறந்தால் தந்தைக்கு மரணம் உண்டாகும். பூச நக்ஷத்திரத்தில் கடக லக்னத்தில் குழந்தை பிறந்தால் தாய் இறப்பாள்.

உத்திர நக்ஷத்திரத்தில் குழந்தை பிறந்தால் ஏற்படும் தோஷம் முதல் இரண்டு மாதங்களிலும், பூச நக்ஷத்திரத்தில் பிறந்தால் மூன்று மாதங்களிலும், பூராட நக்ஷத்திரத்தில் பிறந்தால் ஒன்பது மாதங்களிலும், சித்திரை நக்ஷத்திரத்தில்

பிறந்தால் ஆறு மாதங்களிலும், ஆயில்ய நக்ஷத்திரத்தில் பிறந்தால் ஒன்பது மாதங்களிலும், மூலா நக்ஷத்திரத்தில் பிறந்தால் எட்டு மாதங்களிலும், கேட்டை நக்ஷத்திரத்தில் பிறந்தால் ஐந்து மாதங்களிலும், ஹஸ்த நக்ஷத்திரத்தில் பிறந்தால் மூன்று ஆண்டுகளிலும், பரணி நக்ஷத்திரத்தில் பிறந்தால் நான்கு ஆண்டுகளிலும் கண்டம் ஏற்படும். ஆதலால் முன்கூறப்பட்ட காலம் முடிந்தபின் தகப்பன் குழந்தையைப் பார்க்கவேண்டும். அபுக்த மூலத்தில் (மூலா நக்ஷத்திரம் உதயமாகிற நிலையில்) குழந்தை பிறந்தால் தகப்பன் உடனே இறந்துவிடுவான்.

கெட்ட நக்ஷத்திரங்களில் குழந்தை பிறப்பதால் உண்டாகிற தோஷங்களுக்குக் கல்பத்தில் (சாந்தி ஹோமத்தின் ப்ரகாரத்தை விவரிக்கும் நூல்) கூறியிருக்கிற விதம் எந்தெந்த கிரஹங்களுக்கு எந்த திரவியம் கூறப்பட்டிருக்கிறதோ அதைக் கொண்டும், அந்தந்த கிரஹங்களின் பிரதிமைகளைக் கொண்டும் செய்யவேண்டும்.

உத்திர நக்ஷத்தில் குழந்தை பிறந்தால், அதனால் ஏற்படுகிற தோஷம் விலக, எள்ளுடன் ஒரு (பித்தளை) பாத்திரத்தைத் தானமாகக் கொடுக்கவேண்டும். பூச நக்ஷத்திரத்தில் பிறந்தால் பசுவைத் தானமாகக் கொடுக்க வேண்டும். சித்திரை நக்ஷத்திரத்தில் பிறந்தால் ஒரு ஜோடி வேட்டியைத் தானமாகக் கொடுக்கவேண்டும். பூராட நக்ஷத்திரத்தில் பிறந்தால் சுவர்ணத்தைத் தானமாகக் கொடுக்க வேண்டும். ஆயில்ய நக்ஷத்திரத்தில் பிறந்தால் குதிரையைத் தானமாகக் கொடுக்கவேண்டும். பரணி, மூலம் இந்த நக்ஷத்திரங்களில் பிறந்தால் எருமையைத் தானமாகக் கொடுக்கவேண்டும். ஞாயிற்றுக்கிழமையில் பூச நக்ஷத்திரத்தில் குழந்தை பிறந்தால் சுவர்ணத்தையும், கேட்டை நக்ஷத்திரத்தில் பிறந்தால் பசுவையும் தானம் செய்ய வேண்டும்.

பகலில் ஆண் குழந்தை பிறந்தால் தந்தைக்கும், இரவில் பெண் குழந்தை பிறந்தால் தாய்க்கும் மரணமுண்டாகும்.

சந்தி காலங்களில் பிறக்கும் குழந்தை மரித்துவிடும். இதுபோல் நக்ஷத்திர கண்டங்கள் முதலான கண்டங்களில் பிறக்கும் குழந்தை ஜீவித்திருக்காது.

நக்ஷத்திர கண்டங்கள் முதலான கண்டங்களில் குழந்தை பிறந்தாலும், பாம்பு கடித்தால் விசேஷமான மந்திரங்களாலும், மருந்துகளாலும் எப்படி மனிதன் மறுபடியும் பிழைத்துப் பலகாலம் ஜீவித்திருக்கிறானோ, அவ்வாறு கண்டாந்தம் என்றும் சர்ப்பத்தினால் தீண்டப்பட்ட குழந்தை விசேஷமான சாந்தி பரிகாரத்தால் பலகாலம் ஜீவித்திருக்கும்.

மூலம், ஆயில்யம் இந்த நக்ஷத்திரங்களிலும், நக்ஷத்திர கண்டங்கள் முதலான கண்டங்களில் பிறக்கும் பிராணிகள் இறக்கிற நிலையில் இருந்தால் உடனே விஷம் கலந்த உணவை உட்கொள்ளுமாறு செய்தால் பிழைக்கும். உடன் சாந்தி கர்மாவைச் செய்யவேண்டும்.

அரிஷ்டயோகங்கள் முதலான கண்டங்கள்

கால யோகத்திலும், தக்த யோத்திலும் குழந்தை பிறந்தால், விவாஹம் முதலான நற்காரியங்கள் அனைத்தும் அழிந்துவிடும்.விஷ்டி யோகத்தில் பிறந்தால் ஏழ்மை உண்டாகும். குளிகனுடைய காலத்தில் பிறந்தால் உடற்குறை உணடாகும்.

சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி திதிகளான ரிக்தையில் குழந்தை பிறந்தால் அலியாவான். யமகண்டத்தில் பிறந்தால் நொண்டியாக இருப்பான். பாப கிரஹங்களால் பாதிக்கப்பட்ட நக்ஷத்திரத்தில் பிறந்தாலும் அல்லது பாப கிரஹங்களின் சம்பந்தத்திலிருந்து விடுபட்ட நக்ஷத்திரத்தில் பிறந்தாலும், துஷ்டனாக இருப்பான்.

ஒரு கிரஹத்திலிருந்து, மற்றொரு கிரஹத்திற்குச் சஞ்சாரம் செய்துகொண்டிருக்கிற நிலையில் இருக்கிற

நக்ஷத்திரத்தில் பிறந்தால் பிறருக்குத் தத்து கொடுக்கப் படுபவனாக இருப்பான். பாபக் கிரஹத்தின் சேர்க்கையால் பாதிக்கப்பட்ட நக்ஷத்திரத்தில் பிறந்தால் எப்பொழுதும் நோயினால் பீடிக்கப்பட்டவனாக இருப்பான்.

வ்யதீபாத யோகத்தில் பிறந்தவன் அங்கஹீனனாக இருப்பான். பரிகம் என்னும் யோகத்தில் குழந்தை பிறந்தால் உடனே மரணத்தை அடையும். வைத்ருதி என்னும் யோகத்தில் குழந்தை பிறந்தால் குழந்தையின் தகப்பன் இறந்துவிடுவான். விஷ்கும்பம் என்னும் யோகத்தில் குழந்தை பிறந்தால் பொருள் அழிந்துவிடும். சூலம் என்னும் யோகத்தில் குழந்தை பிறந்தால் அதன் குலமே அழிந்துவிடும். அல்லது பெற்றோர்களால் கைவிடப்பட்டதாகவாவது ஆகிவிடும்.

குழந்தை பிறந்ததும், சோதிடரைக் கொண்டு ஜாதகத்தைக் கணிக்கச் செய்யவேண்டும். முன்கூறப் பட்டவாறு தோஷங்களிருந்தால் வைதிகர்களான பிராமணர்களைக் கொண்டு "*முஞ்சாமி த்வாம்*" என்றது முதலான மந்திரங்களால் ஹோமம் செய்வதன் மூலம் சாந்தி கர்மாவைச் செய்யவேண்டும்.

சாந்தி ஹோமம் முதலான சாந்தி கர்மவைச் செய்யப் புகுமுன் "*நீவோ நவோ பவதி ஜாயமானோ . . .*" என்ற மந்திரத்தைக்கூறி சோதிடரை நன்கு பூஜித்து, சிறப்பான முறையில் பொருளும் கொடுத்து உபசரிக்கவேண்டும்.

முன்கூறப்பட்ட தோஷமுள்ள நக்ஷத்திரம் கண்டாந்தங்கள் முதலானவைகளில் குழந்தை பிறந்தால் அதனால் ஏற்படுகிற தோஷங்கள் நீங்கக் குறிப்பிட்ட காலம் வரை ப்ரதிதினம் அவரவர்கள் சக்திக்கு ஏற்றவாறு பசு, சுவர்ணம், பூமி, தனம் இவைகளைப் பிராம்மணர்களுக்குக் கொடுக்கவேண்டும். இதனால் முன்கூறப்பட்ட தோஷங்கள் விலகிவிடுகின்றன.

ஜன்ம நக்ஷத்திர நரசக்ரம்

மனித உருவம் ஒன்றை அமைத்து, எந்த நக்ஷத்திரக் காலில் ஞாயிறு சஞ்சரிக்கிறானோ, அது முதலாக நக்ஷத்திரங்களைக் கணக்கிட்டு தலைமுதற்கொண்டு கால்வரை அமைக்கவேண்டும். தலையில் (3) நக்ஷத்திரங்கள், முகத்தில் (3), இரு தோள்களிலும் ஒவ்வொன்று (2), இரு பக்கங்களிலும் ஒவ்வொன்று (2), வயிற்றில் (5), தொப்புளில் (1), ஆண் குறியில் (1), இரு தொடைகளிலும் ஒவ்வொன்று (2), இரு முழங்கால்களிலும் ஒவ்வொன்று (2), இரு பாதங்களிலும் மூம்மூன்று (6), ஆக இவ்விதம் 27 நக்ஷத்திரங் களையும் குறிக்கவேண்டும். இதற்கு ஜன்ம நக்ஷத்திர சக்ரம் என்று பெயர்.

ஜன்ம நக்ஷத்திர நரசக்ரம் மூலம் காணவேண்டிய பலன்கள்

குழந்தை எந்த நக்ஷத்திரத்தில் ஜனித்ததோ அந்த நக்ஷத்திரம் நரசக்ரத்தின் எந்த பாகத்தில் உள்ளதாக அமைந்திருக்கிறதோ, அதற்கேற்றவாறு பலன்கள் உண்டாகும்.

முன்கூறப்பட்ட குழந்தையின் ஜன்ம நஷ்ரத்திரம் நர சக்கரத்தின் காலில் இருந்தால் வாழ்க்கையில் எடுத்த காரியம் எதிலும் ஸ்வல்ப பலனையுடையதாகவும், முழங்காலில் இருந்தால் இடம்விட்டு மாறுகின்றதாகவும் இருக்கும்.

ஆண்குறியிலிருந்தால் பிறர் மனைவியிடம் ஈடுபாடு உடையவனாகவும், தொப்புளிலிருந்தால் ஸ்வல்ப சுகத்தை அனுபவிப்பவனாகவும், வயிற்றிலிருந்தால் மிக்க செல்வம் உடையவனாகவும், இருபக்கங்களிலும் இருந்தால் திருடனாகவும். இருகைகளுள் ஒன்றிலிருந்தால் சூரனாவும், தோள்வளைகளுள் ஒன்றிலிருந்தால் தனவானாகவும், முகத்திலிருந்தால் பண்டிதனாகவும் (புலவன்) தலையில் இருந்தால் அரசனாகவும் இருப்பான்.

தலையில் அமைந்த நக்ஷத்திரத்தில் பிறந்த குழந்தை 100 ஆண்டுகள் ஜீவித்திருப்பான். முகத்தில் அமைந்த நக்ஷத்திரத்தில் பிறந்தால் 80 ஆண்டுகளும் தோள்வளைகளுள் ஒன்றிலமைந்த நக்ஷத்திரத்தில் பிறந்தால் 70 ஆண்டுகளும், இருகைகளுள் ஒன்றிலமைந்த நக்ஷத்திரத்தில் பிறந்தால் 60 ஆண்டுகளும், தொப்புளிலமைந்த நக்ஷத்திரத்தில் பிறந்தால் 50 ஆண்டுகளும், ஆண் குறியிலமைந்த நக்ஷத்திரத்தில் பிறந்தால் 45 ஆண்டுகளும், முழங்கால்களுள் ஒன்றில் அமைந்த நக்ஷத்திரத்தில் பிறந்தால் 20 ஆண்டுகளும், பாதங்களுள் ஒன்றிலமைந்த நக்ஷத்திரத்தில் பிறந்தால் 10 ஆண்டுகளோ அல்லது 10 மாதங்களோ ஜீவித்திருப்பான்.

பற்களுடன் பிறந்த குழந்தையால் ஏற்படும் கண்டம்

பல்லுடன் பிறந்த குழந்தை அதன் குலத்தை அழித்து விடும். 2, 3, 4 அல்லது 5-வது மாதங்களில் பல் முளைத்தால் தந்தைக்குக் கண்டம் உண்டாகும். 6-வது மாதத்தில் பல் முளைத்தால் சிசுவுக்குக் கண்டம் உண்டாகும். 6-வது மாதத்திற்குமேல் பல் முளைத்தால் எல்லாவற்றிற்கும் நன்மை உண்டாகும்.

6-வது மாதத்திற்கு முன்பாக, பல் முளைத்தால் அதனால் ஏற்படுகிற தோஷத்திற்குச் சாந்தி செய்யவேண்டும். பரமேச்வரனுக்கு அபிஷேகம் செய்வதுடன், பிராம்மணர் களுக்குத் தங்கத்தால் செய்யப்பட்ட பற்களையும், சுவர்ணத்தையும் தானமாகக் கொடுத்து, அன்னதானம் (சாப்பாடு போடுதல்) செய்யவேண்டும்.

கிரஹகண்டங்கள்

ஐந்தாம் பாவத்தில் ஞாயிறு நின்றால் தந்தைக்கும், மதி நின்றால் தாய்க்கும், செவ்வாய் நின்றால் சகோதரனுக்கும், புதன் நின்றால் தாய் மாமனுக்கும், வியாழன் நின்றால் தாய்வழிப் பாட்டனுக்கும், வெள்ளி நின்றால் தாய்க்கும், சனி நின்றால் பிறந்த குழந்தைக்கும் மரணத்தைச் செய்வான் என்று ஞானிகள் கூறுகிறார்கள்.

4-வது பாவத்தில் ஞாயிறும், 7-வது பாவத்தில் சனியும் நின்றால் குழந்தை பிறந்த 7 தினத்தில் தாய்க்கு மரணம் உண்டாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

12-வது பாவத்தில் சனியும், ஞாயிறும் இருந்து, தேய்பிறை மதி 7-ம் பாவத்தில் நின்றால் குழந்தை பிறந்தவுடன் தாய் மறிப்பாள். இந்த யோகத்தில் ஞாயிறு, சனி, மதி இவர்களுக்கு சுபக்கிரங்களின் பார்வை ஏற்பட்டால் மூன்று வருடங்களுக்குப் பிறகு தாய்க்கு மரணம் உண்டாகும்.

லக்னமும், மதியும் சுபக்கிரஹங்களின்றி பாபக் கிரஹங்களால் மட்டில் பார்க்கப்பட்டு, கேந்திர ஸ்தானங்களான 1, 4, 7 அல்லது 10-மிடங்களுள் ஒன்றில் வியாழனும் இல்லாமலிருந்தால் தந்தைக்கு மரணத்தைக் கூறவேண்டும்.

6-வது பாவத்தில் பாபக்கிரஹம் நின்றால் குழந்தையின் சகோதரனுக்கு மரணத்தைச் செய்யும். இது நிச்சயம். 6-வது பாவத்தில் நின்ற பாபக்கிரஹத்தை மற்றுமொரு பாபக்கிரஹம் பார்த்தாலும் அல்லது பாபக் கிரஹத்துடன் சேர்ந்திருந்தாலும், குழந்தை பிறந்தவுடனேயே சகோதரன் இறப்பான்.சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் எட்டு ஆண்டுகளில் இறப்பான்.

தேய்பிறை மதி விஷநாடியிலிருக்கப் பிறந்த குழந்தை உடனே மறிக்கும். தேய்பிறை மதி, ஞாயிறின் நவாம்சத்தில் இருந்தால் தகப்பனுக்கும், மதியின் நவாம்சத்திலேயே நின்றால் தாய்க்கும், செவ்வாயின் நவாம்சத்தில் நின்றால் தாய் மாமனுக்கும், சனி நவாம்சத்தில் நின்றால் சகோதரனுக்கும், மற்ற கிரஹங்களான புதன், வியாழன், வெள்ளி இவைகளின் நவாம்சத்தில் நின்று விஷநாடியிலிருக்கப் பிறந்த குழந்தைக்கும் மரணத்தைச் சொல்லவேண்டும்.

சந்திரக்கிரஹண காலத்தில், பாபக்கிரஹங்களுடன் மதி லக்னத்திலும், செவ்வாய் எட்டாம் பாவத்திலும் நிற்கப்

பிறந்த குழந்தை தாயுடன் மரிக்கும், சூரிய கிரஹண காலத்தில், ஞாயிறு பாபக்கிரஹங்களுடன்கூட லக்னத்திலும், செவ்வாய் எட்டாமிடத்திலும் நிற்கப் பிறந்த குழந்தை ஆயுதத்தால் எடுக்கப்பட்டதாக இருக்கும். தாயுடன் இறக்கும்.

பாபக்கிரஹங்கள் ஒன்றுக்கொன்று ஷஷ்டாஷ்டம பாவத்தையடைந்து, பாபக்கிரஹங்களால் பார்க்கப்பட்டும் இருக்கிற யோகத்தில் பிறந்த குழந்தை தாயுடன் மரிக்கும்.

12-ம் பாவத்தில் ஞாயிறும், 4-ம் பாவத்தில் செவ்வாயும், 8-ம் பாவத்தில் மதியும் நிற்கப் பிறந்த குழந்தையின் தாய் கர்ப்பிணியாகவே இறப்பாள். (எந்தப் பெண் கர்ப்பிணியாகவே பிரசவிக்க முடியாமல் இறக்கிறாளோ, அந்தக் காலத்தைக் கொண்டு கூறப்படவேண்டியது இந்த பலன்).

இரண்டு பாபக்கிரஹங்களுக்கு நடுவில் ஞாயிறும், வெள்ளியும் நின்று, சுபக்கிரஹங்களால் பார்க்கப்படாமலும் இருக்கின்ற நிலையில் பிறந்த குழந்தைத் தாயைக் கொல்லும். இரண்டு பாபக்கிரஹங்களுக்கு நடுவில் மதியுடன் கூடாமல் வெள்ளி மட்டில் நின்று சுபக்கிரஹங்களால் பார்க்கப் படாமலும் இருக்கின்ற யோகத்தில் பிறந்த குழந்தையே இறந்துவிடும்.

லக்னத்துக்கு 6-ம் பாவத்திலும், 12-ம் பாவத்திலும் பாபக்கிரஹங்கள் நிற்கப் பிறந்த குழந்தை இறந்துவிடும். தாய் பிழைப்பாள். லக்னத்துக்கு 7-ம் பாவத்தில் மதியும் (4-ம் பாவத்திலும், 8-ம் பாவத்திலும்) பாபக்கிரஹங்கள் நிற்கப் பிறந்த குழந்தை பிழைக்கும் தாய் இறந்துவிடுவாள்.

இரவில் பிறந்த குழந்தையின் ஜாதகத்தில், மதி அல்லது அல்லது ஞாயிறு நின்று ராசியிலிருந்த 10-ம் பாவத்தில் பாபக் கிரஹங்கள் நின்றாலும், வெள்ளி நின்ற ராசியிலிருந்து 7-ம்

பாவத்தில் சனியுடன் செவ்வாய் நின்றாலும், அல்லது 7-ம் பாவத்தைச் சனி பார்த்தாலும் அல்லது மதி நின்ற ராசியிலிருந்து 5 அல்லது 9-ம் பாவத்தில் சனி நின்றாலும், இவ்வாறான கிரஹங்களின் யோகத்தில் பிறந்த குழந்தையின் தாய் இறந்துவிடுவாள்.

பகலில் பிறந்த குழந்தையின் ஜாதகத்தில் வெள்ளியோ, சனியோ பாபர்களால் பார்க்கப்பட்டவர்களாக இருந்தாலும், செவ்வாய், சனி இவர்கள் நடுவில் இருந்தாலும் லக்னத்தில் மதி நின்று 8-ம் பாவத்தில் ஞாயிறு இருந்தாலும், அல்லது 8-ம் பாவத்தில் ஞாயிறு சனியுடன் சேர்ந்திருந்தாலும் தாய் இறந்து விடுவாள்.

விடியற்காலையிலோ அல்லது நண்பகலிலோ பிறந்த குழந்தையின் ஜாதகத்தில் ஞாயிறு சுபர்களால் பார்க்கப் படாமல் செவ்வாய், சனி இவர்களால் மட்டில் பார்க்கப்பட்டு இருந்தாலும், அல்லது செவ்வாய், சனி இவர்களுடன் கூடினவனாக இருந்தாலும், அல்லது ஞாயிறு சர ராசியில் பாபக் கிரஹங்களுடன் கூடினவனாக இருந்தாலும் தகப்பன் இறந்துவிடுவான்.

பகலில் பிறந்த குழந்தையின் ஜாதகத்தில், 7-ம் பாவத்தில் ஞாயிறு நின்று செவ்வாயினால் பார்க்கப்பட்ட வனாகவும் இருந்தால் விஷம், தண்ணீர், ஆயுதம் இவைகளால் தந்தை கொல்லப்படுவான். இரவில் பிறந்திருக்குமானால், ஞாயிறு சர ராசியில் நின்று சனியினால் பார்க்கப்பட்ட வனாகவும் இருந்தால் தந்தை வேறு தேசம் சென்றுவிடுவான் அல்லது சென்றிருப்பான் என்று அறியவேண்டும்.

இரவில் பிறந்த குழந்தையின் ஜாதகத்தில் சர ராசியில் மதி, சனி, ஞாயிறு இவர்கள் இருந்தாலும் தந்தை வேறு தேசம் சென்றிருப்பான். அல்லது கீழே கூறப்பட்ட கோள்கள் வக்ர கதியை அடைந்திருந்தாலும் தந்தை வேறு தேசம் சென்று இருப்பான்.

எந்த குழந்தையின் ஜாதகத்தில் சனி எங்கு இருந்தாலும், செவ்வாயினால் பார்க்கப்பட்டவனாக இருந்தால் குழந்தை பிறக்கு முன்பே தந்தை இறந்திருப்பான். அல்லது ஞாயிறு சுபர்களால் பார்க்கப்படாதவனாக இருந்து, செவ்வாயுடன் கூடினவனாக இருந்தால் தந்தை இறந்திருப்பான்.

எந்தக் குழந்தையின் ஜாதகத்தில் ஞாயிறும், செவ்வாயும் பாபக்கிரஹங்களின் நடுவிலமைந்து 5 அல்லது 9-ம் பாவத்தையும் அடைந்திருந்தால், தந்தை சிறையில் இருப்பவனாகவோ அல்லது நோய்வாய்ப்பட்டவனாகவோ இருப்பான். ராகு ஜல ராசிகளாக இருக்கின்ற ராசிகள் (கடகம், மீனம், மகரத்தின் பிற்பகுதி) ஐந்தாம் ராசியாகவோ, ஒன்பதாம் ராசியாகவோ இருந்து, அவைகளுள் ஒன்றில் இருந்து பாபக்கிரஹங்களால் பார்க்கப்பட்டுமிருந்தால் தந்தை இறப்பான் என்று சிலர் கூறுவர்.

அரிஷ்டங்கள் (கெடுதல்கள்) அற்றுப்போதல்

மிக்க பலமுள்ளவனும், பிரகாசிக்கின்ற கிரணங்களின் வரிசைகளை உடையவனும்; 1, 4, 7 அல்லது 10-ம் பாவங்களுள் ஒன்றிலிருக்கின்றவனுமான வியாழன் ஒருவனே கீழே கூறப்பட்ட தோஷங்கள் யாவற்றையும் போக்கவல்லவன். மிகுந்த பலமுடையவனும், பிரகாசிக்கின்ற கிரணங்களின் வரிசைகளையுடைய வியாழன் ஒருவன் லக்னத்திலிருந்தால், பரமேச்வரனுக்கு பக்தியுடன் செய்யப்பட்ட நமஸ்காரம் பல பாபங்களைப் போக்குவது போல் நிவர்த்திக்கமுடியாத பல இடையூறுகளைக்கூட போக்கி நல்லதைச் செய்கிறான்.

லக்னம் சுபராசியாக இருந்து, சுபர்களால் பார்க்கப்பட்டுமிருந்து மிக்க பலமுள்ள சுபக்கிரஹங்கள் அல்லது பலமற்ற பாபக்கிரஹங்களுடன் கூடியதாக இருந்தால் கீழே கூறப்பட்ட அரிஷ்டங்கள் உண்டாவதில்லை.

ராகு கிரகம் 3, 6 அல்லது 11-ம் பாவத்தில் நின்று சுபர்களால் பார்க்கப்பட்டவனாகவுமிருந்தால், காற்று பஞ்சுச் சுமையை அடித்துச் செல்வதுபோல் இடையூறுகள் யாவற்றையும் அழித்துவிடுவான்.

சிசுக்களுக்கு ஏற்படும் கண்டம்

8-ம் பாவத்தில் ஞாயிறு நின்றால் நெருப்பினாலும், மதி நின்றால் தண்ணீராலும், செவ்வாய் நின்றால் ஆயுதத்தாலும், புதன் நின்றால் வியாதியினாலும் ஜாதகனுக்கு மரணத்தைச் செய்வார்கள். வியாழனும், வெள்ளியும் நின்றால் தந்தையால் ஜாதகனுக்கு மரணம் உண்டாகும்.

மதி பாபக்கிரஹங்களால் பார்க்கப்பட்டு லக்னத்தில் நின்றால் 16 நாட்களில் பிறந்த குழந்தை மரிக்கும். மதி பாபக் கிரஹங்களுடன் லக்னத்தில் இருந்தால் ஒரு மாதத்தில் குழந்தை மரிக்கும். மதி மட்டும் லக்னத்தில் இருந்தால் ஓராண்டில் குழந்தை மரிக்கும்.

மேஷம், ரிஷபம், கடகம் இம்மூன்று ராசிகளைத் தவிர்த்து, மற்ற ஒன்பது ராசிகளுள் ஏதாவது ஒரு ராசி லக்னமாக அமைந்து, அதில் தேய்பிறை மதி நின்று பாபக்கிரஹங்களால் பார்க்கப்பட்டுமிருந்தால் பிறந்த குழந்தை இறக்கும் என்று சிலர் கூறுகிறார்கள்.

மதி பாபக்கிரஹங்களால் பார்க்கப்பட்டு 6 அல்லது 8-ம் பாவங்களில் நின்றால் குழந்தை பிறந்து இறந்துவிடும். சுபர்களால் பார்க்கப்பட்டால் எட்டு ஆண்டுகள் பிழைத்திருக்கும். சுபர்களாலும், அசுபர்களாலும் பார்க்கப்பட்டால் நான்கு ஆண்டுகள் பிழைத்திருக்கும். பின்பு இறந்துவிடும்.

லக்னத்திற்கு 2, 12, 6 அல்லது 8-ம் பாவங்களில் பாபக் கிரஹங்கள் நின்று, சுபர்களின் பார்வையையும் அல்லது சேர்க்கையையும் பெறாமலிருந்தால், குழந்தை பிறந்து ஆறாவது அல்லது எட்டாவது மாதத்தில் இறந்துவிடும்.

லக்னம், 5, 7, 8, 9 அல்லது 12-வது பாவங்களுள் ஏதேனும் ஒன்றில் மதி பாபர்களுடன் கூடியிருந்து புதன், வியாழன், வெள்ளி இவர்களுடன் சேர்ந்தோ அல்லது இவர்களால் பார்க்கப்படாமலும் இருந்தால், பிறந்த குழந்தை இறக்கும்.

புதன், வியாழன், வெள்ளி இவர்கள் 1, 4, 5, 7, 9 அல்லது 10-வது பாவங்களுள் ஏதேனும் ஒன்றில் நிற்கப் பிறந்த குழந்தை நீண்ட ஆயுளுடன் இருக்கும். 2, 3 அல்லது 11-ம் பாவங்களுள் ஏதேனும் ஒன்றில் நிற்கப் பிறந்த குழந்தை நடுத்தர வயதுடையதாக இருக்கும். மேற்கூறப்பட்ட கோள்கள் 8-ல் நின்றால் குழந்தை இறந்துவிடும்.

மதி 1, 5, 6, 7, 8 அல்லது 12-வது பாவங்களுள் ஏதேனும் ஒன்றிலிருந்து சுபர்களால் பார்க்கப்படாமல் இருந்தால் பிறந்த குழந்தை இறக்கும். 3, 6 அல்லது 11-ம் பாவங்களில் பாபக் கிரஹங்கள் நின்றால் நீண்ட ஆயுளும்; 2, 9, அல்லது 10-வது பாவங்களில் நின்றால் நடுத்தர ஆயுளும், மற்ற ராசிகளில் நின்றால் (1, 4, 5, 7, 8, 12-வது பாவங்களில்) மரணம் உண்டாகும்.

செவ்வாய் லக்னத்திலிருந்து சுபர்களால் பார்க்கப்படாமல் இருந்தால் பிறந்த குழந்தை இறக்கும். ஞாயிறு லக்னம் 6 அல்லது 8-ம் பாவத்திலிருந்து செவ்வாய் 5-ம் பாவத்திலும் இருக்கப் பிறந்த குழந்தை இறக்கும்.

லக்னத்திற்கு 6 அல்லது 8-ம் பாவங்களில் ஞாயிறு, செவ்வாய், சனி இவர்களிருந்து சுபர்களால் பார்க்கப் படாமலுமிருந்தால், தாயுடன் குழந்தையும் மரிக்கும்.

மதி நல்ல பலம்பெற்று ராசியை அடைந்து, அசுபர்களின் சேர்க்கையையோ அல்லது பார்வையையோ பெறாமலிருந்தால் பிறந்த குழந்தை இறக்கும் என்று சோதிட வல்லுநர்கள் கூறுவர்.

ஞாயிறு 10-வது பாவத்திலிருந்து பாபக்கிரஹங்களால் பார்க்கப்பட்டவனாகவும் இருந்தால், பிறந்த குழந்தை உடன் இறந்துவிடும். அல்லது சனியின் வீடான மகரம் அல்லது கும்பத்திலோ, அல்லது செவ்வாயின் வீடான மேஷம் அல்லது விருச்சிகத்திலோ இருந்தாலும் குழந்தை இறந்துவிடும்.

லக்னத்தில் தேய்பிறை மதி நின்று 1, 4, 7, 8 அல்லது 10-வது பாவங்களில் பாபர்கள் நின்றாலும், அல்லது மதி 4, 7 அல்லது 8-வது பாவங்களில் நின்று இருபுறமும் பாபர்கள் நின்றாலும், அல்லது இருபுறமும் பாபக்கிரஹங்கள் நின்ற லக்னத்தில் மதி நின்று, 7 அல்லது 8-வது பாவங்களில் பாபர்கள் நின்று நல்ல பலம்பெற்ற சுபர்களால் பார்க்கப்படாமலும் இருந்தால் தாயுடன்கூட குழந்தை இறக்கும்.

மதி ஏதாவது ஒரு ராசியின் கடைசி பாகத்தை அடைந்து, சுபர்களால் பார்க்கப்படாமலுமிருந்து 1, 5 அல்லது 9-வது பாவங்களில் பாபர்களுமிருந்தால் குழந்தை இறக்கும். அல்லது மதி லக்னத்திலிருந்து 7-வது பாவத்தில் பாபக் கிரஹங்கள் நின்றாலும் குழந்தை மரிக்கும்.

பாபக்கிரஹங்கள் 1, 4, 5, 7, 9 அல்லது 10-வது பாவங்களில் நின்று, சுபகிரஹங்கள் 6 அல்லது 8-வது புாவங்களில் நின்று ஞாயிறு லக்னத்தில் நிற்கப் பிறந்த குழந்தை மரிக்கும்.

லக்னத்தில் ஞாயிறோ அல்லது மதியோ நின்று, 5, 8 அல்லது 9-வது பாவத்தில் மிக்க பலமுள்ள பாபக்கிரஹங்கள் நின்று, சுபர்களின் சேர்க்கையையோ, பார்வையையோ பெறாமலிருந்தால் பிறந்த குழந்தை மரிக்கும்.

மதி, செவ்வாய், சனி இவர்கள் லக்னம், 8 அல்லது 9-வது ராசியின் கடைசி பாகத்தை அடைந்தவர்களாக இருந்து, வியாழனால் பார்க்கப்படாமலும் இருந்தால் குழந்தை

மரிக்கும். மதியோ, ஞாயிறோ லக்னத்தில் நின்று, பாபக்கிரஹங்கள் 5, 8 அல்லது 9-வது பாவங்களில் இருந்தால் குழந்தை மரிக்கும்.

செவ்வாய், மதியின் நவாம்சத்தை அடைந்து, 7-ம் பாவத்தில் நின்றால் பிறந்த நாளிலிருந்து 77-வது நாளில் (77-வது நக்ஷத்திரமாக வரும் நாளில்) குழந்தை மரிக்கும்.

குறிப்பு :- உதாரணமாக அச்வதி நக்ஷத்திரத்தில் பிறந்த குழந்தைக்கு மேல் கூறப்பட்ட பிரகாரம் செவ்வாய் இருந்தால் 77-வது நக்ஷத்திரமாக வருவது, அச்வதி முதல் ரேவதி முடிய 27 நக்ஷத்திரங்களாக இருமுறை வந்தபின் மூன்றாம் முறையாக அச்வதி முதல் 23 வது நக்ஷத்திரமாக வருவது அவிட்டமாகும். இது அச்வதி முதல் பாதத்தில் பிறந்த குழந்தைக்கு மூன்றாம் தடவையில் 88-வது பாதமாக வராது. இருப்பினும் அச்வதி 2-ம் பாதத்தில் பிறந்த குழந்தைக்கு 88-வது பாதமாக அவிட்டம் முதல் பாதம் அமையும். இது வைநாசிக யோகத்தில் சேர்ந்தது. இதுபோல் அச்வதி 3-ம் பாதத்துக்கு அவிட்டம் 3-ம் பாதமும், அசுவதி 4-ம் பாதத்துக்கு அவிட்டம் 4-ம் பாதமும், 88-வது பாதமாக அமைவதால் இவைகள் வைநாசிக யோகத்தில் சேருவதுடன், 22-வது திரேக்காணத்தில் அமையுமாதலால் இந்த நாளில், குழந்தை மரிக்கும் என்று கூறியுள்ளார்கள் போலும். இதுபோல் மற்ற நக்ஷத்திரங்களிலும் பிறந்த குழந்தைகளுக்கு முன்கூறப்பட்டபடி யோகம் இருந்தால் 77-வது நக்ஷத்திரமாக வரும் நாளைக் கணக்கு செய்து பார்த்துத் தெரிந்துகொள்ளவேண்டும்.

லக்னத்திலிருந்து 7-வது பாவத்தில் சனி, செவ்வாய், ஞாயிறு இவர்கள் நின்றால் 77-வது நக்ஷத்திரமாக வரும் நக்ஷத்திரத்தையுடைய நாளில் குழந்தை மரிக்கும்.

செவ்வாய், மதியின் நவாம்சத்தை அடைந்து 5-வது பாவத்திலும், மதி, செவ்வாயின் நவாம்சத்தை அடைந்து 5-வது பாவத்திலும் நின்றால் குழந்தை பிறந்ததும் இறக்கும்.

மதி, செவ்வாயின் த்ரிம்சாம்சத்தையோ அல்லது துவாதசாம்சத்தையோ அடைந்திருந்தாலும், அல்லது சத்ரு ராசியை அடைந்திருந்தாலும், நீச ராசியை அடைந்திருந் தாலும் குழந்தை பிறந்ததும் இறக்கும்.

மதி, பாபக்கிரஹத்தின் திரேக்காணத்தில் நின்று, பாபக் கிரஹங்களால் பார்க்கப்பட்டிருந்தாலும், அல்லது சத்ரு ராசியை அடைந்திருந்தாலும் குழந்தை பிறந்ததும் இறக்கும். சுபக்கிரஹங்களால் பார்க்கப்பட்டால் எட்டு ஆண்டுகள் பிழைத்திருக்கும். பின்பு இறந்துவிடும்.

மேஷம் அல்லது விருச்சிகம் 8-ம் பாவமாக அமைந்து, அதில் வியாழன் நின்று, அந்த வியாழனையும், ஞாயிறு, மதி, செவ்வாய் அல்லது சனி இவர்கள் பார்த்தால் குழந்தை பிறந்து மூன்று ஆண்டுகள் ஜீவித்திருக்கும். பின்பு மரிக்கும். வியாழனுக்கு, வெள்ளியின் பார்வை இல்லாமலிருந்து விட்டால் உடனேயே மரிக்கும்.

குறிப்பு :- மேஷம் அல்லது விருச்சிகத்தில் நின்ற வியாழனை ஞாயிறு, மதி, செவ்வாய் அல்லது சனி பார்த்தாலும், வெள்ளி பார்த்தாலும் மூன்று ஆண்டுகள் ஜீவித்திருக்கும். வெள்ளி பார்க்காவிட்டால் உடன் மரிக்கும் என்று பொருள்.

(எந்த குழந்தையின் ஜாதகத்தில் சத்ரு ராசியில் சனி, ஞாயிறு, செவ்வாய், மதி இவர்கள் இருக்கிறார்களோ அந்தக் குழந்தையின் தகப்பன், குழந்தை பிறந்த ஒரு மாதத்தில் இறந்துவிடுவான். யமனே காப்பாற்றினாலும் பிழைக்க மாட்டான்.)

எந்த நக்ஷத்திரக்காலில் கேது நிற்கின்றானோ, அந்த நக்ஷத்திரத்தில் குழந்தை பிறந்தால் அது இரண்டு மாதங்கள் ஜீவித்திருந்து, பின்பு மரிக்கும்.

சனி, செவ்வாய், ஞாயிறு, மதி இந்த நான்கு கிரஹங்களும், கேந்திரங்களான 1, 4, 7 அல்லது 10-ம் பாவங்களுள் ஏதேனும் ஒன்றில் சேர்ந்திருந்தாலும் அல்லது தனித்தனியே இருந்தாலும், இவ்வாறான நிலையில் பிறந்த குழந்தை ஒரு ஆண்டு நிறையுமுன்பே இறந்துவிடும்.

லக்னாதிபதியோ அல்லது ராச்யாதிபதியோ குழந்தை பிறக்கும் சமயத்தில் 6-ம் பாவத்திலிருந்தால் 6 ஆண்டுகளும், 8-ம் பாவத்திலிருந்தால் 8 ஆண்டுகளும், 7-ம் பாவத்தில் இருந்தால் 7 ஆண்டுகளும் ஜீவித்திக்கும். அல்லது 6, 7, 8-ம் பாவங்களில் அஸ்தங்கதர்களாகியிருந்தாலும் மேற்கூறியபடி அந்தந்த ஆண்டுகளில் மரணமுண்டாகும்.

(ராசி சக்ரத்தில் 10-வது பாவத்தின் குறிப்பிட்ட பாகைகள் நீங்கலாக பாக்கி செல்லவேண்டிய பாகைகளும், 11, 12, 1, 2, 3-ம் பாவங்களும் 4-வது பாவத்தில் சென்ற பாகைகளும், ராசி சக்கிரத்தின் அபுக்தபாகம் என்றும், மற்ற பாவங்கள் மேற்த பாகம் என்றும் சொல்லப்படுகின்றன.) இவ்விரண்டு பாகங்களிலும் முறையே பாபக் கிரஹங்களோ அல்லது சுபக் கிரஹங்களோ இருந்து ஜன்ம லக்னம் விருச்சிகமாகவும் இருந்தால் பிறந்த குழந்தை உடன் மரிக்கும் அல்லது ஜன்ம லக்னத்திலோ, 7-ம் பாவத்திலோ பாபக் கிரஹங்கள் நின்றாலும் குழந்தை பிறந்ததும் மரிக்கும்.

லக்னத்தில் சனியும், 1, 4, 7 அல்லது 10-வது பாவங்களில் வெள்ளியும் நின்று, கோசார ரீதியாக வெள்ளி மறுபடியும் ஜனன காலத்தில் எந்த ராசிகளில் நின்றதோ அங்கு வரும் சமயம் குழந்தை மரிக்கும். மதி, ஞாயிறு, செவ்வாய் இவ்விரு கோள்களின் நடுவில் எந்த ராசியில் நிற்கின்றதோ அதே ராசிக்கு மறுபடியும் கோசார ரீதியாக ராசி சக்கரத்தில் சஞ்சரித்துக்கொண்டுவரும் சமயம் குழந்தை மரிக்கும்.

தனுர் லக்னத்தில் மதியும், செவ்வாயும் இருந்தாலும் அல்லது மதி 8-வது பாவத்திலிருந்தாலும், அல்லது 22-வது திரேக்காணத்திலோ அல்லது திரிம்சாம்சத்திலோ இருந்தாலும் பிறந்த குழந்தை மரிக்கும்.

மதி கும்ப ராசியின் 20 அல்லது 21-வது பாகையில் இருந்தாலும், சிம்மத்தின் 5-வது பாகையில் இருந்தாலும், தனுசில் 18-வது பாகையில் இருந்தாலும், மீனத்தில் 10-வது பாகையில் இருந்தாலும், மதி தங்கின பாகைகளின் எண்ணிக்கைக்குச் சமமான வருடத்தில் குழந்தை மரிக்கும். யமனே காப்பாற்றினாலும் காப்பாற்றப்படமாட்டான்.

கண்கள் கெடுதற்குரிய யோகம்

செவ்வாயோ அல்லது சனியோ 10-வது பாவத்தில் நின்றால் கண் பார்வையை இழந்துவிடுவான். 10-வது பாவத்தில் சனி நின்றால் வலது கண்ணும், செவ்வாய் நின்றால் இடது கண்ணும் கெட்டுவிடும்.

மதியும் ஹோராநாதர்களான கோள்களுள் ஒன்றும், பாபர்களுடன் எந்த ஒரு ராசியின் கடைசி பாகையில் தங்கி நிற்கின்றவைகளாக மாலை வேளையில் குழந்தை பிறக்குமானால் அது இறந்துவிடும். 1, 4, 7 அல்லது 10-வது பாவங்களில் மதி பாபர்களுடன் இருந்தால் குழந்தை இறக்கும்.

செவ்வாய் லக்னத்தில் நின்று பாபக்கிரஹங்களால் பார்க்கப்பட்டாலும், 6, 8-ம் பாவத்தில் நின்று சனியினால் பார்க்கப்பட்டாலும் இருந்தாலும் குழந்தை பிறந்தவுடன் இறக்கும்.

தேய்பிறை மதி 12-ம் பாவத்திலும், பாபக்கிரஹங்கள் லக்னத்திலோ அல்லது 8-ம் பாவத்திலோ நின்றாலும், மதி பாபர்களுடன் நின்றாலும் அல்லது பாபர்களுடன் எந்த ராசியில் மதி இருக்கிறானோ அந்த ராசியின் கடைசி பாகையில் இருந்தால் குழந்தை இறந்துவிடும்.

139-வதாக உள்ள இந்த சுலோகமும், 130-வதாக உள்ள சுலோகமும் சில பதங்களினால் வேறுபட்டிருப்பினும் கருத்து ஒன்றாகவே உள்ளது. ஆதலால் 130-வது சுலோகத்தின் உரையை கவனிக்கவும்.

மதி 6 அல்லது 8-வது பாவத்தில் நின்று பாபர்களால் பார்க்கப்பட்டால் பிறந்த குழந்தை மரிக்கும். சுபக்கிரஹங் களால் பார்க்கப்பட்டால் எட்டு ஆண்டுகள் ஜீவித்திருக்கும். பாபர்களும், சுபர்களும் பார்த்தால் நான்கு ஆண்டுகள் ஜீவித்திருக்கும்.

தேய்பிறை மதி லக்னத்திலும், மதி நின்ற ராசிக்குக் கேந்திரங்களான 1, 4, 7 அல்லது 10-வது ராசிகளில் பாபர்கள் நின்றாலும், 4, 7 அல்லது 8-வது பாவங்களின் இருபுறமும் பாபக்கிரஹம் நிற்க அவைகளுள் ஒன்றில் மதி நின்றாலும், லக்னத்திற்கு இருபுறமும் பாபர்கள் நிற்க, அதில் மதி நின்றாலும், அல்லது 8-ம் பாவத்தில் பாபர்களுடன் மதி நின்றாலும் இவ்வாறான யோகத்தில் மிகவும் பலம்பெற்ற கிரஹங்களால் பார்க்கப்படாமலும் இருந்தால் குழந்தை தாயுடன் இறந்துவிடும்.

மதி, அவன் நிற்கின்ற ராசியின் கடைசி பாகையில் நிற்கின்ற நிலையில் சுபர்களால் பார்க்கப்படாதவனாகவும் இருந்து, பாபர்களும் 5 அல்லது 9-ம் பாவத்தை அடைந்திருந் தாலும், அல்லது லக்னத்தில் மதியும், 7-ம் பாவத்தில் பாபக் கிரஹமும் இருந்தால் குழந்தை பிறந்ததும் இறந்துவிடும்.

மதிக்குக் கிரஹணம் பிடித்திருக்கும் சமயத்தில், மதி பாபர்களுடன் இருந்து, செவ்வாய் 8-வது பாவத்தை அடைந்திருந்தால் தாயும்-சேயும் சேர்ந்தாற்போல் இறந்து விடுவார்கள். மேற்கூறிய யோகத்தில் ஞாயிறு லக்னத்தில் இருந்திருந்தால் ஆயுத சிகிச்சை செய்யப்பட்டு குழந்தை பிறக்கும். உடன் தாயுடன் இறந்துவிடும். லக்னத்தில் ஞாயிறோ அல்லது மதியோ நின்று 5 அல்லது 9-ம்

பாவங்களிலோ அல்லது 8-ம் பாவத்திலோ, பலம் பெற்ற பாபக் கிரஹங்களுடன் கூடியிருந்து, சுபர்களுடன் கூடாமலோ, அல்லது பார்க்கப்படாமலோ இருந்தால் குழந்தை இறந்துவிடும்.

லக்னத்திற்கு 9-ம் பாவத்தில் சனியும், 10-ம் பாவத்தில் ஞாயிறும், லக்னத்தில் மதியும், 8-ம் பாவத்தில் செவ்வாயும் நின்று, மிக்க பலம்கொண்ட வியாழனால் பார்க்கப்படா விட்டால் குழந்தை விரைவில் இறந்துவிடும்.

1, 5, 7, 8, 9 அல்லது 12-வது பாவங்களில் மதி பாபக் கிரஹத்துடன் நின்று, மிக்க பலம் பெற்ற புதன், வெள்ளி, வியாழன் இவர்களுடன் சேராமலோ அல்லது இவர்களால் பார்க்கப்படாமலோ இருந்தால் குழந்தை இறந்துவிடும்.

கீழே சொல்லிய பாலாரிஷ்ட யோகங்களில், பலம் பெற்ற ஸ்தானத்தில் மதி நின்றாலும் அல்லது அதனுடைய ராசியிலோ, அல்லது லக்கினத்திலோ நின்றாலும், பலம் பெற்ற பாபர்களால் பார்க்கப்பட்டாலும் ஓராண்டு ஜீவித்திருந்து பின்பு இறந்துவிடும்.

பூர்வபாராசர்யம் பிற்பகுதி 7-வது அத்தியாயம் முற்றும்.

பூர்வபாராசர்யம் முற்றிற்று.